உ

# ஸ்ரீ காமாட்சி அம்பிகை
# திருவருட்பிரசாதமும் தேவாலய வரலாறும்



ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவாலய

இராஜகோபுரத் திருப்பணிநிதி வெளியீடு

4-5-79

உ

ஓம் சக்தி

65
7-01-2002

ஸ்ரீ காமாட்சி அம்பிகை

# திருவருட் பிரசாதமும் தேவாலய வரலாறும்

★

1979

65
294.5575493
நடரா

உ

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம் குருமஹாசந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகள் அவர்களின்

# ஆசியுரை



அகில லோக ஜனனியாகிய ஆதிபராசக்தி, எல்லாச சீவராசிகட்கும், அன்னையாவாள். தாயிடத்தில் குழந்தை போகவேண்டுமென்பதற்கு விதிவிலக்கில்லை. அன்னை காமாக்ஷியைப் பூசிப்பதற்கு, மனம் உருகிய அன்பு ஒன்றே போதுமானது. பிள்ளையின் தேவையைத் தாய்தான் அறிவாள். அத்தகைய அன்னையை வழிபட வழிகாட்டும் நூலாக அமைந்துள்ளது, "ஈழத்து யாழ் - வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பிகை திருவருட் பிரசாதமும் தேவாலய வரலாறும்'' என்ற நூல்.

இந்த அரிய நூலை மேற்படி ஆலய கூட்டுப்பிரார்த்தனைச் சபை முன்னைநாள் காரியதரிசியாகிய 'செந்தமிழ்ச் செல்வர்' திரு. வி. நடராசா அவர்கள் இயற்றித், தொகுத்து வெளியிட்டுள்ளனர். தேவி பாகவதம், பிரபஞ்ச உற்பத்தி, தேவிபராக்கிரமம் முதலிய பல நூல்களை ஆராய்ந்து, மலரில் தேனெடுக்கும் வண்டுபோல், திரு. நடராசா பக்திமணம் கமழ, தமிழ் இன்பத்தேன் சொட்ட இந்நூலை காமாக்ஷி திருவடிக்கமலங்களில் அர்ப்பணித்துள்ளார்.

தேவியின் திவ்ய சரிதை, லீலைகள், காமாக்ஷியம்மை பதிகம், திருநாம அர்ச்சனை, லலிதா அஷ்டோத்திரம் (விளக்க உரையுடன்) இந்நூலில் சிறப்பாக அமைந்துள்ளது.

ஆலய ராஜகோபுரத் திருப்பணிக்கே இந்நூலின் விற்பனை வருமானத்தை அர்ப்பணித்துள்ளதும் போற்றவேண்டியது.

அரர்க் கன்பு புரிகுவது
நரர்க்கு முறையாகுவது
திருப்பணிகள் செய்குவது
பெருத்த புண்ணியம் ஈது.

அன்பர் நடராசா சகல செல்வ போகமிக்க பெருவாழ்வு பெறுவாராக.

சுபம்.

உ

ஓம் சிவசக்தி

அளவெட்டி

# அருட்கவி சீ. விநாசித்தம்பி

அவர்களின்

# ஆசியருட்பாமாலை

## வெண்பா

யாழ்வண்ணைக் காமாட்சி ஞானத்திருவருளைச்
சூழ்கருணைத் தேனுய்ச் சுவைத்தளித்தான் — வாழ்மனிதப்
புண்ணியத்தோர்க் காகப் புனிதன் நடராசாத்
தண்ணளியோன் அன்பிற் சமைத்து.

## விருத்தம்

அருட்பெருங் கடலாய் வண்ணை
அமர்ந்தகா மாட்சி யம்மை
திருப் பெருங் கோயில் முன்பு
திகழுங்கோ புரம் சிறக்க
வரப்பிரசாதம் வாய்த்த
மாண் புயர் தொண்டர் பேணும்
விருப்புயர் பணிகள் பூக்க
விழைந்த இப்புல வன்வாழி.

சிறந்த இப்புலவன் கோத்த
திருவருட் பிரசாதத்தேன்
அறிந்தகம் புணேந்த பேர்கள்
அம்மையின் பதத்துள்ளார்கள்
பிறந்த ஜென் மத்தின் வாய்ப்புப்
பெற்றினிதாக வாழ்வர்
நிறைந்த கோபுரம்மேலோங்க
நிதிமலிந்தினிது வாழி,

உ

தேவி துணை

துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச்செல்வி

# செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களின்

# ஆசியுரை



அம்பிகையின் அருட்பிரவாகத்தைக் கூறும் இந்நூலுக்கு ஆசி கூற நான் யார்? என்ன தகுதியுண்டு? சிந்திக்கவே தெளிவில்லை. ஆனால் தேவி காமாட்சி கோயிலின் இராச கோபுரக் காட்சியைக் காண வேண்டும் என்ற விருப்பு என்னை உந்துவதால் ஆசிகூற முற்படுகிறேன். அன்னையின் அருள் நிழலில் வாழும் பேறு எனக்குச் சிலகாலமாக உண்டு. இது ஒரு தனி அனுபவம். ஆனந்தமாய், அறிவாய், நிறைந்த அமுதமுமாய் அன்பர்களுக்குச் சுவைப்பவள் அம்பிகை. இன்று நம் நாட்டிலும் தமிழகத்திலும் திருக்கோயில்கள் பல புனருத்தாரணம் செய்யப்படுவதும் கோபுரத் திருப்பணி சிறப்புறுவதும் நாமறிந்த செய்தியாகும். ''கோபுர தரிசனம் பாவ விமோசனம்'' என்பர். தூலலிங்கமாகிய கோபுரம், கருவறையிலமைந்த சூக்கும மூர்த்தியை வெளிக்காட்டிக் கொண்டிருக்கும் இடமாகும். பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐம்பூத தத்துவத்தினூடே பரம்பொருளை உணர்த்தி நிற்பது இது. பிருதுவி அப்புவிலடங்க, அப்பு தேயுவிலடங்க, தேயு, வாயுவிலடங்க, வாயு ஆகாயத்திலடங்க ஆகாய தத்துவம் ஓங்கி நிற்கும் பாணியில் ஐந்து வாயில் கோபுர அமைப்பு உண்டு. இந்த அமைப்புடன் வானளாவ விளங்கும் கோபுரத்தின் தோற்றம் எமது உள்ளத்தை உயர்த்தும் அருட்காட்சியாகும்.

நாச்சிமார் கோவிலடி என்பதே தெய்வீகத் திருநாமம் ஆகும். இங்கு எழுந்தருளிக் காட்சிகொடுக்கும் அம்பாள் போகத்தை நல்கு

பவன். அப்பனை வழிபட்டு அர்ச்சித்து ஆன்மகோடிகளுக்காக இரங்கி நின்றவன்.

எண்ணில் ஆகமம் விரும்பிய இறைவர் தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை என உரைத் தருள
அண்ணலார் தமை அர்ச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணில் நல்லவளாகிய பெருந்தவக் கொழுந்து.

என்பது பெரியபுராணப்பாடல். அம்பிகை அர்ச்சித்து வரம் பெற்று இருநாழி நெற்கொண்டு முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்தாள் என்று கூறப்பட்டுள்ளது. காமாட்சி அம்பாளின் கருணை எல்லோருக்கும் வாய்க்கவேண்டும். இவ்வுலகில் சங்கலமே தோன்றுது என்பது அனுபவ வாக்கு.

எனவே இந்நூல் அம்பிகையின் அருளைத் திரட்டிப் பருக வைக்கும் திருநூல் என்பதை யாவரும் அறிந்து போற்ற வேண்டும். எல்லோரும் வாங்கிப் படித்து பயன்பெறுவதோடு கோபுரத் திருப்பணிக்கும் இயன்ற ஆதரவு நல்க வேண்டும் என்று மனப்பூர்வமாக வேண்டிக் கொள்கிறேன்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

---

உ

ஸ்ரீ காமாக்ஷி துணை

# ஆசியுரை

ஈழ நாட்டில் சக்தி வழிபாடு மிகப் பழைமை வாய்ந்தது. சக்தி வழிபாட்டின் மகத்துவத்தை ஆதாரபூர்வமாக ஸ்ரீ காமாக்ஷி அம்பாளின் அனுக்கிரகத்தினல் திரு. வி. நடராசா அவர்கள் இந்நூலைத் தொகுத்துள்ளார்

ஸ்ரீ காமாக்ஷி அம்பாளின் அற்புத வரலாற்றையும் மற்றும் சிறப்புக்களையும் மகாத்மியத்தையும் பல நூல்களை அலசி ஆராய்ந்து ரெத்தினச் சுருக்கமாகத் தொகுத்து வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய இராஜ கோபுர கட்டிட நிதிக்காக அர்ப்பணித்துள்ளார்.

இவ்வரிய தெய்வ கைங்கரியம் சிறப்புற நிறைவேற அம்பிகை ஆசீர்வதிப்பாராக.

அவரின் தொண்டு போற்றுதற்குரியது. அம்பிகையின் ஆசீர்வாதங்கள் உருத்தாகுக.

ஓம் சக்தி! ஓம் சக்தி!!

ஸ்ரீ காமாக்ஷி அம்பாள்
தேவஸ்தானம்,
யாழ்ப்பாணம். 3-5-79.

யாழ்ப்பாணம் வண்ணை குளங்கரை மருதடி
ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலய
பரிபாலனசபை.

உ

சிவமயம்

கணபதி துணை

ஈழத்து

யாழ் - வண்ணை

ஸ்ரீ காமாக்ஷி அம்பிகை

# திருவருட் பிரசாதமும் தேவாலய வரலாறும்

இது

வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள்
கூட்டுப் பிரார்த்தனைச் சபை முன்னைநாள் காரியதரிசியாகிய

**வி. நடராசா அவர்களால்**

இயற்றித் தொகுத்து ஆக்கப்பெற்ற ஒரு தேவ கைங்கரியம்.

முதற் பதிப்பு

அச்சுப்பதிவு:
சாந்தி அச்சகம்,
நாச்சிமார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

பதிப்புரிமை]

[ விலை: ரூபா

உ
சிவமயம்

# முகவுரை

அகிலலோக அன்னை பராசக்தியின் திருவருளே, தம் சரணடைந்தவர்களையும், துதிப்பவர்களையும், துக்கசாகரத்திலிருந்து தூக்கி எடுத்து, இன்பக்கடலில் ஆழ்த்தி, எழில்கொடுத்து, அதாவது இம்மையில் சகல செல்வங்களையும் சீரிய வாழ்வையும் கொடுத்து மறுமைக்கு ஈடேறச் செய்கின்றது. இச்சக்தியானவள் எம்பெருமானது பஞ்சகிருத்தியங்களுக்கும் துணையாய், எள்ளில் எண்ணெய்போலும், மணியில் ஒலிபோலும், தீயிற் சூடுபோலும் இருந்து நடாத்திவருகின்முள். ஆகையினுலே எத்துதிகளினும் ஆதிபராசக்தி தேவியைத் துதிப்பதே மிகமிகச் சிறந்த ஒரு சேவையாகும்.

ஆகையினுல், இக்கலியுகத்திலே, நாம் எல்லோரும், ஆதிபராசக்தியாகிய் உமாதேவியாரின் கிருபாகடாட்சத்தைத் துதித்துப் பெறுவதற்குத் துணையாக தேவிபாகவதம் முதலாய அரியபெரிய் நூல்கள் எம்முன்னேர்களில் தோன்றிய தேவிபக்தர்கள் மூலம் எமக்குக் கிடைக்கக்கூடியதாகத் திருவருள் பாலித்திருக்கின்றது. இவ்வரிய பொக்கிஷங்களிலிருந்தே, நாம் தேவியின் புகழ்ப்பாக்களையும், சுலோகங்களையும், திவ்ய சரித்திரங்களையும் ஓதியுணர்ந்து ஒழுகக்கூடியதாக இருக்கின்றது. அதாவது இத்திவ்ய பொக்கிஷங்களின் பயனை நாமே ஓதி உணர்ந்து ஒழுகமுடியும். இது சிலருக்குக் கஷ்டமாக இருக்குமாகில், ஓதுவதைக் கேட்டாவது அதனை உணர்ந்து ஒழுகுதல் வேண்டும். இதுவும் இய்லாதபட்சம், ஓதி உணர்ந்தோ அல்லது ஓதுவதைக் கேட்டுணர்ந்தோ ஒழுகுபவர்களுடன்கூடி அவ்வழிப்படி ஒழுகப்பழகல் வேண்டும். இப்படியாக நாம் நடந்தோமாயின் தேவியின் கிருபா கடாட்சம் எங்களுக்குச் சுலபமாகக் கிடைக்கும்.

ஆகவே அதேவிதமான பண்புடனும், அன்புடனும் இச்சிறு கைங்கரியத்தை என்னுல் கூடியஅளவு, என் சிற்றறிவுக்கு எட்டியவாறு, தேவியின் அன்பர்கள் யாவரும் ஓதி உணர்ந்து உய்யும்வண்ணம், அவாமேலீட்டினுல், சமர்ப்பித்துள்ளேன். அதாவது உமாதேவியார் காஞ்சிபுரத்தின்கண்ணே ஏகாம்பரநாதசுவாமியின் வாமபாகத்தில் காமாக்ஷி என்னும் திருநாமத்தோடு முப்பத்திரண்டு தருமங்களையும் ஆன்மாக்கள் ஈடேறும்வண்ணம் செய்தருளி விளங்குகின்முர். ஸ்ரீ காஞ்சி காமக்ஷியின் திருவருள் மூர்த்தமே எங்கள் வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பிகையின்

மூர்த்தமாகும். ஆகவே ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பிகையின் சரிதத்தை என் சிற்றறிவிற் கெட்டியவாறு ஒரு அளவு சுருக்கி "ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பிகை சரிதை" என்னும் தலையங்கத்துடன் எழுதியும், பிரதானம் வேண்டிய சந்தர்ப்பங்களில், பழைய பொங்கிஷங்களி லுள்ள தேவிபக்தர்களின் பாடல்களைச்சேர்த்தும், கதைப்போக்கின் தொடர்பைப் பழுதுபடுத்தாத வண்ணமும், சமர்ப்பித்துள்ளேன்.

இதற்குமுன்பு, முதலாவதாக, "சரிதை வரலாறு" என்னும் தலை யங்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள கட்டுரையில்; வியாசமுனிவர் உலகில் உள்ளோர் அறியும்படியாக, சூதமகாமுனிவருக்கு எடுத்துக்கூறிய், ஆதி பராசக்தியின் வரலாற்றுத் தொடர்பைச் சிறிது எடுத்து விளக்கியுள் ளேன். அதிலும் ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பிகையின் மூர்த்தமோ ஆதிபராசக்தியின் ஒரு அம்சமாகும். மேலும் மூன்றுவதாக "சக்தி வழிபாடும் அதன் சிறப்பும்" என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையும், நான்காவதாக "ஸ்ரீ காமாக்ஷி அம்பிகை திருவருட் பிரஸாதம்" என் னும் தலைப்பில் இன்னும் ஒரு கட்டுரையும் முன்பு காட்டியதுபோல என் சிற்றறிவிற்கு எட்டியவாறு எழுதியுள்ளேன். ஐந்தாவதாக "ஸ்ரீ காமாக்ஷி ஸ்தோத்திரம்" என்னும் தலையங்கத்தில் ஸ்ரீ காமாக்ஷி அம்பிகைமேல் சில பக்தர்களாற் பாடப்பட்ட ஸ்தோத்திரங்களும் இக்கோவையில் ஒரு அளவு சேர்த்துள்ளேன்.

இத் தேவகைங்கரியம் பின்வரும் நூல்களின் துணைகொண்டே அமைந்துள்ளது:

ஸ்ரீ வேதவியாஸபகவான் அருளிய

1. **ஸ்ரீ தேவி பாகவதம்**
   (திருவனந்தபுரம் **ஸ்ரீ டி. எஸ். கிருஷ்ணஐயர்**)
2. **உலக ரகசியம் என்னும் பிரபஞ்ச உற்பத்தி**
   (சிறுமணவூர் — **முனிசாமி முதலியார்**)
3. **அஷ்டாஷ்ட லீலை என்னும் தேவி பராக்கிரமம்**
   (ஈக்காடு, **இரத்தினவேலு முதலியார்**)
4. **தேவி ஸ்தோத்ர கதம்பம்**
   (**எல். காசிவிஸ்வநாத சாஸ்திரிகள்**)

அபிராமிப்பட்டர் அருளிச்செய்த

5. **அபிராமி அந்தாதி**
   (ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் பதிப்பு)
6. **தேவி மானசபூசை அந்தாதி**
   (**யாழ்ப்பாணம் தி. சதாசிவ ஐயர்**)

7. ஸ்ரீ ராமஜயம் ஸ்தோத்திர மாலை
(லிப்கோ (Lifco) பதிப்பு)

8. ஆத்மஜோதியும், ஆத்மஜோதி நவராத்திரிப்பாடலும்

9. ஸ்ரீ காமாக்ஷி தேவி
(காஞ்சிபுரம் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தான வெளியீடு)

10. காஞ்சிப் புராணம்
(ஸ்ரீ - மாதவச் சிவஞானயோகிகள்)

11. கர்னாடக ஸங்கீத புஸ்தகம்
(மூன்றும் பாகம்)
(**P. Sambamoorthy** B. A., B. L.)

12. தமிழ் இலக்கியத் திரட்டு
(பகுதி I)
(திவான்பஹதூர் ச, பவானந்தம்பிள்ளை அவர்கள்)

13. திருக்கேதீஸ்வர கௌரியம்மை தோத்திரம்
(ஆத்மஜோதி வெளியீடு)

14. செல்வச்சந்நிதியான் கும்மி
(நாவலூர் கவிஞர் — ஞா. ம. செல்வராஜன்)

15. மிகுதி உதவியாக ஞாபகப் பொதுச்சக்தியும் எடுத்தாளப்பட்டது.

தேவிக்கு ஸ்ரீ பஞ்சதசாக்ஷரீ என்னும் ஒரு மந்திரம் உண்டு. அதே போன்று இத்தேவகைங்கரியத்தை பதினைந்து நூலின் உதவிகொண்டு சமர்ப்பித்துள்ளேன்.

இவ்வுலகமானது பஞ்சபூதங்களால் ஆக்கப்பெற்றுள்ளது. எங்களது இத் தூலசரீரமோ பஞ்சபூதங்களால் ஆக்கப்பெற்றும் பஞ்சேந்திரியங்களால் இயங்குகின்றன. அதுபோல இக் கைங்கரியத்தையும் ஐந்து அங்கங்களாக ஒரு நயம்பற்றி அமைத்துள்ளேன்.

இதில் சேர்க்கப்பட்ட ஸ்தோத்திரங்கள் ஒவ்வொன்றிலும் சொற்சுவை, பொருட்சுவை பொதிந்திருப்பதுமல்லாமல், ஓதுவோர்க்கும், பஜனைசெய்வோர்க்கும், பாடுவோர்க்கும் இன்பத்தைக் கொடுக்கக்கூடியவைகளாக அமைந்துள்ளன. இது மட்டுமா? இன்னும் அவரவர்கள் இஷ்டசித்திகளைக் கொடுப்பவைகளாகியும், அம்பிகை அடியார்களின் அருந்துயர் போக்குபவைகளாகியும், ஓதுபவர்களது உள்ளத்தை உருகச் செய்து, இருளை வேருடனே களைந்து ஞானத்தை, அதாவது அருளாகிய பிரசாதத்தைக் கொடுப்பவைகளாகியும், தத்துவ இரகசியங்கள் நிரம்பிப்

பொலிந்திருப்பவைகளாகியும், சக்திகளின் பேரொளி விளங்கிநிற்பவைகளாகியும் அமைந்துள்ளன. இத் தோத்திரங்களையும் அம்பாளின் சரித்திரத்தையும் படிப்போர்க்கு அம்பாளின் கடாட்சம் தானுகவே வந்து சேரும் என்பது சத்தியம்! சத்தியம்! இவைகளைத் தூய்மையாகவும், அமைதியாகவும், பக்தியுடனும் ஓதுபவர்களே இவைகளின் பலனை அறியக்கூடுமேதவிர, மற்றவர்களுக்கு இவைகளின் பலன் புலப்படமாட்டாது. இது திண்ணம். இன்னும் இத்துதிகளை நாள்தோறும், வீடுகளில் புறம்பாக அமைத்துள்ள கடவுள்வழிபாடு செய்யும் படங்களின் முன்பாகிலும், அல்லது தனிமையாகிய சுத்த ஸ்தலங்களிலாயினும்; எம்பெருமான், எம்பெருமாட்டி எழுந்தருளியிருக்கும் கோவில்களிலாயினும் ஓதிவந்தால் இம்மைக்கண் மேன்மேலும் இன்பமும், மறுமைக்கண் அமைதியும் கிடைக்கும் என்பது முற்றிலும் உண்மையில் உண்மை.

இச்சரித்திரங்களினதும், ஸ்தோத்திரங்களினதும் பெருமைகளை, ஆயிரம் நாவைப்படைத்த ஆதிசேடனுலும்கூட முற்றுக எடுத்துரைக்கவோ, புகழவோமுடியாதெனில், எம்போன்ற சிற்றறிவு உடையவர்களினுல் இவைகளின் சிறப்பினை அளவுபடுத்தி அல்லது வரையறுத்துப் பேசவும், எழுதவும் முடியுமோ?

ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பிகையின் மூர்த்தமாகவே எழுந்தருளியுள்ள எங்கள் ஈழத்து யாழ் வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பிகையின் தேவாலய வரலாற்றினைச் சிறிது கவனிப்போம்.

இலங்கைத்தீவின் சிகரமாக விளங்கும் யாழ்ப்பாண நகரில் வண்ணார்பண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயம் என வழங்கும் (நாச்சிமார் கோவில்) இவ்வாலயத்தைப்பற்றிய விரிவான சரித்திர சாதனங்கள் இல்லாதிருந்தபோதிலும் பண்டைய பாடல்கள் சிலவற்றிலிருந்தும் 1898ஆம் ஆண்டில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அவர்களால் சைவசமய கிறிஸ்தவ கோயில்களின் பதிவு இடாப்பு தயாரிக்கப்பட்டபொழுது இருந்த சில விபரங்களைக்கொண்டும் கிராம மக்களிடையே வழங்கிவரும் ஐதிக வரலாறுகள் பற்றியும் ஆதாரமாகக் கொண்டு நாம் அறியக்கூடியவற்றில் சில இங்கு குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

**"கங்கையார் சடையானைக் காசினியில் பூசனைசெய்**
**மங்கையார் காமாக்ஷி மாதேவி மருவுமிடஞ்**
**செங்கையால் நாச்சிமார் சிறு விறகை யொடித்தாளின்**
**கொங்கையாய்ந் தொளிர் வண்ணைக் குளங்கரை-சார்-மருதடியே."**

இப்பாடல் விஸ்வகுலதிலக உயர்நீதிமன்ற நியாயதுரந்தரர் திரு. நமசிவாயம் சிவக்கொழுந்து அவர்களால் பாடப்பெற்றது. அவர் ஸ்ரீ காமாக்ஷியம்பிகை பேரிற் பாடிய மற்றும் பாடல்களும் ஸ்தோத்திரப் பாடல்களுள் தரப்பட்டிருக்கின்றன.

அக்காலத்தில் தற்பொழுது ஆலயம் அமைந்திருக்கும் இடத்திற்கு அருகாமையில் இருக்கும் குளங்கரையைச்சூழ நாவல் மரங்களும், மருத மரங்களும், வயல்களும் சூழ்ந்து அடர்ந்து இருந்தன. ஒருநாள் உச்சி வேளையில் விறகு ஒடிப்பதற்கு அயலில் குடியிருந்த இளமங்கை ஒருத்தி அவ்விடத்திற்கு மாதவிடாய்காலத்தில் வந்து மருதமரத்தடியில் சிறுநீர் விட்டு அந்த இடத்தை ஆசௌசப்படுத்தியதால் அவ்விடத்தில் இருந்த தேவதை சீற்றங்கொண்டு அவ்விளமங்கையின் கொங்கையைத் திருகிவிட்டதாம்.

இதனால் அக்கிராமமக்கள் பெரிதும் பீதியடைந்து இருந்தனர். இவ்விபரத்தை அவ்விடத்தில் வசித்துவந்த விஸ்வகுல வயோதிப மாது ஒருவர் அறிந்து அத்தேவதையைச் சாந்தப்படுத்தும் நோக்கமாக ஒரு கல்லை அம்மரத்தடியில் வைத்து விளக்கேற்றி நாச்சிமார் எனப் பெயரிட்டு வழிபாடு செய்துவந்தார். இதனைத் தொடர்ந்து கிராமமக்களும் வழிபாடு செய்தனர். இவ் வழிபாட்டால் அருளையும் ஆசியையும் பெற்ற அக்கிராமமக்கள் அதன் மகத்துவத்தை உணர்ந்து விக்கிரக வழிபாடாக மாற்றியமைக்க ஆயத்தங்கள் செய்து சிறு கற்கட்டிடமாக 1870ஆம் ஆண்டில் அமைத்தார்கள். இவ் ஆலயத்தின் ஸ்தல விருட்சம் மருது. பின் இங்கு மாரியம்மன் சிலா விக்கிரகப் பிரதிஷ்டை செய்தார்கள். இந்த இடத்தைச் சூழ விஸ்வகுல பொற்தொழிலாள மக்கள் சூழ்ந்து வாழ்ந்தபடியால் அவர்களின் குலதெய்வமாகிய காமாக்ஷி அம்பாளையே வைத்து வழிபாடு செய்யவேண்டும் எனவும் அபிப்பிராயம் ஏற்படத் தொடங்கியது. பின் காமாக்ஷி அம்பாளையே பிரதிஷ்டை செய்ய முடிவு ஏற்பட்டது. அக்காலத்தில் வண்ணார்பண்ணையில் வசித்துவந்த விஸ்வகுலப் பெரியார் திரு. க. வைத்திலிங்கப் பத்தர் அவர்கள் (பூணூல் வயித்திலிங்கப்பத்தர்) இந்திய யாத்திரையை மேற்கொண்டார். அவர் சுவாமிமலையில் இருந்த சிற்பாசாரியார் திரு. கண்ணைய ஆச்சாரியார் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அப்பொழுது அப்பெரியார் திரு. க. வயித்திலிங்கப்பத்தர் அவர்களிடம் தான் தனது வயது முதிர்ந்த காலத்தில் பெற்ற அனுபவங்களைக் கொண்டும் கைத்திறனைக் கொண்டும் காஞ்சி காமாக்ஷி அம்பாளின் அம்சங்களைக்கொண்ட சிலா விக்ரகம் ஒன்றை உருவகப்படுத்தி (சிலை அம்சம்: தேவியின் இடது கைகளில் ஒன்றில் பாசமும், மற்றொன்றில் நீலோற்பல புஷ்பமும், வலது கைகளில் ஒன்றில் அங்குசமும் மற்றொன்றில் கரும்பும் உள்ளன. அன்பையும் அருளையும் பாசமும், செழுமையையும் உணவையும் புஷ்ப

மும், அசுர சக்தியை அடக்கும் தீரத்தை அங்குசமும் மன்மதனை வென்றதைக் கரும்பும் அபயவரதங்கள் பாதமாகவும் குறிப்பிடுகின்றன.) இச்சிலையை விஸ்வகுல மக்களுக்கு அன்பளிப்பாகச் செய்ய வேண்டும் என்று எண்ணங்கொண்டிருந்ததாகவும் எனவே தான்செய்த அச்சிலையை யாழ்ப்பாண விஸ்வகுல பொற்றொழிலாளருக்கு வழங்க விருப்பங்கொண்டுள்ளதாகவும், திரு, வயித்திலிங்கப்பத்தர் அவர்களின் சந்திப்பு தனது பேராவலைத் தீர்ப்பதாகவும் கூறி — தற்பொழுது ஆலய மூலஸ்த்தானத்திலிருக்கும் காமாக்ஷி அம்பாளின் சிலையை — அன்பளிப்பாகக் கொடுத்தார்.

கி. பி. 1898ஆம் ஆண்டில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அவர்கள் சைவசமயக் கோவில்கள் கிறீஸ்தவ கோயில்கள் பற்றிய பதிவு இடாப்பு தயார்செய்யப்பட்டபொழுது அதில் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயம்பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

கி. பி. 1870-ல் திரு. காசிநாதர் தம்பர் கட்டியது கல் கட்டிடம்

மனேஜர்: விஸ்வகுலதுங்க மேஸ்த்திரி கந்தர்.

திருவிழா: வருடந்தோறும் ஒன்பது நாள் திருவிழா நடாத்தி பத்தாம் நாள் பங்குனி உத்தரத்தன்று மணவிழா பதினோராம் நாள் ஊஞ்சல் உற்சவம்.

இவ்வாலயம் வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயம் என்றும், வண்ணார்பண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயம் என்றும், வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயில் என்றும் சிறப்புப் பெயருடன் அழைக்கப்பட்டு வருகின்றது. ஆரம்பத்தில் நாச்சிமார் கோயில் என்று அழைக்கப்பட்டு வந்தது. இலங்கை வடபகுதிப் புகையிரதப் பாதையில் காலஞ்சென்ற சேர். பொன். இராமநாதன் அவர்கள் நாச்சிமார் கோவில் என்னும் புகையிரத தரிப்பு நிலையத்தை, நாச்சிமார் கோவில் வீதியும் புகையிரதப் பாதையும் சந்திக்கும் இடத்தில் ஏற்படுத்தி இலங்கைப் புகையிரதப் பாதைகளின் படத்தில் நிலைபெறச் செய்து பெருமைப்படுத்தியதை நாம் இன்றும் காணலாம். இதுமட்டுமன்றி 'நாச்சிமார் கோவிலடி' என்னும் பெயரினால் அழைக்கப்படும் உபதபாற்கந்தோர் முதன்முதல் மேற்படி ஆலயத்திற்குரிய கட்டிடத்திலேயே கி. பி. 1951ஆம் ஆண்டு தொடங்கியதும் தபால் இலாக்காவில் உப-தபாற்கந்தோர் நிரலில் பதியப்பட்டு இருப்பதும் பெருமையுடைத்து.

இவ்வாலயம் உள்ள நிலையம் ''குளங்கரை மருதடி'' என உறுதிச் சாதனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

கி. பி. 1870ஆம் ஆண்டிலிருந்தே கோயிலுக்கு நிலங்கள்முறைமையாகத் தருமசாதனம் செய்யப்பட்டிருப்பதை நாம் சாதனங்கள்மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது. இக்கால எல்லைக்கு முன்னுள்ள விபரங்கள் எழுத்திற் காணக்கூடியதாகவில்லை. கி. பி. 1870, 1887, 1893, 1912, 1933, 1969 ஆகிய ஆண்டுகளில் எழுதப்பட்ட பராபரிப்புத் தத்துவ உறுதிச் சாதனங்கள் இருக்கின்றன. எனவே இக்கோயில் பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலிருந்தே கோயில் ஆதீன மகா சபையாரால் முறைமையாக நியமிக்கப்பட்ட தர்மகர்த்தாக்களாற் பரிபாலிக்கப்பட்டு வந்திருக்கிறது. கொக்குவில்குடி, நல்லூர்குடி, கோப்பாய்குடி, அளவெட்டிக்குடி, வண்ணார்பண்ணைக் குடியினர்கள் ஒருங்கு சேர்ந்து 1893-ல் எழுதப்பெற்ற பராமரிப்புத்தத்துவ உறுதிப்படி பஞ்சாயத்தர்களாக திருவாளர்கள் நமசிவாயம் சதாசிவம், காசிநாதர், தம்பையா, கார்த்திகேசர் குட்டிப்பிள்ளை, விஸ்வகுலதுங்க மேத்திரி கந்தர், விசுவநாதர் முத்து ஆகியோர் நியமனம்பெற்று மேற்படி ஆலயத்தை பரிபாலனஞ் செய்துவந்தார்கள். இவர்களின் நிர்வாக காலத்தில் ஆலயம் வளர்ச்சியடைய ஆரம்பித்தது.

திரு. நமசிவாயம் சதாசிவம் பண்டிதர் அவர்கள் சிங்கை நகரில் முதலியார் உத்தியோகம் வகித்து இளைப்பாறி தாய்நாடு திரும்பியிருந்தமையினுல் அவர் பஞ்சாயத்தில் அங்கம்வகித்து தீவிரமாக உளைக்கக்கூடியதாக இருந்தது. தற்போது பாடிவரும் அம்பிகையின் திருவூஞ்சல்ப் பாட்டையும் மற்றும் பல அரிய பாடல்களையும் பாடி அருளினுர். அக்காலத்தில் வசித்த விஸ்வகுல திரு. வ. விஞசித்தம்பி பண்டிதர் அவர்களும் பல பாடல்களை இயற்றியருளியுள்ளார்.

பின் ஆலயத்தின் விஸ்தரிப்பும் மற்றைய முறைமையான நிர்வாகங்களும் ஏற்படவேண்டியிருந்தபடியால் பதினன்கு அங்கத்தவர்களைக் கொண்ட சபையில் ஐவரைக்கொண்ட பஞ்சாயத்தும் ஏற்பட்டது. அங்கத்தவர்களாக திருவாளர்கள் நமசிவாயம் செல்லப்பா, தம்பர் செல்லத்துரை, விஞசித்தம்பி சிதம்பரநாதர், கார்த்திகேசு காசிநாதர், நமசிவாயம் பொன்னம்பலம், முத்துக்குமாரு சின்னத்தம்பி, குட்டிப்பிள்ளை விசுவலிங்கம் இராமுப்பிள்ளை தம்பிராசா, விஞசித்தம்பி துரையப்பா, சிதம்பரநாதன் வைத்திலிங்கம், கதிரவேலு காசிப்பிள்ளை, கந்தர் சின்னத்தம்பி, கதிர்காமர் பொன்னையா வைரமுத்து சிதம்பரநாதர் அங்கம் வகித்தார்கள்.

இவர்களின் நிர்வாக காலத்தில் ஆலயம் துரிதமாக முன்னேற்றம் அடைந்தது. சுற்றுப்பிரகார மண்டபம் கட்டப்பட்டது. பரிவார மூர்த்திகள், நவக்கிரகங்கள் யாவும் பிரதிஷ்டை செய்யப்பட்டு திருப்பணி

கள் நடைபெற்றன. அக்காலத்தில் கொடிஸ்தம்பம் ஸ்தாபிக்கப்பெற்று கொடியேற்ற விழாவும், தேர் விழாவும் நடைபெற்று வந்தன.

பின் கி. பி. 1933-ம் ஆண்டில் மேலும் ஆலய வளர்ச்சி தீவிர மாக்கப்படவேண்டும் என விரும்பிய விஸ்வகுல மக்கள் ஒரு மகா சபையைக்கூடி பின்வருவோரை ஆலய பரிபாலிப்பாளர்களாக நியமித் தனர். அதில் திருவாளர்கள்: வே. அ. சோமசுந்தரம், மு. சின்னத் தம்பி, க. நடராசா, பொ. முத்துக்குமாரு, வை. விசுவலிங்கம், மு. முத்துவேலு, ச. செல்லையா, க. செல்லத்துரை, கு. விசுவலிங்கம், கு. மாணிக்கவாசகர், அ. வேலுப்பிள்ளை, செ. சோமசுந்தரம், த. சபாபதி க. கந்தையா, தி. செல்லையா, ச. பொன்னுத்துரை, ச. சுப்பிரமணியம் அங்கம் வகித்தார்கள்.

இவர்களின் நிர்வாக காலத்தில் ஆலய மகாமண்டபம் பொழி கல்லால் திரு. சி. மு. முத்துவேலுப்பத்தர் அவர்களின் உபயமாகக் கட்டப்பெற்றது. இவர்களின் அரிய சேவைகள் யாவும் பாராட்டுதலுக்கு உரியன.

கி. பி. 1933-ம் ஆண்டு தொடக்கம் 1969-ம் ஆண்டு வரையில் நிர்வாக அங்கத்தவர்களில் பல மாற்றங்கள் இடம்பெற்றன.

கி. பி. 1966-ம் ஆண்டு பிற்பகுதியில் திருவாளர்கள்: செ. சோம சுந்தரம், வி. சரவணமுத்து, செ. கந்தசாமி ஆகியோரைக் கொண்ட பாதுகாவற்சபை ஏற்படுத்தப்பட்டு இயங்கிவந்தது. இந்தச் சபையின் காலத்தில் மகா கும்பாபிஷேகம் மற்றும் புனருத்தாரண திருப்பணி வேலைகளும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்த ஆண்டில் மஹோற்சவ விழாக்கள் பதினைந்தாகக் கூட்டப்பெற்றன.

கி. பி. 1969-ம் ஆண்டில் திருவாளர்கள் வே. தாமோதரம்பிள்ளை வே. அம்பலவாணர், சி. தம்பு, க. வி. இராசரெத்தினம், சி. சுப்பிர மணியம், ச. மயில்வாகனம், க. சி. பொன்னுத்துரைப்பத்தர், இ. வே. கந்தசாமி, ச. கந்தசாமி, க. நடராசா, தா. கிருஷ்ணசாமி, மு. கோபால கிருஷ்ணன், செ. மாணிக்கவாசகர், வி. செல்லத்துரை, க. மகாதேவா, சு. தருமலிங்கம், சி. திருஞானசுந்தரம், சி. சுப்பிரமணியம், சோ. நட ராசா, ஐ. இராசதுரை, சி. சண்முகம், ஐ. இராசேந்திரம், செ. துரை ஐயா ஆகிய இருபத்துமூன்று அங்கத்தவர்களைக் கொண்ட புதிய நிர் வாகசபை மகாசபையினரால் நியமிக்கப்பட்டு அவர்களிடம் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது.

1–10–69ல் இருந்து தற்போதைய நிர்வாகம் சீராகவும் சிறப்பாகவும் நடைபெற்றுவருகின்றது. இச்சபை ஆலய பரிபாலன சட்ட விதிகளுக்கு அமைவாக முறைமையாகவும் திறமையாகவும் இயங்கிவருகின்றது.

2

இவ்வாலயத்தில் சைவ ஆகம முறைப்படி கிரியைகள் யாவும் நடைபெற்று வருகின்றன. கி. பி. 1887, 1926, 1967 ஆகிய ஆண்டு களில் மகா கும்பாபிஷேகங்கள் நடைபெற்றிருக்கின்றன.

இவ்வாலயத்தின்கண் நடைபெறும் முக்கிய பூஜை, திருவிழாச் சிறப்புக்களை இங்கு ஆராய்வோம்:-

முதலாவதாக, நாள்தோறும் உஷக்காலம், உச்சிக்காலம், சாயங் காலம், (காலை 'சந்தி', உச்சிக்காலம், சாயரட்சை) அர்த்தசாமம் என நான்குகால நித்திய பூசைகள் நடைபெறுகின்றன. வாரந் தோறும் சுக்கிரவிழாவும் நடைபெற்றுவருகின்றன. மாதத்தில் வரும் பௌர்ணமியன்று திருவிளக்குப் பூசையும் செவ்வனே நடத்தப் பட்டு வருகின்றது. பங்குனி மாதம் பௌர்ணமி தினத்தன்று மகோற் சவ ஆரம்ப விழாவாக நல்ல முகூர்த்தத்தில் பந்தற்கால் நாட்டுதல், தேரடி விசேட பூசை முதலியன நடைபெறுகின்றது. மகோற்சவத் திற்கு முதல் மகாமாரியம்மன் கிராம ஊர்வலமும் அடுத்தநாள் குளிர்த் தியும் நடைபெறுகின்றது.

அடுத்தபடியாக, சித்திரை வருஷப்பிறப்புத் திருவிழா வருடா வருடம் நடைபெறும் பெருவிழாவாகிய கொடியேற்றம் முதல் (அதா வது துவஜாரோகணம் முதலாக) சித்திரையாபௌர்ணமிக்கு தீர்த் தோற்சவம், கொடியிறக்கம் (துவஜாவரோகணம்) ஈறுகவுள்ள 15 நாள் பெருந் திருவிழாக்கள், இதனையடுத்து நடைபெறும் சண்டேஸ்வரி உற்சவம், பூங்காவனம், திருவூஞ்சல், பிராயச்சித்தஅபிஷேகம், வைர வர் மடை என்பனவும், வைகாசி விசாகப் பொங்கல் பூஜைகளும், இலட்சார்ச்சனையும் நடைபெற்று இருபதாம் நிறைவுநாளாகிய ஆடிப் பூசத்திலன்று சங்காபிஷேகமும் திருவூஞ்சலும், தண்டிகை உற்சவமும், ஆவணிச்சதுர்த்தி விநாயகர் விழாவும், புரட்டாதி மாதத்தில் நவராத் திரிக் கொலுமண்டப பூசையும், விஜயதசமியிலன்று மானம்பூ விழாவும் அடுத்துவரும் பௌர்ணமி அன்று சந்திர தரிசனவிழாவும். ஐப்பசிக் கடைசிவெள்ளி முருகன் விழாவும், கார்த்திகை சோமவார விழாவும், திருக்கார்த்திகை தீபவிழாவும், பிள்ளையார்கதை படிப்பும், விநாயகர் சஷ்டி விழாவும், மார்கழித் திருவெம்பாவையும் மாணிக்கவாசக சுவாமி கள் விழாவும், திருவாதிரை உற்சவமும், சுவர்க்கவாயில் ஏகாதசி சந்தானகோபாலர் உற்சவம், தைப்பொங்கல் பூசைகள், தைப்பூச மணவாளக்கோல மஞ்ச உற்சவமும் (பகல் கும்பாபிஷேகதின சங்காபி ஷேகமும்), மகா சிவராத்திரி நான்குசாமப் பூசை அபிஷேகமும் சிவ லிங்க பூசை உற்சவமும் மிகவும் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன.

இந்தக் கோயிலில் அழகிய கைலாச வாகனம், மஞ்சம், சப்பை ரதம் (சப்பரம்), குதிரைவாகனம், பூந்தொட்டி, அன்னவாகனம், சர்ப்ப

வாகனம், செந்தாமரைப்பூ, காமதேனு, சிங்கம், ரிஷபம், மயில், கிளி, தண்டிகை, கேடகம் முதலிய வாகனங்கள் உண்டு. தீர்த்தோற்சவம் நடைபெறுவதற்கு ஒரு திருக்குளமும் உண்டு. இந்தத் திருக்குளம் வண்ணை – கந்தர் (உடையார்) அவர்களால் நிர்மானிக்கப்பட்டது. கி.பி. 1970–ம் ஆண்டுவரை உபயோகத்தில் இருந்த ரதம் (தேர்) பழுதடைந்துவிட்டபடியால் திருவாளர்கள்: க. சி. பொன்னுத்துரைப் பத்தர், வி. சரவணமுத்துப்பத்தர், இ. வே. கந்தசாமி, தா. கிருஷ்ண சாமி, நா. கனகசபை, செ. சோமசுந்தரம், பொ. கந்தையா, க. இராசரத்தினம், சி. முத்துக்குமாருப்பத்தர், க. கந்தையாப்பத்தர், செ. துரைஐயா ஆகிய பதினொரு அங்கத்தினரைக்கொண்ட ஒரு தேர்த் திருப்பணி உபசபையை நிர்மானித்து அவர்களின் அரும் பணி யாலும், அம்பிகையின் கிருபாகடாட்சத்தாலும், அன்பர்களின் பண உதவியாலும் பல்லாயிரக்கணக்கான ரூபா செலவில் புதிய, அதாவது மரத்தில் செதுக்கப்பட்ட சிற்ப அமைப்புவாய்ந்த உருவங்களால் நிரப்பப் பெற்றிருக்கின்ற அடித்தளங்களையுடையதுமான ஒரு சித்திரத்தேர் கட்டப்பட்டு, வெள்ளோட்ட வைபவமும் நடாத்தப்பெற்று, கி. பி. 1971–ம் ஆண்டு தொடக்கம் தேர்த்திருவிழாவன்று ரதோற்சவ தினத்தில் இப் புதிய சித்திரத்தேரில் இறைவி அகிலாண்டகோடிப் பிரமாண்டங்களின் நாயகியாகிய ஸ்ரீ காமாக்ஷி அம்பிகை, விநாயகர், பாலசுப்பிரமணியர், சண்டேஷ்வரி புடைசூழ வீதிவலமாய் எழுந்தருளி பக்த கோடிகளுக்குத் திருக்காட்சியளித்து இஷ்டசித்திகளைக் கொடுத்தருளுகின்றாள்,

இன்னும் தேர் விடுவதற்கு ஒரு பிரமாண்டமான கட்டிடமும் தேர் ஓடும் வீதியும் செவ்வனே அமைக்கப்பட்டிருக்கின்றன. தேர் முட்டி கட்டுவதற்கும், தேர் ஓடும் வீதியைச் செவ்வனே அமைப்பதற்கும் இடப்போதாதிருந்தவேளையில் திரு. அம்பலவாணர் கண்ணுத்துரை தேவையான காணியைத் தந்துதவியும், தேர்முட்டிக்கு அருகாமையில் இருந்த கிணற்றைப் புனருத்தாரணம் செய்தும் அன்பளிப்புகள் செய்துள்ளார்கள்.

மெய்யன்பர்கள் உய்த்து உணர்ந்துகொள்க.

தேவி கருணை

வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்,

வி. நடராசா

உ

கணபதி துணை

வண்ணை

# ஸ்ரீ காமாக்ஷி அம்பிகை

# திருவருட் பிரசாதம்

---

## விநாயக ஸ்துதி

### ஸ்லோகம்

ஓங்கார நிலயந்தேவம் கஜவக்த்ரஞ் சதுர்ப்புஜம்
பிசண்டில மஹம்வந்தே ஸர்வ விக்நோப ஸாந்தயே.

(தேவீ பராக்கிரமம்)

### வெண்பா

உலகு துதிசெய்யு மும்பன் முகத்தோன்
இலகருளைச் செய்க வினிது.

(தேவீ பராக்கிரமம்)

## விகடசக்கர விநாயக ஸ்துதி

### விருத்தம்

விழிமலர்ப் பூசனையு ஞற்றித் திருநெடுமால்
பெருமாழி மீள வாங்கி,
வழியொழுகாச் சலந்தரன் மெய்க்குருதி
படிமுறை நாற்றம் மாறு மாற்றுற்(ல்),
பொழிமதநீர் விரையேற்றி விகடநடப்
பூசைகொண்டு புதிதா நல்கிப்,
பழிதபுதன் தாதையினும் புகழ்படைத்த
மதமாவைப் பணிதல் செய்வாம்.

(காஞ்சிப்புராணம்)

## திருவேகம்பநாதர் ஸ்துதி

தணந்தபெருந் துயர்க்கடல்மீக் கூர்தலினுன் மலைபயந்த தரளமூரற்
கணங்குழையாள் புரிபூசை முடிவளவுந் தரியாமல் இடையே கம்பை,
அணங்கினைத்தூ தெனவிடுத்து வலிந்திறுகத் தழீஇக்கொள்ள அமையாக் காதல்,
மணத்தகுளிக் குறிபூண்ட ஒருமாவிற் பெருமானை வணக்கஞ் செய்வாம்.

(காஞ்சிப்புராணம்)

## தேவி ஸ்துதி

### கட்டளைக் கலித்துறை

பூவின் கிழத்தி மலரயன் றேவிநற் புங்கவர்கள்
தேவியின் மனைவி கஜநா யகிவல்லி தேவரொடும்
பாவின் மொழியிற் பராவி வரம்பெறு பாவை முக்கட்
கோவின் கிழத்தி யருள்வாய் குமின்மொழிக் கோமளையே.

(தேவி பராக்கிரமம்)

## ஸ்ரீ பார்வதி ஸ்துதி

### ஸ்லோகம்

முக்தா குந்தேந்து கௌரீம் மணிமயமகுடாம் ரத்நதாடங்கயுக்தாம்
அக்ஷஸ்ரக் புஷ்பஹஸ்தாம் அபயவரகராம் சந்த்ரசூடாம் த்ரிநேத்ராம்
நாநாலங்காரயுக்தாம் ஸுர மகுடமணி த்யோதித ஸ்வர்ணபீடாம்
ஸாநந்தாம் ஸுப்ரஸந்நாம் த்ரிபுவநஜநநீம் சேதஸா சிந்தயாமி.

(ஸ்ரீ ராமஜயம் ஸ்தோத்திரமாலை)

### விருத்தம்

எழுவாயும் பயனிலையும் பொருளும் போல
எப்பொருட்கு நிமித்தமாய்ப் பேதமாகிப்
பழுதறுமா மணியொளிநீர்த்தண்மை யென்னப்
பரமாகி யகிலாண்ட மெல்லா மான
முழுமுதலை முன்னிலையோன் றில்லர் வாதி
மும்முதலைத் தொழுவார்தம் வினைவேர் வீழ்த்தும்
மழுவலத்தா னிடங்காணு மமல வாழ்வை
மறைபரவு முமையையமனத் தவிசி லுய்ப்பாம்.

(பிரபஞ்ச உற்பத்தி)

## ஸ்ரீ காமாக்ஷி அம்பிகை ஸ்துதி

ஊன்பிலிற்று மழுவாளி கலவிதனில்
ஒண்ணுதென் றேர்ந்து நஞ்சந்,
தான்பிலிற்றும் பாப்பணியை நீப்பவுங்கார்
வண்டினங்கள் ததைந்து மூசத்,
தேன்பிலிற்று நறுங்கடுக்கைத் தெரியலைப்பாம்
பெனமருண்டத் தெரியல் நாறுங்,
கான்பிலிற்றத் தெருண்டணையுங் காமக்கோட்
டத்துமையைக் கருத்துள் வைப்பாம்.

கருக்காமக் கோட்டிமிர வினையனைத்தும்
ஒருங்கெய்திக் கலகஞ்செய்யுந்,
தருக்காமக் கோட்டியெலாம் அறஎறிந்தாம்
இனிஎன்றும் தகைசால் அன்பு,
சுருக்காமக் கோட்டினைச்சே யரைகரங்கொண்
டார்க்குழலைச்சுவடு நல்குந்,
திருக்காமக் கோட்டியம்மை சேவடிப்போ
தெப்போதுஞ் சிந்திப் பாமால்.

(காஞ்சிப்புராணம்)

# 1. சரிதை வரலாறு

## தேவி ஸ்துதி

சிலையொருகை யடக்கியலை கடலொருகை
யடக்கியபின் செந்தமிழ்க்கு
நிலையதனை வயக்குமரர் முனிவனுக்கோர்
மொழியுதவு நிமலனைத்தந்த
தலைமகளைக் கலைமகளை யணிவிழியாக்
கொண்டகில மளிக்குந் தெய்வ
மலையரையன் பயந்தபரம் பரையடியை
யிறைஞ்சிமன வாட்டந்தீர்வாம்.

(தேவி ஸ்தோத்திரக் கதம்பம்)

சர்வ மங்களகரையாயும், ஸமஸ்த கல்யாண ஸ்வரூபி யாயும், அகில ஜகன்மாதாவாயும், திருவருட்பிரசாதமாகிய கருணைக்கடலாயும், திவ்யதேஜோமய விக்ரஹஸ்வரூபியாயும் உள்ள ஆதிபராசக்தியின் திருவருளின் உதவிகொண்டே பெறு தற்கு அரிய பெரும் பேற்றை அடையலாமென்றும், அப்பரா சக்தியே பிரமாதி தேவர்களுக்கெல்லாம் அருட்கண்பார்வை யால் படைத்தல் முதலிய பஞ்சகிருத்தியங்களை இயல்புற நடத்துவாளென்றும் உணர்ந்த வசிஷ்டர், நாரதர், விசுவா மித்திரர் முதலிய முனிசிரேட்டர்கள் பலர் ஒன்றுகூடி, முன் னொருகாலத்தில் பிரமதேவனை நோக்கி, "சுவாமி! அடியேங் கள் தவஞ்செய்தற்குத் தகுந்த புண்ணிய பூமியொன்றை எங்களுக்குக் காண்பித்தருள வேண்டும்", என்று வேண்டி ஞர்கள். நான்முகனும் அவர்கள் விருப்பத்திற்கியைந்து தருப்பை ஒன்றைச் சக்கரமாக வளைத்துக்கட்டி நிலத்தின் மேல் உருட்டி, "முனிவர்களே! இத்தருப்பைச் சக்கரத்தைத் தொடர்ந்து செல்லுங்கள். இது நிற்கும் இடமே நீங்கள் தவஞ் செய்தற்கு ஏற்ற இடம்", என்று விடைகூற, முனிவர்களும் அதைப் பின்தொடர்ந்து சென்றுர்கள். இந்தச்சக்கரம் அதா வது - (நேமி) ஒரு வனத்தில் தங்கியது. இந்த நேமி தங்கிய வனத்திற்கு நைமிசவனம் எனப் பெயர்படும். இங்கே முனி வர்கள் ஒன்றுசேர்ந்து, திருவெண்ணீறணிந்து உருத்திராக்க

மாலை சூடி சிவத்தியானத்தில் ஆழ்ந்து தவஞ்செய்பவர்களாய் வேதாகமம் முதலியவைகளால் ஆதிப்பரம்பொருளாகிய சிவபெருமானையும் பராசக்தியையும் வணங்கிக்கொண்டு தங்கியிருந்தனர்.

இப்படியாக முனிவர்கள் நைமிசாரணிய வனத்திலே தங்கியிருக்குங்காலத்தில், வியாசமுனிவரிடம் நான்கு வேதங்களையும், பதினெண்புராணங்களையும் ஐயம், திரிபு, அறியாமை என்னும் முக்குற்றங்களுமகலக் கற்ற புண்ணியசீலராகிய சூதமகாமுனிவர் அங்கெழுந்தருளினார். சூதமகாமுனிவரைக் கண்ட முனிவர்கள், ஆனந்தமேலீட்டினால் அவரை எதிர்கொண்டழைத்து அருக்கிய பாத்திய ஆசமனாதிகளால் உபசரித்து, உயர்ந்த ஆசனத்திலிருத்தி, அவரைநோக்கி, "தேவரீரே! அடியேங்கள் செய்த தவப்பயனால் தாங்கள் இங்கு எழுந்தருளப்பெற்றோம். தேவரீர் அடியேங்கட்குச் செய்த உபதேசங்களினால் சிவபெருமானும் உமாதேவியாரும் தீயிற்சூடுபோல அபின்னையாயிருக்கின்றார்கள் என்றும், சிவபெருமானது செயலையும் உமாதேவியார் இயக்குகின்றாளென்றும், அவ்வம்மையாருடைய திருவடிகளே நற்கதி அளிக்கின்றன என்றும் யாங்கள் ஓர் அளவு அறிந்திருந்தும் அவ்விறைவியின் புகழையுணர்த்தும் பல சரித்திரங்களையும் கேட்டிருந்தும், அவ்வம்மையார் அடியார்க்குற்ற துன்பங்களைக் களைந்தும், இஷ்டசித்திகளையும் அருளிய சரிதங்களை நன்றாயறிய விரும்புகின்றோம். திருவாய் மலர்ந்தருளவேண்டும்" என்று கேட்ப, சூதமகாமுனிவரும் மனமார்ந்த சந்தோஷத்துடன் அசைவற்று நிஷ்டையிலிருந்து தேவியின் திவ்ய சொரூபத்தை மனத்திலிருத்தி, அம்பிகையின் பாதாரவிந்தங்களைத் தியானித்து, "அருந்தவ முனிவர்காள்! அம்பிகையின் சரிதசாகரம் அளவிடற்கரியது. அரிதிலும் அரிது. முன்னொருகாலத்தில் சிவபெருமானது அஷ்டாஷ்டமூர்த்தங்களைப்பற்றி உங்களுக்கு விரிவாக எடுத்துக்கூறியுள்ளோம். இப்பொழுது நீங்கள் விரும்பியபடி தேவியின் அஷ்டாஷ்ட லீலைகளைப்பற்றி விரிவாகச் சொல்லுகின்றோம். பெரியோரைச் சேவிப்பது வீண்போகாது. பயனையே உண்டுபண்ணும். அதுபோல நீங்களும்

பயனுண்டாகும்படி செய்தீர்கள். அட்டாவதானமாகக் கேளுங்கள்", என்று கூறித் தொடர்ந்து தேவியின் அஷ்டாஷ்ட லீலைகளைப்பற்றிக் கூறியருள, அதைக்கேட்ட நைமிசாரணிய முனிவர்கள் பேரின்பப் பெருங்கடலில் ஆழ்ந்து, உள்ளம் உருக ஆடிப் பாடிப் பரவி, ஆனந்தபரவசராய், ஆனந்தக் கூத்தாடி, பக்திசிரத்தையோடு, அம்பிகையின் திருவருளையே வேண்டு பவர்களாய், அங்கு இன்புற்றிருந்தார்கள்.

இஃது இவ்வாறிருக்க, இச்சரிதை வரலாற்றில் விபரிக்கப் பட்ட அம்பிகையின் அஷ்டாஷ்ட லீலைகளின் ஒரு பகுதியே, இந்நூலில் சுருக்கி எழுதப்பட்டிருக்கும் ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பிகையின் சரிதையாகும். ஆகவே அம் முனிவர்களைப் போல், வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பிகையின் அடியார்களாகிய எல்லோரும், இந்நூலைப் பக்தி சிரத்தையுடனும் தூய்மையுடனும், ஓதி உணர்ந்து, இடையருத இன்பப்பேறெய்திச் சோதியாய் விளங்குவோமாக.

# 2. ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பிகை சரிதை

## பிரமன் படைப்பும், இறைவி தக்கன் மகளாதலும்.

தக்க னுரங்கெட வுக்கிரமுற்ற தழற்பாவாய்
    தண்டர ளங்கொழி முண்டக மீதுறு சங்கரையே
மிக்கவ ரிடமுறு முக்கணி யேமறை மீதாளே
    விண்ணர சாள்தரு பெண்ணர சேமணி மார்பாளே
அக்கர வம்புனை மிக்கவ ளேயரி யேற்றுளே
    ஆரணி காரணி நீரணி பூரணி யென்பார்பா
லெக்கண முந்துணை யுறுதாட்சாயணி யெம்மானே
    என்று னிணையடி புணைதுணை யருளுக சீர்வாழ்வே.

(பிரபஞ்ச உற்பத்தி 448-ம் பக்கம் தாட்சாயணி திருவவதாரம்.)

பிரமதேவன், ஒரு கற்பகால முடிவில், அதாவது விடியலில் துயில் நீங்கி உமாபரமேஸ்வரருடைய திருவடிகளைத் தொழுது எழுந்து உலகம் முழுவதும் பெருவெள்ளத்தில் ஆழ்ந்திருந்ததைக்கண்டு, "அகிலலோகத்திலும் உள்ள எண்ணில் கோடி சீவராசிகளெல்லாம் அழிந்துவிட்டனவே, இனி எவ்வாறு உலகத்தைப் படைப்பது", என்று நினைத்துக் கவலை கூர்ந்தான். அப்பொழுது பிரமதேவனின் நினைவிற்கு, ஒரு விஷயம் தென்பட்டது. அதாவது, சிவபெருமான் முன்பு, தனக்குக் கொடுத்திருந்த ஒரு வரம். அந்த வரம் என்னவென்றால், 'கற்பந்தோறும் உன்னிடத்தில் குமார வடிவத்துடன் தோன்றி அருள்புரிவோம்', என்பதாம். இந்த வரத்தைச் ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் ஒரு பாட்டில் வர்ணிக்கின்றார். அதாவது,

பூதி மேனியார் திருவருள் கூடிப் புரிந்த
    முன்நிகழ் உணர்ச்சிவந் தெய்த,
ஆதி கற்பத்தில் எதிர்எழுந் தருளி அண்ண
    லார்கற்பந் தொறுந்தொறும் நின்பால்,
சோதி சேர்எழிற் குமாரநல் வடிவால் தோன்றி
    நாம்உனக் கருளுதும் என்னுப்,
பேதி யாவகை தனக்குமுன் அளித்த பெருவ
    ரத்தினைத் தெளிந்தனன் பிரமன்.

(காஞ்சிப் புராணம்)

என்ற இந்த வரம் பிரமதேவனுடைய நினைவிற்கு வர, இனி உலகத்தில் படைப்பைச் செய்யக்கருதியவனாய், இறைவனை நோக்கித் தவம் புரிந்தனன். இறைவன் உருத்திர காயத்திரிதேவியுடன் தோன்ற, பிரமன் கண்டு, "தத்புருஷாய வித்மஹே மஹாதேவாயதீமஹி தந்நோருத்ர ப்ரசோதயாத்" என்னும் உருத்திரகாயத்திரி மந்திரத்தை, தற்புருடனுக்குப் பொருந்தத் தியானிக்கின்றோம்; உருத்திரன் எமக்கு அருளுக' என்னும் பொருள்படச் செபித்து வணங்கினன். இறைவன் உலகத்தைப் படைக்கும்படி திருவருள்பாலித்துச் செல்ல, பிரமன் படைப்பில் ஆண்மையே தோன்றின. பெண்மை தோன்றவில்லை. பின்பு பிரமதேவன், "ஸஹஸ்ரா க்ஷாய வித்மஹே மஹாதேவாய தீமஹி தந்நோரு த்ரப்ரசோதயாத்" என்னும் வேறு காயத்திரி மந்திரத்தை, 'தற்புருடனது திருவருளைத் தியானிக்கின்றோம் எமக்கு உருத்திரன் அருள்செய்க' என்னும் அர்த்தப்படச் செபித்து வணங்கினன். அதன்பின், இறைவனார் மனங்களித்து அர்த்தநாரீஸ்வர மூர்த்தமாகத் தோன்றினர். பிரமதேவன் சாஷ்டாங்கமாகப்பணிந்து அஞ்சலி செய்து பக்திசிரத்தையோடு அதிமதுரமான ஸ்தோத்திரங்களால், அர்த்தநாரீஸ்வரரை,

"ஜயதேவமஹாதேவ ஜயேஸ்வரமஹேஸ்வர,
ஜயஸர்வகுணஸ்ரேஷ்ட ஜயஸர்வஸுராதிப
ஜயப்ரக்ருதிகல்யாணி ஜயப்ரக்ருதிநாயிகே,
ஜயப்ரக்ருதிதூராங்கி ஜயப்ரக்ருதி ஸுந்தரி."

(தேவீ பராக்கிரமம் 23-ம் பக்கம்)

என்றிவ்வாறு பலவாறுகத் துதித்தனன்.

இத்தோத்திரங்களினுலுவகையெய்திய அர்த்தநாரீஸ்வரர், "உலகவிருத்தியைக்கருதிச் செய்த உன்தவத்தை வியந்தோம், நமது தேவி உனக்கு அருள்செய்வாள்." என்றருளித் தமது வாம பாகமாகிய சக்தியைப்பிரிய, பிரமதேவன் மகேஸ்வரியும் சர்வவியாபியுமாயுள்ள மகாதேவியை அஷ்டாங்கமாக நமஸ்கரித்து, "தாயே, யான் படைப்புத்தொழிலைச் செய்யும் வண்ணம் படைக்கப்பட்டேன். என் படைப்புகள் விருத்தியடையாததினுல், இனி ஸ்திரீ புருஷ சங்கமத்தால் உலகத்

65

தைப் படைக்கவேண்டுமென்று விருப்பங்கொண்டேன். ஸ்திரீ சமூகங்கள் இதுவரையும் படைக்கப்படாமையினுல் அது எனக்குச் செய்ய இயலாததாயிற்று. எல்லாச் சக்திகளும் தேவரீராலேயே உண்டாவதனுல் இது விஷயமாகத் தேவரீரைப் பிரார்த்திக்கின்றேன். இந்த உலகம் ஈடேறும்படி தேவியின் அம்சத்தால் என் மகனை தக்கனுக்குக் குமாரியாக அவதரிக்க வேண்டும்.'' என்று பிரார்த்திக்க இறைவியார் தன் புருவமத்தியிலிருந்து ஒரு சக்தியை உண்டாக்கி, ''பிரம தேவன் பிரியப்படி செய்க'' எனக் கட்டளையிட்டும், பிரமனை நோக்கி, ''இவளை நீ நாள்தோறும் வழிபட்டுப் பெண்களைப் படைப்பாயாக'' என்றருளி இறைவருடன் திருக்கைலாயக் கிரியை அடைந்தனர்.

சிவபெருமானுடைய வலப்புறத்துதித்த பிரமதேவன், பார்வதிதேவியின் புருவமத்தியிலுதித்த சக்தியை வணங்கி, "தாயே! நீ என் மகனை தக்ஷப் பிரஜாபதிக்கு மகளாக அவதரித்தல் வேண்டும். அதுமட்டுமல்லாமல், இன்னும் பெண்களைப் படைத்தருள வேண்டும். இல்லையேல் பெண்களைப் படைக்கும் ஆற்றலை எனக்குத் தந்தருள வேண்டும்'', என்று இரந்து வேண்டினன்.

இந்தவேளையில் தக்ஷப்பிரஜாபதியும் தனது தந்தையாராகிய பிரமதேவனிடத்திலிருந்து, 'சிவபெருமானே பரம்பொருள்' என்று தெளிவாகக் கேட்டறிந்திருந்ததனுல், பார்வதிதேவியின் அம்சமான ஒரு குமாரியைப் பெறவிரும்பித் தவஞ்செய்துகொண்டிருந்தனன். தக்கனின் தவமகிமையினுல் சிவபெருமான் பிரத்தியட்சமாகத் தோன்றி, 'உனக்கு யாது வரம் வேண்டும்' என்று கேட்க, தக்கன் சிவபெருமானைத் துதித்து வணங்கி, 'நான் பிரசித்தமாய் நிகரின்றி அரசாளவும், உமையம்மையார் எனக்குப் புத்திரியாய் அவதரிக்கவும், தாங்களே எனக்கு மருமகனுகிவந்து அப்புத்திரியை மணஞ்செய்யவும் வேண்டும்' என்று வேண்டினுர். சிவபெருமானும் அவ்வாறே வேண்டிய வரங்களை ஈந்தருளினுர்.

ஆகவே அதன்பின்பு அவ்வம்மை பிரமதேவனை நோக்கி, "உலகம் முழுவதும் சக்தி சிவசொரூபமாதலால், உனது வடிவத்தையும் இடப்பாதிபெண்ணும் வலப்பாதி ஆணுமாகக் கண்டு, சக்தி சிவமாகப் பாவிக்கக் கடவாய், அன்றுதொட்டு உலகம் ஆணும்பெண்ணுமாகத் தோன்றும்", என்றருளிச் செய்தார். அவ்வம்மையின் கட்டளைப்படி பிரமதேவரும் ஒழுகி வந்தார்.

பின்பு, அவ்வம்மையார் யமுனை நதிக்கருகிலுள்ள காளிந்தி நதியில் ஒரு தாமரை மலரின்மேல் சங்குவடிவா யிருந்தனர். தக்கன் ஸ்நானம் செய்துவரும்போது அங்கே தாமரை மலரின்மேல் சங்குவாயிருந்த அம்மையாரைக் கையில் எடுத்ததும், அம்மையார் ஒரு மகாசோதி வடிவாகிய பெண்குழந்தையாயிருந்ததைக்கண்டு பேரானந்தத்துடன் தன் மனைவியாகிய வேதவல்லியினிடம் கொடுத்து, 'சதி' என்று நாமகரணமும் செய்து, வளர்த்து வந்தனர். அம்மை தக்க னிடத்தில் 'சதி' என்னும் மகளாய்த் தோன்றிய இச்செய்தி யைச் சிவஞானமுனிவர் ஒரு பாட்டில், அதாவது,

"அண்ண லார்அருட் சக்தியுஞ் சிவனும்
ஆய தன்மையின் அன்றுதொட் டுலகம்
பெண்மை ஆண்மைஎன் றிருவகைப் புணர்ப்பாற்
பெண்ணும் ஆணுமாய்ப் பிறங்கும்என் றியம்பிப்,
பண்ணை மாமறைக் கடவுளுக் கருளிப்
பாவை அம்பிகை ஆயிடைக் கரந்து,
மண்ணெ லாம்உய்யச் சதிஎனும் பேரால்
வயங்கு தக்கனுக்கொரு மக ளானாள்."

(காஞ்சிப் புராணம்)

என்றிவ்வாறுக நன்கு விளக்குகின்றார். அக்காலம் தொடக் கம் பெண்களும் ஆண்களும் சையோகஞ் செய்து மக்களைத் தருவாராயினர்.

இஃது இவ்வாறிருக்க, முன்பு ஒரு கற்பகால முடிவில் நிகழ்ந்ததாகக் கூறப்பட்ட கதையை இன்னும் ஒருவாறு சிவ சந்நிதியில் நடந்ததாகவும் நூல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

அதாவது அக் கற்பகால முடிவில் பிரமேந்திராதி சகல தேவர் களும், மானிடர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் முதலிய எல்லாம் பிரளய வெள்ளத்திஞல் அழிந்த பின்பு, உலக மாதாவாகிய ஆதிபராசக்தி உலகத்தைப் படைக்கத் திருவுள்ளங் கொண்டார் என்றும், அவ்வேளையில் திருமால்,

திருப்பாணுழ்வார் இயற்றிய

அமலனுதிப்பிரான் பிரபந்தம் என்னும் நூலில்

ஆலமா மரத்தின் இலைமேலொரு பாலகனுய்
ஞாலமேழும் உண்டான் அரங்கத் தரவினணையான்
கோலமாமணி யாரமும் முத்துத்தாமமும் முடிவில்லதோரெழில்
நீலமேனி ஐயோ! நிறைகொண்டதென் நெஞ்சினையே!

(தமிழ் இலக்கியத் திரட்டு — பகுதி 1.)

*(திவான் பஹதூர் ச. பவானந்தம்பிள்ளை அவர்கள்.)*

ஆலிலையின்மேல் குழந்தை வடிவமாக அறிதுயி லமர்ந்தார் என்றும் கூறப்படுகின்றது. திருமால் பகவதியின் நோக்கத்தின்படி தமது உந்திக் கமலத்தில் பிரமதேவனைப் படைத்து, அவனுக்கு வேதங்களை நன்ருக உணர்த்தி, அவை களின் மகிமையினுல் உலகத்தைப் படைக்கும்படி கட்டளை யிட்டார். அவ்வண்ணமே பிரமனும் முயன்று, அது சரிவரா மையினுல் விஷ்ணுவை அடைந்து, 'தேவரீர்! எனக்கு உலகத் தைப் படைக்கும் ஆற்றல் கிடைக்கவில்லை, என் செய்வேன்' என்றுகூறி வருந்த, திருமால் பிரமதேவனைத் தன்னேடு அழைத்துக்கொண்டு சங்கரனிடம் சென்றடைந்து, நடந்தவை களைத் தெரிவிக்க, சிவபெருமான் தமது நெற்றிக் கண்ணினுல் இவர்களிருவரையும் நீருக்கிப் பின்பு, தமது பக்கத்திலிருக்கும் மாதேவியை நோக்கி, 'பகவதி! இவர்களை எழுப்பி, இன்று முதல் உலகம் என்றுமுள்ளபடி இயங்கச் செய்தல் வேண்டும்' என்று அருளினர். பகவதியும் தமது கருணைவடிவாய் அவ் விருவரையும் எழுப்பி, சிருஷ்டி திதி என்னும் இருதொழிலும்

அவர்களுக்கு இனிது இயலும் வண்ணம் அநுக்கிரகஞ் செய்தார் என்றும், இது முதல் உலகம் முறையே ஆணும் பெண்ணுமாகப் படைக்கப்பட்டு இனிது நடந்தேறியதாகவும் கூறப்படுகின்றது.

இன்னும், அம்மையார் (சதிதேவி) தக்ஷன் மகளாகத் தோன்றியமையால் தாக்ஷாயணி என்னும் திருநாமத்தையும் பெற்றனள். தாக்ஷாயணி தேவி சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்ய விரும்பி, தமது கருத்தைத் தக்கனுக்கு வெளிப்படுத்த, தக்கனும் ஒரு தவச்சாலையை அமைத்துதவ, தேவியும் ஏவலர்கள் சூழத் தவஞ்செய்வாளாயினள். சிவபெருமானும் தாக்ஷாயணிமுன் ஓர் விருத்தவேதியர் வடிவுகொண்டு சென்று அவள் தவத்தைக் கண்டு வியந்து, அவளைத் தாம் மணந்து கொள்வதாக ஏவலர்மூலம் தக்கனுக்கு அறிவித்தார். அதன் பின் பிரமதேவன் தாக்ஷாயணி தேவியாகிய சதிதேவியைச் சங்கரனுக்கு அதாவது சிவபெருமானுக்கு திருமணஞ் செய்து அளித்துத் தானும் அப்பாவனையில் விளங்க, உலகமும் ஆணும் பெண்ணுமாகத் தோன்றி விளங்கின.

இப்படியாக நிகழும் காலத்தில் பார்வதி பரமேஸ்வரரை, அமரேசனுகிய இந்திரன், பல்வகைப் பாவநீக்கத்தின் பொருட்டு இமாசலமெய்தித் தரிசித்து, வேண்டிய வரங்களைப் பெற்று அமராவதியை அடைந்தனன்.

தக்ஷசாபம்: அவ்வேளையில் தக்ஷன் தன்மகளாகிய சதிதேவியையும், மருமகனுன சர்வேஸ்வரனையும் காணவிரும்பி இமாசலத்திற்குத் தேவர்களுடனும் முனிவர்களுடனும் வந்திருந்தான். பார்வதிதேவியாகிய சதிதேவி அங்கு வந்திருந்த தேவர் முனிவர் முதலானேருடன் தக்ஷனையும் சரிசமமான நிலையில் நினைத்து உரையாடினள். தக்கன், சதிதேவியைத் தன் அஞ்ஞானத்தினுல், சர்வலோக மாதாவென்றும் உணராதவனுய், தனக்குத் தன் மகள் விசேஷ மரியாதைகள் செய்யவில்லை என்று துவேஷ மனப்பான்மை கொண்டு, தன் ஊழ்வினையால், சங்கரனையும் சதிதேவியையும் அவமானம் செய்ய எண்ணி, சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் அவிர்ப்

பாகம் அளிக்காமல் ஒரு யாகஞ்செய்ய நினைத்து, அவ்வள வோடமையாது திருமாலுக்கே அவிர்ப்பாகம் கொடுக்கவும் கருதி, தன்நகரெய்தி இவர்களிருவரையும் தவிர்ந்த ஏனைய தேவர்கள் எல்லோரையும் வருவித்தான். அதனால் தக்கன் யாகத்திற்குச் சிவபெருமானும் தாக்ஷாயணியும் தவிர்ந்த ஏனைய தேவர்கள் எல்லோரும் வந்து கூடியிருந்தனர். அங்கு சதிதேவியும் சிவபெருமானும் சமுகமளிக்காதிருந்ததை உணர்ந்த நாரதபகவான் சதிதேவியிடம் வந்து தக்கன் யாகத்தில் நடைபெறும் விருத்தாந்தங்களை விளம்ப, சதிதேவி தானும் அவ்யாகத்தைக் காணவேண்டுமென்று சிவபெருமானிடம் கூற, சிவபெருமானும், சதிதேவியை நோக்கி, "தக்கன் நம்மிருவரையும் சிறிதேனும் மதிக்காதிருக்கின்றான். நீ அங்கே சென்றால் அவமானமே அடைவாய்" என்று பலவாறு மறுத்தும், தேவியின் விருப்பத்தைத் தடுக்கமுடியாதவராய் அநுமதி கொடுத்தார். சதிதேவி உடனே இடபக்கொடியும் சிங்கக் கொடியும் கட்டப்பட்ட ஓர் திவ்ய விமானத்தில், பரிசனமாதர்கள் புடைசூழ அமர்ந்தருளினர். அவர் முன்னே, பல வகை வாத்தியங்கள் ஒலிக்கவும், சோமநந்தி என்னும் கணநாயகன் இடபத்தில் ஊர்ந்து செல்லவும், தேவதுந்துபிகள் முழங்கவும், சித்தர்கள், யோகீஸ்வரர்கள், முனிவர்கள் சந்தோஷிக்கவும், மேகங்கள் புஷ்பமாரி பொழியவும் விமானம் புறப்பட்டது. இப்படியாகச் சென்ற சதிதேவி தக்கன் யாக சாலையை அடைந்ததும், புத்திரியின் வருகையைக் கண்ட தக்கன் சீற்றங்கொண்டு, தன்னழிவுகாலத்தினால், சிறிதும் மரியாதை செய்யாமலும், உபசாரவார்த்தைகள் கூறுமலும், மற்றும் ஏனைய புத்திரிகளை விசேஷமாகக் கௌரவப்படுத்தினான். இதைக்கண்ட சதிதேவி, தக்கனையும் அவன் மனைவி வேதவல்லியையும் நோக்கி, "சங்கரனைப் பூசிக்க மறந்தது யாது காரணம்? உன் புதல்வியரில் பெரியவளாகிய என்னை மற்றும் ஏனைய புதல்வியரைப் போலவாவது நினைத்து மதியாமல் என் கணவனைப்போல என்னையும் அவமதித்தது என்ன காரணம்?" என்று கேட்க, தக்கன் கோபங்கொண்டு, "ஓ சதி! உனக்கு இளையவர்களாகிய என் குமாரத்திகள் விசேஷ குணமுடையவர்கள். உன் கணவனைக்காட்டிலும் என்

மருகர்கள் புத்திமான்களும் பலவான்களும். உங்களிருவரைப் போலல்லாமல் அவர்கள் பூசிக்கத் தக்கவர்கள். உன் கணவன் பித்தம் தலைக்கேறியவன்போல் சுடுகாட்டிற் பேய் பிசாசுகளோடு கூத்தாடுபவன். உத்தம லட்சணமில்லாதவன். மண்டை ஓடுகளையும் எலும்புகளையும் மாலையாக அணிந்தவன். அவன் என் பகைவன் ஆகையினால் அவனும் அவனுடைய மனைவியாகிய நீயும் இவ் யாகத்திற்கு வரும் யோக்கியதாம்சங்கள் உள்ளவர்கள் அல்லீர்'' என்று விடை கூறினான். இந்தவேளையில் நந்திதேவர் தக்கன்முன்பு சென்று, "இறைவர்க்குரிய அவியுணவை என்முன்னே ஈக!'' என்றும் ஒருவாறு தக்கனைச் சாந்தப்படுத்தும் நோக்கத்துடன், கேட்டுப்பார்த்தார். அதற்கும் தக்கன், நந்திதேவரைப்பார்த்து, "அவியுணவு கொடுக்கவே மாட்டேன்'', என்று விடையிறுத்தான். இந்தவேளையில் ததீசி முனிவர் முதலானோர் தக்கனுக்குப் பலவாறு புத்திமதி கூறினார்கள். எப்படிப்பட்ட அறிவுரைகள்: சிவபெருமானையும் தாக்ஷாயணி தேவியையும் யாகத்திற்கு அழைக்கவேண்டும் என்பது. ஆனால் அப்புத்திமதிகள் எல்லாவற்றையும் தக்கனுடைய ஊழ்வினை முன்னின்று தடுத்ததனால் நல்வார்த்தைகள் எல்லாம் தக்கனுடைய செவிக்கேறவேயில்லை. இவற்றைக் கேட்ட சதிதேவி மிகவும் கோபங்கொண்டு, யாகசாலையிலிருந்த யாவரும் கேட்கக்கூடியதாகத் தக்கனை நோக்கி, "அடே கொடியவனே! சங்கரனைத் தூஷித்த நீ மகா பாவியானாய். மகேஸ்வரனுடைய கோபாக்கினிக்கு இரையாகுக! கூடிய சீக்கிரம் தண்டிக்கப்படுவாய்'', என்று சபித்து உடனடியாகத் திருக்கைலாயமலைக்குத் திரும்பினர்.

## வீரபத்திர காளிகா சிருஷ்டி.

முக்கண்ணுஞ் சடைமுடியும் வாளுங் கொண்ட
முன்னவனை மூவேழு வுலகம் பூத்து
செக்கர்வான் மணிமவுலி யிடப்பா லோங்குஞ்
சேயிழையைப் பெற்றூர்த மகஞ்சி தைத்த
உக்கிரமா மூர்த்தியனை யுமையா ளன்று
உயிர்த்தமா காளியோ டாடல் கொண்ட
விக்கிரமா வீரனையெம் வினைவேர் வீழ்த்தும்
வீரபத்தி ரதேவைப்ப ணிந்துய் வாமால்.

(பிரபஞ்ச உற்பத்தி 270-ம் பக்கம்.)

தக்கனுடைய யாகத்தைக் காண்பதற்குச் சென்று, தகுந்த மரியாதை பெருது அவனையும் அவனுடைய யாகத்தையும் அழியும்படி சபித்துப் பின்பு கைலேயங்கிரியை வந்தடைந்த, சதிதேவி பின்னும் மிகக்கோபங்கொண்டு அவனையும் அவனுடைய யாகத்தையும் அழிக்கவேண்டுமென்று எண்ணி, சிவபெருமானைப்பார்த்து, "நாயகா! எங்களைச் சிறிதேனும் மதியாது தக்கன் செய்யும் யாகத்தை அழிக்க வேண்டும்," என்று கூறச் சிவபெருமானும் அப்படியே செய்தல் நன்று என்று இயைந்து, கணங்கட்கெல்லாம் தலைவனும் மகாபலசாலியுமான வீரபத்திரரைச் சிருஷ்டித்தனர். அதே கணப்பொழுதில் அம்பிகையும் தன் கோபத்தினுல் வீரபத்திரருக்கியைந்த வீரத்தன்மையுடைய காளியைப் படைத்தனர்.

சிவபெருமானும் பார்வதியாரும், வீரபத்திரரையும் காளியையும் நோக்கி, "உங்களிருவருக்கும் மங்களம் உண்டாகுக," என்று வாழ்த்தி ஆசீர்வதித்தனர். அப்பொழுது வீரபத்திரர் சிவனையும் பார்வதியையும் நோக்கி, "தாங்கள் என்ன கட்டளையை எனக்கு இடுகின்றீர்கள்?" என்று கேட்க, சங்கரன், "வீரபத்திரனே! தக்கன் கங்காத்துவாரத்தில் யாகஞ் செய்கின்முன். நீ காளியோடு அங்குச்சென்று அவனுடைய யாகத்தை அழிக்கவேண்டும். நாங்கள் இருவரும் அதற்குப் பக்கத்தேயுள்ள ரைப்பிய முனிவரின் ஆச்சிரமத்தில் வந்திருந்து பார்வையிடுகின்ருேம்," என்று திருவாக்கருள, பார்வதியாரும் வீரபத்திரரை நோக்கி, "வீரபத்திரா! எனக்குச் சந்தோஷம் உண்டாக்கப் பிறந்தவனுதலினுல் என் கோபத்தையொழிக்கவேண்டும். அதாவது, நீ காளியோடு சென்று, சிவபெருமானை அவமதித்த தக்கனுடைய யாகத்தையும் அழித்து, அங்குள்ளவர்கள் அனைவரையும் கொன்றுவிடவேண்டும்," என்று கூறவும் அவ்விருவருடைய கட்டளைகளையும் சிரமேற்கொண்டு காளியோடு இடபவாகனம் ஏறி, இடபக் கொடியும் தாங்கி, தனக்குத் துணையாக அநந்த கணங்களையும் சிருஷ்டித்துப் புறப்பட்டுச் சென்றனர். அவர்கள் செல்லும்பொழுது பலர் பணிகள் செய்தனர், பானுகம்பன் தன் ஆயிரம் வாய்களாலும் சங்கு முழக்கினுன், தேவதுந்துபி முழங்கின, புஷ்ப

மாரி சொரிந்தது, கணங்கள் யாவரும் சந்தோஷத்தினல் நிருத்தகீதம் முதலியன செய்தார்கள். இப்படியாக நிகழும் பொழுது, வீரபத்திரர் காளியுடன், கணங்கள் புடைசூழ, தக்கன் யாகம் செய்யுமிடத்தைநோக்கிச் சென்றனர்.

தக்ஷயாக த்வம்சம்: சிவபெருமானதும் உமாதேவியாரதும் கோபாவேசத்தினல் உதித்த வீரபத்திரர், காளிதேவியோடும் எல்லில்லாக் கணங்களோடும், பலவித கீதவாத்தியங்கள் ஒலிப்பவும், தக்கனுடைய யாகசாலையை அணுகினர். வீரபத்திரர் சேனை வரும்பொழுது உண்டாகிய பெரிய அட்டகாச ஓசையைக்கேட்ட திருமால், திசைமுகன் முதலிய தேவர்களும் முனிவர்களும், "இஃதென்ன" என்று எண்ணி ஆச்சரியப்பட்டு, தியங்கி, மயங்கி, "முறைதவறி உலகம் முழுவதும் அழியத்தக்ககாலம் வந்துவிட்டதோ?" என்று நினைந்து, என்ன செய்வது என்று ஒன்றுந்தெரியாது நின்றார்கள்.

தக்கன் அமைத்த யாகசாலை மிகப்பெரியது. பல வாயில்களை உடையது. வாயில்களை எல்லாம் வீரபத்திரர் முதலில் அடைப்பித்தார். வீரபத்திரருடைய சேனையிற் சிலர் அங்கிருந்த தேவர்களை வதைத்தார்கள். சிலர் அங்கே அமைத்திருந்த அவிர்ப்பாகங்களை உட்கொண்டார்கள், சிலரை அண்டமுகட்டில் வீசினர், பலரைக் கடலில் எறிந்தனர், சிலர் சப்தமேகங்களையும் பிழிந்து குடித்தனர், சிலர் கடலேழையும் பருகினர், சிலர் யாகப் பசுக்களைக் கட்டறுத்து விட்டனர், சிலர் ஆதிசேடனைப் பிடித்துப் படத்தைக் கிழித்தனர். இவ்வகையாகவும் இன்னும் பலவிதமான துன்பங்களும் நிகழக்கண்ட இந்திரன் கோபங்கொண்டவனுய் தன் ஐராவதத்தில் ஏறி ஆயுதங்களைத் தாங்கிப் போர்க்கோலங் கொண்டனன். இதை அறிந்த இயமன், அக்கினி, நிருதி, வருணன், வாயு, சூரியன், சந்திரன், மருத்துக்கள், வசுக்கள், இன்னும் பிற தேவர்களாகிய எல்லோரும் போர்க்கோலங் கொண்டவர்களாய், வீரபத்திரரது சேனையை எதிர்த்துப் போர்புரியத் தொடங்கினர். இருபக்கத்தார்க்கும் இடையில் பெரும் போர் நிகழ்ந்தது. இந்திரன் வீரபத்திரர்மீது வச்சிராயுதத்தைச் செலுத்த, வீரபத்திரர் அதை நீருக்கி விட்டனர். அதனல்

வெகுண்ட இந்திரன் வில்லை வளைத்து கணக்கில்லா அம்பு களைவிட, வீரபத்திரர் இந்திரனைப் பலவாறு உதிரஞ் சொரி யும்படி புடைப்ப, இந்திரன் யுத்தஞ்செய்ய முடியாதவனுய்க் குயில் உருவெடுத்துப் பறந்துபோய்விட்டான். சண்டனென் பவன் இயமனைப் பாசத்தினுலே இறுகக்கட்டி தலையைத் தூளாக உடைத்தனன். ஒரு பூதம் வருணனுடைய வயிற்றை நகத்தாற் கிழித்து ஈரலை எடுத்து வாயிற்போட்டுக்கொண்டது. ஒரு பூதம் நிருதியைப் பிடித்துத் தனது கையினுலே அவ னுடைய வாயிலிருந்து உதிரம் பெருகும்படி புடைத்தது. மற்ருெரு பூதம் வாயுவைப் பிடித்து மயிர்க் கால்கள்தோறும் உதிரம் ஒழுகும்படி புடைத்து மூர்ச்சையடையச் செய்தது. பிறிதொரு பூதம் சூரியனைப் பிடித்து அவன் கண்களை வேரு டன் பறித்துச் சபையிலே கிடத்தி யிழித்தது. இன்னுமொரு பூதம் அரிமா என்னும் சூரியனின் தோளை வாளால் வெட்டி அவ்விறைச்சியை வாயிற்போட்டுக் கூத்தாடியது. வேருெரு பெரிய பூதம் பூடன் என்னும் சூரியனைக்குத்தி அவன் பல்லை உதிர்த்தது. மணமானென்பவன் யக்ஷராசனையும் அஷ்டவசுக் களையும் மருத்துவரிருவரையும் கதையால் அடித்து அவர்கள் உடல்களிலுள்ள நவத்துவாரங்களிலும் செந்நீர் பெருகச் செய் தனன். சண்டனென்பவன் சந்திரனேடு வாட்போர் செய்து சந்திரனுடைய வாளையும் அழித்து கிரீடத்தையும் பொடிசெய்து நிலத்தின்மேல் தள்ளி பூமியிற் காலால் தேய்த்தனன். ஒரு பூதம் தக்ஷ புத்திரர் பதின்மரைத் தன் வாளினுல் கொன் றனன். இப்படியாக வீரபத்திரருடைய கணங்கள் துன்பங்கள் செய்தார்கள்.

இவ்வளவும் மட்டுமா, இன்னும் காளிதேவியோடு சென் றிருந்த தேவமங்கையர் சிவபெருமானையும் உமாதேவியையும் அவமரியாதையும் தூஷணையும் செய்யுமிடத்தே வந்த மங்கை யர்கள் வருந்தும்படியும் துன்புறுத்தினுர்கள். அவையாவன பின்வருமாறு: புலோமன் மகளாகிய இந்திராணியின் இரு குசங்களையும் வாளால் அரிந்தனர். தக்கனது மனைவியாகிய வேதவல்லியினது நெடிய கூந்தலைக் களைந்தனர். அதிதியென் பாளுடைய அதரம் உதிரம் பெருகும்படி அறுக்கப்பட்டது.

இந்தவேளையில் காளிதேவி மிக உன்னதமாகவும் அலங்கார மாகவும் வீற்றிருந்த சரஸ்வதிதேவியை ஓடோடிப்பற்றி அல றக் கூடியதாக, மூக்கு முனையை அரிந்துவிட்டாள். சில முனிவர்களையும் சில தேவமாதர்களையும் தலைகீழாகக் கட்டித் தூக்கி மார்புகளில் உதைத்தனர். எலும்பு, தசை, குடர் நரம்பு, தோல், உதிரம், மூளை, ஈரல் முதலியன தரையிலே சிந்தக்கூடியதாகச் சிலரைக் காலால் மிதித்தார்கள். சிலரை நிலத்தின்மேல் கிடத்தி அரைத்தார்கள். சிலரை மேகமண்ட லத்திற்குப் போகும்படி தூக்கி எறிந்தார்கள்.

இன்னும் இப்படியாகத் தேவர்கள் சிலர் தண்டிக்கப்பட்ட வர்களாய் பல்லைக்காட்டிக்கொண்டும், சிலர் கும்பிட்டுக் கொண்டும், சிலர் அழுதுகொண்டு மனம் நொந்தவர்களாய் இறந்தார்கள். சிலர் கழுகுகளினுல் கொத்தப்பட்டுக் குறையுயி ராய்க் கிடந்தார்கள். சிலர் காலறுபட்டவர்களும், சிலர் கை இழந்தவர்களும், சிலர் தோளுடைபட்டவர்களும், சிலர் விழி பறிக்கப்பட்டவர்களும் ஆனுர்களே அல்லாமல் ஸ்ரீ பரமேஸ் வரனையும் ஸ்ரீ சாம்பவியையும் இகழ்ந்தோரிற் பிழைத்தவர் களுமுளரோ? இப்படியாகத் தக்ஷ யாகத்து வம்சம் நடந்து முடிவுற்றது.

தக்ஷஸம்ஹாரம்: வீரபத்திரக் கடவுளும், காளி தேவியும் பூதகணச் சேனைகளோடு தக்கனின் யாகசாலையை அழித்து விட்டு, "யாகத்தின் தலைவனை தக்ஷன் எங்கேயிருக்கின் ருன்?" என்று கூறிக்கொண்டு தேடத் தொடங்கினுர்கள். யாகத்தலைவனுகிய தக்ஷன் ஆண்கலைமான்போல உருவெடுத்து நடந்து செல்ல, ஒரு பூதம் அதன் வளைந்த கொம்பைப் பிடித்து தலையைத் திருகி வீரபத்திரர் முன்னே கொண்டு வந்து, "ஐயனே! இந்திரன் முதலாய தேவர்கள் அழிந்து விட்டார்கள். மஹாவிஷ்ணுமூர்த்தி ஒருவர் மட்டும் எஞ்சி யிருக்கின்ருர்" என்று கூற, வீரபத்திரர் அவன் எங்கே இருக்கின்ருன் என்று கோபித்து விரைந்து சென்று கண்ட தும், திருமாலை வினுவுகின்ருர்,

"கருமு கைச்செழும் பூவைபோன் மேனியங் கண்ண
புரியும்வேள்வியம் புருடனீ தக்கனைக் காத்துச்
செருவி ளேத்தியோ தியனை யறிவோடும் பற்றித்
தருதி யோவுயி ரிழந்தியோ சாற்றுதி யென்றான்."

(தேவி பராக்கிரமம் 97-ம் பக்கம்.)

அதாவது, "யாகத்திற்குத் தலைவனாகவந்த நீ தக்கனைக் காத்துக்கொண்டு யுத்தஞ் செய்யப்போகின்றாயோ? அந்தத் தீயோனைப் பிடித்துத் தருகின்றாயோ? அல்லது உன் உயிரைப் பறிகொடுக்கப் போகின்றாயோ? சொல்லுக!" என்றனர் என்பதாம். உடனே திருமால் பதில் கூறுகின்றார்,

"தவல றுந்திறற் றக்கனைக் காக்குவ லென்னா............
கவன வேகவெங் கலுழன்மே லிவர்ந்தனன் கடிதின்."

தேவி பராக்கிரமம் 98-ம் பக்கம்.)

அதாவது, "யான் தக்கனைக் காப்பாற்றுவேன்" என்று கூறிக் கருடவாகனத்தின்மேல் ஊர்ந்தனர்" என்பதாம்.

அதன்பின், அதாவது திருமால் கருடவாகனத்தின்மேல் ஏறி நகர்ந்த பின்பு என்ன நிகழ்கின்றது எனில்,

"அங்காழிப் படைவருதல் தெரிந்தா,
னடல்வீரன் கடிதுபிடித் தயின்றான்;
வொங்காரு நறுந்துளப நெடியோன்,
கொடுவாள் கொண்டிறையோன் முன் குறுக;
உங்காரஞ் செய்தனனெம் பெருமா,
னேவியம்போன் மாயவனுங் குறைந்தான்;
மங்காத பெருஞ்சினமென் னினைந்தோ,
மருவினு னுதல்விழியான் மதலை."

(தேவி பராக்கிரமம் 98-ம் பக்கம்.)

அதாவது, "திருமால் யுத்தசன்னத்தனாய்ப் புறப்படுவதைக் கண்ட வீரபத்திரர் கோபமேலீட்டினால் யுத்தஞ் செய்யக் கருதியபோது, சிவபெருமானுடைய அருளினால் அங்கே வந்தடைந்த ஒரு தேரில் காளிதேவியுடன் ஆரோகணித்திருந்து, பிரமன் தேர்ச்சாரதியாயிருக்கத் தேரைச் செலுத்தி

ருர். இருவருக்குமிடையில் பெரும்போர் நிகழ்ந்தது. இரு வரும் அதிகம் தேவாஸ்திரங்களை விடுத்தார்கள். ஒருவரை ஒருவர் வெல்லக் கருதி நடந்த கடும் கோர யுத்தத்தில், திருமால் தமது சக்கராயுதத்தை வீச, வீரபத்திரர் அதனைப் பிடித்து விழுங்கிவிட்டார். விஷ்ணு தமது வாட்படையைத் தூக்கிக்கொண்டு மிகவும் அணுக, வீரபத்திரர் ஹுங்காரஞ் செய்தனர். உடனே திருமால் என்ன செய்வதென்றறியாது சித்திரம்போல நின்றனர். வீரபத்திரர் மிகக் கடுமையான கோபம் அடைகின்றுர். அவ்வேளையில் என்ன நடக்கின்றது.

"எம்பெருமான் சினந்திடலுஞ் சினவே,
லெனவிசும்புன் வாசகமொன் றிசைப்ப;
உம்பர்பிரான் றனதுசுத னதுகேட்,
டுள்ளெழுவெஞ் சினமகன்றங் குறலும்...."

(தேவீ பராக்கிரமம் 99-ம் பக்கம்.)

அதாவது, 'அப்பொழுது சிவபெருமானருளால் ஆகாயத் திலே ஓர் அசரீரிவாக்கு ஒலித்தது. அது என்னவென்ருல், "மகனே கோபங்கொள்ளாதே!" என்பதாம். இவ்வாக்கைக் கேட்டதும், வீரபத்திரர் கோபத்தைத்தணித்து விஷ்ணுவோடு சமர் புரியாது விட்டார். அதன் பிற்பாடு,

"செய்யு மாமக முடிந்த தோவென,
நகைத்து ரைத்துவளர் செந்நிறக்,
கையி னுலுருமி னெற்ற வெற்புறள்,
களத்தொ டுந்தலை தெறித்ததே."

(தேவீ பராக்கிரமம் 99-ம் பக்கம்.)

அதாவது, அதன்பிற்பாடு வீரபத்திரர் பக்கத்திலிருந்த தக்கனுக்கெதிரே ஓடி, "நீ ,செய்துமுடிக்கத்தொடங்கிய யாகம் நிறைவேறியதோ?" என்று வீரப்புன்முறுவல் பூத்து, தக்கனது தலையைத் துணித்தார்.' என்பதாம். இன்னும் அதன்பிற்பாடு,

"தெறித்த சென்னியை யெடுத்த வீரனுயர்,
செங்கை வன்னியின் மடுத்துமுன்;
றெறுத்த வானவரை யொழிய நின்றவர்த,
முடல்பி ழிந்துயர் குடித்துவெம்;

பொறித்த மூற்சிகையி னுலகம் யாவுமுயிர்,
பொன்று காலேயி னடித்திடு;
மறித்த டக்கையுடை மழுவ லானென,
வயங்கொள் வெஞ்சமரி ஞடினுன்."

(தேவி பராக்கிரமம் 99-ம் பக்கம்.)

அதாவது, 'தக்கனது சிதறுண்ட தலேயை வீரபத்திரர் திருக்கையால் எடுத்துத் தீயில் போட்டு, இன்னும் எஞ்சி நின்ருேர் உடல்களேப் பிழிந்தும் அவர்களேக் கொன்று, ஊழிகாலத்திலே அதாவது உலக அழிவு ஏற்படும் ஓர் கற்ப காலத்திலே ஆநந்தத்தாண்டவ நடனஞ்செய்யும் சிவபெருமானே என்று கண்டோர் கூறும்படியாக யுத்தகளத்திலே ஆடினுர்.'

அந்தவேளேயில் சிவபெருமானும் உமாதேவியாரும் ஆகாயத்திலே காட்சிகொடுத்தருளினுர். அப்பொழுது திருமால் முதலாகிய தேவர்கள் வேண்டுதல் செய்கின்ருர்கள். "இறந்தவர்களேயெல்லாம் எழுப்பியருள வேண்டும்." அதுமட்டுமல்லாமல் அங்ககீனர்களாக்கப்பட்டோரின் அங்கங்கள் நிறைவும்பெற வேண்டும். அதாவது அறுபட்ட அல்லது பறிக்கப்பட்ட அல்லது களேயப்பெற்ற அங்கங்கள் யாவும் மறுபடியும் திருவருளினுல் வளர்ந்துவிடவேண்டும், என்பதாம். என்று இப்படியாகப் பிரார்த்திக்க, அர்த்தநாரீஸ்வரருடைய திருவருளால், வீரபத்திரர் அவர்களேயெல்லாம் எழுப்பி உயிர்கொடுத்தருளினுர். தக்கனேத் தவிர்ந்த ஏனேயோரும் உயிர்பெற்று எழுந்தார்கள். இன்னும் அங்கங்கள் குறைபட்டோர்கள் யாவரும் மறுபடியும் அவ்வவ் அங்கங்கள் வளரப்பெற்றனர். இதனேக்கண்ட பிரமன், சிவபெருமானேயும் உமாதேவியாரையும் வணங்கி, "என் மகன் தக்கனும் உயிர்பெற்றெழுந்துவரும்படி திருவருள் சுரக்கவேண்டும்" எனப் பலவாருகப் பிரார்த்தித்தபின், வீரபத்திரர் தக்கனுடைய உடலிலே ஆட்டின் தலேயொன்றைச் சேர்த்துத், "தக்ஷா! எழுந்திரு!" என்றவுடன், அவன் உயிர்பெற்று எழுந்து நடுங்க, "பயப்படாதே" என்று அருள் சுரந்து, "நீ அறிவுகுறைந்தவனுகையினுல்

ஆட்டுத்தலையைப் பெற்றனே" என்று உரைத்தனர். உடனே சிவபெருமானும் உமாதேவியாரும் வீரபத்திரருக்கு ஓர் உலகத்தைத் திருவருள்பாலித்து அந்தர்த்தானமாயினர்.

அதன்பின் தக்ஷன் பிரமதேவருடைய சொற்படி காசிப்பதியை அடைந்து சிவலிங்க அர்ச்சனை செய்து, 'சிவபிரானைக் குறித்து, ஆட்டினது ஓசைபோல "சமே" "சமே" என்று சொற்கள்தோறும் ஓசையிடும் "சமகம" என்னும் வேத பாடத்தியைச்செய்து,' சிவகடாட்சத்தைப்பெற்று, சிவகணங்களுக்குள்ள தலைவர்களில் ஒருவராயினன்.

இன்னும் ஒரு காலத்தில் விஷ்ணு விகடக்கூத்தாடி வீரபத்திரரைச் சந்தோஷப்படுத்தி, வீரபத்திரரால் விழுங்கப் பட்ட சக்கராயுதத்தை மீண்டும் பெற்றுக்கொண்டார்.

## அதன்பிற்பாடு இறைவி மலையரையன் மகளாதல்

அண்டமேழு மீன்றகன்னி யாயஞான வல்லியார்
　ஆரணத்தை வைத்தவீச ருக்குமுண்மை யுய்த்தவள்
புண்டரீக ஞர்சிரம் பொடித்தவேளை யீன்றவள்
　பூவிஞய கர்க்குமாதி நாயகிக்கு மென்னையோ
கொண்டயோகி போலுமேரு மன்னன்மங்கை யாயினள்
　குழகனுஞ்சி ருர்களென்னக் கோலஞானி யென்றுளான்
அண்ணலன்னை மிக்கோர்யாரு மில்லையாத லாசையா
　லணுகியாடு மாடல்போலு மம்மையப்பர் பாதமே.

(பிரபஞ்ச உற்பத்தி 449-ம் பக்கம்.)

சிவபெருமானும் தாக்ஷாயணிதேவியும், அதாவது சிவபெருமானும் பரமேஸ்வரியும் தங்கள் திருமணத்தின்பின்பு, திருக்கைலாயகிரியிலே, குதூகலமாகவும் அபின்னமாகவும், சகல தேவர்களும் பணியவும், எழுந்தருளியிருக்கும்போது, தாக்ஷாயணிதேவி சிவபெருமானைப்பார்த்து, "தேவரீர்! தங்களை அவமரியாதையும், தூஷணையும், செய்து வணங்காத தக்கன் மகள் என்னும், காரணஇடுகுறிப்பெயராகவுள்ள தாக்ஷாயணி என்னும் நாமத்தையும், அவனால் வளர்க்கப்பட்ட இந்த உடலையும் எனக்கு வேண்டாம். மாற்றிக்கொள்ள

விரும்புகின்றேன்,'' என்று கூற, சிவபெருமான், அம்மணீ! மலையரையன் உன்னை மகளாகப்பெற விரும்பி மகத்துவம் பொருந்திய தவஞ்செய்கின்றான். நீ அவனை அடைந்து குழந்தையாய் இருப்பாயாக! உரிய மணப்பருவ காலத்திலே யாம் வந்து திருமணஞ்செய்வோம்,'' என்று திருவாய்மலர்ந் தருளினர். தேவியார் சிவபெருமானைப் பார்த்து, 'தேவரீர்! நான் அவ்வண்ணம் அவதரிக்கும்பொழுது இவ்வுணர்ச்சி மாறுதிருக்கவும் கருணைபாலிக்கவேண்டும்,'' என்று வேண்டினர். சிவபெருமானும், 'அவ்வாறேயாகுக' என்றருளினர். பின்பு தேவியார் சங்கரனுடைய கட்டளைப்படி, இமயகிரியை அடைந்து அங்கேயுள்ள ஒரு தாமரைத்தடாகத்திலே, ஓர் தாமரை மலரின்மேல் மூன்றுவயதுடைய பெண் குழந்தை வடிவெடுத்து, எழுந்தருளியிருக்க, அங்கெய்திய பர்வதராஜன் கண்டு, 'நமது அரிய தவம் முற்றியதுபோலும், எனது தவமே தவம்' எனப் பேரானந்தமடைந்து, ஆடிப்பாடி, 'அகிலலோக மாதாவே அவதரித்தனள்' என்று கொண்டாடியும் அப்பிள்ளையைத் தூக்கித் தம் தோள்மேல் சுமந்து சென்று, தன்னுடைய மனைவியாகிய மேனையின் கையில் அப்பார்ப்பதியைக் கொடுக்க, உடனே மேனைக்குப் பால் சுரக்க, அப்பிள்ளையை ஊட்டிப் பொற் தொட்டிலிலிட்டும் தாலாட்டி வளர்க்கின்றாள். அவள் எப்படித் தாலாட்டுகின்றாள் என்பதை நாம் சிறிது கவனிப்போம். இனிய மதுரமான கீதம் இப்பாட்டை எந்தப்பிள்ளை கேட்டாலும் தனது சண்டித்தனத்தை நிறுத்திவிட்டுத் தானாகவே உறங்கிவிடும்.

''ஆராரோ ஆரிரரோ! ஆராரோ ஆரிரரோ!! ஆராரோ ஆரிரரோ!!!
தேவர்குலக் கொழுந்தே! மலைமன்னன் மகிழ்மணியே!! ,, ,, !!!
சிரங்கம் ஆடித்! திருப்பாற் கடலாடி!! ,, ,, !!!
மாமாங்கம் ஆடி! மாசிக் கடலாடி!! ,, ,, !!!
தைப்பூசம் ஆடி! தவம்செய்து பெற்றகண்ணே!! ,, ,, !!!
கல்வியருள் கலையரசி! நிதியருள் திருவே!! ,, ,, !!!
ஞானமருள் ஞானவல்லி! ஆராரோ ஆரிரரோ!! ,, ,, !!!

இப்படியாக நடந்தேறிவரும் காலத்தில், பார்வதியார் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து

ஐந்தாம் பிராயத்தை அடைந்துவிட்டார். பார்வதியாரோ ஒரு ஞானப்பிள்ளையாக இருந்தமையினலே, தான் சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்யவேண்டும் என்னும் விருப்பத்தை மலை மன்னனுக்கு எடுத்துக்கூறி அவன் சம்மதத்துடன் இமாசலச் சாரலிற் பர்ணசாலை ஒன்று அமைப்பித்து, தன் பணிப் பெண்களாகிய தோழிமாருடன் அப்பர்ணசாலையில் இருந்து, சிவ பெருமானை நோக்கித் தவஞ்செய்வாராயினர். ❋

*இப்படியாகப் பார்வதியார் தவஞ்செய்யுங் காலத்தில், ஸநகாதி முனிவர்களாகிய நால்வரும், சிவபெருமானை அடைந்து, தாம் மனமொடுங்க விரும்பியதைத் தெரிவிக்க, சிவபெருமானும் அவர்களுக்கு ஞானுேபதேசஞ் செய்துகொண்டிருந்தனர். இதனலே, உலகத்தில் படைப்புத் தடைப்பட்டமையினல், தேவர்கள் இதனை விலக்க எண்ணி மன்மதனை ஏவினர்கள். மன்மதன் மலர்க்கணைகளைப் பெய்தான். சிவபெருமான் கோபித்து மன்மதனைத் தம் நெற்றிக்கண்ணினல் நீறுக்கிவிட்டனர். மன்மதன் பக்கத்திலிருந்த அவனது மனைவியாகிய இரதிதேவி தன் கணவனைத் தந்துதவும்படி பன்முறை வேண்டினள். சிவபெருமான் இரதிதேவிக்கு விடையிறுக்கின்ருர். எப்படியெனில், ''யாம் இமாசல மலையிலுள்ள பர்வத ராஜனது புத்திரியாகிய பார்வதியை மணந்தபின்பு தான் உனது நாயகனைத் தருவோம், என்று கூறினர்.*

*பின்பு சிவபெருமான் ஸநகாதி முனிவர்களுக்கு ஞானுேபதேசஞ் செய்து முடித்ததும் இமாசல மலைச்சாரலை அடைந்து, அங்கே பார்வதியாருடைய அரிய தவத்தைக்கண்டு, சந்தோஷங்கொண்டு, ஓர் விருத்தப் பிராமண ரூபமாய், பார்வதியார் முன்சென்று, ''நீ எதற்காகத் தவஞ்செய்கின்ருய்?'' என்று கேட்கின்ருர். உடனே பார்வதியார், ''அரவாபரணரை யான் மணக்க விரும்பியுள்ளேன்,'' என்று பதில் கூறுகின்ருர். உடனே ஐயர், ''பெண்மணியே! பேரழகுடையவளே!! அவன் சாதாரணமானவன்; நானே பல விசேஷங்கள் நிறைந்தவன், நீ என்னை மணந்துகொள்!'' என்று கூறுகின்ருர். இதைக்கேட்டதும், தேவி கோபங்கொண்டு, ''அடே! தீயோனே! என்முன் நில்லாதே! அகன்று விடு!'' என்று உரத்துக் கூறியதும், விமலர் விடையிலேறித் திருக்காட்சி கொடுத்தருளினர், உடனே அம்பிகையும், அஞ்சி, நடுநடுங்கி, கைகுவித்து, வணங்கி, ''ஐயனே! அறியாமற் செய்த பிழையை மன்னிக்கவேண்டும்'' என்று இறைஞ்சினர். இறைவரும் உடனே, ''அவைகளை நாம் எம்மேல் சாற்றிய அன்பு வணக்கங்களாகக் கொண்டோம், இனித் தவஞ்செய்வதை நிறுத்திவிடு! நாம் மணஞ்செய்வோம்,'' என்று*

*கூறி அந்தர்த்தானமாயினர். பார்வதிதேவியார் அங்கு நிகழ்ந்தவைகள் எல்லாவற்றையும், பர்வதராஜனுக்கு எடுத்துரைத்தாள். அவனும் அவற்றைக்கேட்டு மிக மகிழ்வெய்தினன்.* X

பார்வதியார் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்வாராயினர், ❋ என்றதன்பின் கூறப்பட்ட கதையின் போக்கும், இன்னும் இதன்பின் அதே சந்தர்ப்பத்தில் நடந்தேறியதாகக் கூறப்படும் கதையின் போக்கும் சிறிது ஒன்றுக்கொன்று முரண்பாடானதாக இருக்கின்றது. ஆயினும் எது சரி எது பிழை அல்லது ஒன்று முன்னும் மற்றது பின்னும் நடந்தேறியவைகளோ? என்னும் ஆராய்ச்சியில் எம் புலனைச் செலுத்துவதிலும்பார்க்க, எந்த இடத்திலும், அதாவது எந்தச் சந்தர்ப்பத்திலும், கதையிலேயுள்ள தத்துவார்த்தங்களையே அதாவது உட்பொருள்களையே கிரகித்தல் உசிதமாகும்.

இஃது இங்ஙனமாக, சூரபதுமன் முதலான அசுரர் உலகத்தை வாட்டி வருத்திக்கொண்டிருந்தமையினுல், இந்திரன் தனது குரு முதலிய கூட்டத்தோடு பிரமதேவனை அடைந்து. சூரபதுமன் முதலாயினேரை அழிக்க எண்ணி அவர்களை அழிக்கும் வழிவகைகளை வினவினன். பிரமதேவன், இந்திரன் முதலாயினேரைப் பார்த்து, "இறைவன் இறைவியை மணந்து முருகவேளைத் தந்தருளினுல், அவர் அசுரரை அழிப்பார்," என்று கூற, இந்திரன் மன்மதனை அழைத்து, இறைவனை மோகிப்பிக்கும்படி ஏவினன். மன்மதன் சென்று சிவபெருமான்மேல் புஷ்பபாணங்களை ஏவ, சிவபெருமான் தனது நெற்றிக்கண்ணினுல் மன்மதனை நீருக்கிவிட்டார். உடனே இரதிதேவி தன் கணவனை உயிர்ப்பித்துத்தரும்படி வேண்டினள். சிவபெருமான் இரதிதேவியின் வேண்டுகோளின்படி மன்மதனை உயிர்ப்பித்து, அவனை உருவமில்லாதவனுகவும் தந்தருளினர். அதன்பின் சிவபெருமான் பார்வதியாரை மணந்து முருகப்பெருமானைத் தோற்றுவித்தார். முருகப்பெருமான் அசுரரை அழித்து, தேவர்களுக்கு அருள்செய்தார், என்றும் கூறப்படுகின்றது. இதனைச் சிவஞான சுவாமிகள்,

"மீண்டு செம்மலார் இருந்துழி அணுகி
மெல்ல வெஞ்சிலை வாங்கலும் அவனை,
மாண்ட குந்திரு நுதல்விழி நெருப்பின்
மடுத்து வார்குழல் இரதிநின்றி ரப்பக்,
காண்ட காவகை உருவிலி யாக்கிக்
கடுந்த வம்புரி மலைமகள் மணந்து,
தூண்டு வேற்படைக் குரிசிலை உதவித்
தாரு கன்றனைத் தொலைத்தருள் செய்தார்."

(காஞ்சிப் புராணம்)

என்று மிக நயம்பட இப்பாட்டிலே வர்ணித்திருக்கின்றார்.

× இஃது இவ்வாறிருக்க பார்வதி தேவியார் தாம் இமாசல மலைச்சாரலில் தவஞ்செய்த காலத்தில் நிகழ்ந்தன எல்லாவற்றையும் பர்வதனுக்குக்கூற, அவனும் எல்லாவற்றையும் கேட்டு அகமிக மகிழ்ந்து இருந்த காலத்தில், பார்வதி திருமண வைபவம் நடந்தேறுகின்றது.

ஆகவே நாம் இதன்பின் பார்வதி திருமண வைபவத்தையும் பார்ப்போம்.

## பார்வதி திருமணம்

இமாசலமலைமன்னன் புதல்வியாகிய பார்வதியார் சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்வதைக்கண்ட பரமேஸ்வரர், திருக்கைலாயகிரியிலிருந்த சப்தரிஷிகளை அழைத்து, "நீங்கள் மலைமன்னன் மகளாகிய பார்வதியை மணம் பேசுக!" என்று ஆஞ்ஞாபித்தார். அவ்விருஷிகள் சிவபெருமான் விருப்பப்படி, அருந்ததியோடு இமயகிரியை அடைந்து, பர்வதனைக் கண்டு, சிவனார் விருப்பத்தைத் தெரிவிக்க, அவனும் அதற்கு இயைந்ததையும், சிவபிரானார்க்கு விண்ணப்பஞ் செய்தனர். பர்வதன் விச்சுவகர்மனால் விசேஷ சிறப்புக்களுடன் நகரை அலங்கரித்தனன். பின்பு, "உத்தமோத்தம தினமாகிய பங்குனி உத்தர தினத்தில் பார்வதியைத் திருமணஞ் செய்து கொள்க!" என்று பர்வதன் விண்ணப்பிக்க, சிவபெருமானும் நந்தி பகவானைப் பார்த்து, "தேவர் முதலானோரை வரச்செய்க" என்றதும், நந்தியெம்பெருமானும் சிந்தித்தவளவில், இந்திரன் முதலாகிய தேவர்கள், சித்தர்கள்,

வசுக்கள், இருஷிகள், யக்ஷகின்னரர், கருடகாந்தர்வர் முதலிய கணங்கள், இன்னும் வேண்டிய யாவரும் ஒன்றுகூடி வந்து, திருவாயிலை அடைந்து, நந்திபகவானை வணங்கி நின்றூர்கள்.

அவ்வேளையில், சிவபெருமான் அரவாபரணராய் பல பணிகள் விளங்க, மணக்கோலம் பூண்டு, இடபவாகனமூர்ந்து, தேவர்கள் மலர்மாரி பொழியவும், ஸ்ரீ கணேசர், ஸ்கந்தர், வீரபத்திரர், வைரவர் முதலானோர் தத்தம் வாகனங்களில் வரவும், ஸப்தரிஷிகள் ஆசீர்வதிக்கவும், பாநுகம்பன் ஆயிரம் வாய்களினுலும் சங்குகளை ஊதவும், வாணுசுரன் ஆயிரங் கைகளாலும் குடமுழவடிக்கவும், கணத்தலைவர்கள் பல வாத்தியங்கள் முழக்கவும், திருநந்திதேவர் பொற்பிரம்பேந்திக் கூட்டத்தை விலக்கி முன்செல்லவும், இந்திரன் காளாஞ்சி தாங்கவும், வாயு ஆலவட்டம் பரிமாறவும், அக்கினி தூப மேந்தவும், வருணன் பூரணகும்பமெடுக்கவும், நிருதி கண்ணுடி காட்டவும், குபேரன் நவநிதிகள் சொரியவும், நாகர்கள் மாணிக்கத்தீபமேந்தவும், வேதங்கள் திருவடியைச் சுமக்கவும், கங்கை காவிரி முதலிய நதிக்கன்னியர் சாமரை வீசவும், குண்டோதரன் குடைபிடிக்கவும், பிரமவிஷ்ணுக்கள் இருபக்கத்திலும் தத்தம் வாகனங்களிலிருந்து கை கூப்பியவண்ணம் வரவும், இன்னும் பலவித அலங்காரங்களுடன், சர்வாலங்காரணராக இமாசலமடைந்து, மலை மன்னன் மாளிகையை அடைந்து, இடபவாகனத்தினின்றும் இறங்கினுர்.

மலைமன்னன் மனைவி மேனை, பல சுமங்கல்ய மாதர்களுடன், ஆவின்பால் கொணர்ந்து, சிவனுருடைய பாதங்களை விளக்கி, நாணத்துடன் உட்புகுந்தார். பிரமதேவர் திருமண வைபவத்தை நடாத்தினுர். சிவபெருமான் நவரத்தினங்கள் பொருத்தப்பெற்ற சிங்காசனத்தில் அமர்ந்தார். மற்றும் ஏனையோரும் தங்கள் தங்களுக்கேற்ப அமைக்கப்பட்டிருந்த ஆசனங்களில் அமர்ந்தனர். உலகத்திலுள்ளோர் யாவரும் அங்கு வந்து நெருங்கிச் சூழ்ந்தமையால், வடமுனை தாழ்ந்தும், தென் முனை உயர்ந்தும் பூமி சமநிலையில்லாதிருந்தது. அதுகண்டு, உலகம் அழிந்துவிடக்கூடும் என்று தேவர்கள் அஞ்சிச் சிவனை

வேண்ட, சிவபெருமான் அகஸ்த்திய முனிவரைத் தென் திசைக்கு அனுப்பி பூமியைச் சமநிலையாக்கினர். எனவே அகஸ்திய முனிவர் காண விரும்பிய பார்வதி திருமணக் காட்சியைத் தலங்கள் தோறும் நடந்தேறத் திருவருள் செய்தார். பார்வதியம்மையார் பல ஆடையாபரண அலங்கிர்தையாய்த் தோழிமார் புடைசூழ, சிவபெருமான் முன்னே வந்து பணிய, சிவபெருமானும், "பார்வதி! பக்கத்திலிரு" என்றதும் இருவரும் ஒரே ஆசனத்திலிருந்தனர். பர்வதராஜனும் மேனையுடன் சிவபெருமானுடைய திருவடிகளைப் பூசித்து வணங்கி, பார்வதியைப் பரமேஸ்வரன் கையில் அளித்தனர். சிவபெருமானும் திருமாங்கல்யம் பூட்டி மணவினை முடித்துக்கொண்டார்.

இந்தவேளையில் சிவபெருமான் இரதிதேவிக்கு, முன்பு அளித்த வாக்குறுதி நினைவிற்கு வருகின்றது. இரதிதேவி சிவபெருமானிடம் தன் கணவனை உயிர்ப்பித்தருளும்படி வேண்டுகின்றாள். சிவபெருமான் நினைத்தவுடனேயே மன்மதனானவன் உயிர்பெற்று அவனுருக்கொண்டு நிற்க, சிவபெருமான் மன்மதனைப் பார்த்து, "இரதிதேவிக்குமட்டும் உருவமாகவும், ஏனையோருக்கு அருவமாகவுமிருந்து உன்னுடைய தொழிலை நடத்துவாயாக!" என்றருளினர்.

அதன்பிற்பாடு சிவபெருமான் பார்வதியாரோடு திருக்கைலாயமலையை அடைந்தனர். மற்றும் தேவர்கள், வசுக்கள், ரிஷிகள் முதலாயினோர் தத்தமிடஞ் சென்றடைந்தார்கள்.

## விமலர் திருவிழிகளைப் பார்வதி புதைத்தல்

மந்தரகிரியில் பல தேவர்கள், முனிவர்கள் முதலாயினோர் பணிசெய்ய, பார்வதி பரமேஸ்வரர் மகிழ்ச்சியோடு எழுந்தருளியிருக்கும் சமயம், ஒருநாள் பார்வதி அம்மையார் திருவிளையாட்டு விநோதமாக சிவபெருமானுடைய திருக்கண்களைப் பின்பக்கத்திலிருந்து இரு திருக்கைகளாலும் மூடினர். இதனைச் சிவஞானமுனிவர் ஒரு பாட்டில் வியந்தோதியிருக்கின்றார், அதாவது,

"கைம்மிக்கெழு காதல் விருப்புமீ தூர்கு றிப்பின்
விம்மிப்பணைத் துப்புடை வீங்கி எழுந்த கொங்கைப்
பொம்மற்பெரு மாட்டி வெரிந்புறத் தெய்தி வல்லே
செம்மற்பிறை வேணிய ஞர்திருக் கண்பு தைத்தாள்."

இன்னும் மெய்கண்ட நூலிலுள்ள ஒருபாட்டின் முற்பகுதி இதை விளக்குகின்றது. அதாவது,

"நாயகன் கண் நயப்பால் நாயகி புதைப்ப எங்கும்,
பாயிரு ளாகி மூடப்........"

இப்படியாக இறைவியார் இறைவனது திருக்கண்களை மூடிய தனுல் என்ன நடக்கின்றது,

"இருண்டபூங் குழலாள் செங்கை இறுகுறப் புதைத்த லோடும்
இருண்டகந் தரத்தார் நோக்கின் இருசுடர் மறைந்த வாற்ருல்
இருண்டது புவனம் முற்றும் இருண்டஎண் டிசையும் என்றும்
இருண்டறி யாத விண்ணேர் இருக்கையும் இருண்ட தந்நாள்."

(காஞ்சிப் புராணம்)

இவ்வாறு சிவஞானசுவாமிகள் பாடியிருக்கின்ருர். அதாவது சூரிய சந்திரர்களது ஒளியானது நீங்கி எல்லா உலகங்களும் இருள்மயமாயின. தேவரும் மாந்தரும் ஆங்காங்குள்ள பொருள்களையும் காணுராயினர். பிரம தேவருடைய படைப்புத் தொழிலும் முனிவர்கள் யாகங்களும், மற்றும் ஏனையோரின் தானம், தவம், கடவுள் வழிபாடு, அறிவுநூற்கேள்வி முதலியன எல்லாம் தடைப்பட்டுவிட்டன. ஆகையினுல், தேவர், முனிவர் முதலாயினேர் என்ன செய்வது என்று அறியாது ஆங்காங்கு வருந்தி நின்றும், அதுவுமல்லாமல் பெருங் குரலிட்டும் அழத் தொடங்கினுர்கள்.

## இறைவி கைநீப்ப இறைவன் திருக்கண்களைத் திறத்தல்.

உலகிலுள்ளோர் யாவரினதும் பெரும் கடலோசை போன்ற அழுகுரல் கேட்ட அம்பிகை தமது திருக்கரங்களை நீக்க சிவபெருமானும் தமது திருவிழிகளைத் திறந்தார். இதனைச் ஹீமாதவச் சிவஞான யோகிகள் ஒரு பாட்டில் எவ்வளவு அழகாகக் கூறுகின்ருர்,

"கடவுளர் முனிவர் மக்கள் யாவருங் கவன்றுங் காங்குப்
படலைவல் லிருளின் மூழ்கிப் பதைபதைத் தாவா வென்னக்
கடலொலிக் கிளர்ச்சி நாண முறையிடுங் காலை வெற்பின்
மடவரல் கரங்கள் நீப்ப மலர்விழி திறந்தார் ஐயர்."

உடனே, "எல்லா ஒலிகட்கும் காரணம் இறைவனது அருளுருவத்தின் ஒளியே" என்ற உண்மை விளங்க, முன் போல் உலகம் ஒலிபெற்றுச் சிறந்தது. அதாவது, ஒளி அற்றுப்போன சூரிய சந்திர நக்ஷத்திரங்களெல்லாம் மீண்டும் விளங்கின. படைப்புத் தொழில் முதலியனவெல்லாம் நன்கு நடந்தேறின. யாகங்கள் நிகழ்ந்தன. தேவர், முனிவர் முதலாயினோர் எல்லோரும் சந்தோஷமடைந்தார்கள். இதனை மெய்கண்ட நூலிலுள்ள ஒருபாட்டின் பிற்பகுதி — அதாவது 40-ம் பக்கத்தில் கூறப்பட்ட, ஒருபாட்டின் முற்பகுதி என்று கூறப்பட்டதாகிய அப்பகுதியின் மிகுதிப் பாகம். — நன்கு விளக்குவதையும் காணலாம்,

"........பரிந்துல கினுக்கு நெற்றித்
தூயனேத் திரத்தினாலே சுடரொளி கொடுத்த பண்பின்
தேயமா ரொளிக ளெல்லாம் சிவனுருத் தேச தென்னார்."

## சிவபெருமான் உமையம்மையாருக்குப் பணித்தல்.

இறைவருடைய திருவிழிகளை அம்மையார்மூடி வாங்கிய சிறுகாலம், உலகினுக்கு எண்ணிறந்தகாலங்களாய், உயிர்களெல்லாம் வருந்தி, அவரவர்கள் செய்கடன்களும், அறங்களும் நிகழாது தடைப்பட்டன. அப்படியாகத் தடைப்பட்ட பாவம் நீங்கும்படியாகச் சிவபெருமான் அம்மையாரின் திருமுகத்தை நோக்கி, "தேவி! எமது திருவிழிகளைப் பொத்தினமையால் படைப்பு முதலியன நிகழாது ஏற்பட்ட பாவம் நீங்க நீயே பிராயச்சித்தம் செய்தல் வேண்டும்" என்றருளினார். இதனைச் சிவஞானசுவாமிகள் நயம்பட வியந்தோதுகின்றார். அதாவது,

"இருசுடர் தமக்கா தார மாகிய எமது கஞ்சத்
திருவிழி புதைத்த வாற்றல் படைப்பாதிச் செய்கை மாறி
உருகெழு தீமை நின்னை உற்றதால் அதற்குத் தீர்வு
மருமலர்க் குழலி ணய்நீ மரபுளி இயற்றல் வேண்டும்."

(காஞ்சிப்புராணம்)

இப்படியாகச் சிவபெருமான் கூறியதுமல்லாமல், இன்னும் பார்வதியாரையே நோக்கிக் கூறுகின்றார்.

"இகப்பருங் கருணை பூண்ட வெமக்குநின் றனக்கு கந்த
மகத்தடி யவர்க்கும் பாவ மணுகுவ தில்லை யேனும்
வகுத்தவா புரிதி யெல்லாக் கருமமு மரபி ணல்யா
நிகழ்த்திய வாறே பற்றி நிகழ்த்திடு முலகங் கண்டாய்."

அதாவது, "பார்வதி எமக்கும், உனக்கும், எம்மடியார்களுக்கும் பாவமானது வந்தணுகாதாயினும், நாம் எதனை விரும்பிச் செய்கின்றேமோ, அதன் வழிப்படியே உலகமும் பின்பற்றி நடக்குமாகையினுல் நீ யான் கூறியபடியே செய்தல் வேண்டும்," என்றருளினுர்.

## சிவபிரான் பார்வதியாருக்குக் காஞ்சியே தவஞ்செய்வதற்கு உரிய இடமெனல்

சிவபிரான் கட்டளைப்படி, உமையம்மையாரும் அப்படியே செய்யவேண்டுமென்று இயைந்து, சிவபெருமானைப் பார்த்து, "பிராயச்சித்தமாவது யாது? அது செய்வதற்குரிய காலமெது இடமெது?" என்று வினவ, சிவபெருமான் திருவாய் மலர்ந்து, "உமையம்மையே! எப்படிப்பட்ட பெரிய பாவங்கள் முழுவதையும் போக்கவல்ல மிகச்சிறந்த பிராயச்சித்தமாவது, எம்மைப் பூசித்தலும், தியானித்தலும், துதித்தலும், எம் அடியார்களை வழிபடுதலுமே பிராயச்சித்தங்களாகும். (ஆனுலும் முனிவர்கள் தர்மசாத்திரங்களிலே பல பிராயச்சித்தங்கள் விதித்திருக்கின்றுர்கள். அவைகளைக் கடைப்பிடிப்பதினுல் மிகமிகச்சிறிய பகுதியாகிய பாவமே தொலையும் எனலாம்.) பிராயச்சித்தங்கள் செய்யத்தகுந்த காலமாவது விடியற்காலம் முதலாகவுள்ள ஆறுகாலங்களாகும். அதற்குரிய

இடம், யாம் எழுந்தருளியிருக்கும் புண்ணியஸ்தலங்களேயாம். ஆகவே, யாம் எழுந்தருளியிருக்குமிடத்திலேயினும், நமது அடியார்கள் சிறப்புற வதிந்திருக்குமிடத்திலாயினும் எம்மை வழிபாடு செய்யக்கடவாய்'' என்று இவ்வாருக அருளினுர். அதன்பின் அம்மையார் இன்னும் வணங்கி, "பூசை செய்யும் வகையை விரித்துரைக்க வேண்டும்'' என்று வினுவினர். இதைக்கேட்டுச் சிவபெருமான், "பூசை என்பது நித்தியம், நைமித்திகம், காமியம் என்று மூன்றுவகைப்படும். நிலவுலகு ஒழிந்த மற்றும் ஏனைய உலகங்களில் செய்யும் பூசையே நித்தியமாம். கர்மபூமியாகிய இந்த நிலவுலகின்கண்ணே, இம் மூன்றுவகைப் பூசைகளையும் செய்வதற்கு உரிய இடம் பரத கண்டமேயாம்'' என்று கூறினுர். இன்னும், அம்மையார் சிவபெருமானை நோக்கி, "அப்பாரத பூமியில் உள்ள புண்ணிய தலங்களில், உமக்கு மிக உகந்த உத்தமோத்தம தலம் யாது?'' என்று வினவினுர். அதன்பின்பு சிவபெருமான் பார்வதியாருக்குக் காஞ்சியே தவஞ்செய்தற்கு உரிய உத்தமோத்தம தலம் என்பதாகக் கூறியதைச் ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் பின்வரும் பாட்டில் மிக விரிவாக எடுத்துக் காட்டுகின்ருர்.

"ஆயிடைநாம் மகிழ்ந்துறையும் திருப்பதிகள் பலகோடி அவற்றுள் மேலாம்,
ஆயிரத்தெட்ட வற்றதிகம் ஒருநூற்றெட்ட வற்றதிகம் அறுபத் தெட்டாம்,
ஆயினவற் றுயர்காசி காஞ்சிஎனும் இரண்டதிகம் அறிவான் மிக்கோர்,
ஆயின்அவை இரண்டுள்ளும் சாலநமக் கினியநகர் அணிநீர்க் காஞ்சி.''

(காஞ்சிப்புராணம்)

அதாவது, சிவபெருமான் பார்வதியாரைப் பார்த்து, "பெண்ணே! நாம் எண்ணிறந்த தலங்களில், மகிழ்ந்து எழுந்தருளியிருக்கின்ருேம். அவற்றில் சிறந்தவை ஆயிரத்தெட்டு. அவற்றிலும் சிறந்தவை நூற்றெட்டு, இன்னும் அவைகளில் அறுபத்தெட்டுச் சிறந்தன. அதன்மேல் அவைகளில் உத்தமமாகக் காசியும் காஞ்சியுமே விளங்குகின்றன. அவைகளிரண்டிலும் எமக்கு மிக உத்தமோத்தமமானதும் இனியதுமான தலம் காஞ்சியேயாகும். ஆகவே நீ அக்காஞ்சிப் பதியிலே உன் தவத்தைச் செய்யக்கடவாய்.'' என்று ஆஞ்ஞாபித்தார்.

மேலும், சிவபெருமான் பார்வதியாரைப் பார்த்து, "உமையே! இப்படிப்பட்ட தலங்களை என்ன காரணத்திற்காக நாம் அமைத்தோம் என்பதைக் கூறுகின்றேன் கேட்பாயாக. மலத்தாற் கட்டப்பட்ட உயிர்களை உய்விக்கும்பொருட்டு பஞ்ச சக்திகளைத் தோற்றுவித்து வினைகளை நுகரச்செய்வித்து, 'நல்லாசிரியனுய்த் தீக்கை செய்வித்து, மலபரிபாகஞ்செய்து, சரியை, கிரியை, யோகங்களில் நிலைபெறச்செய்து; அதினின்றும் ஞானத்தை அடையும்படிசெய்து, அதன்பின் எம்மோடுள்ள முத்தியை அடையும்படி செய்வோம், இப்படியாக முத்தியை அடைய வலியற்றவர்களைச் சுலபமாக ஈடேறச் செய்வதற்கு இப்படிப்பட்ட பல தலங்களை அமைத்தோம். இத்தலங்களில் வாழ்வோர் எளிதில் வீடுபேற்றை அடைவார்கள். சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சியமென்னும் முத்திகளில் சாயுச்சியமே முற்றுப்பெற்ற முத்தியாகும்'."

இச் சந்தர்ப்பத்தில், நல்லாசிரியனுய்த் தீக்கை செய்வித்து, என்பது தொடக்கம் சாயுச்சியமே முற்றுப்பெற்ற முத்தியாகும் என்பது முடியும் வரைக்கும் உள்ளவற்றைச் சிறிது ஆராய்வோம். அதாவது :-

ஆன்மாக்கள் மலங்களினின்றும் நீக்கப்பெற்று இறைவனைக் காட்டிக் கொடுக்க வல்லது அரிய தவங்களேயாம். அவையாவன சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்குமாம். பெருமை பொருந்திய தீட்சை பெற்றவர்களே இத்தவங்களைச் செய்யத் தகுதிவாய்ந்தவர்களாவர், தீக்கை என்னும் சொல்லுக்கு மலத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுக்கும் என்பது பொருள். ஆகவே, இதற்குச் சான்றுக, 'மலம் சீக்கும் தீக்கை' எனச் சிவஞான முனிவர் கூறியிருப்பது தெளிவுபடுத்துகின்றது. மேலே கூறப்பட்ட தவங்களைச் செய்வதினுல் ஆன்மாக்கள் அடையும் பயன் என்னவெனில், சாலோக, சாமீப, சாரூபமென்னும் முத்திப் பதங்களாம். இத்தகைய முத்திப் பதங்களை முறையாக முயன்றவரே, முத்தியின் முடிபாகிய பரமுத்தியை அடைவார்கள். இதுவே சாயுச்சியமெனப்படும்.

தீட்சையை முதலாவதாக ஏழு விதிமுறைகளினுல் ஏழு பெரும் பகுதிகளாகப் பிரித்திருக்கின்ருர்கள். அவையாவன:-

1. சட்சு தீட்சை: அதாவது ஆசாரியன் சிவத்தியானத்துடன் மாணுக்கனைத் தனது கண்களினுல் மலம் நீங்கும்படியாகப் பார்த்தல்.

2. பரிச தீட்சை: அதாவது ஆசாரியன் தனது வலக் கையினில் சிவபெருமானைப் பாவனை செய்து பூசித்து மாணுக்கன் தலையில் வைத்தல்.

3. வாசக தீட்சை: இஃது பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசித்தல்.

4. மானத தீட்சை: இஃது ஆசாரியன் தனது யோகாப்பியாசத்தால் மாணுக்கனுடைய இருதயத்தினுட் புகுந்து அவனுடைய அறிவிற்குச் சிவபெருமானின் தன்மையை விளங்கச் செய்தல்.

5. சாத்திர தீட்சை: இஃது ஞான நூல்களை ஓதுவித்தல், ஓதுதல் முதலியன.

6. யோக தீட்சை: இஃது ஆசாரியன் மாணுக்கனுக்கு யோகாப்பியாசத்தை விளக்கிக் கூறல்.

7. ஔத்திரி தீட்சை: இதுவே சிறந்த தீட்சையாகும். ஆகையினுல், 'மீக்கூறும் அவுத்திரி' என்ருர் சிவஞானமுனிவர். இஃது அக்கினி காரியத்தால் மந்திரம், பதம், வன்மை, புவனம், தத்துவம், கலை என்னும் ஆறு வழிகளையும் சுத்திகரித்தல் முதலியவற்றைச் செய்தல். இவ் ஔத்திரி தீட்சை கிரியாவதி, ஞானவதி என்று இருவகைப்பட்டு, இந்த இரண்டு வகைகளும் தனித்தனி சமய தீட்சையென்றும், விசேட தீட்சையென்றும், நிருவாண தீட்சையென்றும் மும்மூன்ருகப் பகுக்கப்படுகின்றன.

இன்னும் இத் தீட்சைகளினதும், முத்திப் பதங்களினதும், பரமுத்தியினதும் சிறப்புக்களைச் சிறிது கவனிப்போம். அவையாவன:-

புறம் அகம் என்னும் சமயங்களில் நின்றும் வருணநிலை வழுவாது நின்றும், வேள்விகள் (யாகங்கள்) பலபுரிந்தும், வேதாந்தப் பொருளின் உண்மையை விளங்கிக் கடைப் பிடித்தும், திருந்திவரும் முறையினாலே இவைகளின் பயன் முற்றியபின்பு மேல் நோக்கமுள்ள அறிவின் மிக்கோரே, பர ஞானத்தைக் கொடுக்கக்கூடிய சைவநெறியிலுள்ள சமய தீட்சையைப் பெறுதற்கு உரியராவர். இப்படிப்பட்ட சமய தீட்சை பெற்றவரே சரியைக்குரியராவர். சரியை என்பது அடிமை நெறியாம். சமயதீட்சையைப் பெற்றவர்கள் திருக் கோயிலில் அலகிடுதல், மெழுகுதல், மலர்பறித்து மாலை தொடுத்துதவுதல், தீபம் ஏற்றல், சிவனடியார் குற்றேவல் செய்தல் முதலிய அடிமை நெறியினில் நிற்போர் சிவலோ கத்தில் வாழ்வார்கள் என்று கூறப்படுகிறது. அப்படி வாழ் தலே சாலோகம் எனப்படும். சாலோகபதமடைந்தவர்களே விசேட தீட்சை பெற உரியவராவர். அதேபோன்று விசேட தீட்சை பெற்றவர்களே! சற்புத்திர மார்க்கமாகிய கிரியைக்கு உரியவர்களாவர். கிரியையில் நிற்பவர்கள் புறத்தும் அகத் தும் செய்யும் பூசைக்குச் சொல்லப்பட்ட மலர் முதலிய பொருட்களைக்கொண்டும் அக்கினி காரியத்தாலும் நெறி வழு வாது ஒழுகுபவர்களே இறைவன் பக்கத்தில் வாழ்வார்கள் என்று கூறப்படுகின்றது. இப்படியாக இறைவன் அருகில் வாழ்தலே சாமீப பதம் எனப்படும். இப்படியாகக் கிரியை யில் நின்று முற்றியவர்கள் இயமம் தொடக்கம் சமாதி ஈறுக வுள்ள உறுப்புக்களின் இயல்பு வாய்ந்து, இடைகலை பிங்கலை நாடிகளின் வழியாக ஓடும் காற்றைச் சுழுமுனையில் நிலை பெறச் செய்து, அங்குள்ள தெய்வத்தின் நிலையை உணர்ந்து அந்நிலையில் நெறிதவறாது நிற்றலே யோகமெனப்படும். இவ் யோகத்தில் நிற்பவர்கள் இறைவனது உருவத்தைப்பெற்று வாழ்வார் என்று கூறப்படுகின்றது. இப்படியாக வாழ்தலே சாரூபம் எனப்படும் இப்படியாக முறையே சரியையினின்றும்,

கிரியையினின்றும் யோகத்தினின்றும் முற்றி இறைவனது அருள் நிரம்பியவர்களே நிருவாண தீட்சை பெற அருகராவார்கள். இறைவனே ஞானசிரியனுய்த் தோன்றி அருளப் பெறும், ஞானசிரியன்பால், அவர்கள் ஞானோபதேசம்பெற்று மந்திரம் முதல் கலை ஈறுகவுள்ள, ஆறு வழிகளையும் தூய்மை செய்து ஐந்தெழுத்தின் மகிமையையும் பதி, பசு, பாசம் என்னும் மூவிலக்கணங்களையும் ஐயந்திரிபற உணர்தலே ஞானம் எனப்படும். இப்படியாக ஆன்மாக்கள் ஞானத்தினின்று முத்தியிலக்கணங்களை உணர்ந்து, பரஞானத்தை அடைந்து அதாவது ஞானத்தின் முற்றிய நிலையை அடைந்து, சிவனோடு ஒன்ருய் நிற்கும் நிலையே, அதாவது தீயும் இரும்பும் ஒன்ருகித் தீயிரும்பென நிற்கும் அத்துவிதமான நிலையே சாயுச்சியமெனப்படும். இதுவே முடிபுமுத்தி அதாவது பரமுத்தி எனவும் கூறப்படும்.

இம்மட்டுமல்லாமல் காசியும், காஞ்சியும் தவிர்ந்த ஏனைய தலங்களில் வாழ்வோர் சாலோக சாமீப பதங்களையும், காசியில் வாழ்வோர் சாரூப பதத்தையும், காஞ்சியில் வாழ்வோர் சாயுச்சியத்தையும் அடைவார்கள் என்றும் கூறப்படுகின்றது. இன்னும், சிவஞானமுனிவர், "மறைமுடிவும் இவ்வாறே வீடுதவும் வளநகரம் காஞ்சி என்ன, அறைதருமால்" என்று வியந்து ஓதியருளியதும் இங்கு அறியக்கூடியதாக இருக்கின்றது. ஆகையினுல் காஞ்சியம்பதியானது, கேசாந்த முத்தியினை எல்லா உயிர்க்கும் கொடுக்கும் என்பது இதிலிருந்தும் பெறப்படுகின்றது.

ஆகவே அச்சாயுச்சிய முத்தியைத் தரக்கூடிய அதிவிஷேஷித்த தலம் காஞ்சியேயாகும். அதனையும் விளக்கமாகக் கூறுகின்றேன் கேட்பாயாக!

"தன்னிகரில் கேசாந்தம் உறும்ஆவி தன்சிரத்துக் கபாலம் கீறி,
வன்னியினில் பூவெனப்போய் வாயுவினில் புவவெனப்போய் இரவிமாட்டுப்,
பின்னம்அறு சுவவெனப்போய் விண்அரசின் மகவெனப்போய் பிரமத் தொன்றுய்
மன்னிடும்இக் கேசாந்த முத்தியினை எவ்வுயிர்க்கும் வழங்கும் காஞ்சி."

(காஞ்சிப் புராணம்)

அதாவது, சாயுச்சியமுத்தியெனும், கேசாந்தமுத்தியை அடையவேண்டிய ஆவியானது கபாலத்தைக் கீறிக்கொண்டு பூ: என்று அக்கினிமண்டலத்திற்கும், புவ: என்று வாயு மண்டலத்திற்கும், சுவ: என்று சூரியமண்டலத்திற்கும், மக: என்று இந்திரலோகத்திற்கும், சென்று பிரமத்தில் ஒன்றுகும். க: எனப்படும் பிரமனுக்கு ஈசனுகிய யாம் கேசன் எனப்படு கின்றோம். எம்மிடம் அந்தமாகிய முத்தியை அடைதல் கேசாந்தமுத்தியாகும். இன்னும் கம்: என்னும் தலைமேல் சயனிப்பது கேசம். கம்: என்னும் தலைமேல் அஞ்சித்தல் காஞ்சி. ஆகவே கேசம், காஞ்சி என்பன ஒருபொருட் கிளவிகளாம். ஆகையினுல், கேசாந்தம், காஞ்சியந்தம் என்னும் இரண்டும் ஒன்றே. எனவே, எல்லாத்தலங்களுக்கும் தலையாகிய காஞ்சி, கேசாந்தம் எனப்படுவதனுல், அங்கேயுள்ள எல்லா உயிர்களும் உடல்களை விட்டுப்பிரியும்போது கண் முதலிய வழிகளாற் செல்லாமல் தலை ஒட்டை உடைத்துக்கொண்டு செல்லும். அதனுலே, கண்முதலிய வழிகளால் உயிர்சென்ற உடலைச்சுடுங்கால் தலை வெடித்தல் இயல்பாதலாலும், காஞ்சியில் இறந்தவர்களின் உடல்கள் தீயில் எரியும் பொழுது, இன்றும் சிரசு வெடிப்பதே கிடையாது. ஆகவே, அந்தக் காஞ்சி நகரின் பெருமையை யாராலும் வரையறுத்து, எடுத்துக்கூறவும் முடியுமோ! இடபமும் சிவாபராதத்தைத் தீர்த்தற்பொருட்டு அங்கே பூசித்தது என்பதையும் நீ அறிவாயாக." என்றருளினர். பார்வதியம்மையார் சிவபெருமானை வணங்கி, "அவ்விடபத்தின் வரலாற்றை எனக்கு விபரமாகச் சொல்ல வேண்டும்," என்று வினுவ சிவபெருமான் கூறுகின்றூர்.

இடபேச்சர வரலாறு: "முன்பு ஓர் கற்பகால முடிவில் உலகமெல்லாம் அழிந்த நேரத்தில் தருமதேவதை இறக்க அஞ்சி இடபவடிவமெடுத்து எம்மைச் சரணடைந்தது. யாம் அதைப்பார்த்து எதற்கும் அஞ்சவேண்டாம் என்று கூறி எமக்கு வாகனமாக்கிக் கொண்டோம். எம்மிடத்தில் அன்புடையார் எமக்குச் செய்யும் பாவமும் புண்ணியமேயாகும். அது போல அன்பில்லாதார் செய்யும் புண்ணியமும் பாவமேயாம்.

ஆகையினுல் அவ்விடப உருவத்துடன் நம் சந்நிதானத்தில் எப்பொழுதும் இருக்கும்படியாக அருளினேம். அஃது அப்படி யிருக்கும் காலத்தில் கருடன் விஷ்ணுவைச் சுமந்துகொண்டு ஒருமுறை எல்லா உலகத்தையும் சுற்றிவந்ததும், பெருமிதமும் செருக்கும் உடையவனுய், விஷ்ணுவைப் பார்த்து, 'உம்மைச் சுமந்துகொண்டு இந்த மூவுலகங்களையும் சுற்றி வந்தேன். எனக்குள்ள ஆற்றலைப்போல், என்னைவிட யாருக் குண்டு!' என்று இறுமாந்து கூறிற்று. விஷ்ணு அதனுடைய இறுமாப்பை அடக்கவேண்டுமென்று துணிந்து, நல்லதென்று கூறிக்கொண்டு கருடனுடன் கைலையை அடைந்ததும் வாய லில் கருடனை நிற்கும்படிகூறி உள்ளே வந்து, எம்மை வணங் கிய பின், அதிக நேரம் எம்முடன் இருந்தார். வாயலில், கருடன் மிதமிஞ்சிய செருக்குடன் நிற்பதை, இடபம் கண் டது. இடபமும் கருடனது செருக்கை அடக்க வேண்டும் என்று எண்ணி, உறங்குவதுபோலத் தனது இடது தொடை மேல் தலையை வைத்துக்கொண்டு பெருமூச்சு விட்டது. கரு டன் அம்மூச்சிலே சிக்கி நூறுயோசனைதூரம் பின்சென்று, பலமுறை மோதுண்டு, இறக்கைகளெல்லாம் ஒடிந்தும், வருத்த முற்றுத் திருமாலை நினைத்துப் பெரிய குரலில் ஓலமிட்டது. யாம் அவ்வோலத்தைக் கேட்டுத் திருமாலை நோக்கி, 'இஃது என்ன காரணம்' என்று வினவ 'திருமாலும் நிகழ்ந்தவற்றை விரித்துரைத்தனர்.' யாம் நந்தியெம்பெருமானை ஏவி, கருடனை யும் இடபத்தையும் எம்முன்னே அழைத்து, இடபத்தை நோக்கி, 'நீ எமது கட்டளையின்றி அவ்வாறு செய்தமை யினுல், காஞ்சியிலே எம்மைப் பூசிக்கக்கடவாய்' என்று ஆஞ்ஞாபித்தோம். இடபமும் எம்கட்டளையைத் தலைமேற் கொண்டு காஞ்சியை அடைந்து, அங்கே சிவகங்கைக்கரை யில், மேற்கு நோக்கிய சிவலிங்கம் ஸ்தாபித்து, 'இடபேச் சுரர்' என்னும் திருப்பெயர் புனைந்தும் பூசித்தது நாமும் இடபத்திற்குக் காட்சி கொடுத்து வேண்டிய வரமும் கொடுத் தோம். இப்படியாகப் பலநாட்களாக நெறிதவருது, இடபம் எம்மைப் பூசித்த பின்பு கைலையை வந்தடைந்து அமர்ந் திருந்தது" இத்துடன் இவ்வரலாறு முடிவடைகின்றது.

இவ்விடபேச்சர வரலாற்றிலிருந்து, நாம் எப்படிப்பட்ட தத்துவ உண்மைகளை அறிகிறோம், என்பதைச் சிறிது அவதானிக்க வேண்டும். அவையாவன:

1. தருமமானது இறைவனுடைய கட்டளைப்படி நடக்கின்றது.

2. ஆகையினால் சிவஞான சுவாமிகள், (காஞ்சிப்புராணத்தில்) 'எம்பொருட்டுப்புரிபாவமும் புண்ணியமாக்கி எம்பால் விருப்பற்றவர் செய்அற மும்மற மாக்கு விப்பாய்' என்று கூறியிருக்கின்றார். அதாவது, இறைவனிடத்தில் அன்பு கொண்டு செய்வன எல்லாம் அறமும், அங்ஙனமன்றிச் செய்வனவெல்லாம் பாவமுமாம்.

3. இறைவனுடைய கட்டளையின்றி எவரையும் தண்டித்தல் குற்றம்.

## இறைவனார் பணித்தலும் பார்வதி அம்மையார் காஞ்சிக்கு எழுந்தருளலும்.

இன்னும் சிவபெருமான் பார்வதி தேவியாரைப் பார்த்து,

"ஆதலின் நீயும் அங்கண் அகிலமும் உய்வான் எம்மை
மேதகு கழூவாய் நீரின் விதியுளிப் பூசை செய்யப்
போதராய் என்று நல்கப் புரிகுழ லணங்கு தாழ்ந்து
நாதனார் இசைவு பெற்று நயந்தெழுந் தருள லுற்றாள்."

(காஞ்சிப்புராணம்)

அதாவது, 'ஆகையினால், நீயும் அக்காஞ்சியை அடைந்து பூசை செய்யக்கடவாய்' என்று அருளினார்.

உடனே அம்மையார் சிவபெருமானிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டு, அவர் கண்களுக்குப்படும்வகையிலும் அவருக்குப் புறங்காட்டாது, பின்பக்கமாக நடந்து சென்று, அதன்பின்பு முன்புறமாகவும் நடந்துசென்று, தேவகணங்கள் கொண்டுவந்த ஒரு மிக்கஒளிபொருந்திய விமானத்தில் ஏறித் தோழியர் புடைசூழச் செல்வாராயினர். இந்தச்

செய்தியைக் கேட்ட, திருமகளும், கலைமகளும், அபிராமி முதலாகக் காளி ஈருகவுள்ள சப்தமாதர்களும், மற்றைய தேவமாதர்களும், முனிவர் பத்தினியர்களும், இன்னும் அநேக கோடிக்கணக்கான தோழிமார்களும், உரகர் கந்தருவர் முதலிய எல்லாத் தேவர்களும், சயசயவென்று ஆரவாரிக்க, மத்தளம் முதலிய வாத்தியங்கள் முழங்க, பலபேர் சாமரை, குடை, கொடி, விசிறி முதலிய பலவகையான உபசாரங்களைச் செய்ய, பஞ்சதருக்கள், தீர்த்தங்கள், புடைசூழ்ந்துவர, இப்படிப்பட்ட பல அலங்காரங்களுடன் வருவதைக் கண்ட மண்ணுலகத்தாரும், காணுது கேட்டறிந்தவர்களும், வியந்து போற்ற, பார்வதியம்மையார் விமானத்தில் ஆகாய வழியாகச் சென்று காசிக்ஷேத்திரத்தை அடைந்தனர். காசியிலே, அம்மையார் விசுவநாதரை வணங்கியும் சிவார்ச்சனை செய்தும் பூசித்தபின்பு, தம்பெயரால் வேருேர் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தும் வழிபட்டனர்.

பின்பு, அம்மையார் காசியிலிருந்து காஞ்சியை நோக்கி விமானமூர்ந்து சென்று தொண்டை நாட்டை அடைந்து,

### அம்மையார் காஞ்சியை அடைதல்.

**"அண்ணலந் துலைசேர் என்றூழ் ஐப்பசித் திங்கட் பூரம்**
**வெண்மதி யாட்சி மூன்றும் பின்பக்கம் நந்தை மேய**
**புண்ணியத் திருநாள் எல்லாப் புவனமும் பெருவாழ் வெய்த**
**விண்ணவர் பிராட்டி காஞ்சி வியனகர் எல்லை சேர்ந்தாள்."**

(காஞ்சிப்புராணம்)

ஐப்பசி மாதத்தில் அபரபக்கத்து ஏகாதசித்திதியில் பூர நட்சத்திர தினத்தில், அதாவது பூரநட்சத்திரத்தில் சந்திரனிருக்கும் வேளையில், எல்லா உலகங்களும் பெருவாழ்வை அடையும்படி, காஞ்சிமாநகரை வந்தடைந்தனர்.

### கங்கணதீர்த்தமும், கங்கணேஸ்வரரும், கடகேஸ்வரரும்.

பிரளயகாலத்திலேயும் அழியாது நிலைபெற்றுள்ள காஞ்சிப் பதியை அம்மையார் கண்டு பேரானந்தமடைந்து, உச்சிமேற் கைகுவித்து, உரோமாஞ்சங்கொண்டு, ஆனந்தக்

கண்ணீர் சொரிய, அங்குள்ள ஒரு தடாகத்தில் ஸ்நானஞ் செய்து, ஏகம்பவாணரை அர்ச்சிக்கச் சங்கற்பம் செய்து கொண்டு, பொன்னுலய காப்புநாண் அதாவது கங்கண நாண் அணிந்தனர். பின்பு அங்கே ஒரு இலிங்கம் ஸ்தாபித்துப் பூசித்தார். ஆகையினுல் அத்தீர்த்தம் கங்கணதீர்த்தமெனவும், அப்பொழுது பூசித்த இலிங்கம் கங்கணேஸ்வரர் எனவும் பெயர் பெறும். பின்பு அம்மையார் இன்னும் ஒரு இலிங்கம் அமைத்துப் பூசித்து, கடகமும் அணிந்து கொண்டார். இச்சிவலிங்கத்தைக் கடகேஸ்வரர் என்பர். இந்த இரண்டு இலிங்கங்களையும் வழிபட்டவர்கள், தீராப்பிணி தீர்ந்து தற்போதமிழ்ந்து, முத்தியடைவார்கள்.

## உலகாணித்தீர்த்தம் (பஞ்சதீர்த்தம்)

பின்பு அம்மையார் அங்கு நின்றும் புறப்பட்டு, காஞ்சி நகரத்தின் உட்புறத்தைக்கண்டு, பெருமகிழ்ச்சியடைந்தார். அங்கே, முன்பு பிருதுவி முதலிய பஞ்சபூதங்கள் ஒன்று சேர்ந்து, தங்கள் பெயரால் பஞ்சதீர்த்தம் என்னும் தடாகத்தை அமைத்து, அதிலே ஸ்நானஞ்செய்து, தவஞ்செய்து, உலகத்திற்கு ஆகாரமாகும் வரத்தைத் திருவேகம்பரிடமிருந்து பெற்றமையால் முழு உலகமும் தன்வடிவமாய் இலங்குகின்ற, பஞ்சதீர்த்தம் என்றும் கூறப்படும் உலகாணித்தீர்த்தக்கரையிலே பிலாகாசத்தை அடைந்தனர்.

## அம்மையார் அறம் வளர்த்தல்.

அங்கே அம்மையார் தங்கியிருந்து தவஞ்செய்ய எண்ணி, தேவர்களை விடைகொடுத்து அனுப்பிவிட்டு, அறச்சாலை செய்து, முப்பத்திரண்டு தருமங்களையும் வளர்க்கத் தொடங்கினர்.

தெய்வம்தென் புலத்தார் பூதம் மானிடம் பிரமம் என்றோர்
ஐவகை எச்சம் பூர்த்தம்*(*சூக்தம், தருமம்) துறந்தவர் மடங்கள் அன்பு
செய்யும்இல் வாழ்வார்க் கில்லம் மனைக்குப கரணம் தேம்பூப்
பெய்தமை தண்ணீர்ப் பந்தர் எங்கணும் பிறங்குசோலை. 1.

இரப்பவர் குருடர் எவ்வ முற்றவர்ப் புரத்தல் வெந்நோய்
துரக்கும்நன் மருந்து தூவாய் மகவினை ஓம்பல் சுண்ணம்
பரித்தபா கடையே எண்ணெய் பைம்புனல் குளிப்ப வேண்டும்
மருக்கிளர் துவர்க ளாதி மலரணை நிலன்ஆன் கன்னி. 2.

கடிமணம் விளக்கு மாறுக் கடன்ஒழித் திடுதல் ஈசன்
அடியவர் விழைவ ஈகை அக்கமா மணிவெண் ணீறு
படியிலாக் கடவுட் பூசை உபகர ணங்கள் பாசந்
தடிதருவேத வாய்மைச் சைவநூல் புராணம் நல்கல். 3.

சிவபிரான் அடிக்கீழ்ப் பத்தி செவியறி வுறுத்த லோடும்
உவகையின் அபயம் யார்க்கும் வழங்குதல் உள்ளிட் டோதும்
நவையிரி அறம்எண் ணுன்கும் நாள்தொறும் நிகழ்ச்சி மாணப்
பவநெறி துரக்கும் ஞானப் பைந்தொடி நிறுவிப் பின்னர். 4.

(காஞ்சிப் புராணம்)

அம்மையாரால் வளர்க்கப்பெற்ற முப்பத்திரண்டு தருமங் களாவன:

1. தேவயாகம், 2. பிதிர்யாகம், 3. பூதயாகம், 4. மானிட யாகம், 5. பிரமயாகம், 6. வறியவர்களுக்கு ஈதல், 7. முற்றுந்துறந்தவர்களுக்கு மடங்கள்கட்டி உதவுதல், 8. இல்வாழ்க்கையிலிருப்போருக்கு இல்லங்கள் கட்டி உதவுதல், 9. இல்வாழ்க்கைக்கு வேண்டிய கருவிப்பொருள்களைக் கொடுத்து உதவுதல், 10. தண்ணீர்ப்பந்தல்கள் அமைத்து தண்ணீர், மோர்நீர், சக்கரைநீர், ஊறுகாய்நீர், தேனீர் முதலிய வழங்கி தாகந்தணித்தல், 11. பூஞ்சோலை அமைத்தல், 12. பிச்சையெடுப்பவர், குருடர் முதலிய அங்கங்குறைந்தவர்கள் முதலாகக் கஷ்டப்படுபவர்களைக் காத்தல், 13. நோய்வாய்ப் பட்டவர்களுக்கு மருந்து கொடுத்தல், 14. குழந்தைகளை வளர்த்தல், 15. சுண்ணும்பு வழங்கல், 16. வெற்றிலை, பாக்கு முதலிய தாம்பூலம் கொடுத்துதவுதல், 17. தலைக்கு எண்ணெய் வார்த்து வழங்கல், 18, முழுகுவதற்கு அரப்பு, சிகைக்காய் முதலிய அரைப்புப் பொடிகள் வழங்கல், 19. படுக்கைகள் வழங்கல், 20. பூதானஞ் செய்தல், 21. கோதானஞ் செய்தல், 22. கன்னிகாதானஞ் செய்தல், 23. திருமணஞ் செய்வித்தல்,

24. தீபங்கள் கொடுத்தல், 25. பழைய தீராக்கடன்கள் தீர்த்தல், 26. சிவனடியார் வேண்டுவனவற்றைக் கொடுத்தல், 27. உருத்திராக்கம் வழங்கல், 28. திருவெண்ணீறு வழங்கல், 29. பூசைக்கு வேண்டிய பொருள்கள் வழங்கல், 30. சைவநூல், புராணம் முதலிய நூல்களை வழங்கல், ஓதுவித்தல், 31. சிவபக்தியை உபதேசஞ் செய்தல், 32. அபயமளித்தல் அதாவது எல்லோரையும் காப்பாற்றுதல், என்பன.

இத்தருமங்களைச் சிறிது வேறுபடவும் கூறியுள்ளோர் உளர்.

இப்படியாக அம்மையார் முப்பத்திரண்டு தருமங்களையும் வளர்த்து, இன்னும் மேன்மேலும் தருமங்களைப் பெருகச் செய்துகொண்டிருந்தார்.

## இறைவி திருவேகம்பத்திற்கு எழுந்தருளல்.

இப்படியாக இருக்கும் காலத்தில், இறைவி கம்பாநதிக் கரையிலே செழித்து வளர்ந்திருந்த மாமர நிழலிலே எழுந்தருளியிருக்கும் பெருமானும் ஜோதிலிங்க மூர்த்தியுமாகிய ஏகாம்பரநாதரைத் தரிசிக்கும் விருப்பத்தினால், பாங்கிமார்கள் முதலிய மாதர்கள் புடைசூழ, திருவீதிவழியாற் சென்றனர்.

அம்மையார் திருவீதி வழியாகச் செல்லும்போது, நகரமாந்தர்கள் வணங்கி ஆனந்த மேலீட்டினால் ஆடியும் பாடியும் வீதிகளிலெல்லாம் கமுகு, வாழை, தோரணங்கள், இளநீர்க் குலைகள் முதலியவற்றினால் நகரை அலங்கரித்து, சாணம் பனிநீர் முதலிய தெளித்து, பூரணகும்பங்கள் நிறைத்து வைத்து, விளக்குகள் ஏற்றி, மங்களமாக ஆடல்பாடல்களை நிகழ்த்தினார்கள். அம்மையார் வீதிவலம் வரும்பொழுது தன்னுடன் இன்னும் சூழ்ந்து வந்த தேவர்கள், சப்த மாதர்கள், சாஸ்தாயோகினிகள் முதலாயினோரை அவரவர்களுக்கு ஏற்ற இடங்களிலே தங்கியிருக்கும்படி விடைகொடுத்து, கீழ்த்திசை தொடக்கமாக உள்ள சிவாலயங்களை முறையாக மலர்கொண்டு தரிசித்து அர்ச்சித்தும், பூசித்தபின்பு திருவேகம்பநாதருடைய சந்நிதியை அடைந்தனர். அம்மையார் சந்நிதி மதிலின்

உயரத்தைக்கண்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் ததும்ப, கண்களினின்றும் ஆனந்த அருவி சொரிய, சிரசின்மேல் கைகளைக் குவித்தவண்ணம், தேவர்கள் சூழ்ந்துள்ள கோபுரவாயிலை வணங்கி ஆலயத்தின் உள்ளே சென்றார். சென்றதும் ஐந்தாம் ஆவரணத்திலுள்ள ஆதிசைவர் முதலிய சைவர்களுக்குத் திருவருள் பாலித்து, அதன்பின்பு சூரியன் வயிரவர் முதலாயினோர் இருக்கும் நான்காம் ஆவரணத்தை அடைந்தார். அங்கே தெற்கிலிருக்கும் விண்டுவீச்சரத்தைக் கண்ணுற்றார்.

**விண்டுவீச்சர வரலாறு:** திருப்பாற் கடலின்கண்ணே பள்ளி கொண்டு எழுந்தருளியிருக்கின்ற விஷ்ணுவானவர் ஒருநாள் யோகத்தில் இருக்கும்பொழுது, தமது இருதயமாகிய தாமரை மலரை மேல்நோக்கி மலரச்செய்து, அதில் உள்ள சிறு குகையின்கண்ணே உள்ள தீப்பிழம்பின் மத்தியில் சிவபெருமான் எழுந்தருளியிருத்தலைக்கண்டு வணங்கிப்போற்றினார். உடனே இறைவன் திருநடனத் திருக்காட்சி கொடுக்க, விஷ்ணுபெருமான் அதனைக் கண்ணுற்று ஆனந்தமேலீட்டினால், உளம் உருகி, உரோமாஞ்சங்கொள்ள, உடல் நடுநடுங்கி, வாய் குழறி, யோகநித்திரையில் ஆழ்ந்திருந்தார். பக்கத்திலிருந்த லக்குமி, கருடன், ஆதிசேடன் ஆகியோர் தமது விஷ்ணு தேவருக்கு என்ன நேர்ந்ததென்று ஏக்கமுற்றனர். பின்பு திருமால் யோகநித்திரையினின்றும் விழித்தெழுந்து ஆனந்த மேலீட்டினால் கைகுவித்துச் சிவபெருமானைத் துதித்தனர். இலக்குமி முதலாயினோர் ‘இஃது என்ன’ என்று கேட்டனர்.

விஷ்ணுவும் நிகழ்ந்தவற்றைக் கூறினர். இலக்குமி முதலாயினோர், தாங்களும் அந்நடனத் திருக்காட்சியைக் காண விருப்பமுற்று விஷ்ணுவை வேண்டினர். விஷ்ணு, அவர்களையும் அழைத்துக்கொண்டு, சிதம்பரத்தை அடைந்து, சிவபெருமானை நோக்கித் தவம் செய்கின்றார். சிவபெருமான் திருக்காட்சி கொடுத்தனர். உடனே விஷ்ணு, தானும் இலக்குமி முதலாயினோர் எல்லோரும் இறைவனது திருநடனத் திருக்காட்சியைக் காண்பதற்கு மிக ஆவலுடையவர்களாய் இருப்ப

தாகக் கூறினர். உடனே சிவபெருமான் விஷ்ணுவை நோக்கி, “காஞ்சியம்பதியிலே சிவலிங்கம் ஸ்தாபித்து வணங்கி அர்ச்சித்தும் பூசித்தபின்பு இங்கே வந்தால், எனது திருநடனக் காட்சியைத் தரிசிக்கலாம்” என்றருளினர். உடனே விஷ்ணு காஞ்சியம்பதியை அடைந்து, திருவேகம்பத்தை வணங்கினர். அதற்குத் தெற்குப் பக்கத்திலே, ‘விண்டுவீச்சர’ என்னும் பெயரால் சிவலிங்கம் ஒன்று ஸ்தாபித்துப் பூசித்துத் திருவருளும் கிடைக்கப்பெற்றார். அதன்பின்பு சிதம்பரத்தை மறுபடியும் சென்றடைந்தார். அங்கே இறைவன் ஆனந்தத் திருநடனக் காட்சியைக் காட்டினர். அத்திருநடனக்காட்சியை, விஷ்ணு இலக்குமி முதலாயினரோடும் கண்ணுற்று, ஆனந்த மேலீட்டினல் பரவசமடைந்து, கணங்களெல்லாம் பலவகை வாத்தியங்களை முழக்க, தானும் அவர்களுடன் படகம் முழங்கினர். சிவபெருமானும் படகம் முழக்கும் பணியைத் திருமாலுக்கே அருளினர். இம்மட்டில் இவ்வரலாறு முடிவடைகின்றது.

இவ்விண்டுவீச்சர வரலாற்றிலிருந்து எப்படிப்பட்ட தத்துவங்களை நாம் அறியக்கூடியதாக இருக்கிறது. அவையாவன:-

1. இறைவன் நம் எல்லோரினதும் இருதயகமலத்தில் வீற்றிருக்கின்றான்.

2. விஷ்ணுவும் இறைவனது அடியாராகின்றார்.

அம்மையார் அவ்விண்டுவீச்சரத்தை வணங்கிப் பூசித்த பின்பு, கணங்கள் சூழப்பெற்றுள்ள திருமுன்றிலை அடைந்து, அங்குள்ள சிவகங்கையில் ஸ்நானஞ் செய்தார். அப்பொழுது அகத்தியேச்சரத்தைக் கண்ணுற்றனர்.

**அகத்தியேச்சர வரலாறு:** முன்னொருகாலத்திலே நாரத மகாமுனிவர் காஞ்சியம்பதியில் திருவேகம்பரநாதரை வணங்க விருப்பங்கொண்டவராய், கைலாயமலையினின்றும் வரும் பொழுது, விந்தமலையானது அசைந்து நகரக்கூடியதாகிய தோற்றங்கொண்டு, நாரதமுனிவர் முன்னே சென்று அர்க்கிய பாத்திய முதலிய உபசாரங்களைச் செய்தது. நாரத மகா முனிவர் விந்தமலையை நோக்கி, “விந்தமலையே! நான், உன்னைப்போல் பெரியவர்களை வணங்குபவர்களைக் கண்டதுமில்லை

கேட்டதுமில்லை; அப்படியிருந்தும், மேருமலையே சிறந்தது என்றும், நீ தாழ்வு உடையமலை என்றும், எல்லாத் தேவர்களும் உன்னையே மிக இழிவாகக் கூறுகின்றனர். ஆகையினால் யான் மிக வருத்தப்படுகின்றேன். இன்னும், நீ, விரைவில் அவ்விகழ்ச்சியை நிவிர்த்தி செய்துகொள்ளக் கடவாய்'' என்று கூறி அப்பால் போகின்றார்.

உடனே, விந்தமலை வானளாவ உயர்ந்து வளர்ந்து, சூரியன் முதலாகிய நவகோள்கள் நட்சத்திரங்கள் முதலியன வெல்லாம் செல்லும் வழியைத் தடைசெய்து விட்டது. இதனால், பகல் இரவு இல்லாமற் போய்விட்டது. காலவேறுபாடில்லாமல் உலகம் வருந்தியது.

தேவர்களெல்லோரும் பிரமதேவரிடம் சென்று நிகழ்ந்தவற்றைக் கூறினார்கள். பிரமதேவரும் தேவர்களோடு காசிக்குச் சென்று, அங்கே அகத்திய மகாமுனிவரைக் கண்டு, விந்தமலையின் கர்வத்தை அடக்கவேண்டும் என்று வேண்டினார். அகத்தியர் பிரமதேவனைப் பார்த்து, "பிரம தேவனே, இருதய கமலத்திலே வீற்றிருக்கும் இறைவனது நிலையை உணர்ந்து நெறிதவறாது நிற்றலாகிய யோகத்தில் நிற்பவர்கள் இறைவனது உருவத்தைப்பெற்று வாழும் பெரும்பாக்கியத்தைத் தருவது இக்காஞ்சியே. ஆதலால், இப்பதியை விட்டு நீங்கோம்'' என்றார். பின்பு, பிரமதேவர், அகத்திய மகாமுனிவரைப் பார்த்து, "முனிவரே! இஃது, தேவர்களுக்கு மட்டும் உரிய காரியமல்ல. மூவுலகத்திற்குமே பரிகாரமான ஒரு செயலாகும். அதுமட்டுமன்றி, தென்னாட்டிலே இக்காசியிலும் பார்க்கச் சிறந்ததாகக் கூறப்படும் காஞ்சி என்னும் ஒரு உத்தம தலம் உண்டு. இக்காசித்தலமோ, இங்கே இறப்பவர்களுக்குச் சிவசாரூபத்தைக் கொடுக்கின்றது. அந்தக் காஞ்சிப்பதியோ, நினைத்தவர்கள் எல்லோருக்குமே சாயுச்சிய முத்தியைக் கொடுக்கின்றது. அதனுடைய பெருமையை, ஆயிரம் நாவைப்படைத்த ஆதிசேடனாலுங்கூட எடுத்தியம்ப முடியாது. இறைவன் ஒருவனே, அறியவல்லன். அதுமட்டுமன்றி, விஷ்ணு திருப்பாற்கடல் கடைந்து அமுதத்தை அளித்

தது போல, தமிழ்மொழியையும் விளங்கச் செய்வீராக. ஆகையினால், விரைந்து செல்வீராக" என்று வேண்டினர்.

அகத்திய மகாமுனிவர் காஞ்சிப்பதியைத் தரிசிக்கத் தீர்மானித்து, தன் பத்தினியார் உலோபாமுத்திரையுடனும் ஆகாய வழியாகச் சென்றனர். விந்தமலையானது அகத்தியரைக் கண்டதும் நடுநடுங்கிப் பணிந்து, அவரை வணங்கி அர்ச்சிக்க, முனிவரும் அதனைப் புகழ்ந்து பாராட்டினர். மறுபடியும், முனிவரைப் பார்த்து வணங்கி, "தங்களுக்கு அடியேன் செய்யக்கூடிய பணி யாது?" என்று விந்தமலையானது வினவ, அகத்திய மகா முனிவரும், "யாம் தேவர்களின் வேண்டுதலின்படி தென் திசைக்குச் செல்கின்றோம். மறுபடியும் இங்கே யாம் வருமளவும் நீ இப்படியே இருக்க வேண்டும்." என்று தமது கைகளினால் விந்தமலையைப் பாதலத்தில் வீழ்த்திவிட்டுச் சென்றுவிட்டார்கள்.

அகத்திய மகாமுனிவரும் காஞ்சிப்பதியை அடைந்ததும், கைகளை உச்சிமேற் குவித்தவண்ணம், அங்குள்ள எல்லாச் சிவதலங்களையும் வணங்கியபின், திருவேகம்பத்தை அடைந்தார். அங்கேயுள்ள சிவகங்கையில் ஸ்நானஞ் செய்து, திருவெண்ணீறு முதலிய தரித்து, நமஸ்காரங்கள் செய்து, பேரானந்தத்தில் அமிழ்ந்தி, மூல இலிங்கத்திற்குத் தென்திசையில் அகத்தியேச்சரர் என்று தம்முடைய பெயரால் இலிங்கம் ஒன்று ஸ்தாபித்தும் பூசித்தனர். சிவபெருமானும் காட்சி கொடுத்தருளினர். ஆனந்தபரவசமேலீட்டினால் ஆடினர். பற்பல ஸ்தோத்திரங்களைச் சொல்லினர்.

1. இந்நாள் எனக்குப் பயப்பட்ட திப்பிறவி
இந்நாள் எனக்குப் பயப்பட்ட தியான்செய்தவம்
இந்நாள் எனக்குப் பயப்பட்ட தென்னறிவும்
இந்நாள் உனைக்காணப் பெற்றமையின் எங்கோவே.

2. எண்ணமெலாம் எய்தினேன் எண்ணமெலாம் எய்தினேன்
எண்ணமெலாம் எய்தினேன் எங்கள் பெருமானே
கண்ணனெடு நான்முகனுங் காணாத் துணையடிகள்
கண்ணெதிரே இற்றைநாள் யான்காணக் காட்டினையால்.

3. சங்கரா சம்புவே சங்கரா சம்புவே
சங்கரா சம்புவே சாம்ப சிவனேஎன்
அங்கண என்றென்றும் ஓலிட் டழைத்தரற்றும்
இங்கெனக்கு வாழ்நாள்கள் இவ்வாறே போகியவே.

4. குன்றாத அன்புனக்கே குன்றாத அன்புனக்கே
குன்றாத அன்புனக்கே மிக்கோங்கு கொள்கையது
என்றும்எனக் குண்டாக என்றும்எனக் குண்டாக
என்றும்எனக் குண்டாக என்றும் ஓர் பெற்றியனே.

(காஞ்சிப் புராணம்)

என்று இவ்வாறாகப் பாடினார். அதன் பின்பு அகத்திய னார் பல வரங்களை வேண்டுகின்றார்.

1. வையமிசைத் தோற்றம்முதல் சாங்காறும் மன்றஉனைத்
தெய்வமெனப் பேணாத் திருவிலிகள் என்குலத்தில்
எய்திஒரு ஞான்றும் பிறவற்க எய்துறினும்
வெய்தெனமற் றாங்கே விளிந்தொழிக எம்மானே.

2. ஆனே றுயர்த்தருளி அன்றினார் ஊரெரித்த
கோனே எனக்குக் குலதெய்வ மாம்பேற்றால்
யானே பெருஞ்செல்வன் யானே பெருஞ்செல்வன்
யானே பெருஞ்செல்வன் எல்லா உலகிலுமே.

3. சிறந்துன்னைத் தெய்வமெனக் கொள்ளாத சித்தை
பிறந்த குலம்பிறவா நின்றகுலம் பீளின்
உறந்த குலத்தும் உமைஒருபால் மேயாய்
மறந்தும் பிறவாத வாழ்வெனக்கு வேண்டுமால்.

4. ஏழைக் குறும்பின் இமையோர் தமக்கிரங்கிப்
பீழைக் கொடுவிடத்தை ஊண்டளித்த பேராளா
ஆழிப் பெருங்கருணை ஆரமுதே வெற்பீன்ற
மாழைப்பூங் கண்ணி மணாளா அடிபோற்றி.

(காஞ்சிப் புராணம்)

"தேவரீரே! உம்மைத்தெய்வமென்று மதியாதவர்கள் என் குலத்தில் பிறவாதிருக்க வேண்டும். அப்படிப் பிறந்து விட்

டால், பிறந்த அன்றே இறக்க அருளவேண்டும். யானும் அப்படிப்பட்டவர்களுடைய குலத்திலே பிறவாமலும் தடுத் தாட்கொண்டருள வேண்டும்'' என்று வேண்டினர்.

அகத்தியர், இன்னும், "எம்பெருமானே எல்லாத்தீவினை களையும் போக்குவதனால்; தமிழ் மொழியையும் சிறப்புறச் செய்து, எல்லா மக்கட்கும் பிரயோசனப்படக்கூடியதாக அடி யேன் புனிதமாக்கவும்; முப்பது எழுத்துக்களால் ஆக்கி, அப்படி இனிதாக்கிய தமிழ்த்துதிகளைத் தேவரீரே ஏற்றும்; அடியார்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுக்கக்கூடிய தாகவும்; அப்படியாகச் சிறப்புற்றோங்கிய தமிழ் மொழியிலே உள்ள மந்திரங்களெல்லாவற்றையும் அடியேன் உச்சரித்து, தேவரீருடைய தொண்டனாகவும் அடிமையாகவும் இவ்விடத் திலேயே வாழ்ந்திருக்கும்படியாகவும்; கிருபாநோக்கம் செய் தல் வேண்டும்'' என்று வேண்டினர். கண்ணுதற்பெருங்கட வுளும், அகத்திய மகாமுனிவர் வேண்டிய வரங்கள் எல்லா வற்றையும் அருளினர். இன்னும், அகத்திய மகாமுனிவரை உலகத்தின் தென்திசையில் இறைமைத் தன்மையுடனிருக்கும் படியாகவும் அருள்செய்து, அதன்பின்பு இலிங்கத்திலே மறைந்துவிட்டார்.

அகத்திய மகாமுனிவரும் தமிழ்மொழியை, அகத்தியம் என்னும் இலக்கண நூல் முறைப்படி உலகத்திற்கு விளக்கிச் சிறப்புறச் செய்தனர்.

இச்சந்தர்ப்பத்தில் தமிழ்ச்சிறப்பியல்புகள் பற்றிச் சிறிது ஆராய்வோம். ஸ்ரீமாதவச் சிவஞானயோகிகள் தமிழ்ச்சிறப் பியல்புகள்பற்றி ஓதியருளிய இரு பாக்களை இங்கு நோக்கு வோம்.

வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை உலகமெலாந் தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற்
கடல்வரைப்பின் இதன்பெருமை யாவரே கணித்தறிவார்! 1.

இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர் இயல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்தர் இசைபரப்பும்
இருமொழியும் அன்றவரே தழீஇயினுர் என்ருல்இவ்
இருமொழியும் நிகரென்னும் இதற்கையம் உளதேயோ! 2.

(காஞ்சிப் புராணம்)

அதாவது, இறைவனே, பாணினி என்னும் முனிவருக்கு ஆரியம் என்னும் வடமொழியைச் சிறப்புறச்செய்து மிளிரச் செய்யும் வண்ணமும்; அகத்திய மகாமுனிவருக்குத் தென் மொழியாகிய தமிழை அதாவது திராவிடத்தைச் சிறப்புறச் செய்து இலங்கச் செய்யும் வண்ணமும்; திருவருள்பாலித் தார் என்ருல், கடலாற் சூழப்பட்ட இந்த நிலவுலகின்கண்ணே யாவர் தமிழின் சிறப்பை அறியாதிருக்கின்ருர்! என்பதாம். எனவே இரண்டாவது பாட்டில், இருமொழிக்கும் முழுமுதற் கடவுளே முதற்குரவர் ஆகையிஞல் இவ்விருமொழிகளும் ஒன்றுக்கொன்று சமமானவை என்று வியந்தோதப்பட்டிருக் கின்றன. இப்படிப்பட்ட சமரசநிலையால், சிவஞானயோகிகள் தமிழின் சிறப்பை ஒருவாறு புலப்படுத்துகின்ருர்.

அதேவேளையில் தமிழ்மொழி எப்படிப்பட்ட நிலையில் இருந்து வளர்ந்தோங்கி வந்தது என்பதும் பெறப்படும்.

தமிழ்மொழி இடையிடையே என்னென்ன நிலையிலிருந்து பிற்காலத்திலும் வளர்ந்தோங்கியது என்பதையும் சிறிது கவனிப்போம்.

தமிழ்நாட்டிலே, தொல்காப்பியத்திற்குப் பல நூற்ருண்டு களுக்குப் பின்பு; அருட்டன்மையும், இயற்கை வனப்பும், கால எல்லை அளவிடப்படாத பழைமையும், அரிய பொருட் சுவை நிறைந்ததாய், சான்ருேர்களால் பேணிவளர்க்கப்பட்ட, இனிய தமிழ்மொழியை; ஆரியத்தோடு ஒப்புநோக்கும்போது ஆரியத்தைவிடப் பெரிதும் தாழ்ந்தது என்றும், ஆரியத்தி லிருந்து தமிழ் தோன்றியதெனவும், அர்த்தமற்ற தமிழ் என் றும், இழிகுலத்தோர் பாஷை என்றும்; பலவாருக இழித்துக் கூறும் செயல் தோன்றியது. இச்செயல் நாளுக்குநாள் வளர்ந்து வந்தது. இதின்வயப்பட்ட மக்கள் தமிழ்மொழியின்

மகிமையை உணராது இகழ்வாராயினர். இச்செயல் நன்ருக முற்றிய காலத்தில்; தொல்காப்பியம் முதலிய நூல்களை நன்கு ஆராய்ந்து, அவற்றின் அருமை பெருமைகளை அறிந்து உணர்ந்து அவ்வவற்றிற்ருேன்றிய இன்பத்தில் ஆழ்ந்த, பரஞ்சோதிமுனிவர், சிவஞானமுனிவர், இன்னும்பல பெரியார்கள், மக்களின் மடமைத்தன்மையை நினைந்து வருந்தி, இரக்கங் கொண்டவராய், அவர்களது இதயங்களிலே பதியக்கூடிய முறையிலே, தமிழ்மொழியின் அருமை பெருமைகளை விரித்துரைத்து, தமிழ்மொழியிலே மேன்மேலும் பற்றுண்டாகும்படி செய்து வந்தார்கள். அப்படி இவர்கள் நடத்துகொள்ளும் காலத்திலே மற்றும் மொழிகளைக் குறைகூறும் நிலையில் நிற்காமலும் ஒழுகிவந்தார்கள். ஆகையினுற்தான் சிவஞான முனிவரும் ஆரியத்தையும் திராவிடத்தையும் ஒரே சமநிலையில் வைத்தும், அதேவேளையில் தமிழைச் சிறப்பித்தும், சிறிது முன்பு கூறப்பட்ட இரு செய்யுட்களில் வியந்தோதியிருக்கின்ருர்.

இன்னும், வடமொழியிலே பல இலக்கணங்கள் தோன்றி மறைந்தபின்னர், பாணினி முனிவரால் பாணினீயம் என்னும் இலக்கணம் ஆக்கப்பெற்று, ஆரியத்திற்குப் பாணினீயமே முதல் நூலாகவும் கொள்ளப்படுகின்றது. அதேபோல குட முனிவரால் அதாவது அகத்திய முனிவரால் அகத்தியம் என்னும் இலக்கணம் ஆக்கப்பட்டது. இதுவுமன்றி அகத்தியமே தமிழ் முதல் நூலாகவும் கருதப்படுகின்றது.

இப்படியாக அகத்திய மகாமுனிவர், தமிழைச் சிறப்புற்ருேங்கச்செய்து, காஞ்சியிலே இருக்கின்ருர். அக்காலத்திலே இமயகிரியிலே சிவபெருமானுக்கும் பார்வதிதேவிக்கும் திருமணம் நிகழ்கின்றது. அவ்வைபவத்திற்கு உலகெங்கணுமுள்ள தேவர்கள், முனிவர்கள் முதலாயினேர் எல்லோரும் சென்றிருந்தமையினுல், பூமியின் வடபக்கம் தாழ்ந்தது. தென்பக்கம் உயர்ந்தது. தேவர்கள் எல்லோரும் ஏக்கமுற்று இறைவனை வேண்டுகின்றனர். சிவபெருமானும், "யாமாகிலும் அல்லது எம்மையொத்தவராயினும் பூமியின் தெற்குப் பக்கத்திற்குச்

சென்றால் பூமி சமமாகும்." என்றுகூறி, அகத்திய மகாமுனி வரை அழைத்துப் பூமியின் தெற்கிலுள்ள பொதியமலைக்கு ஏவினர். அகத்திய மகாமுனிவர் வணங்கி, சிவபெருமானைப் பார்த்து, "உலகத்திலுள்ளோர் யாபேரும் காண விருப்பங் கொண்ட தேவரீரது திருமண வைபவத்தில், அடியேனது சமுகத்தை விலக்குவது தகுமோ! இன்னும், அடியேனை எப் பொழுதும் காஞ்சிப்பதியில் இருக்கும்படியாக வரமருளினீர் கள். இப்பொழுது, பூமியின் தெற்குப்பக்கத்திலுள்ள பொதிய மலைக்குச் செல்லும்படியாக என்னை ஏவுதல் முறையோ!" என்று மிகுந்த அதிருப்தியுடன் கூறினர். சிவபெருமானும் அகத்திய மகாமுனிவரைப் பார்த்து, "எமது திருமண வைப வத்தை இங்கு நடைபெறுவதுபோல அங்கு உமக்கு காட்டு வோம். உம்மைத்திருப்திப்படுத்தும் நோக்கத்துடன் பாண்டி நாட்டிலே ஒரு காஞ்சியை அமைத்து, நமக்கு, அதுவும் இனிதாயிருக்கும்படி அருள்செய்வோம். அதுமட்டுமன்றி, உமக்கு வரமளித்த காஞ்சிப்பதியில், வருடாவருடம் பங்குனித் திங்களில் நடைபெறும் திருவிழாவின் இறுதியிலே உம்மை மகிழ்விக்கும்படி எமக்குத் திருமணம் நிகழ்த்தப்பெறும்," என்று திருவாய்மலர்ந்தருளினர். மகாமுனிவரும் அதைக் கேட்டு, இசைந்து, வணங்கி, உத்தரவுபெற்றுத் தம் பத்தினி யாராகிய உலோபாமுத்திரையுடன் சையமலையைச் சென்ற டைந்தார். அப்பொழுதே பூமி சமனுயிற்று. ஆயினும், சிவ பெருமானது கட்டளைக்கு ஏற்ப, அகத்திய மகாமுனிவர் பொதியமலையை அடைந்தார். அங்கிருந்து, அகத்தியர், நாள்தோறும், தென்காஞ்சி வடகாஞ்சியாகிய இரண்டு தலங்களை யும் சென்று வணங்கி, பைந்தமிழ்ப் பாமாலைகளால் இறை வனைப் போற்றி மகிழ்ந்து, தமிழ்மொழியை உலகெங்கும் பரவச்செய்துகொண்டு, பொதியமலையிலே தங்கியிருந்தனர். இத்துடன் இவ்வகத்தியேச்சர வரலாறு முடிவடைகின்றது.

இவ்வகத்தியேச்சர வரலாற்றிலிருந்து நாம் கற்றுக் கொள்வது என்ன என்பதைச் சிறிது கவனிப்போம்.

1. யாராகுதல் செருக்கடைதல், அவருக்கே அழிவை உண்டுபண்ணும்.

2. முறையாகத் தவமியற்றினல், இறைவனது அருளால், அரிய பெரிய செயல்களை நிறைவேற்றலாம்.

3. தமிழ்ச் சிறப்பும் சிறிதளவு அறிகின்றோம்.

பார்வதியம்மையார், அகத்தியேச்சரத்தைக் கண்டதும் வணங்கிப் பூசித்தபின்பு, அங்குள்ள மாமரத்தடிக்குச் சென்று, அங்கே இடப்பக்கத்திலுள்ள மத்தளமாதவேச்சரத்தைக் கண்ணுற்ருர்.

மத்தள மாதவேச்சரம்: இச்சிறு வரலாறும் யாவரும் அறியும்வண்ணம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதாவது, முன்பு கூறப்பட்ட விண்டுவீச்சர வரலாற்றில், விஷ்ணு இலக்குமி முதலாயினேர் திருத்தில்லையில் சிவபெருமானுடைய திருநடனக்காட்சியைக் கண்டு, பேரானந்தக்கடலில் ஆழ்ந் திருக்கும்போது, கணங்களெல்லாம் வாத்தியங்கள் முழங்க, விஷ்ணு படகம் முழக்கினர் என்றும், அதுமட்டுமல்லாமல், அப்படியாகப் படகம் முழக்கும் பணியை விஷ்ணுவுக்கே அருளினர் என்றும் கூறப்பட்டது. அதன்பின்பு திருமால் சிவபெருமானை வணங்கிப் பார்த்து, "தேவரீருடைய திருநடன வேளையில் அடியேன் மத்தளம் முழக்கவும் அருள்புரிதல் வேண்டும்." என்று வேண்டுகின்ருர். சிவபெருமானும் விஷ்ணு வைப்பார்த்து, "உன் விருப்பம் அப்படியாக இருக்குமாயின், நீ பழமைபோல் காஞ்சிப்பதியை அடைந்து, மத்தளமாத வேச்சரர் என்னும் பெயரால், சிவலிங்கம் ஸ்தாபித்து வணங்கி அர்ச்சித்தால், அங்கு பிலாகாசத்திற்குப் பக்கத்திலே எமது காப்பு நடனத் திருக்காட்சியைக் கொடுப்போம். இத்தில்லை யிலோ திருச்சிற்றம்பலம் ஒன்று மட்டுமே பரவெளியாகும். ஆனல், காஞ்சிப்பதியிலோ அதன் எல்லை முடிவுவரைக்கும் பரவெளியேயாம். ஆதலினலே, யாம் காஞ்சியம்பதியிலே காட்டும் காப்பு நடனத்திருக்காட்சிக்கு ஏற்ப நீ மத்தளம் முழக்குவாயாக" என்றருள் புரிந்தார். விஷ்ணுவும், அக் கட்டளையைச் சிரமேற்கொண்டு காஞ்சிப்பதியை அடைந்து மத்தளமாதவேச்சரர் என்னும் பெயரால் ஒரு இலிங்கம் ஸ்தாபித்து, வணங்கி அர்ச்சித்தார். அப்பொழுது சிவ

பெருமான் தமது காப்பு நடனத்திருக்காட்சியை காட்ட, விஷ்ணுவும் அக்காட்சியைக் கண்டு மத்தளம் முழக்கினர். இப்படியாக விஷ்ணு, சிவபெருமானின் காப்பு நடனத்தின்போது மத்தளம் முழக்கியதனால் மத்தளமாதவர் என்னும் சிறப்புப் பெயரும் பெற்றார். அன்றுதொடக்கம், காஞ்சியபம்தியில், விஷ்ணு மத்தளம் முழக்கச் சிவபெருமான் தமது காப்பு நடனத்திருக்காட்சியைக் கொடுத்தருளுகின்றார். அத்திருக் காட்சியைக் கண்டு களித்தவர்கள் எல்லோரும் முத்தியின் பத்தை அடைவார்கள். இத்துடன் இம்மத்தள மாதவேச்சர வரலாறு முடிவடைகின்றது.

இவ்வரலாற்றிலிருந்து நாம் எப்படிப்பட்ட உண்மையை விளங்குகின்றோம். அதாவது,

1. விண்டுவீச்சர வரலாற்றில் கூறியதுபோல, இதிலிருந்தும், விஷ்ணு சிவபெருமானுடைய அடியாராகின்றார் என்பது பெறப்படுகின்றது.

2. சிவபெருமான் உயிர்களின் நிமித்தம் திருநடனம் செய்தருளுவார்.

## இறைவி மகா மண்டபத்திலெழுந்தருளலும், தோழியர்கள் பணியும்:

இப்படியாகப் பார்வதியம்மையார் திருவேகம்பத்திலே வணங்கிப் பூசித்தபின்பு, தமது தோழியர்கள் இருபுறமும் சாமரமிரட்டல் முதலிய உபசாரங்களைச்செய்ய, மகா மண்டபத்தை அடைந்து, அங்கு சிறிது இளைப்பாறினர்.

பின்பு, அம்மையார், தோழிகளைப் பார்த்து, "தோழிமார்களே! யான் எமது இறைவருடைய திருக்கண்களைப் பொத்தியதற்காக, அவர் என்னைப் பார்த்து, "கழுவாயியற்றுக," என்றருளிய கட்டளையைச் சிரமேற்கொண்டு இவ்விடம் வந்துள்ளேன். ஆகையினால் யான் சிவபெருமானைப் பூசித்தற்கு வேண்டிய எல்லாவற்றையும் பூர்த்தியாகச் செய்துமுடிப்பீர்களாக," என்று பணித்தார். உடனே தோழிமார்கள், அம்மை

யாரைப் பார்த்து, "அம்மையே! யாங்கள் செய்யவேண்டிய பணிகளை விபரமாக இன்ன இன்ன என்று கூறியருளவேண்டும்," என்றார்கள். அம்மையாரும் அவர்களிலே சிலரை நோக்கி, "நீங்கள் மாவிலை, வில்வமிலை, முதலிய இலைவகைகளையும்; வாழை, மா, பலா முதலிய கனிவகைகளையும்; சந்தனம் புநுகு முதலிய வாசனைத்திரவியங்களையும், இரத்தினாபரணங்கள், ஆடைவகைகள், பஞ்சகௌவியம், பஞ்சாமிர்தம், அபிஷேகத்திரவியங்கள், அலங்காரங்கள், நிவேதனம், நந்தவனம், மலர்கள், மலர்மாலைகள், திருமஞ்சனதீர்த்தம்; பால், தேன், நெய், கரும்பிரசம், தயிர், கர்ப்பூரம், குங்குமம், கண்ணாடி, தீபங்கள், தூபங்கள், முதலியனவற்றையும் ஆயத்தஞ் செய்யுங்கள், இன்னும் (உமாபத்திரியை) வடக்கில் ஒரு கிணறும், (கீர்த்திமதி என்பாளைத்) தெற்கில் ஒரு கிணறும் அகழ்ந்து அவற்றை முறையே கங்கை யமுனை முதலிய நதிகளால் நிரப்புங்கள், சிலரைக் காஞ்சிக்கு மேற்கில் 'அம்பிகாவனமென்னும்' ஒரு நந்தவனத்தையும் செய்யுங்கள், மற்றும் பலரும் பல வேண்டிய பணிகளைச் செய்யுங்கள்" என்று ஏவினர்.

அம்மையார் ஏவியபடி, அவரவர்கள் எல்லாப்பணிகளையும் நிறைவுபெறச் செய்து முடித்தார்கள். அப்பொழுது சிலர் யாழ் முதலிய வாத்தியங்களுடன் பாடினர். சிலர் பரத நாட்டியம் ஆடினர்.

## இறைவி வழிபாடுசெய்ய எழுந்தருளி இறைவனைப் பூசித்தல்

இப்படியாக ஏவிய பணிகளெல்லாம் நிறைவுற்றபின், அம்மையார் மகாமண்டபத்தினின்றும் புறப்பட்டுச்சென்று, உமாபத்திரை என்னும் தடாகத்தில் விதிப்படி ஸ்நானஞ் செய்து, உடல் ஈரம் புலர்த்தி, இரண்டு பட்டாடைகள் உடுத்து, திருநீறு தரித்து, அநுட்டானம் முடித்து, பூசைக்கு வேண்டிய உபகரணங்கள் எல்லாவற்றையும் தோழியர்கள் ஏந்திவர, சங்கு முதலிய வாத்தியங்கள் ஒலிக்க, கின்னரர் கீதம் பாடவும், நாடகப் பெண்கள் நடிக்கவும், பிராமணர்கள் வேதத்தை

ஓதிக்கொண்டு வரவும், இரண்டாம் ஆவரணத்தை அடைந்து; தென்மேற்குத் திசையில் விநாயகரையும், வடமேற்கில் முருகனையும், பூசித்து; இடபதேவருள்ள இடத்தை அடைந்து, துவாரபாலகரைப் பூசித்து; அதன் பின்பு உள்ளே சென்று மாமரத்தடியில் எழுந்தருளியிருக்கும் ஏகம்பவாணரைக் கண்ணுற்ருர். கண்டதும், பேரானந்தங்கொண்டு, அடியற்ற மரம் போல் நிலத்தில் விழுந்து வணங்கி, ஆனந்த பரவசராய், பஞ்சாட்சர மந்திரத்தைச் செபித்து, சிரமேற் குவித்த கைகளுடன் பலமுறை வணங்கிச் சிவநாமோச்சாரணஞ் செய்தார். இன்னும் அம்மையார் தம்முடைய உடலை ஆனந்தக் கண்ணீர் தாரைதாரையாய் ஒழுகி நனைக்க, மெய் புளகங் கொள்ள, நெக்கு நெக்கு உருகி, மொழி குழற நின்று, ஞான பூசை செய்து, சிவானந்தமயமாய் விளங்கினுர். அப்பொழுது அம்மையார், "சந்த்ரசடாதரமூர்த்தியே! படைத்தற் தொழிலைத் தடுத்த பாவத்தை நீக்கும்பொருட்டு, யான் இன்று தேவரீரைப் பூசித்தற்கு முற்பட்டுள்ளேன். ஆதலினுல், தேவரீரே, முன்னின்று இடையூறுகள் ஏற்படாவண்ணம் அருள் புரிதல் வேண்டும்," என்று பிரார்த்தித்துச் சங்கற்பஞ்செய்து கொண்டு, பூதசுத்தி முதலிய ஐந்து வகைச் சுத்திகளைச் செய்து, சிவலிங்கத்தின் மீதுள்ள பழைய மலர்களை மாற்றி, ஆதாரசக்தி முதல் குடிலாசக்தியீருக அமைந்துள்ள ஆசனத்தின் மேல் எழுந்தருளியுள்ள சதாசிவமூர்த்தியாகிய சிவபெருமானை அருட்கண்ணுற் தரிசித்துப் போற்றி, மந்திரபூர்வமாகப் பாத்திய, ஆசமன, அர்க்கியங்களைக் கொடுத்து, மதுபருக்கம் ஊட்டி, மீண்டும் ஆசமனம் கொடுத்தும், நெய் பால் முதலிய சேர்த்த இனிய திருவமுதைப் படைத்தனர். அதன்பின்பு, எண்ணெய்க்காப்பு, மாக்காப்பு, நெல்லிக்காப்பு, மஞ்சட்காப்புமிட்டு; பஞ்சகௌவியம், பஞ்சாமிர்தம், எண்ணில் கோடி குடங்களில் நிறைத்து வைக்கப்பட்டுள்ள பால், தயிர், நெய், தேன், இளநீர், கருப்பஞ்சாறு, பழவகைகள், சந்தனம், சுத்தநீர் முதலியவற்றினுல் மஹாருத்திர மந்திரமோதி அபிஷேகஞ்செய்து, வஸ்திரத்தினுல் திருமேனியை ஒற்றி; அழகிய பட்டாடை, முப்புரிநூல், கத்தூரி, பச்சைக் கற்பூரம், முதலிய கலந்த நறுமணங்கமழும் சந்தனத்தை

அப்பி, ஆபரணங்களையும் மலர்மாலைகளையும் சாத்தி அலங்கரித்து, தூபதீபங்காட்டி, அறுசுவையூட்டப்பெற்ற திருவமுதை நிவேதித்து, ஆசமனுர்க்கியம் தாம்பூலம் முகவாசங்கள் முதலியனவும் கொடுத்து, அகிற்புகை காட்டி, தீபாராதனைகளையும் செய்து; பூசித்தல் நிறைவுபெறும் வேளையில் ஆலத்திசுற்றி, வலம்வந்து வணங்கி, ஸ்தோத்திரங்கள்பாடி, பஞ்சாக்ஷரத்தைச் செபித்தல் முதலிய பூஜைகளை நிறைவு பெறச் செய்து முடித்தார்.

இவ்வாறுக, அம்மையார் பூசையை முடித்துக்கொண்டு, மறுபடியும் பிலாகாசத்தை அடைந்து சிவாகம முறைப்படி முப்பத்திரண்டு தர்மங்களையும் வளர்த்துப் பூசித்து வந்தனர்.

## சிவபெருமான் கம்பாநதியைப் பெருக்கெடுத்து வரும்படியாக அருள்செய்தல்:

இவ்வண்ணமாக, அம்மையார் நாள்தோறும் சிவபெருமானைப் பூசித்து நெறிதவருது ஒழுகிவரும் காலத்தில், ஒரு நாள் வழக்கம்போல கம்பாநதியிலே மூழ்கி நித்திய நியமங்களை முடித்துக்கொண்டு சிவபெருமானைப் பூசிக்கும்போது, திருவேகம்பவாணர் அம்மையாருடைய பக்தித்திறனைக்கண்டு, ஒரு திருவிளையாட்டாக, அண்டத்தினுள்ளும் புறமும் உள்ள தீர்த்தங்களெல்லாவற்றையும் அங்கு ஒன்ருகத்திரண்டு வரும்படி கிருபா நோக்கங்கொண்டார். அவ்வண்ணமே அத்தீர்த்தங்கள் யாவும் ஒன்ருகத் திரண்டு கம்பாநதியிற் கலந்து, உலகப்பிரளய காலத்தில் சர்வசமுத்திரங்களும் ஒன்றுசேர்ந்தாற்போல, ஆகாயத்தை அளாவிப், பேரிரைச்சலுடன் பெருகி வந்தன. அம்மையாரும் தோழியர்களுடன், அப்பெரு வெள்ளம் பலபொருட்களையும் வாரிக்கொண்டு, பரந்து, பேரிரைச்சலோடு வருவதைக்கண்டு, "இப்பெருவெள்ளம் என்னகாரணத்தினுல் இப்படியாக வருகின்றது? யான்செய்யும் பூசைக்கு ஏதும் இடையூறு நேர்ந்துவிடுமோ?" என்று அஞ்சி இறைவனைத் தியானித்தார். அவ்வேளையில் தேவர்களும் அஞ்சி நடுங்கினுர்கள்.

இறைவி இறைவனைத் தழுவிக்கொள்ளுதலும், இறைவன் குழைதலும்: அப்பெருவெள்ளம் விரைந்து வந்து நெருங்கியது. தேவியாரும் திடுக்கிட்டு, மனங்கலங்கி, நெஞ்சம் பதைபதைத்து, "அந்தோ! இப்பெருவெள்ளமானது எம்பெருமான் மீதும் செல்லுமோ! இதற்கு யான் என்செய்வேன்!" என்று பலவாருக வாய்குழற இறைவன்மீதுள்ள அன்பு இன்னும் மேன்மேலும் பெருகியது. அம்மையாரும், அத்தூய உள்ளத்துடன், தம்முடைய திருமேனியானது அதிரவும், பொட்டிட்ட நெற்றியில் வியர்வை அரும்பவும், தனங்களில் முத்தாரங்கள் அசையவும்; மேகலாபரணங்கள், கிண்கிணி, நூபுரம், வளையல், கடகம் முதலிய அணிகள் ஒலிக்கவும்; எழுந்து சென்று ஒரு பச்சைப்பூங்கொடியானது சிவந்த பொன்மயமாகிய மலையை, அதிலேயும் இருமலைச்சிகரங்களை இருபக்கத்திற்கும் செல்லவிட்டுத் தழுவியதைப்போல; சிவலிங்கத்தின் அதாவது இறைவரது பீடத்தின்மேல் வலது முழந்தாளை ஊன்றிக்கொண்டு, சோதிசொரூபராகிய ஏகம்பவாணரைத் தமது திருக்கரங்களினால் தழுவிக்கொண்டார். தேவியார் இப்படியாக, முலைக்குவடுகளினாலும் வளையல்கள் அணிந்த கைகளாலும், இறைவரை ஆசைமேலீட்டினால், இறுகக் கட்டித்தழுவிக்கொண்டபோது; சிவபெருமானும் தம்முடைய திருமேனி குழைந்து முலைத்தழும்பையும் வளைத் தழும்பையும் அணிந்துகொண்டார். இதனை:-

"மணிமுலைக் குவட்டி னோடு மளைக்கையால் நெருங்கிப் புல்லித்
தணிவருங் காதல் விம்மக் காதலி தழுவ லோடும்
திணியிரு ளறுக்குஞ் சோதித் திருவுருக் குழைந்து காட்டி
யணிவளைத் தழும்பி னோடு முலைத்தழும் பணிந்தா ரையர்." 1

"வடவரை குழைந்ததோர் பவள மால்வரை
முடிவொடு முதலிலா மாவின் மூலத்து
மடநடை யிளங்கொடி வளைக்க ரத்தொடு
குடமுலைக் கம்மவோ குழைந்து மெல்கிற்றே." 2

(காஞ்சிப்புராணம்)

என்று ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் கூறியிருப்பதும்,

" மலைக்கு லக்கொடி பரிவுறு பயத்தான்
மாவின் மேவிய தேவர்நா யகரை
முலைக்கு வட்டொடு வளைக்கையா னெருக்கி
முறுகு காதலா லிறுகிடத் தழுவச்
சிலைத்த னித்திரு நுதறிரு முலைக்குஞ்
செந்த ளிர்க்கரங் களுக்குமெத் தெனவே
கொலைக்க ளிற்றுரி புனைந்ததம் மேனி
குழைந்து காட்டினார் விளைந்தகொள் கையினார். "

" மாது மெய்ப்பயன் கொடுப்பவே கொண்டு
வளைத் தழும்புடன் முலைச்சுவ டணிந்தார். "

என்று பெரியபுராணமும் மிக அழகாகக் கூறியிருத்தலையும் காணக்கூடியதாக இருக்கிறது. இன்னும் அபிராமிப் பட்டர் தாம் அருளிச்செய்த அபிராமியந்தாதியில்,

"தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரஞ் சாய்த்துமத
வெங்கட் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகநதச்
செங்கைக் கரும்பு மலருமெப் போதுமென் சிந்தையதே"

என்று ஓதியருளியிருப்பதும் கவனிக்கத்தக்கது. அதாவது:- 'பொன்மலையாகிய வில்லினைக் கையிலெடுத்து, அசுரர்களுடைய முப்புரங்களையும் அழித்து; மதம்பொருந்திய தறுகண்மையையுடைய யானையின் தோலை உரித்துப் போர்வையாக்கிக்கொண்ட; மகாவீரராகிய சிவபெருமானுடைய அருமைத் திருமேனியிலே, தமது தனங்களாகிய குரும்பைகளினாலே குறியீடு செய்தருளிய ஸ்ரீ காமாக்ஷியம்மையாகிய அபிராமி தேவியினது, செந்தாமரை மலர்போன்ற சிவந்த திருக்கரங்களிலுள்ள கரும்புவில்லும் புஷ்ப பாணமும் எந்நேரத்திலும் என்னுடைய தியானத்தில் உள்ளனவே.' என்று மிகச் சிறப்பாக ஸ்ரீ காமாக்ஷி அம்பிகையைத் துதித்துப் பாடியிருக்கின்றார்.

இதுமட்டுமல்லாமல், தேவிமானச பூசை அந்தாதியில் ஸ்ரீ காமாக்ஷி அம்பிகையைத் துதித்துப் பாடப்பட்ட ஒரு பாடலையும் இங்கு நோக்குவோம். அதாவது,

"விழைதரு தேவரு மேவரு நின்னடி வெல்கவெல்க!
தழைதரு மன்னுயிர் தாங்கு பராபரை யேசரணம்!
குழைதரு கொண்க னுடலிற் குறிசெயுங் கோதைநம!
மழைதரு வார்குழன் மாதங்கி போற்றி! வழுத்துவனே."

இப்படியாக முலையடையாளமும், வளையல்களினடையாளமும் உள்ள சிவலிங்கத்தை, இன்றும் நாம் எங்கள் கண்களினாலேயே, காஞ்சியம்பதியில் காணலாம்.

## தேவர்கள் முதலாயினோர் வந்து போற்றுதல்.

திருவேகம்பத்திலே அம்மையார் தழுவிக்கொள்ள, சிவபெருமான் தனத் தழும்பையும் வளைத்தழும்பையும் அணிந்துகொண்டமையால் உலகமெல்லாம் இன்பசாகரத்தில் ஆழ்ந்து மகிழ்ந்தன. இத் திருக்கோலக் காட்சியை, இந்திரன் முதலிய தேவர்களும், அசுரர்களும், அரி, பிரம்மா இருவரும் தங்கள் தங்கள் தேவியர்களுடனும்; நாரதர், வசிஷ்டர், அகத்தியர், முதலிய முனிவர்களும்; சப்த கன்னிகைகளும், திதி முதலாகவுள்ள தக்ஷ கன்னிகைகளும், யோகினிகள், அருந்ததி, உலோபா முத்திரை, அநசூயை, முதலிய பெண்மணிகளும்; பூதர், உருத்திரகணதிபர் ஆகிய யாவரும் வந்து கண்டு, பேரானந்தத்தில் அமிழ்ந்தி, ஆனந்த அருவி சொரிய, கைகளைச் சிரமேற் குவித்து வணங்கித் துதிசெய்தார்கள்.

## திருவேகம்பநாதர் காட்சிகொடுத்தலும், அம்மையார் துதித்தலும்.

"அந்த வேலையின் இறைவிதன் அணிவளைத் தழும்பு
சந்த மென்முலைச் சுவடுதோய் தனியுருப் பொலியச்
சுந்த ரந்திகழ் சுடரொளி இலிங்கத்தி னின்று
முந்து தோன்றினர் மூவருக் கறிவரு முதல்வர்."

(காஞ்சிப்புராணம்)

அப்பொழுது சிவபெருமான் தனத்தழும்பும் வளைத்தழும்பும் பொருந்தப்பெற்ற தோற்றத்துடன் இலிங்கத்தினின்றும் தோன்றி, கம்பா நதியானது உலகத்தை அழிக்கும்

படி வந்ததினுல், அதனுடைய வீறு குறையும்படியாக அதைத் தம்முடைய சடாமுடியின் மேல் சர்வதீர்த்தம் என்னும் பெயரினுல் அணிந்துகொண்டார். ஆகையினுல் சிவபெருமானுக்குக் கங்காதரமூர்த்தி என்ற திருநாமமும் சூட்டப்பட்டது. இதனை, "கங்காதரா லிங்கிதாம்" என்று ஸ்ரீமதப் ரௌடபக்த ரசிதத்திலேயுள்ள காஞ்சி காமாக்ஷி ஸ்தோத்திரத்திலும்,

"அந்யா விக்ரமதோ விஷ்ணோ: பாததோநிர் கதாநகா
கங்காத் வாராத் ப்ரதிச்யாப்திம் ஸங்கதாமாள வாந்திமே"
(தேவி ஸ்தோத்திர கதம்பம்)

என்று சிவரகஸியத்திலும் கூறப்பட்டிருக்கின்றது.

அதன் பின்பு, சிவபெருமானும் அம்மையாரைத் தழுவிக்கொண்டு, தேவியை நோக்கி, "நாயகீ! மனங்கலங்க வேண்டாம். நமது மணவாளத் திருக்கோலத்தைக் காண்க!" என்று கூறித் தமது மணவாளத் திருக்கோலக் காட்சியைக் கொடுத்தருளினுர்.

தேவியாரும் தழுவிய கைகளை நீக்கி, அத்திருக்கோலத்தைத் தரிசித்து, பூமியில் விழுந்து வணங்கி, பின் எழுந்து, சிரமேற் கைகள் குவித்தவண்ணம் நின்று, பேரானந்த மேலீட்டினுல் துதிக்கின்ருர். அதாவது,

"நெடியவன் பிரமன் காணு நின்மலக் கொழுந்தே போற்றி!
அடியனேற் கபயம் நல்கும் அருட்பெருங் கடலே போற்றி
படிமுதல் ஆறு ருகி வேறுமாம் பரனே போற்றி
கடிமலர்த் தனிமா நீழற் கடவுளே போற்றி போற்றி." 1.

"பெறலரும் பெரும்பே றின்று பெற்றனன் அடியேன் போற்றி
முறைமுறை உலக மெல்லாம் முகிழ்த்தளித் தழிப்பாய் போற்றி
அறைகழல் கறங்க மன்றில் ஐந்தொழில் நடித்தாய் போற்றி
நிறைமலர்த் தனிமா நீழல் நித்தனே போற்றி போற்றி." 2.

"தரைபுனல் இரவி இந்து தழல்உயிர் வளிவான் என்று
உரைபெறு வடிவோர் எட்டும் உடையனே போற்றி போற்றி
வரையெழும் பரிதி செந்தீ மதிஅமை விழியாய் போற்றி
விரைமலர்த் தனிமா நீழல் வித்தகா போற்றி போற்றி." 3.

"கறைமணி மிடற்றுய் போற்றி கண்ணினுள் மணியே போற்றி
மறவியின் வழிபட் டோர்க்கும் வழங்குபே ரருளாய் போற்றி
நிறைபரஞ் சுடரே போற்றி நெஞ்சக விளக்கே போற்றி
மறைமுதல் தனிமா நீழல் வள்ளலே போற்றி போற்றி." 4.

"முன்னுறு பொருள்கட் கெல்லாம் முற்படு பழையாய் போற்றி
பின்னுறு பொருள்கட் கெல்லாம் பிற்படு புதியாய் போற்றி
புன்மதி யாளர் தேருப் பூரண முதலே போற்றி
சின்மயத் திருவே கம்ப சிவசிவ போற்றி போற்றி."

(காஞ்சிப் புராணம்)

## அம்பிகைக்கு இறைவன் திருவருள் செய்தல்

அம்மையார் இறைவன்மேல் துதிகளைப் பாடிய பின்பு, சிவபெருமானுக்கு அம்பிகைமேல் பேரன்பு உண்டாயிற்று. அவ்வேளையில் சிவபெருமான் தேவியைப் பார்த்து, "காளீ! நாமிருவரும் ஒருவரை ஒருவர் வேறல்லோம்; சந்திரனில் நிலவுபோல ஒருவரை ஒருவர் விட்டுப்பிரியாத நிலையில் விளங்குவோமாக; அப்படியிருந்தபோதிலும், இந்த உலகமானது உய்வடையும்படி நீ இவ்வழிபாட்டைச் செய்தாய்; இன்னும் உனக்கு வேண்டுவனவற்றைக் கூறுக." என்று கேட்பாராயினர்.

அம்பிகையும் சிவபெருமானைப் பார்த்து, "எம்பெருமானே! இக்காஞ்சியம்பதியோ சிவலோகத்திலும் இனியது. ஆகையினுல் இங்கு வாழ்பவர்கள் எல்லோரும் முத்தியின் பத்தை அடைவார்கள். யான் இப்பதியில் அறிந்தோ அறியாமலோ செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கப்பெற்று, தவமானது மேன்மேலும் பெருகி, அறம் முதலாக வீடுபேருகவுள்ள பயனை அடையவும் அருள்புரியவேண்டும்." என்று, வேண்டுதல் செய்தார். சிவபெருமான் தேவியைப் பார்த்து, "அம்பிகை! எம்மிடத்தும் எம்மடியார்களிடத்தும் செய்யும் தவறுகளைத் தவிர்ந்த, ஏனைய பிழைகள் எல்லாம் நீ விரும்பியது போலவே நீங்கப்பெற்றன. தவமானது மேன்மேலும் பெருகி, அறம் பொருள் இன்பம் வீடு ஆகியன உண்டாகவும்

அருள்செய்தோம். இன்னும் வேண்டுவன யாவை?" என்று வினவினர்.

அம்பிகை வணங்கி, "பெருமானே! முன்பு மந்திரகிரியிலே என்னைக் 'காளீ' என்றழைத்தீர்கள். அவ்வோசை என் செவிப் படாததுபோல இருந்தேன். இன்னும் அதேபோல என்னை அழைத்தீர்கள். ஆதலினால், எனது கரிய நிறத்தை நீக்கிக் கவுர நிறமாக (அதாவது பொன் நிறமாக) விளங்கச் செய்யவேண்டும்." என்று விண்ணப்பித்தார். சிவபெருமான் புன்முறுவல்செய்து, "அம்மையே! இவ்வுலகத்திலே அசுரர்களால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்பொருட்டு உன்னைக் காளீ! என்றழைத்தோம். இக்கணமே, உன்னுடைய கரிய நிறம் நீங்கப்பெற்றுக் கவுர நிறம் அடைவாயாக. சும்பன், நிசும்பன் என்னும் அசுரர்களைக் கொன்றொழித்தற்காக அக் கரிய சட்டையிலிருந்து 'கவுசிகி' என்னும் திருநாமமுடைய துர்க்காதேவி தோன்றுவதைக் காண்பாயாக." என்றருள் செய்தார். தேவியும் அப்படியே, பாம்பானது தோலுரிப்பதைப் போல கரியநிறமுள்ள சட்டை நீங்கப்பெற்று, கவுரநிறம் அடைந்து தேவர்கள் மலர்மாரி பொழியும் சமயத்தில் சிவபெருமானை வணங்கி, "தேவரீர்! உங்கள் திருவருளால் காளநிறமானது நீங்கப்பெற்று, கௌரி என விளங்குகின்றேனாகையால், முன்பு இமயகிரியிலே நடந்தேறியதுபோல, இன்று இக் காஞ்சியம்பதியிலும் எமக்குத் திருமணம் நடந்தேற ஆவலுடையேன். உருத்திரர் முதலாயினோர் எம்மைக்காண விருப்பமுற்றவர்களாய் இங்கு வந்து கூடியிருக்கின்றார்கள். அத்துடன் இத்திருமணமானது 'கௌரி திருக்கல்யாணம்' என வழங்கல் வேண்டும். இன்னும், யான் ஐந்து வயதுடைய கன்னிப்பெண்ணாக இருப்பதனால், ஐந்து வயதுடைய கன்னிப் பெண்கள் யாவரும் 'கௌரியர்' என்றழைக்கப்படல் வேண்டும். சிவப்பிராமணர்களுக்குக் கௌரியர்களை மணஞ்செய்து கொடுத்தவர்கள் அனைவரும் சிவலோகத்தை அடையத் திருவருள் நோக்கஞ் செய்தருளவேண்டும்." என்று வேண்டுதல் செய்தார்.

சிவபெருமானும் அம்பிகையைப் பார்த்து, "ஆண்டு தோறும், காஞ்சியம்பதியிலே, பங்குனி உத்தரத்திருவிழாவின் போது எமக்குத் திருக்கல்யாணம் நடந்தேறக் காண்பாயாக, என்று அகத்திய மகாமுனிவருக்கு, முன்பு ஒரு வரங்கொடுத் திருக்கின்றோம். அதைப்போலவே, வருடந்தோறும், எமக்கு இக்காஞ்சியம்பதியிலே பங்குனி உத்தரத்திருநாளிலே, திருக் கல்யாணம் நடந்தேறவேண்டும். அத்திருக்கல்யாண வைப வத்திலே பிராமணக் கன்னியர்கள் உனக்குரிய பணிகளைச் செய்வார்கள். இன்னும் நீ முப்பத்திரண்டு தருமங்களையும் நிறைவுற வளர்ப்பதற்கு, வருடந்தோறும் இரண்டு நாழி நெல்லை வித்தாகத் தந்தருள்வோம். ஆகையினால் ஆன்மாக் கள் எல்லாம் இகபரங்களை அடைந்து தழைத்தோங்குக." என்று திருவருள்பாலித்தார்.

இத்துடன், சிவபெருமான், அம்பிகையின் ஆவல் நிறைவு பெறவும், அகத்திய மகாமுனிவரினது தவமானது உச்சநிலை யை அடையவும், உலகமெல்லாம் வாழ்வு பெறவும், தமது திருக்கல்யாணத்திலே திருவுள்ளத்தைச் செலுத்தினர்.

## கௌரி திருக்கல்யாணம்

சிவபெருமான் தமது திருக்கல்யாண வைபவத்தை முன் னிட்டு, விஷ்ணுவை நோக்கி, "எமது திருக்கல்யாணத்திற் குரிய ஆயத்தங்களைச் செய்க" என்று ஆஞ்ஞாபித்தும், அவர் மனமுவந்து, திருக்கல்யாணத்திற்கு வேண்டிய பொருட்களைச் சேகரிக்கும் வண்ணம் தேவர்களை ஏவினர். இன்னும் விஷ்ணு நகரமெங்கும் முரசறைவித்தார், தேவகம்மியர்களைக் கல்யாண மண்டபம் அழகுபட அமைக்கும்படி ஏவினர். அவர்களும் பொன்னினால் நிலமும் அமைத்து, பவளத்தினால் ஆயிரம் தூண்களும் கட்டி, நவரத்தினங்கள் பதிக்கப்பெற்ற பலகை களினால் மேற்பரப்பை மூடி, பளிங்கினால் சுவரும்கட்டி, பற் பல அலங்காரங்கள் செய்து; வாழை, கமுகு, கரும்பு முதலிய வைகளை நாட்டி ஓமகுண்டம் அமைத்து, கல்யாண மண்ட பத்தைப் பூர்த்திசெய்தார்கள். அதன் நடுவிலே சிவபெரு மானும் கௌரி அம்மையாரும் அமர்ந்தருளுவதற்காக ஒரு

இரத்தினசனத்தையும் அமைத்தார்கள். நகர மக்கள் எல்லோரும் முரசொலியைக் கேட்டு அகமிக மகிழ்ந்து, வீதிகள் எல்லாவற்றையும் சுத்தஞ்செய்து பனிநீர் தெளித்து, பற்பல பந்தல்கள் அமைத்து, தோரணங்கள் கட்டி, பூரண கும்பங்கள் தீபங்கள் வைத்து, நகரை அலங்காரஞ் செய்தார்கள். தேவர்கள், திருக்கல்யாணத்திற்கு வேண்டிய பொருள்கள் எல்லாவற்றையும் ஆயத்தஞ்செய்கின்றார்கள். இந்தவேளையில்,

## விஷ்ணு திருவிழாத் தொடங்குவித்தல்

''கப்ப நாயகன் திருவருள் பெற்றுவெண் கதிர்வளைக் கரந்தோன்றல்,
அம்பு யத்தவன் முனிவரர் தம்மொடும் அணிபெறு நன்னாளால்,
செம்பொன் மாமணிப் பாலிகை முளைவித்திச் சினவிடைக் கொடியேற்றி,
எம்பி ரான்மலை மாதுடன் உலாத்தருந் திருவிழா எழுவித்தான்''

(காஞ்சிப் புராணம்)

அதாவது, விஷ்ணு, சிவபெருமானுடைய ஏவலால் திருவேகம்பத்திலே இடபக்கொடியேற்றித் திருவிழாவைத் தொடக்குவித்தனர். ஒன்பதுநாள் திருவிழா முடிந்த பின்பு பத்தாம் நாளாகிய பங்குனி உத்தரத்தில் சிவபெருமான் திருக்கல்யாண வைபவத்தை நிகழ்த்துவதற்காக, திருமஞ்சன நீராடச் சென்றார். விஷ்ணுவும் சிவபெருமானுடைய திருமேனியைத் தீண்டி, திருமஞ்சன நீராட்டினார். அவரது திருமேனியிலுள்ள ஈரத்தைத் திருவொற்றாடையினால் புலர்த்தினார். பின்பு பொன்னாடை அணிவித்தார். அவரது திருமேனியில் திருவெண்ணீறு, சந்தனம் முதலிய தரிக்கச் செய்தார், சிலம்பு, அரைநாண், மோதிரம், குழை முதலிய ஆபரணங்களை அணிவித்தார். சிரசின்மேல், நவரத்தினத்தால் இழைக்கப்பட்ட முடியைக்கவித்து அழகுபெறச் செய்தார். இப்படியாகத் திருமணக்கோலங்கொண்ட சிவபெருமான் எழுந்து முன்செல்ல, பெண்கள் அட்டமங்கலங்கள் தாங்கிப்போற்ற, தமக்கென இடப்பட்டிருந்த ஆசனத்தை அடைந்து, உருத்திரர் முதலாயினோரை அவரவர்க்கென இடப்பட்டிருந்த ஆசனத்திலே அமரும்படியாகக் கடைக்கண் பார்வைகொடுத்து, அமர்ந்தருளினார்.

அதன் பின்பு விஷ்ணு மஹாலெட்சுமியை நோக்கி, "இலக்குமிதேவி! அம்பிகையைத் திருமணக்கோலஞ் செய்து அழைத்து வருவாயாக," என்று ஆஞ்ஞாபித்தார். இலக்குமி தேவியும் பேரானந்தத்துடன், அம்பிகையைத் திருமஞ்சன நீராட்டும் பொருட்டு, திருமஞ்சனசாலைக்கு அழைத்துச் சென்றுர். அங்கே அம்மையாரது கூந்தலுக்கு நெய்யை அள்ளிச்சாத்தி, நெல்லி, மஞ்சள் முதலிய விழுதுகளை இட்டு, பனிநீராட்டினுர். அம்மையாரது திருமேனியிலுள்ள ஈரத்தை ஒற்றுடையால் புலத்தினுர். பட்டாடையணிவித்தார். அதன் பின்பு யானைத் தந்தத்தினுல் செய்யப்பட்ட சீப்பினுல் கூந்தலைச்சீவி, அகில் சந்தனம் முதலிய நறுமணப் புகைகளை யூட்டினுர். சீதேவி, நெற்றிப்பட்டம், தோடு, மூக்கணி, கண்டசரம், கடகம், அங்கதம், மோதிரம், மேகலை, சிலம்பு முதலிய ஆபரணங்களை அணிவித்தார். பூமாலை சூட்டினுர். சிந்தூரத் திலகம் இட்டார். கண்களுக்கு மைதீட்டினுர். திருநீறு, சந்தனம், மகரந்தப்பொடி முதலிய தரிக்கச்செய்து, விசிறிகளினுல் விசிறினுர்கள். அம்பிகையை, இலக்குமி தனக்கு நிகராக அழகுபெற அலங்கரித்தார். அதன்பின்னர், அம்பிகை தேவ மாதர்கள் மங்கலம் பாட இலக்குமியுடன் கையோடு கை கோர்த்து, தேவர்கள் மலர்மாரி பொழிய,

### அம்பிகை இறைவன் பக்கத்திலே அமர்தல்

"பாவிய ஆடைமேல் நடந்து பைப்பய
மாவணி மணவினை மண்ட பத்திடைப்
பூவணை மிசைப்பொலி புனிதன் பாங்கரின்
ஓவியக் கொழுந்தென உற்று வைகினுள்."

(காஞ்சிப் புராணம்)

அதாவது, நிலத்தில் விரிக்கப்பட்டிருந்த ஆடையின் மேல் மெல்ல நடந்துசென்று, சிவபெருமானுடைய பக்கத்திலே அமர்ந்தருளினுர்.

## திருமண நிகழ்ச்சி

முதலாவதாக,

"திருத்தகும் அணைமேல் அண்ணல் அணங்குடன் திகழ நோக்கி
உருத்திரர் முதலோர் யாருந் தொழுதெழுந் துவகை பூத்தார்
மருத்துழாய் அலங்கல் மார்பன் மலரடி விளக்கப் புக்கான்
பெருத்தபல் அண்டம் ஒன்றுய்ப் பிளந்தென இயங்கள் ஆர்த்த."
(காஞ்சிப் புராணம்)

அதாவது, சிவபெருமானும் அம்பிகையும் இரத்தினு சனத்தில் ஒருங்கு சேர்ந்து வீற்றிருத்தல் கண்டு, உருத்திரர் முதலாயினோர் எல்லோரும் வணங்கிப் பேரானந்தமடைந் தனர். அவ்வேளையில், பலவகை வாத்தியங்கள் ஒலிக்கவும்,

"பொலம்புனை கரகத் திம்பால் பூமகள் வணங்கி வார்ப்ப
வலம்புரிக் கரத்தோன் ஐயன் மலரடி விளக்கிப் போற்றி
இலங்கொளிப் பட்டால் ஈரம் மெல்லெனப் புலர்த்தி ஏந்தும்
அலங்கொளிப் பாத தீர்த்தம் பருகினன் ஆர்வங் கூர."
(காஞ்சிப் புராணம்)

அதாவது, மஹாலெட்சுமி பாலை வார்க்க; விஷ்ணு, சிவபெருமானுடைய திருவடிகளை விளக்கி, அத்தீர்த்தத்தை மகிழ்ச்சியுடன் பருகினார். அதன் பின்பு,

"கன்னல்நெய் கனிபால் இன்ன கமழ்மதுப் பருக்கம் நல்கி
என்னை ஆளுடைய கோமான் ஏடவிழ் கமலச் செங்கை
தன்மிசை உலகம் ஈன்ற தனிமுதற் பிராட்டி யான
கன்னி கை வைத்து நீர்பெய் தளித்தனன் கமலக் கண்ணன்."
(காஞ்சிப்புராணம்)

அதாவது, விஷ்ணு; சர்க்கரை, பால், நெய் முதலிய கலந்து தயாரிக்கப்பட்ட மதுபருக்கத்தைக் கொடுத்து, சிவ பெருமானுடைய திருக்கைகள்மேல் உலகமாதாவாகிய அம்பி கையின் திருக்கைகளை வைத்துத் தாரைவார்த்தளித்தனர். அந்தவேளையில்,

"ஆர்த்தன பணிலங்கள் ஆர்த்த துந்துமி
ஆர்த்தன பல்லியம் ஆர்த்த மங்கலம்
ஆர்த்தன நான்மறை ஆர்த்த ஆகமம்
ஆர்த்தன பல்கலை ஆர்த்த வாழ்த்தொலி."

(காஞ்சிப் புராணம்)

அதாவது; சங்குகள், தேவதுந்துபிகள் முதலிய வாத்தியங்கள் முழக்கஞ்செய்தன. இவைகளுக்கு மேலாக, வாழ்த்தொலிகளும் முழங்கின இன்னும்,

"பொழிந்தனர் வானவர் கற்பப் பூமழை
வழிந்தன பாடலின் மதுரத் தேமழை
இழிந்தன அடியவர் இணைக்க ணீர்மழை
அழிந்தன வினையெலாம் அனைய காலையின்."

(காஞ்சிப் புராணம்)

அதாவது, தேவர்களெல்லாரும் கற்பக மலரை மழை போலச் சொரிந்தார்கள். இனிய கீதங்கள் எங்கும் மழை வெள்ளம்போல நிறைந்து விளங்கின. அடியார்களது கண்களினின்றும், கண்ணீர் தாரைதாரையாக மழைபோலச் சொரிந்தன. இப்படியாக நிகழ்ச்சிகள் நடந்தேறிக்கொண்டிருக்கும் வேளையில்,

"பங்கயக் கிழவனைப் பகர்ந்த நூல்முறை
செங்கனல் வளர்ப்பஅங் கருளிச் சேவுடை
அங்கணன் மலைமகள் மிடற்றில் ஆரருள்
மங்கல நாணினை வயங்கச் சாத்தினான்."

(காஞ்சிப்புராணம்)

அதாவது, சிவபெருமான் பிரமதேவனைப் பார்த்து வேதாகம முறைப்படி ஓமாக்கினி வளர்க்கும்படி வேண்டிக்கொண்டு, அம்பிகையின் கழுத்திலே, மங்கல நாணினை விளங்கக் கட்டியருளினார். அதன்பின்பு பிரமதேவன்,

"முண்டகக் கடவுளும் முதல்வன் ஆணைஉட்
கொண்டுவே தாகமக் குறிவ ழாவகை
மண்டிய கொழுங்கனல் வளர்த்து வாசநெய்
மொண்டு தூய்க் கடிவினை முற்றச் செய்தனன்."

(காஞ்சிப்புராணம்)

அதாவது, பிரமதேவன் சிவபெருமானுடைய கட்டளையைச் சிரமேற்கொண்டு, வேதாகம விதிகளில் உரைக்கப்பட்ட வண்ணம் ஓமாக்கினி முதலிய சடங்குக் கிரியைகளை எல்லாம் நிறைவுறச் செய்து முடித்தனன்.

இத்துடன் 'கௌரி திருமணம்' இனிது நிறைவேறுகின்றது.

"திரும ணத்திறங் கண்டவர் யாவருஞ் செழுந்தேன்
பருகு வண்டென ஆனந்த வெள்ளத்திற் படிந்தார்
உருகி ஏத்தினர் கையிணை உச்சியிற் குவித்தார்
இருக ணீர்மழைத் தாரையின் மூழ்கிஇன் புற்றார்."

(காஞ்சிப்புராணம்)

அதாவது, திருமணத்தைக் கண்டவர்கள் எல்லோரும், தேனை உண்டு களித்திருந்த வண்டுகளைப்போல பேரானந்த வெள்ளத்தில் அமிழ்ந்தி, நெஞ்சு உருகி, கைகளை உச்சிமேற் குவித்து, தண்ணீர் தாரைதாரையாக ஒழுக, வணங்கித் துதித்தார்கள்.

இமாசலத்தில் நடந்தேறிய பார்வதி திருமணத்திலும் பார்க்க, காஞ்சிப்பதியிலுள்ள திருவேகம்பத்திலே நடந்தேறிய 'கௌரி திருமணம்' ஒரு அரிய விஷேஷத்தை உடையது. அது என்னவென்றால், அம்பிகை கவுர நிறமடைந்தமையும், சிவபிரான்மேல் முலைத்தழும்பும் வளைத்தழும்பும் பதியப் பெற்றமையும் ஆகும். இவ்விஷேஷத்தினாலும் எல்லோரும் பெரு மகிழ்ச்சி அடைந்தார்கள்.

அதன்பின்பு திருவேகம்பநாதரும் காமாஷி அம்பிகையும் விடைமீதேறி, வீதிவழியாக திருவுலாப் போந்தருளினார்கள். அவ்வேளையில் பானுகம்பன் முதலியோர் பல வாத்தியங்களை முழக்க தேவர்கள் பூமழை பொழிய, சப்தகன்னியர்கள் முதலிய மாதர்கள், மற்றுமெல்லோரும் புடைசூழ, இறைவனும் இறைவியும் காட்சிகொடுத்தார்கள்.

## திருவேகம்பநாதர் தேவர்கட்கு வரமருளல்

"மீண்டு கோயிலி னுள்ளெழுந் தருளிமெல் லணைமேல்
மாண்ட மெல்லியற் பனிவரை அணங்கொடும் வைகி
ஆண்டு நின்றமா லயன்முதல் யாரையும் நோக்கி
ஈண்டு நீர்வரம் வேண்டுவ கொண்மின்என் றிசைத்தான்."

(காஞ்சிப்புராணம்)

அதாவது, திருவேகம்பநாதர் காமாக்ஷி அம்பிகையுடன், திருக்கோயிலினுள்ளே சென்று, பூவணைமேல் எழுந்தருளி யிருந்து; விஷ்ணு, பிரமா முதலிய தேவர்கள் எல்லோரையும் பார்த்து; "உங்களுக்கு வேண்டிய வரங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்," என்றார். இப்படியாகக் கூறியதும் எல்லோ ரும் வணங்கி, "தேவரீர்காள்! நீங்கள் இருவரும் உலகத்திலே திருமணஞ்செய்துகொள்ளும் இடங்கள்தோறும் எழுந்தருளி யிருந்து திருவருள் புரியவேண்டும்," என்று வேண்டுதல் செய்தார்கள். திருவேகம்பநாதரும் உடனே, தேவர்களெல் லோரையும் பார்த்து, "நீங்கள் வேண்டிய வரத்தை அளித் தோம்; இன்னும் நீங்கள் இக்காஞ்சிப்பதியைக் காத்து, இவ்வாறு இருப்பீர்களாக," என்று கூறியருளினர். தேவர்கள் எல்லோரும் அவர் கூறியருளியபடியே காஞ்சிப்பதியில் தங்கி யிருந்தனர்.

இஃது இப்படியிருக்க அம்பிகையின் கூற்றிலிருந்து தோன்றிய 'கவுசிகி' என்னும் திருநாமமுடைய துர்க்காதேவி, திருவேகம்பநாதரைப்பார்த்து, "தேவரீர்! என்னையும் மணந்து கொள்ளவேண்டும்," என்று வேண்டினர். திருவேகம்பநாத ரும் கவுசிகியை மணந்து, "நீ இக்கச்சியைக் காவல்புரிக" என்று திருவாய் மலர்ந்தருளினர். கவுசிகியும் அதன்படி, கச்சிப்பதியைக் காத்து வருவாளாயினள். இதனால், "காஞ்சிப் பதி" கன்னி காப்பு என்றும் கூறப்படுகின்றது. இப்படி யிருக்கும் நாளில், அதாவது கவுசிகி கச்சிப்பதியைக் காத்து ஈஸ்வரரை வழிபட்டுக்கொண்டு இருக்கும் காலத்தில், சும்பன் நிசும்பன் என்று கூறப்படும் இரண்டு அசுரர்கள் தேவர் களைத் துன்பறுத்தினமையால், பிரமதேவன் அங்கு வந்து

திருவேகம்பநாதரைப் பார்த்து, "தேவரீர்! சும்பன், நிசும்பன் என்று கூறப்படும் விந்தமலையிலிருக்கும் இரண்டு அசுரர்கள் எமக்குப் பெருந்துன்பங்களை விளைவிக்கின்றார்கள். எங்களால் இனி அத்துன்பங்களைப் பொறுக்கமுடியாது. தேவரீரே இவர்களை ஒழித்தருளல் வேண்டும்," என்று வேண்டினர். உடனே, திருவேகம்பநாதர், கவுசிகியை நோக்கி, "கௌசிகி! விந்தமலையிலே இருந்து தேவர்களைத் துன்புறுத்தும் சும்பன் நிசும்பன் என்னும் அசுரர்களை அழித்து வருவாயாக," என்று கூறித் திருவருள் பாலித்து, அனுப்பி வைத்தார். கவுசிகியும் அக்கட்டளைப்படியே விந்தமலைக்குச் சென்று அவ்வசுரர்களை அழித்துவிட்டு, அதன்பின்பு மீண்டும் காஞ்சிப்பதியை அடைந்து வாழ்ந்திருந்தார்.

---

காஞ்சிப்பதியிலே வருடாவருடம் நடந்தேறும் இத்திருமண வைபவத்தைக் கண்குளிரக் கண்டவர்களும், காதாரக் கேட்டவர்களும் அகங்குளிர நினைத்தவர்களும், பேரின்ப சுகத்தை அடைவார்கள்.

---

இக்கௌரி திருமணத்திலிருந்து நாம் அறியக்கூடியது என்னவெனில், "ஆன்மாக்கள் பேரின்பசுகங்களை அடைதற் பொருட்டு, இறைவனும் இறைவியும் திருக்கல்யாணம் நிகழ்த்திக்கொள்கின்றார்கள்," என்பதாம்.

# கௌரி அம்மை தோத்திரம்

இராகம்: ஆரபி　　　　　　　　　　　　　　　　தாளம்: ஆதி

பல்லவி

கௌரியை மறவாதீர் — உங்கள்
கடமையில் தவருதீர் — வண்ணைப்பதிக் (கௌரி)

அநுபல்லவி

எழிலுடனே என்றும் எங்கள் குல தெய்வமாய்
வண்ணை காமாக்ஷியென விளங்கி அருள் செய்யும் (கௌரி)

சரணம்

ஈழமணி நாட்டிலுள்ள, மாதோட்ட மெனும்நகர்
வாழவைத்த கேதீஸ்வர, அம்மை கௌரி யேயாகும் (கௌரி)

அண்ணமலையி லென்றும், உண்ணமுலையாய் நிற்பாள்
அம்பலத்தாடல் காண அம்மை சிவ காமியாகும் (கௌரி)

ஆலவாய்ப் பதிதனில், அங்கயற்கண்ணி யாவாள்
ஆவலுடன் சேவிப்போரை, சிவகதி சேரவைக்கும் (கௌரி)

காஞ்சிமா க்ஷேத்திரத்தில், காமாக்ஷியம்மை யாவாள்
வாஞ்சையுடன் வந்திப்போர்க்கு, வரமருள் தேவி யாகும்
(கௌரி)

குற்ருலத் தலந்தனில், குழல்வாய்மொழி யுமையாய்
உற்ருர்பெற்ரு ரில்லார்க்கு, உறுதுணை தானே யாகும் (கௌரி)

*(ஆத்மஜோதி வெளியீடாகிய
திருக்கேதீஸ்வர கௌரியம்மை தோத்திரத்தைப்
பின்பற்றிச் சிறிய மாற்றங்களுடன் ஆக்கப்பெற்றது.)*

## 3. சக்தி வழிபாடும் அதன் சிறப்பும்

ஆதிபராசக்தியாகிய உமாதேவியார் மதுரையிலே சோம சுந்தரருடைய அதாவது சுந்தரேசருடைய இடப்பாகத்திலே மீனாக்ஷி என்னும் திருப்பெயரோடு; அழகினையும், ஒளியினையும், ஸகல ஸாம்ராஜ்யத்தையும் தரும் காரணமாக அமைந்து விளங்குகின்றாள். காஞ்சிப்பதியிலே திருவேகம்பவாணருடைய இடப்பாகத்தில், காமாக்ஷி என்னும் திருப்பெயரோடு, முப்பத்திரண்டு தருமங்களையும், ஆன்மாக்களெல்லாம் பரமுத்தியடையும் வண்ணம் செய்தருளி விளங்குகின்றார். காசியிலோ விஸ்வநாதர் ஆன்மாக்களுக்கு இறக்கும்பொழுது பிரணவ மந்திரத்தை ஓதிக்கொடுத்தருளும்போது விசாலாட்சி என்னும் திருநாமமுடையவராய், அவ்வான்மாக்களின் இளைப்பை நீக்கியருளும் பொருட்டுத் தூசினால் வீசி அருள்செய்கின்றார். சிதம்பரத்தில் நடராசர் பஞ்சகிருத்திய நிருத்தஞ் செய்யும்பொழுது, பிறவிப்பிணியை அதாவது பிறந்து உழன்று இறந்து மறுபடியும் பிறந்து உழன்று இறக்கும் தொழிலாகிய, இத்தூல சரீரத்தை மாறிமாறி எடுக்கும் வருத்தத்தை, நீக்கியருள விரும்பி, சிவகாமியம்மையார் என்னும் திருப்பெயரோடு அவருடைய திருநிருத்த தரிசனத்தைப் பூசித்தருளுகின்றார். இவை மட்டுமல்லாமல், ஆதிபராசக்தித்தாய், இலக்குமி என்னும் திருப்பெயருடன் சகல செல்வங்களையும்; சரஸ்வதி என்னும் திருப்பெயருடன் சகல வித்தைகளையும் கொடுத்து அருள்செய்கின்றார். மேலும் துர்க்கை, காளி என்னும் திருப்பெயர்களுடன் துஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலனஞ் செய்தருளுபவராயும் விளங்குகின்றார். உமாதேவியாருக்கு இன்னும் பல திருநாமங்கள் உண்டு. உண்மையை நோக்கும்பொழுது, ஆதிபராசக்தியாகிய தேவி நாமரூபங்களற்ற பரம்பொருளாக விளங்குகின்றாள். ஆயினும் தேவி தீயோர்கள் தவிர்ந்த நல்லவர்களை மட்டுமே முறையாகக் காத்து, உலகத்தை நல்வழியில் நடாத்தும் பொருட்டுத் திருவிளையாடல்கள் புரிகின்றாள் என்று மட்டுமே நாம் ஊகிக்கவேண்டியிருக்கின்றது. இதன் சார்பாகத்தான் சிவஞானசித்தியாரில்,

"சத்திதான் பலவோ என்னில், தானொன்றே,
அரனுடையதாகி, காரியத்தில் அநேகமாக வைத்திடும்."

என்று கூறப்பட்டிருப்பதிலிருந்தும் நன்கு விளங்குவோமாக.

உமாதேவியார் சிவபெருமானுடைய சக்தியே. தீயும் சூடும்போல சிவமும் சக்தியுங் இணைந்து இருப்பது நம் எல்லோருக்கும் நன்கு விளங்குகின்றது. சிவபெருமானுடைய திருவருளே சக்தியாகும். அப்படிப்பட்ட திருவருட்டன்மை இல்லாத சிவமில்லை. ஆகையினால் சிவத்தினின்றும் சக்தி பிரிந்திருப்பதில்லை. 'தீ' என்று கூறும்போது பொருள் ஒன்று தான். ஆனாலும் அதிலே செம்மையாகிய தோற்றத்தையும், சூடு என்று கூறப்படும் குணத்தையும் பிரித்து, நாம் வெவ்வேருக நினைத்தல்போல; பரம்பொருள் ஒன்ருக இருப்பினும், எல்லாவற்றிற்கும் அப்பால் ஒளிமயமாக விளங்கிநிற்றலால், ஒளிமயமாகிய வடிவம் சிவம் என்றும்; அவ்வொழியானது எவற்றிலும் சேர்ந்து தன்னேடு சேர்த்துக்கொள்ளும் ஆற்றல் உள்ளமையினால் சக்தி என்றும் வெவ்வேருகக் கருதப்படும். உதாரணமாக, ஒரு வீரத்தன்மை பொருந்திய செயலைச் செய்ய முற்படுவோர் சிவபெருமானுடைய சக்தியின் அருளைப் பெருமல், தம்முடைய ஆற்றலால் மட்டும் செய்து நிறைவு பெறச் செய்வார்களோ? அப்படியாக நிறைவுபெறச் செய்து முடிக்கவே மாட்டார்கள். இதனைச் ஸௌந்தர்யலகரியிலுள்ள ஒரு செய்யுளின் முற்பகுதியில்,

"சிவமெனும் பொருளும் ஆதிசக்தி யொடுசேரின்
எத்தொழிலும் வல்லதாம்
இவள் பிரிந்திடி னியங்குதற்கும் அரிதரி
தெனுமறை இசைக்குமால்"

என்று கூறப்பட்டிருப்பது நன்கு விளங்குகின்றது. இன்னும், "சர்வம் சக்திமயம் ஜெகத்." என்பதாவது மூவுலகமே சக்திமயம். ஆற்றலாகிய சக்தியே வெற்றிச் செல்வத்திற்குக் காரணம் என்றும், அப்படிப்பட்ட சக்தியுடையவர்களே ஆணுக இருந்தாலும் சரி பெண்ணுக இருந்தாலும் சரி எவருக்கும்

பயப்படமாட்டார்கள் என்றும், உலகமெங்கும் சக்தியே முதன்மையாக விளங்குகின்றது என்றும், நன்ருக அர்த்தப் படக்கூடியதாகப் பிரமாண்டபுராணம் கூறுவது கவனிக்கத் தக்கது.

வேதாகமசாஸ்திரங்கள் எப்படிக்கூறுகின்றன. அதாவது, ஈஸ்வர சக்தியினுல் இந்த உலகமானது தோன்றி நிலைபெற்று நின்று நடைபெறுகின்றது என்பதாம். இதனைச் சிவஞான சித்தியாரில்,

" ஈசனருள் இச்சைஅறி வியற்றல் இன்பம்,
இலய மொடு போகஅதி கார மாகித்,
தேசருவம் அருவுருவம் உருவ மாகித்,
தேவியுமாய்த் தேசமொடு செல்வ மாகிப்,
பேசரிய உயிரையெலாம் பெற்று நோக்கிப்,
பெரும்போக மவையளித்துப் பிறப்பினையு மொழித்திட்,
டாசகலும் அடியருளத் தப்பனுட னிருக்கும்,
அன்னையருட் பாதமலர் சென்னிவைப்பாம்."

என்ற செய்யுளும் விளக்கமாகக் கூறியிருக்கின்றது. இச்செய்யுளிலே, "ஈசனருள்" என்று சிவனையும் சக்தியையும் ஒன்ருகச் சேர்த்தே பாடப்பட்டிருக்கின்றது. ஆகையினுலே, சிவனும் சக்தியும் ஒன்றைவிட்டொன்று பிரியாது ஒன்ருகவே நின்று உலகத்தைத் தோற்றுவித்து நடாத்துகின்ருர்கள். முன்பு கூறியதுபோல, விளக்கும் ஒளியும்போல, சிவனும் சக்தியும் பேதமில்லாது இணைந்திருக்கிருர்கள், என்பதைக் கீழ்வரும் சிவஞான சித்தியாரிலுள்ள செய்யுட்பகுதிகள், நன்கு விளக்குகின்றன. அதாவது,

" அருளது சக்தி யாகும் அரன் தனக்கு அருளை யின்றித்
தெருள்சிவம் இல்லை, அந்தச் சிவமின்றிச் சக்தி இல்லை."

என்றும், இன்னும், "எத்திறம் நின்ருனீசன் அத்திறம் அவளும் நிற்பள்" என்பனவாகும்.

ஆகையினுற்தான் தாயுமானவர் சுவாமிகளும் இறைவன் திருநாமங்களை இறைவிக்கும் உரியனவாக அமைத்துக் கீழ் வரும் விருத்தப்பாவினுல் துதிசெய்வாராயினர். அதாவது,

"பூரணி, புராதனி, சுமங்கலை, சுதந்தரி, புராந்தகி, த்ரியம்பகி, யெழிற்
புங்கவி, விளங்குசிவ சங்கரி, சகஸ்ரதள புட்பமிசை வீற்றிருக்கும்
நாரணி, மனுதீதநாயகி, குணுதீத நாதாந்த சக்தி, என்றுன்
நாமமே யுச்சரித்திடும்மடியர் நாமமே நானுச்சரிக்க வசமோ?
ஆரணி சடைக்கடவு ளாரணி யெனப்புகழ அகிலாண்ட கோடியீன்ற
அன்னையே! பின்னையுங் கன்னியென மறைபேசும் ஆனந்த ரூப மயிலே!
வாரணியு மிருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ் வளமருவு தேவைஅரசே!
வரைராச னுக்கிருகண் மணியா யுதித்தமலை வளர்காத லிப்பெண்-
உமையே!"

எமது சமய நூல்கள் எப்படியாகக் கூறுகின்றன. அதாவது, ஆதிபராசக்தியே உலகத்திலுள்ள எல்லாச் சக்திகளுக்கும் தாயாக விளங்குகின்ருள். ஆதிபராசக்தியை வழிபடுவோர்கள் இப்பிரபஞ்ச வாழ்க்கையில் மேன்மை அடைவதற்காகிய, இச்சாசக்தி கிரியாசக்தி ஞானசக்தி முதலிய சக்திகளையும், வீடுபேற்றையும் ஒருங்கே அடைவர் என்று சமயசாஸ்திரங்கள் மிக விளக்கமாகக் கூறுகின்றன.

இருக்குவேதத்திலுள்ள மந்திரங்கள் அதிலும் ஈஸ்வர சக்தியைப்பற்றிய துதியிலே, எவற்றைப் போதிக்கின்றன.

அவையாவன, உண்பதும் பார்ப்பதும் கேட்பதும் ஈஸ்வரனின் திருவருளாகிய சக்தியினுலேயே. எவன் ஆதிபராசக்தியை அறியாது மனம்போனபோக்கில் நடக்கின்ருனே, அவன் இவ்வுலக சம்சாரபந்தத்தினுல் குன்றுகின்ருன். ஆதிபராசக்தியின் கருணையைப் பெறுபவன் உலகத்தில் எல்லோரிலும் மேம்பட்டு விளங்குவான். ஒரு தத்துவஞானி ஆவான். மகாமேதையுமாவான் என்பன.

ஸ்ரீ சிவபுராணம் என்ன கூறுகின்றது. அதாவது, சிவனும் சக்தியும் ஒரே நிலையிலிருக்கின்ருர்கள். இவர்களிருவருக்கும் பேதமேயில்லை. சந்திரனுக்கும் ஒளிக்கும் பேதமில்லை. ஆகையினுல், சிவனும் சக்தியும் இல்லாவிட்டால் இவ்வுலகமுமே

நிலைபெருது, அழிந்துபோய்விடும். ஆதிபராசக்தியோ பல்வேறு சக்திகளாகப்பிரிந்து நின்று, ஈஸ்வரனுடைய விருப்பப்படி, இவ்வுலகத்தை நிலைபெறுத்துகின்ருள். சிவனையும் சக்தியையும் ஒன்றுசேர்த்து மனத்திலிருத்தித் தியானித்து வணங்குவோருக்கே முத்தியின்பம் கிடைக்கும் என்பதாம். ஏனையோருக்கு முத்தியின்பம் கிடைக்கமாட்டாது என்பதும் இதிலிருந்து பெறப்படுகின்றது.

இன்னும், மார்க்கண்டேயபுராணம் என்ன கூறுகின்றது என்பதையும் அவதானிப்போம். இவ்வுலகிலே, எங்குமுள்ள பொருள்களிலெல்லாம் வியாபித்திருக்கும் சக்திகள், ஆதிபராசக்தியே.

ஆதிபராசக்தி காருண்யத்தினுல் பல நாமரூபங்களை உடையாள். அவற்றில் சில பின்வருமாறு:-

1. **பராசக்தி:** மேலானசக்தி என்பதாம்.
2. **மகேஸ்வரி:** மகத்தான செல்வத்தை உடையாள் என்பதாம்.
3. **பவகரை:** பிறவிப்பெருங்கடலுக்குக் கரையாக விளங்குபவள் என்பதாம்.
4. **மகிடவாகினி:** எருமைக்கடாவை வாகனமாக உடையவள் என்பதாம்.
5. **கலை:** கலாரூபமாயிருப்பவள் என்பதாம்.
6. **சின்மயை:** ஞானமயமாக விளங்குபவள் என்பதாம்.
7. **சுருதி:** வேதங்களாயிருப்பவள் என்பதாம்.
8. **அம்பிகை:** தாய் என்பதாம்.
9. **வரதை:** அருட்கொடையை உடையவள் என்பதாம்.
10. **நாதரூபை:** நாதவடிவாயுள்ளவள் என்பதாம்.

இன்னும் 64 பீடவகையால் நாமரூபங்களை நிர்வகித்துள்ளாள். அவற்றிலும் சில பின்வருமாறு:-

1. காமகோடிபீடமும் 2. அன்னபூரணிபீடமும் ஸ்ரீ காஞ்சியிலே உள்ளன.
3. மீனுக்ஷிபீடம் மதுரையிலே உள்ளது.

4. விசாலாட்சிபீடம் அவிமுத்தத்திலே உள்ளது.

5. பரமேஸ்வரிபீடம் சிவஞானிகளுடைய இதயகமலத்திலே உள்ளது.

இவைமட்டுமல்லாமல் அவதாரவகையினுலும் பல நாம ரூபங்களுள்ளாள். அவைகளிலும் சில பின்வருமாறு:-

1. தாக்ஷாயணி: தக்கனுக்கு மகளாக அவதரித்தமையினுல் இடப்பட்ட பெயர்.

2. பார்வதி: பர்வதராஜனுக்கு மகளாக அவதரித்தமையினுல் இடப்பட்ட பெயர்.

3. தடாதகைப்பிராட்டியார்: மலையத்துவஜ பாண்டியனுக்கு மகளாக அவதரித்தமையினுல் இடப்பட்ட பெயர்.

இப்படியாக வேதாகமசாஸ்திரநூல்கள் கூறுவது ஒருபக்க மிருக்க, இவ்வுலக நடையையும் நாம் நன்கு கவனிக்கும் போது, அதேவிதமான போதனையையே விளக்குகின்றது. அவை எப்படியென்று கவனிப்போம்.

நம் எல்லோருக்கும் தாயாக விளங்கும் ஆதிபராசக்தி யாகிய தேவியை நாம் எல்லோரும் வணங்கவேண்டியது மிக முக்கியமாக இருக்கின்றது. அதேபோல நம்மைப் பெற்ற தாயையும் வணங்கவேண்டியது மிக அவசியம். ஏனென்றுல் எவருக்கும் தன் தாயின்மேல் உண்டாகும் தூய்மையான அன்பு வேறொருவர்மேலும் உண்டாகாது. முதலாவதாக, ஒரு குழந்தையானது பிறந்தவுடன், முதன்முதல் எப்படி அழத் தொடங்குகின்றது. எல்லோரும் சிந்தித்துப்பார்க்கவேண்டும். முதன் முதல் அக்குழந்தையின் வாயினின்றும் தனக்குத் தெரியாமலே கிளம்பிவரும், "அம்மா!" என்னும் அமுதமா கிய சொல்லேயாம். முதன் முதல் அக்குழந்தைக்குத் தனது தாயிடத்திலேயே அன்பானது தானுகவே தோன்றுகின்றது. தந்தைமேல் உண்டாகும் அன்பு அதற்குப் பிற்பட்டதே. இன்னும் சிறுபிராயத்தில், விளையாட்டுப் பொருட்களை வைத்து விளையாடிக்கொண்டிருக்கும் வேளையில் சிறிது நேரம் தாயை

மறந்திருந்து விளையாடுகிறது. ஆனாலும் அவ்விளையாட்டுப் பொருட்கள்மேல் ஒருவித வெறுப்புத்தோன்றியதும், உடனே தாயின் நினைவே தோன்றுகின்றது. உடனே தாயைப் பக்கத்தில் காணவிட்டால் எப்படி அழைக்கின்றது, 'அம்மா' என்ற ஒரே குரலில்தான். அவ்வோசையானது தாயின் செவிப் பட்டதும், தாய் என்ன செய்கின்றாள், ஓடோடிவந்து குழந்தையைத் தூக்கி அணைத்து முத்தமிட்டுக் கொஞ்சியும் குலாவியும் ஆனந்தம் பொழிகின்றாள். பிள்ளைகள் சிறிது வளர்ந்தபின்பு நடைமுறையில் தங்கள் தந்தையிடம் கொண்டுள்ள அச்சம், அடக்கம், மரியாதைகலந்த அன்பு (வணக்கம்) காட்டி ஒழுகல், இயல்பாயும் வழக்கமாயும் உள்ளது. தந்தையின்மேல் உள்ள அச்சம் காரணமாக, தந்தையின்மேலுள்ள முழு அன்பு சிறிது குறைவாகவே வெளிப்படையில் தோன்றும். ஆனால் தாயிடமோ உள்ள அன்பிற்கு, அப்படிப்பட்ட தடைகள் எதுவும் இடையூறாக நிற்பதில்லை. ஒரு சிறுவனோ சிறுமியோ தான் செய்த குற்றமாகிய செயலின் உண்மையைத் தன் தாயாருக்கு எடுத்துக்கூறத் தயங்கமாட்டார்கள். விளையாட்டாகவும் உண்மையையே கூறிவிடுவார்கள். இதுவே இயற்கை அன்னையின் செயல். பிள்ளைகள் தந்தையிடமிருந்து பெற விரும்பிய எந்தப்பொருளையும், தாய்மூலமாகப் பெறுவது மிகச் சுலபம். ஏனென்றால் தாயினுடைய தயவு எந்த நேரமும் பிள்ளைகள்மேல் உண்டு.

நாம் எல்லோரும் ஆதிபராசக்தியின் அன்புக் குழந்தைகள். நாம் பெறுதற்கரிய இந்த மானிடப்பிறவியைப் பெற்றும், அதனுடைய அருமையைத் தெரியாததுபோல் முற்றாகவே மறந்து இருக்கின்றோம். எங்களிற் பலர் இவ்வுலக வாழ்க்கையில் சிறந்து விளங்கி நிலைபெற்றிருக்க வேண்டும் என்று பேரவாக் கொண்டவர்களாய், தம்முடைய ஊக்கம், பொருள் யாவற்றையும் அதன் பொருட்டே செலவு செய்வர். இன்னும் மேன்மேலும் இன்புற்றிருக்க எண்ணி, கல்வி செல்வம் செல்வாக்கு அதாவது அதிகாரம் முதலிய சக்திகளைத்தேடி அலைகின்றனர். எமது விருப்பத்தை அதாவது சிற்றின்ப ஆசையை அகற்றுகிறோமா! இல்லை. அந்த ஆசையானது என்ன செய்

கின்றது. எங்களைப் பின்தொடர்ந்து, எங்களை எத்தனையோ பிறவிகளை எடுக்கச்செய்கின்றது. இப்படி நடப்பதனால் நாம் துன்பத்திற்கே ஆளாகின்றோம். பேரின்பமாகிய, உண்மை இன்பத்தை அறியத் தவறிவிடுகின்றோம். ஒருவருடைய பொருளையோ, நிலத்தையோ அபகரிக்க எவ்வளவு பிரயத்தனப் படுகின்றோம். துன்பமாகிய செயல்களை, உண்மையான இன்பம் என்று நினைத்து அகங்காரங்கொண்டு பிறரை ஏமாற்றி வாழ விரும்பித் துள்ளித் திரிகின்றோம். ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டு, இறைவனையும் இறைவியையும் சிந்திப்பதற்கோ வணங்குவதற்கோ நேரம் சற்றும் இல்லாதவர்கள்போல அலைகின்றோம். ஆன்ம ஈடேற்றத்தின்பொருட்டு நாம் என்ன செய்ய வேண்டும். ஊமைகள்போல் நாம் எமது வாய்விட்டழவும் அழைக்கவும் தெரியாதவர்கள்போல் நடவாது, எமது குரலினால் தேவியை உள்ளம் நிறைந்த அன்புடன் கூவி அழைக்கவேண்டும். ஆதிபராசக்தியோ எந்தநேரமும், எமது குரலைக்கேட்க விருப்பமுள்ளவளாய், காதை எம்பக்கம் வைத்துக்கொண்டு எமது குரலைக் கிரகிக்க ஆயத்தமுள்ளவளாய் இருக்கின்றாள். நாம் தேவியை உள்ளம் நெக்குருகி அழைப்போமாகில், தேவியும் எமது குரலைக் கேட்டதும் ஓடோடி வருவாள். இப்படியாகவே பக்தர்கள் முற்காலத்தில் இறைவனதும் இறைவியினதும் அருளைப் பெற்றார்கள் என்று வேதங்கள் கோஷிக்கின்றன. குழந்தைகளுக்கோ வாய்ச் சாதுரியமாகப் பேசத்தெரியாது. ஆனாலும் குழந்தைகளின் மழலைமொழிகளைக் கேட்டுத் தாயானவள் உள்ளம் உருகியும் குழைந்தும் விடுகின்றாள். இப்படியாகத் தாயின் மனத்தை மாத்திரம் அல்ல மற்றும் ஏனையோரினதும் இருதயங்களை மயக்கியும், மாற்றியும், உருகவும் செய்துவிடும். அதுபோல நாமும் கள்ளம், கபடம் இல்லாத இருதயத்துடன் முறையிட்டோமாகில், எங்கள் இருதயத்திலே எழுந்தருளி இருக்கும் சர்வவல்லபமுள்ள இறைவனும் இறைவியும் வெளிப்பட்டுத் தோற்றம் கொடுப்பார்கள். உண்மைப்பக்தனின் மொழியும் குழந்தையின் மொழியும் ஒரே நிலையானது. குழந்தையிலும் பார்க்க மிகக்குழந்தைத்தன்மை உடையவனே உண்மைப்

பக்தன் ஆகின்றான். குழந்தைகள் அழுவதைப்போல், உண்மைப் பக்தன் அன்புமேலீட்டினால் அழுதோ குழறியோ முறையிடவேண்டும். இன்பத்திலும் துன்பத்திலும் கண்ணீர் விட்டே முறையிடவேண்டும். கண்ணீரே இறைவனையும் இறைவியையும் அடையச்செய்யும் ஆயுதமாகும். இதையொட்டியே, மாணிக்கவாசகப்பெருமானும், "அழுதால் உன்னைப் பெறலாமே" என்று ஓதியிருக்கின்றார். இச்சந்தர்ப்பத்தில் கல்வித் திறமையோ புறம்பானது. இறைவனும் இறைவியும் அன்பர்களின் பக்திமேலீட்டினால் உருவாகிய இருதய உணர்வின் மேம்பாட்டை விரும்புகின்றார்களேதவிர கல்வியறிவின் திறமையை வேண்டுபவர்களல்ல. ஆகையினால் நாம் உண்மை அன்புகலந்த பக்திப்பாடல்களையோ, அல்லது முறையீட்டையோ, சமர்ப்பித்தால்; அவைகளை இறைவனும் இறைவியும் ஏற்றுக்கொள்ளுவார்கள். அதுமட்டுமல்லாமல் நாம் இறைவனுடனும் இறைவியுடனும் உரையாடவும் கூடும். அப்படியாக, உரையாடும்போது, அதேநிலையிலில்லாதவர்கள், உரையாடுபவனைப்பார்த்து, "இவனுக்குப் பைத்தியம்" என்பார்கள். ஆனால், உண்மையை நோக்கும்போது; அப்படிப்பட்ட நிலையிலில்லாதவர்களாகிய காமவெறியர்களும், சிற்றின்பத்தில் அமிழ்ந்தியிருப்பவர்களுக்கே, "பைத்தியம் பிடித்துவிட்டது" எனலாம். இன்னும், சிற்றின்ப அவாவை வெறுத்து, இறைவனின் காட்சியையே வேண்டுபவர்களாயிருப்போரைப் பார்த்து, "பைத்தியம் பிடித்துவிட்டது" என்று கூறுதல் தகுமோ? அப்படிக் கூறுவோருக்கே உண்மையில், "பைத்தியம் பிடித்துவிட்டது" என்று இன்னும் அறைந்து கூறவேண்டும்.

நாம் உண்மையில் அன்பு நிறைந்த பக்திப் பாடல்களைப் பாடும்போது, பாடுவோரும், கேட்போரும்; ஆனந்தபரவசராய், மெய்புளகங்கொள்ள, கண்ணீர் தாரைதாரையாக ஒழுக, கட்டுங்கடங்காத பேரின்பவெள்ளத்தில் அமிழ்ந்தியிருப்போம். இந்நிலையில், நாம் தூய்மையாகவும், சாந்தியுடனும், பிரகாசம் பொருந்தியும் விளங்குவோம். இதுவே பக்தியின் உச்சநிலையாகும். இவ்வுச்ச நிலையில், நாம்; எமது உடல், ஆவி, பொருள், மனைவி, பிள்ளைகள் முதலிய எல்லாவற்றையும்,

அதாவது எமக்கென்று அல்லது எம்முடையது என்று எதை யும் உடைமைபாராட்டாது, எல்லாவற்றையும் இறைவனுக்கும் இறைவிக்குமே சமர்ப்பிக்கவேண்டும்; அதன்பின் சாந்தத் தையே கடைப்பிடித்து, இறைவனையும் இறைவியையும் முழு அன்போடு தியானித்திருப்போமாயின், அவர்கள் தாமாகவே எம்மை ஆட்கொண்டு, எம் இருதயகமலங்களை உறைவிட மாகவும் கொள்வார்கள்.

இப்படியாக எமது அன்பு ஒருவாறிருக்க, எமது தாயின் அன்போ எம் அன்பிலும் மேம்பட்டதாய் அளவுகடந்ததாய் விளங்குகின்றது. எமது மனைவியும், எவ்வளவுதூரம் எம் முடன் நெருங்கிய உறவாக இருந்தபோதிலும்; எமது தாயின் பேரன்பை அவர்களிடம் காண இயலாது. நாம் எவ்வளவு காலம் எமது அன்னைக்குப் பணிசெய்தாலும்; எமது தாய் எம் சிறுபிள்ளைப்பிராயத்திலே, எமக்குப் பேரன்போடு செய்த உதவிக்கு அதாவது, சிறுபிள்ளைப்பிராயத்திலே எங்களைப் பாலூட்டித் தாலாட்டி ஈ, எறும்பு முதலியன மொய்க்கவிடா மல், பாதுகாத்தும்; நாம் நோய்வாய்ப்பட்டபொழுது நித் திரை செய்யாது எங்களைப் பராமரித்தும்; எமக்கு நல்ல இனிய அறுசுவை உணவைத் தந்தும், வளர்த்ததற்கு; ஈடா காது. எமது தாயோ, அன்பும் அருளுமுடைய கண்கண்ட தெய்வம். இம்மாயப் பிரபஞ்ச வாழ்க்கையை முற்றுந்துறந்த பட்டினத்தடிகளும், தமது தாயின் பேரன்பை மறவாதிருந் தது எத்துணைப் பேரன்பாகும். எமக்கோ எமது தாய்மேல் உள்ள அன்பு, தாமும் வளரவளரப் படிப்படியாகச் குறைந்து கொண்டே வந்தாலும்; எம் தாய்க்கோ எம்மீதுள்ள பேரன்பு ஒருவாற்றானும் குறைவுபடாது. ஆகையினுல், எமது தாய் மட்டுமே தாம் இறக்கும்வரை எம்மீதுள்ள பேரன்பு நிலை பிறழாது அதாவது சற்றும் நிலைதவருது உலகிலே விளங்கி நிற்பாள். ஆகையினுற்றுன் நாம் எல்லோரும் எம்மைப் பெற்று வளர்த்த தாய்மேல் பேரன்பும் நம்பிக்கையும் வைத்து நடக் கின்ருேம். அதுமட்டுமல்லாமல் வருங்காலத்திலும் அதேபோல நடந்துகொள்ள வேண்டும். பேரன்பே தெய்வத்தன்மையை உண்டுபண்ணும். ஆகையினுல் நாம் எல்லோரும், பேரன்பு

காரணமாக, நம் எல்லோருக்கும் தாயாக விளங்கும் ஆதி பராசக்தியைத் தெய்வவணக்கத்தில் முதற் தெய்வ வணக்கமாக வைத்துக்கொள்ள வேண்டும். அதாவது, "—அம்மா வணக்கம் —", 'அம்மை வணக்கம்' எனவும் சிறிது திரிபுற்று வளங்கப்படுகின்றது, அல்லது 'சக்தி வணக்கம்' என்றும் கூறப்படுகின்றது.

தெய்வ வணக்கத்திற்கு முதன்மையாக வேண்டப் படுவது பேரன்பு. இரண்டாவதாக வேண்டப்படுவது வஞ்சனை களவு இல்லாத தூய உள்ளம். தூய உள்ளம் சிறு பிள்ளைகளிடமே காணப்படுகிறது. பெரியோர்களிடத்திலே மிக அருமையாகவே காணப்படும். பேரன்பும் தூய உள்ளமும் காரணமாகவே தாய்க்கும் பிள்ளைக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. ஆகையினால் சக்தி வணக்கத்தினால், நாமும் தூய்மை அடைவதுமல்லாமல் பேரன்பும் உடையவர்களாகின்றோம். ஆகவே ஆதிபராசக்தியாகிய தேவியை வழிபடுதல் அவசியத்தில் அவசியம். அம்பிகையை முறையாக வழிபட்டுத் தூய உள்ளமும் பேரன்பும் எமக்கு வரப்பெற்றால் முத்தியின்பம் தானாகவே கிடைக்கும்.

இறைவனும் இறைவியும் அன்புமயமானவர்கள். 'சிவம்' என்பதற்குப் பொருள் 'அன்பு' ஆகும். திருமூலநாயனார், "அன்பே சிவம்" என்றார். மணிவாசகப் பெருமானும், "ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே என்னுடையன்பே" என்று கூறியிருக்கின்றார். இறைவனையும் இறைவியையும் ஒன்றாகப் பாவித்து, தாயாகவே முன்னிட்டும், "அன்பன்னை" என்று வணங்குதலும் தகும். மணிவாசகப் பெருமான், "அம்மையே! அப்பா! ஒப்பிலாமணியே அன்பினில் விளைந்த ஆரமுதே," என்று விளித்துப் பாடியிருக்கின்றார். பரஞ்சோதி முனிவர், "சக்தியாய்ச் சிவமாகித் தனிப்பர முத்தியான முதலைத் துதி செய" என்று காப்புக்கூறியிருக்கின்றார்.

தாயாகிய ஆதிபராசக்தியின் அருளைப் பெற்ற பின்பு, அத்தாய் மூலம் தகப்பனாகிய சிவபெருமானுடைய அருளைப் பெறுதல் இயல்பும் சுலபமும் ஆகும். இதனைப் பின்பற்றியே,

பட்டினத்தடிகள், "தாயுடன் சென்று தாதையைக்கூடி" என்று விளக்கிக் கூறியிருக்கின்றார். படிக்காசுப்புலவர், எப்படிக் கூறியிருக்கின்றார். அதாவது,

" ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை மீதுன் னருகிருந்து
நீமுத்தம் தாவென்றவர் கொஞ்சும் வேளையில் நித்தநித்தம்
வேய்முத்த ரோடென் குறைகளெல் லாமெல்ல மெல்லச் சொன்னால்
வாய்முத்தம் சிந்தி விடுமோநெல் வேலி வடிவம்மையே."

அதாவது, "அம்மையே! நின் மணாளன் அரியாசனத்தின்மீது உன்னைக் கொஞ்சிக்குலாவி இன்புற்றிருக்கும் நேரத்தில், எனது குறைபாடுகளையெல்லாம் மெள்ள மெள்ள அவருக்குக் கூறினால், உன்னுடைய வாயினில் உள்ள முத்துக்கள் போன்ற பற்கள் உதிர்ந்துபோமோ? என்னும் அர்த்தப்பட அம்மையை விளித்துப் பாடியிருப்பது நன்கு கவனிக்கத்தக்கது. இன்னும், சிவப்பிரகாச சுவாமிகள், இதே நிலையில், பெரியநாயகியம்மை விருத்தத்திலே, எப்படியாக இறைவனையும் இறைவியையும் வர்ணித்துக் கூறியிருக்கின்றார், என்பதையும்கவனிப்போம். அதாவது,

"காமமென் கின்ற கதுவுவெந்தீயும் கடுஞ்சின மெனப்படு புலியும்
களிப்பெனுஞ் சிறுகட் புகர்முகப் புழைக்கைக் கறையடிக் களிநல் யானையுமே
தாமிகு மெனது மனமெனும் வனத்தில் தனிவரல் பெரு வினையாயின்
தழலினின்றாடி கரிபுலியுரி போர்த்தடுத்த ஆண்துணையொடும் வருவாம்."

அதாவது, "அம்மையே! நீ, என்னுடைய இருதயமாகிய காட்டு வீட்டிலே சுவாலித்தெரியும் காம இச்சையாகிய நெருப்புக்கும்; கடுங்கோபமாகிய கொடிய புலிக்கும்; சந்தோஷம் என்று கூறப்படும் யானைக்கும்; பயப்படுவாயாகில்; தீயிலே திருநடனமிட்டுக்கொண்டு, யானை புலி முதலியனவற்றின் தோலைப் போர்வையாக்கிக்கொண்டும், உள்ள உன்னுடைய மணாளனுடன் என்முன்னே வருவாயாக!" என்று வேண்டித் துதிக்கின்றார். இவைகளினாலல்லவா, விவேகானந்த சுவாமிகளின் தவப்புதல்வியாகிய நிவேதிதாதேவியார், "அம்மை

உணர்ச்சியே உலகத்திற்கு உறுதியைக்கொடுக்கும் ஒருபெரிய உறவுத்தன்மையான கொள்கை. அம்மையைப்போல நாமெல்லோரும் அன்பை வேண்டுபவர்களுக்கு அன்பையே வழங்கல் வேண்டும். துன்பசாகரத்தில் கஷ்டப்படுபவர்கள் வந்து அடையும் துறைமுகம், 'அம்மா' என்ற சொல்லே! இன்னும், துன்பம் வந்துற்றகாலை யாரும் சாதாரணமாக, 'ஆ! அம்மா!' என்றே கூறுகின்றார்கள். 'ஆ! முருகா!', 'ஆ! கடவுளே!', 'ஆ! சிவனே!' என்றெல்லாம் கூறுவது, 'ஆ! அம்மா!' என்று கூறுவதற்குப் பிற்பட்டதே." என்று நன்றாக விளக்கிக்கூறியிருக்கிறார். பாரதியார், ஸ்ரீ இராமகிருஷ்ணர், முதலாயினோர்களது நூல்களைக் கற்பதனால் இவ்வுண்மை விளங்கும். இறைவனை எந்த உருவத்தில் தியானிக்கின்றோமோ, அதே உருவத்தில் இறைவனும் அருள்செய்வான். அப்படியாக இறைவன் அருள்பரியும் உருவமெல்லாம் தாயின் அம்மை உருவமே. அப்படியான, இறைவனின் திருவருள், தாயின் தலையாய பேரன்பேயாகும். எங்களுக்கு இறைவன்மேல் உள்ள அன்பானது, மிகமிக நுண்ணிய அளவாக இறைவன்பாற் சென்று, முற்றும் இறைவனுடன் ஒன்றாச்சேரும் காலத்தில், இறைவனது வெளிஉருவம் மாறி, உள்ளுருவமாக இருக்கும் அம்மையின் உருவமே வெளிப்படும். ஆகையினால் அம்மையின் உருவமே எங்கும் விளங்கிநிற்கின்றது. இதைத் தழுவியே, இறைவன் அன்பர்களுக்குத் தாயாக விளங்குகின்றான், என்று திருவாதவூரடிகளும்,

> "சாயா அன்பினை நாடொறும் தழைப்பவர்
> தாயே யாகி வளர்ந்தனை போற்றி."

என்று ஓதியருளியிருக்கின்றார். அன்பை நாம் பெற வேண்டுமானால் அன்பான வார்த்தைகளினாலேயே பெறமுடியும். அன்பு நிலைபெற்று இருக்கும் இடமாகிய தாயிடத்திலிருந்தே அன்பை நாம் பெறமுடியும். இதுமட்டுமா! இன்னும் பாரதியார் என்ன கூறுகின்றார். அதாவது,

> " ஆதிப்பரம் பொருளின் ஊக்கம் — அதை
> அன்னை யெனப் பணிதல் ஆக்கம்." என்று கூறுகின்றார்.

ஆகவே ஆதிபராசக்தியாகிய அம்மையை வழிபடுதல் மிகமிக அவசியம் என்றே இன்னும் கூறவேண்டிய நிலை இருக்கின்றது. அதுவுமல்லாமல் அம்மை வணக்கம் எவ்வணக்கத்திலும் மிகமிகச் சிறந்ததென்றுமே கூறவேண்டும்.

அம்பிகையைப் பூசித்து வழிபடுவதற்கு, நாம் எல்லோரும் உரிமை உடையோம். ஆண்கள், பெண்கள், உயர்வாகிய சாதி, தாழ்ந்தசாதி என்கிற வித்தியாசமில்லாது எல்லோரும் பூசித்து வழிபடலாம். அப்படியாக அம்பாளை வழிபடுதல் இரு வகைப்படும். முதலாவது, அம்பாளை ஒரு உருவத்தில் ஸ்தாபித்துப் பூசித்தலாகிய புறப்பூசையாகும். இரண்டாவது, அம்பாளின் திருவடிவத்தை எம்மனத்தில் இருத்தித்தியானித்து வணங்குதலாகிய அகப்பூசையாகும். அகப்பூசையை மானச பூசை என்றும் கூறுவதுண்டு. பெரியோர் மானச பூசையையே சிறந்ததாகக் கருதுகின்றனர். தேவிக்குரிய மந்திரமாகிய 15 அட்சரங்களைச் செபித்தலும் (இதனால் தேவிக்கு 'ஸ்ரீ பஞ்சதசாக்ஷரீ' என்னும் திருநாமமும் உண்டு), 43 முக்கோணம் அடங்கிய ஸ்ரீ சக்கரத்தில் தேவியைப் பூசித்தலும் தியானித்தலும், அம்பிகையின் 1008 நாமங்களை ஓதுதலும், ஆகிய இம்மூன்றும் தேவி வழிபாட்டின் பகுப்புக்களாகும். இதன் சார்பாகப் பிரமாண்டபுராணத்தில், "எவன் ஸ்ரீ வித்தை என்று சொல்லப்படும் தேவியின் 15 எழுத்து மந்திரத்தை அறிந்திருக்கிறானோ, எவன் ஸ்ரீ சக்கரத்தை நன்றாக அருச்சிக்கிறானோ, எவன் இந்த 1008 நாமத்தைக் கீர்த்தனஞ் செய்கிறானோ அவனைத்தான் நல்ல பாத்திரமானவனென்று அறிஞர்கள் சொல்லுவார்கள்." என்று கூறப்பட்டிருப்பதையும் நன்கு கவனிப்போம். இன்னும், தேவியைப் பூசித்தற்குச் சாதனமாகத் தேவியின் சரித்திரங்களும், ஸ்தோத்திரப் பாமாலைகளும் அடங்கிய பல நூல்கள் தமிழகத்திலே உண்டு. அவற்றுள் சில பின்வருமாறு: ஸ்ரீ தேவீ பாகவதம், ஸௌந்தரிய லகரி, காஞ்சிப் புராணம், அபிராமி அந்தாதி, தேவீ பராக்கிரமம், தேவி மானசபூசை அந்தாதி, அன்னை லலிதாம்பிகை அருட்பேராயிரம், மார்க்கண்டேய புராணம், ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம், ஸ்ரீ லலிதா திரிசதி, ஸ்ரீ லலிதாஸ்தவரத்னம்,

ஸௌபாக்ய சிந்தாமணி, தேவி மகிம்னத் தோத்திரம், மூக பஞ்சசதி முதலியன.

இஃது இவ்வாறிருக்க, நாம் எமது அன்புக்குப் பாத்திர மான ஒருவரை வரவேற்று உபசரிக்கும்போது, செய்யும் மரியாதையைப்போலவே; தெய்வத்தை முழு அன்போடு பூசிக் கும்போது, அன்புக்கொடையாகச் சமர்ப்பிக்கப்படும் செயல் களுக்கும் பொருள்களுக்கும் 'உபசாரம்' என்று கூறப்படும். நாம் பூசை செய்யும்போது, பிரதானமாக வழங்கப்படும் உபசாரங்கள் ஐந்து வகைப்படும். அவையாவன: 1. கந்தம் (சந்தனம்), 2. புஷ்பம், 3. தூபம் 4. தீபம் 5. நைவேத் தியம் என்பன. இவ்வைந்தையும் பஞ்சோபசாரம் என்று கூறுகின்றோம். இந்த ஐந்து உபசாரங்களும் மிகப்பிரதான மாகச் செய்யவேண்டியவைகளாகும். இவைகளைச் செய்யா விட்டால் ஒருவிதமான பிரயோசனமுமே கிடையாது. ஏனென்றால், ஐந்து உபசாரங்களும் எமது உடம்பிலுள்ள பஞ்சபூதங்களின் பிரதிநிதிகளாகும். அவையாவன: 1. கந் தம் — பிருதிவியைக் குறிக்கின்றது. 2. புஷ்பம் — ஆகாயத் தைக் குறிக்கின்றது. 3. தூபம் — வாயுவைக்குறிக்கின்றது. 4. தீபம் — தேயுவைக்குறிக்கின்றது. 5. நைவேத்தியம் (அப்பு) — அமிர்தத்தைக் குறிக்கின்றது. ஆகையினால் இப் பஞ்சோபசாரங்களைத் தெய்வத்திற்குச் சமர்ப்பிக்கும்பொழுது எமது பஞ்சபூதத்தாலாய உடலையே சமர்ப்பித்ததற்கு ஒப்பா கின்றது. அதனால் எமது இருதயத்தின் தத்துவம் சுத்தி யடைகின்றது. ஆகையினாலேயே இப்பஞ்சோபசாரங்கள் மிக அவசியமாகின்றன. இன்னும் இப்பஞ்சோபசாரங்களுடன் பதினொரு உபசாரங்களைச் சேர்த்து பதினாறு உபசாரங்க ளுடன் செய்யும் ஷோடசோபசார பூசையும், அறுபத்து நான்கு உபசாரங்களுடன் செய்யும் சதுः ஷஷ்ட்யுபசார பூசையும், எழுபத்திரண்டு உபசாரங்களுடன் செய்யும் துவி சப்தத்யுபசார பூசையும் பூஜாகற்பங்களில் விரிவாகக் கூறப் பட்டிருக்கின்றன. தேவி அறுபத்துநான்கு உபசாரங்களைச் செல்வமாக உடையவளாதலின், அம்பாளுக்கு, "சதுः ஷஷ்ட் யுபசாராட்யா" என்னும் ஒரு திருநாமமும் உண்டு. இந்த

அறுபத்துநான்கு உபசாரங்களையும் மனத்திலே தியானத்தில் அமைத்து அவற்றினுல் தேவியைப் பூசித்து வழிபடுவதாக அமைந்துள்ள ஒரு ஸ்தோத்திரம் ஸ்ரீமத் சங்கரபகவத்பாதா சாரிய சுவாமிகளால் வடமொழியிலே இயற்றப்பட்டுள்ளது. இதனைத் தமிழில் மொழிபெயர்த்தும் தொகுத்தும் பல பிரபந் தங்கள் அதாவது சைவசமய அன்பர்களாலும், தமிழ்ப் புலமையுள்ளோராலும் தமிழகத்தில் (இங்கும் — அதாவது இலங்கையிலே, அதிலும் பிரதானமாக யாழ்ப்பாணத்திலே) பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இப்படியாகப் பூஜைகளை முடித்த பின்பு பிராமணர்கள், சுமங்கலிகள், சிறுவர்கள், சிறுமிகள், ஒன்றுமறியாதவர்க ளாயும் மிகவும் கஷ்டப்படுபவர்களாயும் உள்ளவர்கள், இன் னும் அன்னியர்கள் எல்லோரையும் தேவியாகப் பாவித்து, நாம் அவர்களுடைய மனங்குளிரும்படியாக அன்னதானம் கொடுக்கவேண்டும். அதன்பின்பு தேவியை மனத்திலிருத்தித் தியானித்து வணங்கல் வேண்டும். இன்னும் எமது குருவை ஆபரணம் முதலிய வழங்கிச் சந்தோஷப்படுத்தி, அவரையும் தேவி என்று பாவித்து வணங்கல் வேண்டும். மேலும் தேவி யினது சரித்திரங்களையும், பூஜாக்கிரமங்களையும்; கடவுள் பக்தியுள்ளவர்களுக்கும் நல்ல சுபாவமுள்ளவர்களுக்கும், ஆசாரமுள்ளவர்களுக்கும், தேவியினிடத்திலும் பக்தியுள்ள வர்களுக்கும் உபதேசஞ் செய்தல் வேண்டும்.

தேவியை நாம் எப்படியாக ஆராதனை செய்யவேண்டும் என்பதைச் சிறிது அவதானிப்போம். பொதுவாக ஸம்ஸார பந்தத் துக்கத்தில் ஆழ்ந்திருப்பவர்கள் தம்முடைய துக்கத் தைப்போக்க வேண்டுமாயின், தேவியைப் பூஜித்தலே அக் கோரமான கஷ்டத்தினின்று நீங்கச்செய்யும் மருந்தாகும். தேவியை ஒரு அளவு எப்படிப் பூசித்தல் வேண்டும். முதலா வதாகத் தேவியைப் பூர்வபட்சத்தில் பிரதமை முதல் பௌர் ணமி ஈருகவுள்ள 15 திதிகளிலும் முறையே

1. ரோகநிவிர்த்தி, 2. ஆயுள் விருத்தி, 3. சர்வதுக்க நிவிர்த்தி, 4. விக்ன நிவிர்த்தி, 5. புத்தி விருத்தி, 6. தேக

காந்தி, 7. சோக நிவிர்த்தி, 8. தாப நிவிர்த்தி, 9. இக லோகசுகம், 10. யமலோகபயம் நிவிர்த்தி, 11. தேவி யாதிக்யம், 12. தேவியினிடத்து இன்பம், 13. சந்ததிப்பெருக் கம், 14. சிவபெருமானுக்குப் பிரியனுந்தன்மை, 15. பிதுர் களைக் கரையேற்றுதல், முதலிய பலன்களை நாம் பெறவிரும் பினுல், அந்தந்தத் திதிகளில் தேவியைச் சந்தோஷமடையச் செய்யும் வண்ணம் பூசையும், பிராமணர்களுக்கு முறைப்படி திரவியதானமும், பௌர்ணமியில் ஓமகுண்டத்தில் தீவளர்த்த லும் செய்தல் வேண்டும். இப்படிச்செய்தால் எல்லாக்குறைக ளும் நிவிர்த்தியாகும். இதுமட்டுமல்லாமல் வாரபூசை, நக்ஷத் திரபூசை, யோகபூசை, கரணபூசை, மாதபூசை முதலியனவும் முறைப்படி செய்தல்வேண்டும். இதிலேயும் மாதபூசையைச் சிறிது விளக்கிக் காட்டப்பட்டிருப்பதையும் கவனிப்போம் அதாவது, ஒவ்வொரு மாதத்திலும் பூர்வபக்ஷத் (சுக்கில) திரு தியையில் இலுப்பை மரத்தை அடைந்து மாதபூசைக்குரிய நைவேத்தியங்களை, மாதந்தோறும் முறையாகச்செய்து; மங் களா, வைஷ்ணவீ, மாயா, காலராத்ரீ, துர்த்யயா, மாஹா மாயா, மாதங்கீ, காளீ, கமலவாசினீ, சிவா, சஹஸ்ரசரணு, சர்வமங்கள ரூபிணீ!, என்ற இந்த நாமங்களால் அந்த இலுப்பை மரத்தடியில் பூஜித்து, அந்த இலுப்பை மரத்தில் தேவியாகிய மஹேஸ்வரி உண்மையாகவே எழுந்தருளியிருப்ப தாகத் தியானஞ்செய்து, இத்தோத்திரத்தை அகங்குழைந்து ஓதவேண்டும். அதாவது,

1. "நம: புஷ்கரநேத்ராயை ஜகத்தாத்ர்யை நமோஸ்துதே
2. மாஹேஸ்வர்யை மஹாதேவ்யை மஹாமங்கள மூர்த்தயே
3. பரமா பாபஹந்த்ரீச பரமார்க்க ப்ரதாயிநீ
4. பரமேஸ்வரீ ப்ரயோத்பத்தி, பரப்ரஹ்மஸ்வரூபிணீ
5. மததாத்ரீ மதோன்மத்தா மானகம்யா மஹோந்நதா
6. மநஸ்விநீ முநித்யேயா மார்த்தாண்ட ஸஹசாரிணீ
7. ஜய லோகேஸ்வரீ ப்ராக்ஞே ப்ரளயாம்புத சந்நிபே
8. மஹாமோஹ விநாசார்த்தம் பூஜிதாஸி ஸுரா ஸுரை
9. யமலோகா பாவகர்த்ரீ யமபூஜ்யா யமாக்ரஜா
10. யமநிக்ரஹ ரூபாச யஜநீயே நமோநம:

11. ஸமஸ்வபாவா ஸர்வேசி ஸர்வஸங்க விவர்ஜிதா
12. ஸங்கநாஸகரீ காம்யரூபா காருண்ய விக்ரஹா
13. கங்காலக்ரூரா காமாக்ஷீ மீனாக்ஷீ மர்மபேதிநீ
14. மாதுர்யரூப ஸீலாச மதுரஸ்வர பூஜிதா
15. மஹாமந்த்ர வதீமந்த்ர கம்யாமந்த்ர ப்ரியங்கரீ
16. மனுஷ்ய மானஸகமா மன்மதாரி ப்ரியங்கரீ
17. அஸ்வத்த வடநிம்பாம்ர கபித்த பதரீகதே
18. பநஸார்க்க கரீராதி க்ஷீரவ்ருக்ஷ ஸ்வரூபிணீ
19. துக்தவல்லீ நிவாஸார்ஹே தயநீயே தயாதிதே
20. தாக்ஷிண்ய கருணாரூபே ஜயசர்வஜ்ஞ வல்லபே."

1. தாமரைமலர்போல் திருக்கண்களை யுடையவளே! உனக்கு நமஸ்காரம். ஜகத்தைத் தரித்திருக்கின்றவளே! உனக்கு நமஸ்காரம்.
2. மஹேஸ்வரி! மஹாதேவி! மஹாமங்களமூர்த்யை!
3. பரமா! பாபஹந்திரி!(பாபங்களை நாசஞ்செய்கின்றவளே)! பரமார்க்கப் ரதாயினீ!
4. பரமேஸ்வரீ! பிரஜோத்பத்தீ! பரப்பிரம்மஸ்வரூபிணீ!
5. மததாத்ரீ (மதத்தைக் கொடுக்கின்றவளே)! மதோன்மத்தா! மாநகம்யா! மஹோந்நதா!
6. மநஸ்விநீ முநித்யேயா! மார்த்தாண்ட சஹசாரிணீ (சூரியனுடன் சஞ்சரிக்கின்றவளே)!
7. ஜயலோகேஸ்வரீ! பிராஜ்ஞே (எல்லாமறிந்தவளே)! பிரளயாம்புத சந்நிபே (பிரளயகால மேகத்துக்குச் சமானமானவளே)!
8. மகாமோக நிவிர்த்தியின்பொருட்டு தேவர்களாலும் அசுரர்களாலும் பூஜிக்கப்பட்டிருக்கின்றவளே!
9. யமலோகபாவகர்த்திரீ (யமலோகமில்லாமல் செய்கின்றவளே)! யமபூஜ்யா! யமாக்ரஜா (யமனுக்குத் தலைவியே)!
10. யமநிக்ரஹரூபா (யமனைச்சிக்ஷிக்கின்ற உருவமுள்ளவளே)! யஜநீ (யாகஞ் செய்யத்தக்கவளே)! உனக்கு நமஸ்காரம்.

11. எல்லா உயிர்களிடத்திலும் சமமானபாவனை யுடையவளே! சர்வேசி! சர்வசங்கவிவர்ஜிதா!
12. சங்கநாசகரீ! காம்யரூபா! காருண்ய விக்ரஹா!
13. கங்காலக்ரூரா! காமாக்ஷி! மீனுக்ஷி! மர்மபேதினீ!
14. மாதுர்யரூபா! சீலா! மதுரஸ்வரபூஜிதா!
15. மஹாமந்திரவதீ! மந்திரகம்யா! மந்திரப்ரியங்கரீ!
16. மநுஷ்யமானஸகமா (மனிதர்களுடைய இருதயத்தில் வசித்திருக்கின்றவளே)! மன்மதாரி! ப்ரியங்கரீ!
17. + 18. அரசு ஆல் வேம்பு மா விளா இலந்தை பலா எருக்கு சரீரம் முதலாகவுள்ள பாலுள்ள மரங்களின் உருவங்களை நிர்வகித்திருக்கின்றவளே! (உடையவளே.)
19. துக்தவல்லியில் வசித்திருக்கின்றவளே! தயனீயே! (தயையைச் செய்யத்தக்கவளே)! தயாதிகே!
20. தாக்ஷண்ய கருணுரூபே! ஜயஸர்வஜ்ஞ வல்லபே!

என்று ஸ்தோத்திரஞ்செய்ய வேண்டும். அப்படிச்செய்து முடித்தால் எல்லாச்சித்திகளும், விரதங்களின் நிறைவும் உண்டாகும். இந்த ஸ்தோத்திரத்தைப் பக்தி சிரத்தையுடன் செய்து வருபவர்கள் ஜன்மநோயும், பயமும், பகைவர்களினுல் துன்பங்களும் ஏற்படமாட்டாது. இன்னும் இம்மை மறுமை இரண்டிலும் முறையே பெரும்பேறுகளும் மோட்சமும் கிடைக்கும். இதை ஓதுவதினுல் பிதுர்களுக்குத் திருப்தியுண்டாகும். தேவியின் ஆராதனையைப் பக்தியுடன் முறையாகச் செய்வோர், தேவியினுடைய பாதாரவிந்தங்களை அடைவார்கள். தேவியினுடைய திருவருட்பிரசாத மகிமையினுல் தேவிபக்தர்கள் ஒருவரையொருவர், தேவிமீதுள்ள பத்தித்திறனுல், வணங்கியும்; நன்மதிப்பையும் பொருளையும் பெற்று, நரகவேதனை தமக்கு ஏற்படுமோ என்னும் பயமும் இல்லாமல், புத்திரபௌத்திரர்கள் விருத்தியுடனும், மேன்மேலும் தேவியின்மேல் பக்தி உண்டாகப்பெற்று இன்புற்று வாழ்வார்கள்.

தேவியை இலுப்பை மரத்தடியில் பூசிப்பதனுல் இவ்வளவு மகிமைகளும் திடமாகக்கிடைக்கும் என்பது உண்மை.

அத்துடன் அப்படியாகப் பூசிப்பவர்கள் தேகதிடகாத்திரராய் வாழ்வார்கள்.

நாள்தோறும், சாதாரணமாகத் தேவியின் நாமங்களை விடியற்காலத்தில் ஓதுவதனுல் சகல பாவங்களும் விலகிவிடும். பிதுர்க்களும் முத்தர்களாகிச் சிரேஷ்ட பதத்தை அடைகின்ருர்கள்.

இச்சந்தர்ப்பத்தில் தேவிக்குப் பிரியமுள்ள விரதங்களையும் கவனிப்போம். அவையாவன: அநந்த திரிதியை விரதம், ரசகல்யாணி விரதம், பேரானந்தத்தை விளைவிக்கின்ற ஆருத்திரா தரிசன விரதம், மங்களவார விரதம், சுக்கிரவார விரதம், கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி விரதம், பிரதோஷ விரதம், புரட்டாசி மாதத்திலும் சித்திரை மாதத்திலும் வருகிற நவராத்திரி விரதம், சோமவார விரதம், தேவி ஆலய வருடாவருட உற்சவதின விரதங்கள். ரசகல்யாணி விரதமாவது அந்தந்தத் திரிதியையோடு கூடியதினம் ஆகும். ஆருத்ரா தரிசன விரதமாவது, ஆருத்ரா நட்சத்திரத்தோடு திரிதியை கூடிய தினமாகும். பிரதோஷ விரதமாவது, இறைவன் அந்திப்பொழுதினில் இறைவியை மகிமைபொருந்திய இரத்திநுசனத்தில் இருக்கும்படி செய்து, தேவர்களெல்லோரும் சூழ்ந்திருக்கும் தருணத்தில் தேவியின் முன்பு திருநடனஞ் செய்தல். இவ்வேளையாகிய அந்திப்பொழுதே பிரதோஷகாலமெனப்படும். இவ்வேளையில் உணவு முதலியவைகளை விலக்கி, அம்பிகையைப் பூஜித்தல் வேண்டும். பக்ஷந்தோறும் இவ்விரதத்தை விசேஷமாகச் செய்யவேண்டும். சோமவாரத்திலும், பிரதோஷத்திலும் இரவில் உணவு உண்ணல் வேண்டும். இவ்விரத காலங்களிலும் உற்சவகாலங்களிலும் மூன்றுகாலஸ்நாநம், பிரம்மசரிய விரதம், மௌனம், பூமியில் சயனித்தல், நித்திய நைமித்திகபூசை, தானஞ்செய்தல், ஆனந்தஸ்துதி, ஸ்தோத்திரங்களைப் பாடல், குருதேவதாபக்தி ஜபம் ஆகிய காரியங்கள் செய்யத்தக்கவை. பால், காய், கனி, அன்னம் இவைகளில் ஒன்றை ஆகாரமாகக்கொள்ளல் வேண்டும். சாந்திராயணம் என்று கூறப்படும் விரதமும் கைக்கொள்ளவேண்டும். அதாவது சுக்ல பக்ஷம் பிரதமை முதல்

ஒவ்வொரு கவளமாக அதிகமாக்கி உண்டு, பின்பு கிருஷ்ண பக்ஷத்தில் ஒவ்வொரு கவளமாகக் குறைத்தும் உண்டு அமாவாசையன்று உபவாசமாகவும் இருக்க வேண்டும். இக்காலங்களில் உப்பு, புளிப்பு, காரம், வெங்காயம், தாம்பூலம், இரண்டுகால உணவு, பெண்சேர்க்கை, தெய்வசங்கற்பமான விஷயங்களுக்கு விரோதமாக நடத்தல் முதலியவைகளை நீக்கல் வேண்டும். சூதாடுவதிலும், பெண்களோடு வீண் வார்த்தைகள் பேசுவதிலும், நித்திரை செய்வதிலும், வாக்குவாதஞ் செய்வதிலும், நேரத்தை வீணுகக்கழித்தல் கூடாது. தேவியின் பூஜையிலும், ஸ்தோத்திரஞ் செய்வதிலும், ஆகம சாஸ்திர ஆராய்ச்சியிலும், நன்மையான வழியில் நேரத்தைப் பிரயோசனப்படுத்தல் வேண்டும்.

ஆகவே இப்படியாக இவ்விரதங்களை மனத்திருப்தியுடன் செய்யவேண்டும். அப்படி அனுஷ்டிப்பவர்கள் தேவியின் பாதாரவிந்தங்களை அடைவார்கள். அப்படிப்பட்டவர்களே தேவிக்கு விருப்பமுள்ளவர்களாகின்றுர்கள். அத்துடன் தேவி பக்தர்களாகின்றுர்கள். உற்சவகாலங்களில், உற்சவங்களையும் விரதங்களையும் மனங்கோணுமல் முழுவிருப்பத்துடன் செய்தல் வேண்டும். வருடாவருடம் உற்சவங்களையும் விரதங்களையும் முறையாகச் செய்பவர்களே தேவியின் பிள்ளைகளாகின்றுர்கள். தேவியின் அன்பையும் பெறுகின்றுர்கள். அதுமட்டுமல்லாமல் எல்லாப் பந்தங்களினின்றும் விடுபடுகின்றுர்கள்.

இப்படியாகத் தேவியை அன்னையாக்கித் தொழும்போது இறைவனின் பூரண அருளையும் பெறமுடிகிறது. இத்தகைய தேவியின் அருளைப்பெற்ற அன்பர்கள் பலர். அபிராமிபட்டர், இலட்சுமி, ஹயக்ரீவர், அகத்தியர், மனு, தசரதச் சக்கரவர்த்தி, துண்டீர மகாராஜா, திருஞானசம்பந்தர், பொய்யாமொழிப்புலவர், சோழராஜன், மூககவி, குணருத்திரர், ஆதிசேஷன், ஆதிசங்கர பகவத்பாதாள் ஆகியோர் அவருள் சிலர். அபிராமிபட்டர் அம்பிகையிடத்துக் கொண்டபக்தி மிகுதியினுல் இவ்வுலகினை மறந்த நிலையில் இருந்தபொழுதுதான் நாள் குறித்துக்கொடுக்கும் சரபோஜிமன்னனிடம் அமாவாசை

யினைப் பௌர்ணமி என்று கூறியதனால் மன்னனின் தண்டனைக்கு ஆளாகி நிற்கின்றார். அப்பொழுது தேவி அவ்வன்பனின் உயிர்காக்க வேண்டி இருள் நிறைந்த தினமாகிய அமாவாசை இரவிலே பூரணைச் சந்திரனை வானத்தில் வரவழைத்துக் கொடுத்தருளினார். இதனை யாவரும் எண்ணி உளம் உருகக்கூடியதாக அதாவது தேவியின் அருளை, பின் வரும் பாடலில் இருந்து நன்கு அறியக்கூடியதாக இருக்கின்றது. அப்பாடலாவது,

"அபிராமிபட்டர் நின்னருளினா வரசனுக்கு
கரிய விருளாகி நிறையும்
அமாவாசை காலத்தில் பூரணைச் சந்திரனை
யழைத்து முன் காட்ட விலையோ
சுபமான சங்கரர் தன்மதஸ் தாபனந்
துலங்கநற் சித்தி யெட்டுந்
தோன்றிடச் செய்துலகில் வாழவிலையோ, புகழ்
சொல்லறிய நவநாதரும்
இபமுறும் இந்திரனும் மன்மதனும் நால்வர்களும்
இனிய குறுமுனி கொங்கணர்
இவராதி யோருநின் றாவரண பூஜைசெய்
தின்னருள் பெறவில்லையோ
கபடமில்லா தெனைத் திருவடிக் காட்படக்
காப்பது நினக்கருமையோ
கருதரிய சிவபாலை புவனதிரி புரையான
கௌரி கண்மணி தேவியே."

இலட்சுமி: விஷ்ணுவின் சாபமேற்ற மகாலட்சுமி அம்பாளை வழிபட்டுத் தன் ஒளிபொருந்திய சுய வடிவத்தைப் பெற்றனள்.

ஹயக்ரீவர்: அம்பாளை வழிபட்டு அவளருளால் தாம் விரும்பியவாறே விஷ்ணுவின் அம்சத்தைப் பெற்றார்.

அகத்தியர்: அம்பாளின் அருளாமல் ஹயக்ரீவர் மூலம் ஸ்ரீதேவி மந்திர ரகசிய உபதேசம் பெற்று மனச்சாந்தியடைந்தார்.

மனு: எட்டாவது மனு அம்பாளை வழிபட்டுப் புண்ணிய பாவங்களை நன்கறிந்து நீதிவழியே செங்கோல் செலுத்தி வாழ்ந்திருந்து அம்பிகையின் திருவருட்பேற்றை அடைந்தார்.

தசரதச் சக்கரவர்த்தி: புத்திரப்பேற்றை விரும்பி வசிட்டரின் அறிவுரைப்படி காஞ்சிக்கு வந்து ஸ்ரீ தேவியைத் தரிசித்து, அப்பேற்றை அடைந்தார்.

துண்டீர மகாராஜா: ஆகாயபூபதி என்னும் மன்னனுக்கு அம்பாளருளால் கணபதியின் அவதாரமாக வந்தவதரித்தார். இவர் காஞ்சி மண்டலத்தைச் செம்மையாக அரசுபுரிந்து வந்தார். இன்னும் இவர் உற்சவமூர்த்தியை நோக்கித் தியானம் செய்துகொண்டிருக்கும் நிலையை நாம் ஆலயத்திற் (காஞ்சியில்) காணலாம்.

சோழ ராஜன்: விக்கிரம சோழன் என்னும் மன்னன் தன் சகோதரனுகிய சல்லியாபிதன் தன் நாட்டை அபகரித்துக்கொள்ள, மனம் வருந்தி, தன் மனைவியுடன் காஞ்சி வந்தடைந்து தேவியைத் தரிசித்து வழிபட்டுவந்தான். அம்பாளருளால் ஒரு பெண் குழந்தையைப் பெற்முன். அம்மகவைக் குலசேகரபாண்டியன் மகனுக்கு மணம் முடித்தான். இவன் தன் நாட்டை மீளவும் பெற்றுச் சிலகாலம் அரசாண்ட பின்னர் அரசபாரம் துறந்து காஞ்சிவந்தடைந்து தேவிக்குத் திருப்பணி செய்து முத்தி பெற்முன்.

மூககவி: ஊமையாகிய இவர் அம்பாளை வழிபட்டு, அவளருளால் ஊமைத்தன்மை நீங்கப் பெற்று, அம்பாளின்பேரில் அற்புதமான மூகபஞ்சசதி என்னும் 500 சுலோகங்களைக் கொண்ட தோத்திர நூலைச் செய்தார், இவரை ருத்திரமூர்த்தியின் அவதாரம் என்பர்.

குணருத்திரர், ஆதிசேஷன்: இவ்விருவரும் கலியுகத்தில் தேவியை முறையாகப் பூஜித்து அழிவில்லாத முத்தியைப் பெற்றனர்.

ஆதிசங்கர பகவத்பாதாள்: அம்பாளருளாலே அவனியில் அத்வைதத்தைப்பரப்பி, அற்புதங்கள் பல நிகழ்த்தி, எதிர்த்

தோர் அனைவரையும் வென்று, சர்வக்ஞ பீடாரோகணம் செய்து, ஷண்மதஸ்தாபனமும் செய்து, ஸ்ரீ காமாக்ஷி தேவியை வழிபட்டு, உலகமுய்ய அருள்நெறி காட்டி வாழ்ந்து, ஸ்ரீ தேவியின் பரிபூரண அருளைப் பெற்றார் என்பது அனைவரும் அறிந்ததேயாகும்.

இவ்வாறே யுகங்கள்தோறும் தேவர்களும், சூரிய, சந்திர, அக்கினி குலத்தரசர்களுமாக அளவற்றோர் ஸ்ரீ காமாக்ஷி தேவியை வழிபட்டு இக, பர பயன்களை அடைந்துள்ளார்கள்.

தேவியின் அருள் இருப்பின் ஊமையும் பேசுவான். அறிவிலியும் புலவனாவான். அவளால் இயலாதது ஒன்றுமில்லை. அவளிடத்து பக்தியுடையவராய், ஒழுக்கசீலராய் அவளருளை வேண்டி நிற்பார்க்கு தன்னருளை வாரி வழங்க தேவி காத்திருக்கின்றாள். இதனைப் பின்வரும் பாடலில் அதாவது

"வாணாளடைவர், வறுமையுறார், நன்மனை மக்கள் பொன்
பூண் ஆள் இடம் புகழ் போதம் பெறுவர், பின் புன்மையொன்றுங்
காணார் நின் நாமங் கருதுகின்றோர் ஒற்றிக் கண்ணுதல் பால்
மாணார் வமுற்ற மயிலே வடிவுடை மாணிக்கமே."

என்று இராமலிங்க அடிகள் தேவியின் அருள் உள்ளவர் பெறும் இன்பங்களை அழகாக எடுத்துரைக்கின்றார், வடிவுடை மாணிக்கமாலையில்.

இத்துடன் சக்தி வழிபாடும் அதன் சிறப்பும் ஒருவாறு நிறைவுறுகின்றது. இன்னும் விரிக்கிற் பெருகுமாகையால் இத்துடன் இனிது நிறுத்துவோமாக.

# 4. ஸ்ரீ காமாக்ஷி அம்பிகை திருவருட்பிரசாதம்

காஞ்சிப்பதியில் எழுந்தருளியிருக்கும் காமாக்ஷி அம்பிகையின் மூர்த்தமே இங்கும் எங்கள் மத்தியில் யாழ்ப்பாணத்திலுள்ள வண்ணைப்பதியில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தமாம். இங்கு எழுந்தருளியிருக்கும் காமாக்ஷி அம்பிகை எங்கள் குலதெய்வம். தேவியை வெளியுருவத்திலே பூசித்து வணங்குபவர்களுக்கும் 'குலம்' என்று பெயர். குலதெய்வமாவது ஒரு குலத்தவர் பரம்பரையாக வழிபட்டுவரும் தெய்வம். ஆகையினுல் எங்கள் குலத்திற்கு இன்னும் தெய்வமாய் விளங்குபவள் என்றும் பொருள்படக் கூறலாம்.

முதலாவதாக, காமாக்ஷி என்னும் பதத்தின் அர்த்தத்தைச் சிறிது சிந்திப்போம். அதாவது, 'காமாக்ஷி' என்னும் பதத்தில் 'கா' என்னும் எழுத்து, கலைமகளைக் குறிக்கின்றது. 'மா' என்னும் எழுத்து, திருமகளைக் குறிக்கின்றது. 'அட்சி (க்ஷி)' என்னும் எழுத்து, கண்களாகப்பெற்ற ஸ்ரீ காமாக்ஷியார் என்பதாம். அதாவது, இன்னும் விழங்கக் கூறுவோமாகில் 'கலைமகளையும், திருமகளையும் கண்களாகப் பெற்ற ஸ்ரீ காமாக்ஷியார்' என்பதேயாகும். இன்னும் இப்பதத்திற்கு, அதாவது, 'ஆசையைத்தரும் கண்களையுடையவள்' என்றும், 'இன்பத்தையே தனதாட்சியாக உள்ளவள்' என்றும், 'காத்தலைச்செய்யும் ஆட்சியையுடையவள்' என்றும், தனது திருக்கண் பார்வையாலேயே தன்மேல் பேரன்பு உடையவர்களைக் காத்து ரக்ஷிப்பவள்' என்றும், 'அன்பு நிறைந்த கண்களையுடையவள்' என்றும், 'பஞ்சேந்திரியங்களைப் பார்வையினுலேயே அடக்கி வைத்திருப்பவள்' என்றும், 'தாமத குணமே உருவமாய் அமைந்தவள்' என்றும் பொருள்கள் கொள்ளலாம்.

காமாக்ஷி அம்பிகையின் சிறப்பியல்புகளைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். அவையாவன, காமாக்ஷி அம்பிகை எண்மணிக் கோவையை அழகு மிகும்படியாக அணிந்தவளாயும், பாத

கிண்கிணி பாதத்தில் ஒலிப்பவளாயும், பொன்னுலாகிய கை வளையல்கள் நவரத்தினங்களினுலே பிரகாசித்துக்கொண்டிருப்பவளாயும், காஸ்மீரில் நெசவுசெய்யப்பட்ட சிவந்த சட்டையைத் தனத்திலே தரித்துக் கொண்டிருப்பவளாயும், கஸ்தூரி திலகம் திகழ்பவளாயும், செங்குவளை மலர்மாலையினுல் பொலிபவள் என்றும், கடலிலே அலையானது எழும்புவதைப்போலக் கிருபையானது பெருகிவந்து கொண்டே இருக்கப்பட்டவள் என்றும், சிவன் முதலாகியவர்களுக்கு இன்பத்தைக் கொடுப்பவள் என்றும், பிரமாவினுல் வணங்கப்பட்டவள் என்றும், காமன் முதலியவர்களின் அகங்காரத்தை அடக்கிப் பேரழகினுலே பிரகாசத்துடன் விளையாடுபவள் என்றும், கிளிபோலப் பேசும் வல்லமையுடையவள் என்றும், கிளியைக் கையிலே தாங்கி வேடிக்கையாக வினேதஞ்செய்கின்றவள் என்றும், ஆறு குணங்களை உடையவளென்றும், அடியார்கள் விரும்பும் பொருள்களை வழங்குவதையே முதன்மையான விரதமாகக் கொண்டவள் என்றும், இனிமையாக இன்னிசை விருந்தளிக்கும் அன்னம் என்றும், இன்னிசைவிருந்தளிக்கும் அன்னம் போன்றவர்களிடம் பேரன்புடையவள் என்றும், தாமரைபோன்ற உபய திருவடிகளை உடையவள் என்றும், காஞ்சி என்னும் ஆபரணம் இடையினைப் பொலிவுறச் செய்வதுபோலக் காஞ்சியம்பதியின் மத்தியிலே தெய்வமாக இருந்து பிரகாசத்தைக் கொடுப்பவள் என்றும், காஞ்சியில் வசிப்பவளென்றும், கந்தருவ அமர சித்தசாரணர்கள் தத்தம் மனைவியர்களுடன் கூடிவந்து வணங்கும் திருவடிகளையுடையவள் என்றும், உன்னதமான புன்னகையோடு விளங்கும் திருமுகமுடையவள் என்றும், கங்கையைச் சடாமுடியிலே தரித்தவராகிய பரமசிவனுல் அணைக்கப்பட்டவள் என்றும், விஷ்ணு பிரமா இந்திரன் முதலிய தேவர்கள் கேள்விப்பட்டுவரும் காமமோக்ஷ பீடத்திலிருப்பவள் என்றும், வேதாந்தங்களினுலும் ஆகமங்களினுலும் அறிந்து கவரக்கூடிய சரிதமுடையவள் என்றும், பொன் போன்ற சரீர ஒளியை உடையவள் என்றும், கற்பனைக் கெட்டாத அழகிய சரீரத்தையுடையவள் என்றும், மூலாதாரம் முதலாக ஆஜ்ஞை ஈருகவுள்ள ஆருதாரங்களுடன் கூடிய எல்லாச் சக்கரங்களின் மத்தியத்தினை இடமாக உடை

யவள் என்றும், ஆகாயம் முதலிய ஸமஸ்தபூதாதிகளை நிர்வகித்திருப்பவள் என்றும், ஹ்ரீம் என்னும் பீஜாக்ஷரஸஹிதப் பிரணவத்தில் வீற்றிருப்பவள் என்றும், பிரணவஸ்வரூபி என்றும், பிரணவாக்கரங்களாகிய — அதாவது 'அ'காரமாகிய சூரியகலையும், 'உ'காரமாகிய சந்திரகலையும் 'ம'காரமாகிய சுழுமுனையும் கூடிய - அறிவின்கண்ணே அம்பிகையானவள் ஆன்மஞானவடிவாக இருப்பவள் என்றும், பிரமனுக்கு இன்பத்தை அருளுபவளென்றும், சித்திகளில் தேர்ச்சியடைந்த மேலோர்களுக்கெல்லாம் ஞானமயமான சுகத்தைப் பிரஸாதித்து அருளுபவளென்றும், சிவபெருமானுக்கு இன்பம் உண்டாக்குபவளென்றும், தாமரைமலர்மேல் எழுந்தருளியிருப்பவளென்றும், ஒளிவீசும் கைவளையல்களை திருக்கரங்களில் பூண்டவளென்றும், பொன்போன்ற ஒலியை உடையவளென்றும், இன்னும் பலவாறாகிய சிறப்பியல்புகளை உடையவளென்றும் ஆதாரங்களுடன் கூறப்பட்டிருக்கின்றன.

நாம் எல்லோரும் ஸ்ரீ காமாக்ஷி அம்பிகையைப் பலவாறுகப் பாடிப்போற்றி அவளுடைய அருளைப் பெறலாம். அதாவது, ஸ்ரீ காமாக்ஷி அம்பிகையுடைய திருவருட் பிரசாதத்தை அடையலாம் என்பதாம். இப்பொழுது, நாம் சிறிது சிந்திக்க வேண்டிய ஒருநிலை இருக்கின்றது. அது என்னவென்றால், 'ஸ்ரீ காமாக்ஷி அம்பிகை எவ்வாறு தன்னுடைய அருட்பிரசாதமாகிய வரப்பிரசாதத்தை அன்பர்களுக்கு வழங்குகின்றாள்' என்பதுதான். ஸ்ரீ காமாக்ஷி அம்பிகை தனது நான்கு கைகளிலும், தோமரம், துரோட்டி, கரும்புவில், புஷ்பபாணம் என்பனவற்றைத் தாங்கியிருக்கின்றாள். ஆனால் அபயவரத கரங்களென்று கூறப்படும் கரங்கள் உடையவள் அல்ல. அப்படிப்பட்ட கரங்களினால் செய்யும் தொழில்களைச் செய்யாமலும் விடவில்லை. ஆகையினால், அணைத்தற் தொழிலையும், காத்தல் தொழிலையும் எப்படிச் செய்கின்றாள். அதாவது, 1. ஸ்ரீ காமாக்ஷி அம்பிகையோ அவ்விரு தொழில்களையும் தமது பாதங்களினாலேயே செய்கின்றாள் என்று வேதங்கள் கூறுகின்றன. 2. இன்னும் அம்பாளுடைய திருவடிகளே அன்பர்களது இஷ்டகாமியங்களை அவர்கள் நினைத்ததிலும் பார்க்க

அதிகமாக வழங்குகின்றனவாம். இவற்றை விளங்கக்கூடிய தாக அமைந்துள்ள, அபிராமிபட்டர் அருளிச்செய்த அபிராமியந்தாதிச் செய்யுள்கள் மூன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன,

"வவ்விய பாகத் திறைவரு நீயு மகிழ்ந்திருக்குஞ்
செவ்வியு முங்க டிருமணக் கோலமுஞ் சிந்தையுள்ளே வந்து
யவ்வியந் தீர்த்தென்னை யாண்டபொற் பாதமு மாகி
வெவ்விய காலனென் மேல்வரும் போது வெளிநிற்கவே."

"ஆசைக் கடலி லகப்பட் டருளற்ற வந்தகன்கைப்
பாசத்தி லல்லற் படவிருந் தேனைநின் பாதமென்னும்
வாசக் கமலந் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை யென்சொல்லு வேனீசர் பாகத்து நேரிழையே."

"விரவும் புதுமல ரிட்டுநின் பாத விரைக்கமல
மிரவும் பகலு மிறைஞ்சவல் லாரிமை யோரெவரும்
பரவும் பதமு மயிரா வதமும் பகீரதியு
முரவுங் குலிசமுங் கற்பகக் காவு முடையவரே."

இன்னும் இதன் சார்பாகத் தேவி மானசபூசை அந்தாதியில் வரும் செய்யுள் ஒன்றும் தரப்பட்டிருக்கிறது. அதாவது,

"கதிதரு வேமெனக் கையினிற் காட்டும் கடவுளர்போல்
விதிதரு கைகள் வெளிப்படக் காட்டுதல் வேண்டுமதோ
துதிதரு வோர்க்குத் துயர்நீக்கம் வாழ்வுமுன் தூயவடி
அதிதரு மேயன்னை யன்றெவ் வாறிணை யாவர்நிற்கே."

இது மட்டுமா! தேவியானவள், தனது பாதாரவிந்தங்களை மனதிலே இருத்தித் தியானித்து வணங்கும் அடியார்களின் துயரத்தையே மாற்றிவிடுகின்றுளாம். இக் கூற்றை, ஸ்ரீ காமாக்ஷி அம்பிகைமேல் பாடப்பட்ட ஒரு விருத்தப்பாவின் ஒரு பகுதியிலிருந்து அறியக்கூடியதாக இருக்கின்றது. அதாவது, "சிந்தைதனிலுன் பாதந்தன்னையே தொழுமவர்கள் துயரத்தை மாற்றிவிடுவாய்" என்றவாறு.

இன்னும் மும்மூர்த்திகளுமே தேவியினுடைய பாதார விந்தங்களை வணங்குகின்றனர். அத்தகைய தேவியை வணங்கிடில் மும் மூர்த்திகளையும் வணங்குதல் போன்றதாகும். இதனையே,

"பங்கயன் மாலும் பரமனும் கூப்பியுன்
பங்கய பாதங்கள் தம்முடி வைப்பரால்
பங்கய மாமுன்றன் பாதங்கள் போற்றிடில்
பங்கையன் மால் பரமன் பூஜையாகுமே."

என்று சௌந்தர்ய லகரி நூல் கூறுகிறது.

ஆகையினால், இதேபோல, நாம் எல்லோரும் ஸ்ரீ காமாக்ஷி அம்பிகையின் பாதாரவிந்தங்களை மனதினாலும், செயலினாலும் பூசித்து வணங்கி, அம்பிகையின் திருவருட் பிரசாதத்தைப் பெற்று முத்தியின்பம் அடைவோமாக!

"நின்று மிருந்துங் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையின்
ஒன்று மரும்பொரு ளேயரு ளேயுமை யேயிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே."

"கோமள வல்லியை யல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை யேதமி லாளை யெழுதரிய
சாமள மேனிச் சகலக லாமயி றன்னைத் தம்மால்
ஆமள வுந்தொழு வாரெழு பாருக்கு மாதிபரே."

(அபிராமி அந்தாதி)

# 5. ஸ்ரீ காமாக்ஷி ஸ்தோத்திரம்

## தேவியின் திருநாம அர்ச்சனை 108.

''அம்ம ணீ! ஜக தம்பி கே! கரு ணாக ரீ! பர மேஸ்வரீ!
கண்ம ணீ! ஜெய கௌரி, காங்கயி, கார்த்தி கே! திரி நேத்திரி!
தண்ம யீ! உப சாந்தி னி! சிவ சாம்ப வீ! ஏ காம்பரீ!
சின்ம யீ! சுப சீலி, மாலினி, தேவி, சௌந்தரீ, ஓம் நமோ!

பத்ர காளி,துர்க் கா,ப வானி, பராசக் தீ!பரி பாலினி!
சித்சொ ரூபிணீ, சிம்ம வாகினி, திவ்ய ராஜரா ஜேஸ்வரி!
வித்வ பூஷணி, மீன லோசனி, வீர மர்த்தனி, விமலினி,
சத்ய வாசனி, நித்ய கன்னி, தயாப ரீ!நம, ஓம் நமோ!

குண்ட லீ!சந்த்ர மண்ட லீ!இளங் கோம ளீ!இன்ப ஸ்யாமளீ!
சண்டி கா,சா முண்டி, பைரவி, சாவித் ரீ!ஜெப காயத்ரி!
அண்டர் நாயகி, ஆபத் பாந்தவி, அமுத ஞானப யோதரீ!
தொண்டர் சாதகி, தூய வானதி, சோம சேகரி, ஓம் நமோ!

சுத்த சக்தி, சுடர்க்கொ டீ!திவ்ய சுந்த ரீ,ஸ்ரீபு ரந்தரீ!
வித்த கீ!தெய்வ நர்த்த கீ!ஜப விஜயீ, பாபவி நாசினி,
சித்த ரஞ்சனி, தெய்வ குஞ்சரி, தேவ தா, உமா பார்வதி!
நித்ய வாணி, நிரஞ்ச னீ!மலை நீலி, சங்கரி, ஓம் நமோ!

சந்த்ர மௌளி, சரஸ்வ தீ!திவ்ய சார தா!ஜய பாரதீ,
சுந்த ராங்கி, சுரநு தா,விஸ்வ சோபி நா,சம்ப்ர பாவதி!
மந்த்ர ரூபிணீ, மாப கவதி, மாஹி ஷாசுர மர்த்தனீ!
தந்த்ர சாதனி, செஞ்ச டாதரி, சர்வ தாரகி, ஓம் நமோ!

அஷ்ட லட்சுமி, அபய ஹஸ்தனி, அமலி னீ! செங் கமலினி,
நிஷ்டை யோகினி, நிமல வாகினி, நிஷ்க ளங்கசந் யாசினி!
துஷ்ட நிக்ரஹி, தூய வைஷ்ணவி, ஜோதி வேணீ, சுமங்கலீ!
சிஷ்ட ரட்சகி, ஸ்ரீவ ராகினி, சீத ளீ! நம ஓம் நமோ!

பூர ணீ!ஞான பூஷ ணீ!வேத போதி னீ, தர்ம சாதனீ!
ஆர ணீ!நவ சீர ணீ!உல காண்ட வீ!உக்ர தாண்டவீ!
கார ணீ!சிவ காமி னீ! ஜீவ காரு ணீ, ஜகன் மோகினி!
நார ணீ!பவ தார ணீ!புவி நாய கீ!நம ஓம்நமோ!

(பரமஹம்ஸ தாசன்)

# ஸ்ரீ காமாக்ஷியம்மன் பதிகம்

புவமைொரு பதிஞன்கு மமரர்விண்ணவர்முனிவர்
போற்றியே தொழுதுபணியும்
பொன்னளினபாதமும் பருவமதிவதனமும்
பூரணகடாக்ஷ வாக்யப்
பூவிலுறைவண்டுலவு கூந்தலுஞ்சிந்துரப்
பொட்டிட்டநுதலு மூன்றும்
பிறையொற்றபுருவமுங் குமிழமலர்நாசியும்
பொன்றோடணிந்த செவியும்
பவழவாயிதழும்வெண் முத்துக்குநிகருற்ற
பல்லழகு மருள்கடைக்கண்
பார்க்கப்ரகாசமாய் விஸ்வகுலமாந்தர்மேற்
பக்ஷநயனப் பார்வையும்
மேவல்செயுமடமாத ராலாத்தியேத்தயாழ்
இசைகணியர் நடனமாட
வெழில்பெறுமியாழ்நகர் வண்ணைப்பதிக்குள்வள
ரிறைவிகாமாக்ஷி யுமையே. 1.

வார்குழற்சடைநாக படமாடமார்பில்நவ
வச்ரமணி மாலையாட
வள்ளைக்கிணைச்செவியி னிற்சந்த்ரமுருகாட
மலரார மாடவிடையிற்
சீர்பூத்தபொன்ஞெட்டி யாணச்சதங்கைமணி
சிதறு தசைந்தாடவுஞ்
சிற்றுடுக்கிடையில்வெண் பட்டாடையாடச்
சிலம்பொலி பதத்திலாட
நீரணிசடாடவிய ராடமழுமானுட
நீயுமென் மன்றுளாடி
நின்றநிலைகண்கண்ட விஸ்வகுலமரபினர்கள்
நின்புகழ்கள் கொண்டாடவே
யேர்கொண்டகனகமணி மௌலியுமிசைந்தாட
வென்னுளம் பூரிக்கவே
வெழில்பெறுமியாழ்நகர் வண்ணைப்பதிக்குள்வள
ரிறைவிகாமாக்ஷி யுமையே. 2.

வள்ளல்கரபாத்ரகுரு வடிபரம்பரையோக
மார்க்கவுப் தேசரகஷ்யம்
மானிலத்தெவரறிவ ரேட்டினிலெழுத்தல்ல
வாயினுற் சொல்வதல்ல
தெள்ளுதமிழ்பலநூலி லுள்ளதுவுமல்லவது
தேடரிது பிர்மலகிதம்
திருவருள்கடாக்ஷவாக் கிவையெனச்செவிவளைத்
திருளகல வழிதிறந்து
சொல்லாதசொல்லையுந் தொடுகுறியினுண்மையுந்
தொண்டனு னுணர்வதென்றோ
துலைமுனையிலொளிபரவும் விஸ்வசற்குலதீப
சுடரே சுடற்கொழுந்தே
யெள்ளளவுமுன்மன மிரங்காதிருந்தசெய
லேதுகுறை யோவறிகிலே
னெழில்பெறுமியாழ்நகர் வண்ணைப்பதிக்குள்வள
ரிறைவிகாமாக்ஷி யுமையே, 3.

மூலத்துதித்தஙெ் கார்வட்டத்துளே
முதலெழுத் தூன்றிநடுவே
முனைசெழுத்தைச்சுழித் தரியெழுத்தினிலொட்டி
மூன்றெழுத் துச்சரிக்குங்
காலத்திலிரவிமதி நேருற்றுநிற்கவே
ககனத்து ளிருளுமற்றுக்
கனவற்றுநினைவற் றிராப்பகலுமற்றெல்லை
கரையற்று நிறையுமற்றுச்
சேலொற்றவிழிமாதர் மயலற்றஜெகதகுரு
சிந்தித் திறைஞ்சுமுன்றன்
சிற்றடிக்கவர்கள்போ லடியவர்தொழும்பனேன்
சேவைசெய வருள்புரிகுவாய்
வேலொத்த நயனத்தி சீலத்தரிதயத்துள்
மேவிவிளை யாடுமயிலே
வெழில்பெறுமியாழ்நகர் வண்ணைப்பதிக்குள்வள
ரிறைவிகாமாக்ஷி யுமையே. 4.

கள்ளமனதின்கட் டறுத்தமென்றுளருவார்
கழருவார் வாய்ஞானமாய்க்
கற்றுணர்ந்தோர்கண்முன் றர்க்கமிடுவார்பெருங்
கதைகளையும் நீட்டிவிடுவார்

உள்ளத்திலன்பிலாப் பூசைசெய்வார்வா
யுதட்டைமுணு முணுமுணுப்பார்
ஊமைபோல்மௌனமுஞ் சாதிப்பர்செபமணி
யுருட்டுவார் பெண்ணாசையைத்
தள்ளினோமென்பரக் கள்ளக்குருக்கோல
ஜாலப் புரட்டர்கூட்டஞ்
சாராதவம்பநா ளின்பதத்தன்பரடி
சாரவரு டருண்மதிப்பால்
வெள்ளப்பெருங்கருணை வாரியேவிஸ்வகுல
விலையிலா மாணிக்கமே
வெழில்பெறுமியாழ்நகர் வண்ணைப்பதிக்குள்வள
ரிறைவிகாமாக்ஷி யுமையே. 5.

பில்லிசூனியமேவல் வைப்புமாரணமந்த்ர
பூதமெதிர் வரினுமஞ்சேன்
பிர்மராக்ஷசிஜடா முனியடங்காத்துக்ஷ்ட
பேய்பிசா சுக்குமஞ்சேன்
யெல்லைப்பிடாரிரண களவுதிரகாட்டேரி
யிரிசிசா முண்டியிருளன்
யெதுவரினுமெம்பகைஞ ரிடர்செயினுமதவேழ
மெதிர்மறித் திடினுமஞ்சேன்
உள்ளொன்றுவைத்துப் புறம்பொன்றுபேசுமவ
ருறவுக்கென் னுடலஞ்சியே
உன்னிருபதம்பிடித் தேனினிவிடேனென்ற
னுண்மைநீ யறியாததோ
வில்லனையபுருவநடு வணையிலொளிவாய்நின்ற
விஸ்வகுல நவரத்னமே
வெழில்பெறுமியாழ்நகர் வண்ணைப்பதிக்குள்வள
ரிறைவிகாமாக்ஷி யுமையே. 6.

கல்லாதமூடர்கன் னெஞ்சர்வஞ்சகர்கோளர்
கள்வர்கா முகரமும்பர்
கற்றுமறிவற்றதுன் மார்க்கரேழைகளைக்
கடிந்திடுக் கம்விளைக்கும்
பொல்லாதமூர்க்கர்புது வாழ்வினர்கள்வீண்டம்பர்
பொய்கொலைக் கஞ்சிடாதோர்
போகவிட்டுப்புறங் கூறுமிடுமடையரிப்
புன்மையோர் பதினைவரை

நல்லாரெனப்புகழ்ந் திசைகவிசொலாதுநா
ளுளாவதென்று விமலாய்
நானலால்நீயுமிலே நீயலால்நானுமிலே
நான்வேறு சொலவுமிலேயே
இல்லாதுரைத்தனே விஸ்வசற்குலதீப
மேற்றியே போற்றுமமலாய்
வெழில்பெறுமியாழ்நகர் வண்ணைப்பதிக்குள்வள
ரிறைவிகாமாக்ஷி யுமையே. 7.

தந்தைதாய்பிறவியுந் துணைவியுமிருந்தென்ன
தரணிமுழு தாண்டுமென்ன
தக்கோனெனப்பெய ரெடுத்தென்னவளவற்ற
தனகிரி குவித்துமென்ன
மைந்தருமிருந்தென்ன வெழுசுற்றுமதிலுமணி
மாளிகை யிருந்துமென்ன
மதகரிகள்பரிகள்நர வாகனமிருந்தென்ன
வாழ்நாள் முடிந்தசமயம்
சொந்தமோவிதுவெலாம் யெமதூதருக்குவகை
சொல்லியெதிர் வாதாடுமோ
சொர்க்கவழிகாட்டுமோ விஸ்வசற்குலதீப
சொர்னமே நினையன்றிவே
றெந்தவழிகண்டுகரை யேறியான்றேறுவே
னீதுளவு புகல்வையம்மா
வெழில்பெறுமியாழ்நகர் வண்ணைப்பதிக்குள்வள
ரிறைவிகாமாக்ஷி யுமையே. 8.

நீரின்மேற்குமிழிக்கி நிகரானயாக்கையிது
நிலையாத செல்வமென்றே
நினையாதவம்பனிலும் வம்பனுனல்லோரை
நிந்தித்த கொடியவம்பன்
பாருக்குளெவர்களையு மதியாதவம்பனுன்
பாவையர்கள் சரசத்திலே
பலகாலமுந்தெரிந் துழலும்வம்பன்புண்ய
பாவமறி யாதவம்பன்
யாருக்குமிடையூ றிடுக்கஞ்செய்வம்பனுண்
ணறிவுநெறி யற்றவம்பன்
அம்மம்மநின்பதத் தன்பிலாவம்பனேற்
காருதவி யகிலத்திலே

வேறுதவிநினையன்றி வேண்டிலேனவதன
    விஸ்வசற் குலதீபமே
வெழில்பெறுமியாழ்நகர் வண்ணைப்பதிக்குள்வள
    ரிறைவிகாமாக்ஷி யுமையே. 9.

நீலவிழிமடமாத ரிடையிலேநடையிலே
    நிமையிலிடு கருமையிலே
நீள்கருங்குழலிலே குழல்முடிசெருக்கிலே
    நெற்றிநுத லின்பொட்டிலே
வாலைப்பிராயமீ ரெட்டுவயதொட்டிலே
    வைம்பவள வாய்வெட்டிலே
மதிவதனமஞ்சட் பகட்டிலேகந்தமலர்
    வாடைவா சனைநெட்டிலே
கோலவன்னத்துயிற் கட்டிலேமெட்டிலே
    கொவ்வைவா யதரத்திலே
கொண்டுசென்றலையுமென் சிந்தையையடக்கியாட்
    கொள்ளவோ ருளவுபுகல்வாய்
மேலவர்சகாய த்ரியம்பகன்பங்கில்வளர்
    விஸ்வசற் குலரத்னமே
வெழில்பெறுமியாழ்நகர் வண்ணைப்பதிக்குள்வள
    ரிறைவிகாமாக்ஷி யுமையே. 10.

நாகமுகன் வாழ்கநா மகள்வாழ்கவிருபத்து
    நாலரைக் கையன்வாழ்க
நதிவாழ்கமதிவாழ்க ரவிவாழ்கவனல்வாழ்க
    நங்கைபங் காளன்வாழ்க
யோககுருகரபாத்ர முனிபரம்பரைவாழ்க
    வுமையுமிமை யவரும்வாழ்க
வுலகளந்தோன்வாழ்க வயன்வாழ்கவருள்வாழ்க
    வுலகமா தாவும்வாழ்க
வாகமபுராணகலை நூல்பலவும்வாழ்கவர
    ஞர்ஜடா மகுடத்துள்நின்
றகிலமெங்கும்பெருகி வளரும்நிறைநதிகுல
    வரோதயன் சொக்கலிங்கந்
தேகங்குழைந்துநின் மீதுசொற்பதிகஞ்
    சிறந்துமென் மேலும்வாழ்க
தேவியம்பிகைகௌரி யம்மைகாமாக்ஷிதெருள்
    சீர்பதமும் வாழ்கமாதோ. 11.

(பழைய பாடல்கள்)

# தேவி அஷ்டோத்தரநாமாவளி

1. ஓம் ரஜதாசல ஸ்ருங்காக்ரமத்யஸ்தாயை நமோ நம:
(வெள்ளிமலையின் சிகரநடுவில் இருப்பவளுக்கு நமஸ்காரம்.)

2. ஓம் ஹிமாசலமஹாவம்ஸ பாவனையை நமோ நம:
(ஹிமவான் என்ற பர்வதராஜனின் உயர்ந்த வம்சத்தைப் பரிசுத்தஞ் செய்தவள்.)

3. ஓம் ஸங்கரார்தாங்க ஸௌந்தர்ய சரீராயை நமோ நம:
(ஸ்ரீ சங்கரருடைய பாதி சரீரத்திற்கு அழகைக் கொடுக்கும் சரீரத்தையுடையவள்)

4. ஓம் லஸன்மரகதஸ்வச்ச விக்ரஹாயை நமோ நம:
(பிரகாசிக்கும் மரகத மணியைப்போல அழகான தேகமுடையவள்.)

5. ஓம் மஹாதிசய ஸௌந்தர்ய லாவண்யாயை நமோ நம:
(மிகவும் அதிசயிக்கத்தக்க அழகையுடையவள்.)

6. ஓம் ஸஸாங்க ஸேகரப்ராண வல்லபாயை நமோ நம:
(சந்த்ரசேகரனுக்கு உயிர்போல் ப்ரியமானவள்.)

7. ஓம் ஸதாபஞ்ச சஸாத்மைக்ய ஸ்வரூபாயை நமோ நம:
(பஞ்சதஸாக்ஷரியில் ஐக்கியமான சரீரத்தையுடையவள். அதன் வடிவமாகவேயிருப்பவள்.)

8. ஓம் வஜ்ரமாணிக்ய கடககிரீடாயை நமோ நம:
(வைரம் மாணிக்கம் தங்கம் இழைத்ததான கிரீடம் உடையவள்.)

9. ஓம் கஸ்தூரி திலகோத்பாஸி நிடிலாயை நமோ நம:
(கஸ்தூரி திலகத்தால் பிரகாசிக்கும் நெற்றியை உடையவள்.)

10. ஓம் பஸ்மரேகாங்கித லஸன் மஸ்தகாயை நமோ நம:
(விபூதி ரேகையால் அழகான நெற்றியை உடையவள்.)

11. ஓம் விகசாம்போருகதள லோசனையை நமோ நம:
மலர்ந்த தாமரை இதழ்போன்ற கண்களை உடையவள்.)

12. ஓம் ஸரச்சாம்பேய புஸ்பாப நாசிகாயை நமோ. நம:
(சரத் காலத்தில் மலர்ந்த சண்பக புஷ்பம்போன்ற மூக்கை உடையவள்.)

13. ஓம் லஸத் கனக தாடங்க யுகளாயை நமோ நம:
(பிரகாசிக்கின்ற ஸ்வர்ண இரு தாடகங்களை உடையவள்.)

14. ஓம் மணிதர்ப்பண ஸங்காஸ கபோலாயை நமோ நம:
(இரத்ன கண்ணடிபோல் பிரகாசிக்கின்ற கன்னமுடையவள்.)

15. ஓம் தாம்பூல பூரிதஸ்மேர வதனையை நமோ நம:
(தாம்பூலத்தால் நிறைந்து புன்சிரிப்புள்ள முகமுடையவள்.)

16. ஓம் ஸுபச்வ தாடிமீபீ ஜரதனையை நமோ நம:
(நன்கு பளுத்த மாதுளை முத்துப்போன்ற பற்களையுடையவள்.)

17. ஓம் கம்பு பூக ஸமச்சாய கந்தராயை நமோ நம:
(வலம்புரிச் சங்கம்போன்ற காந்தியுள்ள கழுத்தையுடையவள்.)

18. ஓம் ஸ்தூலமுக்தாபலோதார ஸுஹாராயை நமோ நம:
(பெரிய முத்துப்பவளங்களால் பிரகாசிக்கும் அழகான மாலையை உடையவள்.)

19. ஓம் கிரீஸபத்த மாங்கல்ய மங்களாயை நமோ நம:
(பரமசிவனுல் கட்டப்பட்ட மங்கள சூத்திரமுடையவள்.)

20. ஓம் பத்மபாஸாங்குஸ லஸத்கராப்ஜாயை நமோ நம:
(தாமரை, பாசம், அங்குசம் முதலியவைகளால் பிரகாசிக்கும் கைகளையுடையவள்.)

21. ஓம் பத்ம கைரவமந்தார ஸுமாலின்யை நமோ நம:
(தாமரை, ஆம்பல், மந்தார புஷ்பங்களாலான அழகிய மாலையை அணிந்தவள்.)

22. ஓம் ஸுவர்ணகும்ப யுக்மாப ஸுகுசாயை நமோ நம:
(தங்கக்குடம் போல் பிரகாசிக்கும் இரு ஸ்தனங்களையுடையவள்.)

23. ஓம் ரமணீய சதுர்பாஹு ஸம்யுக்தாயை நமோ நம:
(வெகு அழகான நான்கு கைகளுடன் கூடியவள்.)

24. ஓம் கனகாங்கத கேயூரபூஷிதாயை நமோ நம:
(தங்கத்தாலான தோள் வளை முதலான ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவள்.)

25. ஓம் ருகத்ஸௌவர்ண ஸௌந்தர்ய வசனையை நமோ நம:
(விசாலமானதும் ஸ்வர்ணம்போல் அழகானதுமான வஸ்திரம் தரித்தவள்.)

26. ஓம் ப்ருஹந்நிதம்ப விலசத் ஜகனையை நமோ நம:
(பெரிதாயும் விசாலமாயும் பிரகாசத்தோடு கூடியதுமான சரீரத்தின் இடைப்பிரதேசத்தை உடையவள்.)

27. ஓம் ஸௌபாக்ய ஜாத ஸ்ருங்கார மத்யமாயை நமோ நம:
(அழகிலிருந்து உண்டான ஸ்ருங்காரமான இடையை உடையவள்.)

28. ஓம் திவ்ய பூஷண ஸந்தோஹ ரஞ்சிதாயை நமோ நம:
(திவ்யாபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவள்.)

29. ஓம் பாரிஜாதகுணதிக்ய பதாப்யாயை நமோ நம:
(பாரிஜாதத்தைவிட அதிகமான குணமுள்ள பாதமுடையவள்.)

30. ஓம் ஸுபத்மராக ஸங்காஸ ஸரணையை நமோ நம:
(பத்மராகத்திற்குச் சமமான சரணங்களையுடையவள்.)

31. ஓம் காமகோடி மஹாபத்மபீடஸ்தாயை நமோ நம:
(காமகோடி மஹாபத்மபீடத்தில் இருப்பவள்.)

32. ஓம் ஸ்ரீ கண்டநேத்ரகுமுத சந்திரிகாயை நமோ நம:
(நீலகண்டனது கண்ணைச் சந்தோஷப்படுத்துபவள்.)

33. ஓம் ஸசாமர ரமாவாணி வீஜிதாயை நமோ நம:
(லட்சுமியாலும் சரஸ்வதியாலும் சாமரம் வீசப்படுபவள்.)

34. ஓம் பக்தரக்ஷண தாக்ஷண்யகடாக்ஷாயை நமோ நம:
(பக்தர்களைக் காக்கும் கடாட்சம் வாய்ந்தவள்.)

35. ஓம் பூதேசாலிங்கநோத்பூதகுலகாங்க்யை நமோ நம:
(சிவனுடைய ஆலிங்கனத்தால் மயிர்க்கூச்சலுண்டானவள்.)

36. ஓம் அனங்க ஜனகா பாங்க வீக்ஷணாயை நமோ நம:
(மன்மதனையுண்டுபண்ணும் கடைக்கண் உடையவள்.)

37. ஓம் ப்ரஹ்மோபேந்த்ரஸிரோரத்ன ரஞ்ஜிதாயை நமோ நம:
(ப்ரஹ்ம விஷ்ணுக்களின் ஷிரீட ரத்தினத்தால் அலங்கரிக்கப் பட்டவள்.)

38. ஓம் ஸசிமுக்ய அமரவதூ ஸேவிதாயை நமோ நம:
(இந்திராணி, முதலிய தேவஸ்திரீகளால் சேவிக்கப்பட்டவள்.)

39. ஓம் லீலாகல்பிதப்ரஹ்மாண்டமண்டலாயை நமோ நம
(லீலையாக ப்ருஹ்மாண்டத்தைப் படைப்பவள்.)

40. ஓம் அம்ருதாதிமஹாஸக்தி ஸம்ருதாயை நமோ நம:
(அம்ருதாதி மகாசக்திகளால் சூழப்பட்டவள்.)

41. ஓம் ஏகாதபத்ர ஸாம்ராஜ தாயிகாயை நமோ நம:
(சக்கரவர்த்திப் பதவியை அளிப்பவள்.)

42. ஓம் ஸனகாதி ஸமாராத்ய பாதுகாயை நமோ நம:
(சனகாதிகளால் பூஜிக்கத்தக்க பாதங்களையுடையவள்.)

43. ஓம் கலஸோத்பவ தூர்வாச பூஜிதாயை நமோ நம
(அகஸ்தியராலும் தூர்வாசராலும் பூஜிக்கப்பட்டவள்.)

44. ஓம் தேவரிஷி விஸ்தூயமான வைபவாயை நமோ நம:
(தேவரிஷிகளால் துதிக்கப்பட்ட மகிமையுடையவள்.)

45. ஓம் மத்தேபவக்த்ரஷட்வக்த்ர வத்ஸலாயை நமோ நம:
(விநாயகரிடமும் சுப்ரம்மண்யரிடமும் அன்புள்ளவள்.)

46. ஓம் சக்ரராஜ மஹாயந்த்ரமத்யவர்த்யை நமோ நம:
(ஸ்ரீ சக்கரத்தின் நடுவில் உள்ளவள்.)

47. ஓம் சிதக்நிகுண்டஸம்பூத ஸுதே ஹாயை நமோ நம:
(சைதன்ய அக்னிகுண்டத்தில் உண்டானவள்.)

48. ஓம் ஸஸாங்க கண்டஸம்யுக்த மகுடாயை நமோ நம:
(சந்திரனுடன்கூடிய கிரீடம் உடையவள்.)

49. ஓம் மத்தஹம்ஸ வதூமந்தகமனுயை நமோ நம:
(ஹம்ஸம்போன்ற நடையுள்ளவள்.)

50. ஓம் வந்தாருஜன ஸந்தோக வந்திதாயை நமோ நம:
(பக்தகணங்களால் நமஸ்கரிக்கப்பட்டவள்.)

51. ஓம் அந்தர்முக ஜனானந்த பலதாயை நமோ நம:
(தியானஞ்செய்வோருக்கு ஆனந்தம் அளிப்பவள்.)

52. ஓம் பதிவ்ரதாங்க னபீஷ்ட பலதாயை நமோ நம:
(கற்புள்ளவர் இஷ்டத்தை அளிப்பவள்.)

53. ஓம் அவ்யாய கருணாபூர பூரிதாயை நமோ நம:
(காரணமின்றிக் கருணை செலுத்துபவள்.)

54. ஓம் நிரஞ்ஜன சிதானந்த ஸம்யுத்தாயை நமோ நம:
(பற்றற்ற பரம்ருமத்துடன் சேர்த்தவள்.)

55. ஓம் ஸஹஸ்ர ஸூரிய ஸம்யுக்தப்ரகாஸாயை நமோ நம:
(ஆயிரம் சூரியன்போன்ற காந்தியுள்ளவள்.)

56. ஓம் ரத்ன சிந்தாமணி க்ருஹ மத்யஸ்தாயை நமோ நம:
(ரத்ன சிந்தாமணிக் கிரகத்தில் இருப்பவள்.)

57. ஓம் ஹானிவ்ருத்தி குணாதிக்ய ரஹிதாயை நமோ நம:
(குறைதல் வளர்தல் முதலிய குணமற்றவள்.)

58. ஓம் மஹாபத்மாடவி மத்ய நிவாஸாயை நமோ நம:
(தாமரை வனத்தின் நடுவில் இருப்பவள்.)

59. ஓம் ஜாக்ரத் ஸ்வப்ன ஸுஷுப்தீனாம்ஸாக்ஷி பூத்யை நமோ நம:
(விழித்தல் ஸ்வப்னம் தூங்குதல் இவைகளுக்கு சாக்ஷியாயிருப்பவள்.)

60. ஓம் மஹாதாபௌக பாபானாம் விநாஸின்யை நமோ நம:
(தாபத்தை அழிக்கும் பாபத்தை நீக்குபவள்.)

61. ஓம் துஷ்டபீதி மஹாபீதி பஞ்ஜனாயை நமோ நம:
(துஷ்டர் பயம் முதல் மஹாபயங்களை நீக்குபவள்.)

62. ஓம் ஸமஸ்ததேவதனுஜப்ரோகாயை நமோ நம:
(எல்லாத் தேவாசுரர்களையும் தூண்டுபவள்.)

63. ஓம் ஸமஸ்தஹ்ருத ஜாம்போஜ நிலயாயை நமோ நம:
(எல்லோருடைய ஹ்ருததாமரையிலும் இருப்பவள்.)

64. ஓம் அநாகதமஹாபத்ம மந்த்ராயை நமோ நம:
(அனாகதம் என்ற தாமரையில் இருப்பவள்.) (அனாகதம் என்பது ஷட்சக்கரங்களில் ஒன்று.)

65. ஓம் ஸஹஸ்ரார ஸரோஜாத வாஸிதாயை நமோ நம:
(ஸஹஸ்ராரம் என்னும் சிரசிலுள்ள தாமரையிலிருப்பவள்.)

66. ஓம் புனராவ்ருத்திரஹித புரஸ்த்தாயை நமோ நம:
(மறுபடி திரும்பாத டரத்திலுள்ளவள்.) (ஸ்ரீ நகரம் சென்றவர்கள் திரும்பமாட்டார்கள்.)

67. ஓம் வாணீ காயத்ரி ஸாவித்ரி ஸம்னுதாயை நமோ நம:
(சரஸ்வதி காயத்திரி சாவித்திரிகளால் துதிக்கப்பட்டவள்.)

68. ஓம் நீலா ரமா பூஸம்பூஜ்ய பாதாப்யாயை நமோ நம:
(நீலாதேவி ஸ்ரீ தேவி பூதேவிகளால் பூஜிக்கத்தக்க பாதாரவிந்தமுள்ளவள்.)

69. ஓம் லோபாமுத்ரார்ஸித ஸ்ரீமச் சரணாயை நமோ நம:
(லோபாமுத்திரையினால் பூஜிக்கப்பட்ட சரணமுடையவள்.)

70. ஓம் ஸஹஸ்ர ரதிஸௌந்தர்ய ஸரீராயை நமோ நம:
(ஆயிரம் ரதிபோன்ற அழகு வாய்ந்தவள்.)

71. ஓம் பாவனாமாத்ர ஸம்துஷ்ட ஹ்ருதயாயை நமோ நம:
(தியானமாத்திரத்தால் சந்தோஷப்படுபவள்.)

72. ஓம் நதஸம்பூர்ண விக்ஞான ஸித்திதாயை நமோ நம:
(வணங்குவோருக்கு பூரண அறிவையும் சித்தியையும் அளிப்பவள்.)

73. ஓம் த்ரிலோசன ஹ்ருதோல்லாஸ பலதாயை நமோ நம:
(சிவ விலாசமுள்ளார்களுக்குப் பலனளிப்பவள்.)

74. ஓம் ஸ்ரீ ஸுதாப்தி மணித்வீப மத்யகாயை நமோ நம:
(அம்ருதக் கடலிலுள்ள மணித்வீபத்திலிருப்பவள்.)

75. ஓம் தக்ஷாத்வர விநிர்பேத ஸதானாயை நமோ நம:
தக்ஷயக்ஞத்தை அழிக்கச்சாதனமானவள்.)

76. ஓம் ஸ்ரீநாத ஸோதரீ பூத ஸோபிதாயை நமோ நம:
விஷ்ணுவுக்குச் சகோதரியாய்ப் பிரகாசிப்பவள்.)

77. ஓம் சந்த்ர ஸேகர பக்தார்த்தி பஞ்ஜனாயை நமோ நம:
(சிவபக்தர்களின் துன்பத்தை அகற்றுபவள்:)

78. ஓம் சர்வோபாதி விநிர்முக்த சைதன்யாயை நமோ நம:
(சுத்த சைதன்யமானவள்.)

79. ஓம் நாமபாராயணாபீஷ்ட பலதாயை நமோ நம:
(நாமபாராயணஞ்செய்வோர் இஷ்டத்தை அளிப்பவள்.)

80. ஓம் ஸ்ருஷ்டி ஸ்திதி திரோதான ஸங்கல்பாயை நமோ நம:
(சங்கல்ப்பமாத்திரத்தால் சிருஷ்டி ஸ்திதி லயம் செய்பவள்.)

81. ஓம் ஸ்ரீ ஷோடஸாக்ஷரீ மந்த்ர மத்யகாயை நமோ நம:
(ஷோடஸாக்ஷரீ மந்திரத்தின் நடுவில் இருப்பவள்.)

82. ஓம் அநாத்யந்தஸ்வயம் பூத திவ்யமூர்த்தை நமோ நம:
(ஆதி அந்தம் இல்லாமல் தானே தோன்றிய தேகமுள்ளவள்.)

83. ஓம் பக்தஹம்ஸவதீமுக்ய நியோகாயை நமோ நம:
(ஹம்ஸவதீ முதலிய சக்திகளுக்கு ஆக்ஞை அளிப்பவள்.)

84. ஓம் மாத்ருமண்டல ஸம்யுக்த லலிதாயை நமோ நம:
(மாத்ருகா தேவிகளுடன் கூடி அழகாயிருப்பவள்.)

85. ஓம் பண்டதைத்ய மஹா ஸத்வ நாஸஞயை நமோ நம:
(பண்டாசுரன் பலத்தை அழித்தவள்.)

86. ஓம் க்ரூரபண்ட ஸிரச்சேத நிபுணயை நமோ நம:
(குரூரஞன பண்டன் தலையை அறுத்தவள்.)

87. ஓம் தராச்யுத ஸுராதீஸ ஸுகதாயை நமோ நம:
(பூமி விஷ்ணு இந்திரன் இவர்களுக்குச் சுகமளிப்பவள்.)

88. ஓம் சண்டமுண்ட நிஸும்பாதி கண்டஞயை நமோ நம:
(சண்டன் முண்டன் நிசும்பன் இவர்களைக் கண்டித்தவள்.)

89. ஓம் ரத்தாக்ஷ ரத்தஜிஹ்வாதி ஸிக்ஷணயை நமோ நம:
(ரத்தாக்ஷன் ரத்தஜிஹ்வன் முதலியோரைச் சிக்ஷித்தவள்.)

90. ஓம் மஹிஷாஸுர தோர்வீர்ய நிக்ரஹாயை நமோ நம:
(மஹிஷாசுரன் தோள் வலியை அடக்கியவள்.)

91. ஓம் அப்ரகேச மஹோத்ஸாக காரணயை நமோ நம:
(சிவனுக்கு உற்சாகம் அளிப்பவள்.)

92. ஓம் மஹேஸ யுக்த நடன தத்பராயை நமோ நம:
(மஹேஸ்வரனுடன் சேர்ந்து நடனம் புரிபவள்.)

93. ஓம் நிஜபர்த்ருமுஹாம்போஜ ஸிந்தஞயை நமோ நம:
(தன் பர்த்தாவின் முகத்தையே சிந்திப்பவள்.)

94. ஓம் வ்ருஷபத்வஜ விக்ஞான தபஸ்ஸித்யை நமோ நம:
(சிவக்ஞானத்துடன் தபஸ் சித்தி தருபவள்.)

95. ஓம் காமக்ரோதாதி ஷட்வர்க்க நாஸஞயை நமோ நம:
(காமம், கோபம், லோபம், மதம், மோகம், மாத்சர்யம் இவைகளை அழிப்பவள்)

96. ஓம் ஜன்ம ம்ருத்யு ஜராரோக பஞ்சஞயை நமோ நம:
(ஜனனம், மரணம், கிழத்தனம், ரோகம் இவைகளை அளிப்பவள்.)

97. ஓம் விரத்தி பக்தி விக்ஞான ஸித்திதாயை நமோ நம:
(வைராக்யம், பக்தி, ஞானம், சித்தி இவைகளை அளிப்பவள்.)

98. ஓம் ராஜாஜார்சித பதஸரோஜாயை நமோ நம:
(குபேரனல் அர்ச்சிக்கப்பட்ட பாதாரவிந்தமுடையவள்.)

99. ஓம் ஸர்வ வேதாந்த ஸித்தாந்த ஸுதத்வாயை நமோ நம:
சர்வ வேதாந்த தத்வமாயிருப்பவள்.)

100. ஓம் ஸ்ரீ வீரபக்த விக்ஞான நிதானயை நமோ நம:
(வீரபத்திரருக்கு விக்ஞானமளிப்பவள்.)

101. ஓம் அஸேஷ துஷ்ட தனுஜ ஸூதனயை நமோ நம:
(எல்லா அசுரர்களையும் நாசஞ்செய்தவள்.)

102. ஓம் சாக்ஷாத் ஸ்ரீ தெட்சணமூர்த்தி மனேக்ஞாயை நமோ நம:
(ஸ்ரீ தெட்சணமூர்த்தியின் மனதிற்கு இசைந்தவள்.)

103. ஓம் ஹயமேதாக்ர ஸம்பூஜ்ய மஹிமாயை நமோ நம:
(அஸ்வமேத யாகத்தால் பூஜிக்கத்தக்க மகிமைவாய்ந்தவள்.)

104. ஓம் தக்ஷப் பிரஜாபதி ஸுதாவே ஷாட்யாயை நமோ நம:
(தக்ஷன் பெண்ணுகத் தோன்றியவள்.)

105. ஓம் ஸுமபாணேக்ஷு கோதண்ட மண்டிதாயை நமோ நம:
(புஷ்ப்பபாணம் கரும்புவில் இவைகளால் அழகியவள்.)

106. ஓம் நித்ய யௌவன மாங்கள்ய மங்களாயை நமோ நம
நித்ய் யௌவனமும் மங்களமும் உடையவள்.)

107. ஓம் மஹாதேவ ஸமாயுக்த மஹாதேவ்யை நமோ நம:
(மஹாதேவனுடன் கூடிய மகாதேவியானவள்.)

108. ஓம் சதுர்விம்ஸதி தத்வைக ஸ்வரூபாயை நமோ நம:
(இருபத்திநாலு தத்வரூபமாயிருப்பவள்.) கர்மேந்திரியம், ஞானேந்திரியம் = (விஷயம் 20); மனம், புத்தி, சித்தம், அகங்காரம் = (4)

♠

# ஸ்ரீ காமாக்ஷி ஸ்துதி

1. தரணீமயீம் தரணீமயீம்
பவநம யீம் ககனத ஹன ஹோத்ருமயீம்
அம்பு மயீ மிந்து மயீம்
அம்ப மனுகம்ப மாதி மாமீக்ஷே.

(பூமியின் உருவமாயும் சூரியனின் உருவமாயும் வாயுவின் உருவமாயும் ஆகாசம் அக்கினி யாகம் செய்தவர்கள் இவர்களின் உருவமாயும் ஜலத்தின் உருவமாயும் சந்திரனின் உருவமாயும் இருக்கிறவளும் கம்பா நதிக்கரையில் வசிக்கிறவளும் உலகத்திற்கு முதற் தாயுமான காமாக்ஷியைக் கண்டேன்.)

2. தாபிஞ்ச ஸ்தபகத் விஷே தனுப்ருதாம்
தாரித்ரிய முத்ராத் விஷே ஸம்ஸாராக்ய தமோமுஷே
புராரிபோ: வாமாங்க ஸீமாயுஷே கம்பாதீர முபேயுஷே கவ
யிஹ்வாகு டீம் ஜக்முஜே [யதாம்
விச்வத் ராணபுஷே நமோஸ்து:
ஸததம் தஸ்மை பரம்யோதிஷே.

(தமாலப் பூங்கொத்தின் காந்தியையுடையவளும் பக்தர்களுடைய தாரித்ரியத்தைப் போக்குகிறவளும் ஜனனமரண இருட்டைப்போக்குகிறவளும், புராரியான பரமசிவனுடைய இடது பக்கத்தில் இருப்பவளும் கம்பாநதிக்கரையில் இருப்பவளும் கவிகளுடைய நாக்கில் வசிப்பவளும் உலகத்தை ரட்சிப்பவளும் பரம்ஜோதிஸ்ஸ்-மான காமாக்ஷியே! தங்களுக்கு நமஸ்காரம்.)

3. ராகா சந்த்ர ஸமானகாந்திவதனு னகாதிராஜஸ்துதா
மூகாநாமபீ குர்வதி ஸ்-ரது நீநீ காசவாக் வைபவம்
ஸ்ரீகாஞ்சி நகரி விகார ரஸிகா சோகாப ஹந்திரிஸதாம்
ஏகா புண்ய பரம்பர பரா பஸ்-பதே ராகாரிணீ ராஜதே

(பௌர்ணிமா சந்திரனின் காந்திக்குச் சமானமான காந்தியோடு கூடிய முகத்தை உடையவளும் இந்திரனுல் ஸ்தோத்திரம் பண்ணப் பட்டவளும் ஊமைகளுக்கும்கூட கங்காப் பிரவாகம்போல் வாக்கை அளிப்பவளும் ஸ்ரீ காஞ்சி நகரத்தில் விளையாடுவதில் ருசியுள்ளவளும் பக்தர்களுடைய சோகத்தைப் போக்குகிறவளும் சர்வோத்தமையும் உருவத்துடன்கூடிய ஸ்ரீ பரமசிவனின் புண்ணிய பரம்பரையுமான ஸ்ரீ காமாக்ஷி விளங்குகிறுள்.)

4. சந்த்ராபீடாம் சதுரவதனும் சஞ்சலா பாங்கலீலாம்
குந்தஸ் மேராம் குஸ பரனதாம் குந்தளோத் தூதபிருங்காம்
மரா ராதே: மதன சிகினம் மாம் சௌம் தீபயந்தீம்
காமாக்ஷிம் தாம் கவிகுல கிராம் கல்ப்ப வல்லீம் முபாசே.

(சந்திரனைச் சிரசில் ஆபரணமாகத் தரித்தவளும் அழகிய முகத்தையுடையவளும் சஞ்சலமான கடாட்சலீலையையுடையவளும்குந்தபுஷ்ப்பம் போல் அழகிய மந்தகாசத்தையுடையவளும் ஸ்தன பாரத்தினுல் வணங்கிய சரீரத்தையுடையவளும் முன் நெற்றி மயிரினுல் விரட்டப்பட்ட வண்டுகளையுடையவளும், மன்மதனை நிக்கிரகித்த பரமசிவனுக்கு காமாக்கினியை விருத்திசெய்கிறவளும் கவிகளின் கூட்டத்தின் வாக்குக்கு கல்ப்ப வல்லியுமான அப்படிப்பட்ட காமாக்ஷியை உபாசிக்கிறேன்.)

5. ச்ரியம் வித்யாம் தத்யாத்
ஜனனீ நமதாம் கீர்த்தி மமிதாம்
ஸுபுத்ரம் பிராததே தவ
ஜடிதி காமாக்ஷி! கருணா!
த்ரி லோக்யா மாதிக்யம் த்ரிபுர
பரி பந்தி ப்ரணயினீ
ப்ராணு மஸ்த்வத் பாதே
ஸமித துரிதே ஹிம் நகுருதே.

(ஹே காமாக்ஷி! நமஸ்கரிக்கிறவர்களுக்கு உனது கருணையானது தனம் வித்யை அளவற்ற கீர்த்தி நல்ல புத்ரன் மூவுலகிலும் மேன்மை யாக இருக்கும் தன்மை இவற்றைச் சீக்கிரமாகவே கொடுக்கிறது. த்ரி புரஸம்காரம் செய்த பரமேஸ்வரனின் ப்ரிய பத்தினியே! பக்தர்களின் பாவத்தை போக்குகிற தங்கள் சரணத்தில் செய்த நமஸ்காரம் எதைத் தான் கொடுக்காது.)

## சுமங்கலிகள் பிரார்த்தனை

1. ஓங்கார பூர்விகே தேவீ வீணாபுஸ்தக தாரிணீ!
வேதமாதர் நமஸ்துப்யம் அவை தவ்யம் ப்ரயச்சமே!!
பதிவ்ரதே மஹாபாகே பர்துஸ்ஸ ப்ரியவாதினி!
அவை தவ்யம்ஸ ஸௌபாக்யம் தேஹி த்வம் மம ஸுவ்ருதே!!
புத்ரான் பௌத்தாம்ஸ ஸௌக்கியம்ஸ!
ஸௌமங்கல்யம்ஸ தேஹிமே!!

(தீர்க்க ஸௌ மங்கல்யத்தை அளிக்கும் ஸ்ரீ காமாக்ஷி தேவியை பூசை செய்து நமஸ்கரித்து பிரார்த்திப்போமாக.)

இந்த ஸ்தோத்திரத்தைப் படிப்பதால் சகல கஷ்டங்களும் நிவிர்த்தி யாகி சர்வகாரிய சித்திகளும் உண்டாகி சர்வமங்களங்களையும் கொடுப் பாள் காமாக்ஷித் தாயே. இதை செவ்வாய் வெள்ளி பௌர்ணமி களில் வாசிப்பது ரொம்ப நல்லது. நித்தியமே வாசிப்பது மிகவும் நல்லது.

(முன்பு வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவாலயத்தில் சேவை செய்த குருவம்சத்தில் உதித்த ஏரம்ப குருக்கள் பஞ்சநதீஸ்வர குருக்கள் சர்வேஸ்வர குருக்கள் அவர்களின் அன்பளிப்பு.)

# ஸ்ரீ காமாட்சியம்மன் விருத்தம்

## காப்பு

### பின்முடுகு வெண்பா

**மங்களஞ்சேர் வண்ணைநகர் மன்னுங்காமாட்சிமிசைத்**
**துங்கமுள நற்பதிகஞ் சொல்லவே — திங்கட்**
**பயமருவும் பணியணியும் பரமனுளந் தனின்மகிழுங்**
**கயமுகவைங் கரனிருதாள் காப்பு.**

## ஆசிரிய விருத்தம்

*சுந்தரி சவுந்தரி நிரந்தரி துரந்தரி சோதியாய் நின்றவுமையே,*
*சுக்கிரவா ரத்திலுனை கண்டுதரிசித்தவர்கள் துன்பத்தை நீக்கிவிடுவாய்,*
*சிந்தைதனி லுன்பாதந் தன்னையே தொழுமவர்கள் துயரத்தை [மாற்றிவிடுவாய்,*
*ஜெகமெலா முன்மாய்கை புகழவென் னாலாமோ சிறியனால் முடிந்திடாது,*
*சொந்தவுன் மைந்தனு யெந்தனை யிரட்சிக்கச் சிறியகட னுன்னதம்மா,*
*சிவசிவமகேஸ்வரி பரமனிட ஈஸ்வரி சிரோன்மணி மனோன்மணியு நீ,*
*அந்தரி துரந்தரி நிரந்தரி பரம்பரி யநாதரட்சகியும் நீயே*
*அழகான வண்ணையிற் புகழாக வாழ்ந்திடு மம்மைகாமாட்சியுமையே. 1*

*பத்துவிரல் மோதிரம் எத்தனை பிரகாசமது பாடகந் தண்டை கொலுசும்,*
*பச்சை வைடூரிய மிச்சையா யிழைத்திட்ட பாதச்சிலம்பி னொலியும்,*
*முத்துமூக்குத்தியும் ரத்தினப் பதக்கமும் மோகன மாலையழகும்,*
*முழுதும் வைடூரியம் புஷ்பராகத்தினால் முடிந்திட்ட தாலியழகும்,*
*சுத்தமா யிருக்கின்ற காதினிற் கம்மலுஞ் செங்கையிற் பொன்கங்கணம்,*
*செகமெலாம் விலைபெற்ற முகமெலா மொளியுற்ற சிறுகாது கொப்பி [னழகும்.*
*அத்திவரதன் தங்கை சத்திசிவ ரூபத்தை யடியனாற் சொல்லதிறமோ,*
*அழகான வண்ணையிற் புகழாக வாழ்ந்திடு மம்மை காமாட்சியுமையே. 2.*

*கெதியாக வுந்தனைக் கொண்டாடி நினதுமுன் குறைகளைச் சொல்லிநின்றும்*
*கொடுமையா யென்மீதில் வறுமையை வைத்துநீ குழப்பமாயிருப்ப [தேனோ,*
*சதிகாரி யென்றுநா னறியாம லுந்தனைச் சதமாக நம்பினேனே,*
*சற்றாகிலும் மனது வைத்தென்னை ரட்சிக்க சாதகமுனக் கில்லையோ,*
*மதிபோல வொளியுற்ற புகழ்நெடுங் கரமுடைய மதகஜனை யீன்றதாயே,*
*மாயனிட தங்கையே பரமனது மங்கையே மயானத்தில் நின்றவுமையே,*

அதிகாரியென்றுநா ஞைசையாய் நம்பினே னன்புவைத் தென்னையாள்வாய்,
அழகான வண்ணையிற் புகழாக வாழ்ந்திடு மம்மைகாமாட்சியுமையே. 3.

பூமியிற் பிள்ளையாய்ப் பிறந்தும் வளர்ந்துநான் பேரான ஸ்தலமுமறியேன்,
பெரியோர்கள் தரிசன மொருநாளும் கண்டுநான் போற்றிக் கொண் [டாடி யறியேன்,
வாமியென்றுன்னைச் சிவகாமி யென்றே சொல்லி வாயினாற் பாடியறியேன்,
மாதாபிதாவினது பாதத்தை நானுமே வணங்கியொரு நாளுமறியேன்,
சாமியென் றேயெண்ணி சதுருடன் கைகூப்பி சரணங்கள் செய்துமறி [யேன்,
சற்குருவின் பாதாரவிந்தங்களைக் கண்டு சாஷ்டாங்க தெண்ட னறி [யேன்,
ஆமிந்த பூமியி லடியனைப்போல் மூடன் ஆச்சிநீ கண்டதுண்டோ,
அழகான வண்ணையிற் புகழாக வாழ்ந்திடு மம்மை காமாட்சியுமையே.

பெற்றதா யென்றுன்னை மெத்தவும் நம்பிநான் பிரியமாயிருந்தனம்மா,
பித்தலாட்டக்காரி யென்றுநா னறியாது உன்புருஷனை மறந்தனம்மா,
பத்தனு யிருந்துமுன் சித்தமுமிரங்காமல் பாராமுகம் பார்த்திருந்தால்,
பாலன்யா னெப்படி விசனமில்லாமலே பாங்குட னிருப்ப தம்மா.
இத்தனை மோசங்க ளாகாது ஆகாது இதுதர்ம மல்லவம்மா,
எந்தனை ரட்சிக்க சிந்தனைக ளில்லையோ யிதுநீதி யல்லவம்மா,
அத்திமுக னுசையா லிப்புத்திரனை மறந்தையோ அதையெனக்கருள் [புரிகுவாய்,
அழகான வண்ணையிற் புகழாக வாழ்ந்திடு மம்மை காமாட்சியுமையே. 5.

மாயவன் றங்கைநீ மரகதவல்லிநீ மணிமந்த்ர காரிநீயே,
மாயா சொரூபிநீ மகேஸ்வரியு மானநீ மலையரையன் மகளானநீ,
தாயே மீனாட்சிநீ சற்குணவல்லிநீ தயாநிதி விசாலாட்சிநீ,
தாரணியிற் பெயர்பெற்ற பெரியநாயகியும்நீ சரவணனை யீன்றவளும்நீ,
பேய்களுடனுடிநீ அத்தனிட பாகமதில் பேர்பெற வளர்ந்தவளும்நீ
பிரணவ சொரூபிநீ பிரசன்ன வல்லிநீ பிரியவுண்ணு முலையுநீ,
ஆயிமக மாயிநீ ஆனந்தவல்லிநீ அகிலாண்ட வல்லிநீயே,
அழகான வண்ணையிற் புகழாகவாழ்ந்திடுமம்மை காமாட்சியுமையே. 6.

பொல்லாத பிள்ளையா யிருந்தாலும் பெற்றதாய் புத்திகளைச் சொல்ல [விலையோ,
பேய்ப்பிள்ளை யானாலும் தான்பெற்ற பிள்ளையைப் பிரியமாய் வளர்க்க [விலையோ,
கல்லாகிலும்மூச்சு நில்லாமல் வாய்விடுங் கதறிநா னழுதகுரலில்,
கடுகதனி லெட்டிலொரு கூறுவதி லாகிலுன் காதினில் நுழைந்த [திலையோ,

இல்லாத வன்மங்க ளென்மீதி லேனம்மா இனிவிடுவ தில்லேசும்மா,
இருவரும் மடிபிடித்துத் தெருதனில் வீழ்வது மிதுதரும மல்லவம்மா,
எல்லாரு முன்னேயே சொல்லியே யேசுவா ரதுநீதி யல்லவம்மா,
அழகான வண்ணேயிற் புகழாக வாழ்ந்திடு மம்மை காமாட்சியுமையே. 7.

முன்னேயோர் சென்மாந்திர மென்னென்ன பாவங்கள் மூடனுன் செய்த
[னம்மா,
மெய்யென்று பொய்சொல்லி கைதனிற் பொருள்தட்டி மோசங்கள்
[பண்ணினேனே,
என்னவோ தெரியாது இட்சணந்தன்னிலே யிக்கட்டு வந்ததம்மா,
ஏழைநான்செய்த பிழைதாம் பொறுத்தருள் தந்து என்கவலே
[தீருமம்மா,
சின்னங்களாகுது ஜெயமில்லேயோ தாயே சிறுநாண மாகுதம்மா,
சிந்தைக ளென்மீதில் வைத்துநற் பாக்கியமருள் சிவசக்தி காமாட்சிநீ,
அன்னவா கனமேறி யானந்த மாகவுன் னடியன்முன் வந்து நிற்பாய்,
அழகான வண்ணேயிற் புகழாக வாழ்ந்திடு மம்மை காமாட்சியுமையே. 8.

எந்தனேப் போலவே செனனம தெடுத்தோர்க ளின்பமாய் வாழ்ந்திருக்க,
யான்செய்த பாவமோ வித்தனே வறுமையி லுன்னடியேன் தவிப்ப
[தம்மா,
உன்னேயே துணேயென் றுறுதியாய் நம்பினே னுன்பாதஞ் சாட்சியாக,
உனேயன்றி வேறுதுணே யினியாரையுங் காணேன் உலகதனி லெந்த
[னுக்குப்,
பின்னேயொன் றெண்ணிநீ சொல்லாம லென்வறுமை போக்கடித்
[தென்னே ரட்சி,
பூலோக மெச்சவே பாலன் மார்க்கண்டன்போல் பிரியமாய்க் காத்தி
[டம்மா,
அன்னேயே யின்னமுன் னடியேனே ரட்சிக்க அட்டி செய்யாதேயம்மா.
அழகான வண்ணேயிற் புகழாகவாழ்ந்திடு மம்மைகாமாட்சியுமையே. 9.

பாரதனி லுள்ளளவும் பாக்கியத்தோடென்னேப் பாங்குடனி ரட்சிக்கவும்,
பத்தியா யுன்பாதம் நித்தந் தரிசித்த பாலருக் கருள்புரியவும்,
சீர்பெற்ற தேகத்தில் சிறுபிணிகள் வாராமல் செங்கலிய னணுகாமலும்,
சேயனிட பாக்கியஞ் செல்வங்க ளேத்தந்து ஜெயம்பெற்று வாழ்ந்து
[வரவும்,
பேர்பெற்ற காலனேப் பின்றொடர வொட்டாமற் பிரியமாய்க் காத்தி
[டம்மா,
பிரியமா யுன்மீதில் சிறியனுன் சொன்னகவி பிழைகளேப் பொறுத்து
[ரட்சி.
ஆறதனில் மணல்குவித் தரியபூசை செய்தவென் னம்மை யேகாம்பரி
[நீயே,
அழகான வண்ணேயிற் புகழாக வாழ்த்திடு மம்மை காமாட்சி
[யுமையே. 10.

எத்தனை செனனம தெடுத்தேனே தெரியாது இப்பூமி தன்னிலம்மா,
இனியாகிலுங் கிருபை வைத்தென்னை ரட்சியுமினிஜனன மெடுத்தி
[டாமல்,
முத்திதர வேணுமென் றுன்னையே தொழுதுநான் முக்காலும் நம்பினேனே,
முன்பின்னுந் தோணுத மனிதரைப் போலநீ முழித்திருக் காதேயம்மா.
வெற்றிபெற வுன்மீதில் பத்தியாய் நான்சொன்ன விருத்தங்கள்
[பதினொன்றையும்,
விருப்பமாய்க் கேட்டுநீ யளித்திடுஞ் செல்லத்தை விமலனு ரேசப்
[போரூர்,
அத்தனிட பாகமதை விட்டுவந்தேயென் னருங்குறையைத் தீருமம்மா,
அழகான வண்ணையிற் புகழாக வாழ்ந்திடு மம்மை காமாட்சியுமையே.

காமாட்சியம்மன் விருத்தம் முற்றிற்று.

ஸ்ரீ காமாக்ஷியை நம:

# காமாக்ஷீ ஸ்தோத்திரம்

காஞ்சீ நூபுர ரத்னகங்கண லஸத்
கேயூர ஹாரோஜ்வலாம்
காஸ்மீராருண கஞ்சுகாஞ்சித குசாம்
கஸ்தூரிகா சர்சிதாம்
கல்ஹாராஞ்சித கல்பகோஜ்வலமுகிம்
காருண்ய கல்லோலினீம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
காஞ்சீபுரீ தேவதாம். 1.

காமாராதி மந:ப்ரியாம் கமலபூ
ஸேவ்யாம் ரமாராதிதாம்
கந்தர்பாதிக தர்பதான விலஸத்
ஸௌந்தர்ய தீபாங்குராம்
கீராலாப விநோதினீம் பகவதீம்
காம்ய ப்ரதானவ்ரதாம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
காஞ்சீபுரீ தேவதாம். 2.

காதம்ப ப்ரமதாம் விலாஸ கமனும்
கல்யாண காஞ்சீரவாம்
கல்யாணுசல பாத பத்ம யுகளாம்
காந்த்யா ஸ்மரம்தீம் ஸுபாம்
கல்யாணுசல கார்முக ப்ரியதமாம்
காதம்பமா லாஸ்ரியம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
காஞ்சீபுரீ தேவதாம். 3.

கந்தர்வாமர ஸித்தசாரண வதூ
த்யேயாங் க்ரிபத்மாங்கிதாம்
கௌரீம் குங்கும பங்க பங்கித குசாம்
த்வம்த்வாபிராமாம் ஸுபாம்
கம்பீரஸ்மித விப்ரமாங்கித முகீம்
கங்காதரா லிங்கிதாம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
காஞ்சீபுரீ தேவதாம். 4.

விஷ்ணுப்பிரஹ்ம முகாமரேந்த்ர பரிஷத்
கோடீர பீடஸ்தலாம்
லாக்ஷா ரஞ்ஜித பாதபத்ம யுகளாம்
ராகேந்து பிம்பாநநாம்
வேதாந்தாகம வேத்ய சின்த்ய சரிதாம்
வித்வஜ்ஜனை ராவ்ருதாம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
காஞ்சீபுரீ தேவதாம். 5.

மாகந்தத்ரும மூலதேஸ மஹிதே
மாணிக்கிய ஸிம்ஹாஸனே
திவ்யாம் தீபித ஹேமகாந்தி நிவஹா
வஸ்த்ராவ்ருதாம் தாம் ஸுபாம்
திவ்யா கல்பித திவ்யதேஹ பரிதாம்
திருஷ்டி ப்ரமோதார்பிதாம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
காஞ்சீபுரீ தேவதாம். 6.

ஆதாராதி ஸமஸ்த சக்ர நிலயா
மாத்யந்த ஸூன்யா முமாம்
ஆகாஸாதி ஸமஸ்பூத நிவஹா
காராம ஸேஷாத்மிகாம்

யோகீந்த்ரை ரதியோகிநீ ஸதகணை
    ராராதிதா மம்பிகாம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
    காஞ்சீபுரீ தேவதாம். 7.

ஹ்ரீம்கார ப்ரணவாத்மிகாம் ப்ரணமதாம்
    ஸ்ரீ வித்ய வித்யாமயீம்
ஐம் க்லீம் ஸௌம் ருசி மந்த்ரமூர்த்தி நிவஹா
    காராம ஸேஷாத்மிகாம்
பிரஹ்மானந்த ரஸானுபூத மஹிதாம்
    பிரஹ்மப்ரியம் வாதினீம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
    காஞ்சீபுரீ தேவதாம். 8.

ஸித்தானந்த ஜநஸ்ய சின்மய ஸுகா
    காரா மஹா யோகிபி:
மாயாவிஸ்வ விமோஹிநீம் மதுமதீம்
    த்யாயேச்சுபாம் பிராஹ்மணீம்
த்யேயாம் கின்னர ஸித்தசாரண வதூ
    த்யேயம் ஸதா யோகிபி:
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
    காஞ்சீபுரீ தேவதாம். 9.

காமாரிகாமாம் கமலாஸ நஸ்த்தாம்
    காம்யப்ரதாம் கங்கண சூடஹஸ்தாம்
காஞ்சீ நிவாஸாம் கனகப்ரபாஸாம்
    காமாக்ஷிதேவீம் கலயாமி சித்தே. 10.

ஸ்ரீ மதப்ரௌட பக்தரசிதம்
காஞ்சி காமாக்ஷீ ஸ்தோத்திரம்
ஸம்பூர்ணம்.

(தேவீ ஸ்தோத்திர கதம்பம்)

## ஸ்ரீ துர்க்கை சித்தர் அருளிய
# துக்க நிவாரண அஷ்டகம்

மங்கள ரூபிணி மதியணி சூலினி மன்மத பாணியளே;
சங்கடம் நீங்கிடச் சடுதியில் வந்திடும் சங்கரி சௌந்தரியே;

கங்கண பாணியன் கனிமுகங் கண்டநல் கற்பகக் காமினியே;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி ! 1.

கானுறு மலரெனக் கதிர்ஒளி காட்டிக் காத்திட வந்திடுவாள்;
தானுறு தவஒளி தாரொளி மதியொளி தாங்கியே வீசிடுவாள்;
மானுறு விழியாள் மாதவர் மொழியாள் மாலைகள் சூடிடுவாள்;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி! 2.

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச் சபையினில் வந்தவளே;
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப் பொருந்திட வந்தவளே;
எங்குலந் தழைத்திட எழில்வடி வுடனே எழுந்த நல் துர்க்கையளே;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி! 3.

தணதண தந்தண தவிலொலி முழங்கிடத் தண்மணி நீ வருவாய்;
கணகண கங்கண கதிர்ஒளி வீசிடக் கண்மணி நீ வருவாய்;
பணபண பம்பண பறையொலி கூவிடப் பண்மணி நீ வருவாய்;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி! 4.

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி பஞ்சநல் பாணியளே;
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேழனைக் கொடுத்த நல்குமரியளே;
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்தநற் சக்தியெனும் மாயே;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி! 5.

எண்ணிய படிநீ யருளிட வருவாய் எங்குல தேவியளே;
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப் பல்கிட அருளிடுவாய்;
கண்ணொளி யதனல் கருணையே காட்டிக் கவலைகள் தீர்ப்பவளே;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி! 6.

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை யென்றுநீ சொல்லிடுவாய்;
சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச் சுகமது தந்திடுவாய்;
படர்தரு இருளில் பரிதியாய் வந்து பழவினை ஓட்டிடுவாய்;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி! 7.

ஜெய ஜெய பாலா சாமுண்டேஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீ தேவி;
ஜெய ஜெய துர்க்கா ஸ்ரீ பரமேஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீ தேவி;
ஜெய ஜெய ஜெயந்தி மங்களகாளி ஜெய ஜெய ஸ்ரீ தேவி;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி! 8.

## ஸ்ரீ காமாக்ஷி ஸ்துதி — 1

அன்னை பரா சக்தி ஆதி பரா சக்தி
உன்னை அன்றி வேறுதுணை, யாருமில்லை, அம்மா, அம்மா, அம்மா.

தாயே நின் தாளிணைகள் தஞ்சம் என்று நம்பிவந்தோம்
உன்னை அன்றி வேறுதுணை, யாருமில்லை, அம்மா, அம்மா, அம்மா.

வண்ணை சக்தி என்று சரண் புகுந்து விட்டோம்
உன்னை அன்றி வேறுதுணை, யாருமில்லை, அம்மா, அம்மா. அம்மா.

தாயே காமாக்ஷி தயை கூர்ந்து காக்க வேண்டும்
உன்னை அன்றி வேறுதுணை, யாருமில்லை, அம்மா, அம்மா, அம்மா.

□●□

## ஸ்ரீ காமாக்ஷி ஸ்துதி — 2

வண்ணையினில் வந்துதித்த காமாக்ஷித்தாயே — அருள்
வல்லமை நீ செய்யவேண்டும் காமாக்ஷித்தாயே — ஒரு
வன்ன அன்னம் மீதிலேறிக் காமாக்ஷித்தாயே — எம்முன்
வந்து அன்பாய் தோன்றவேண்டும் காமாக்ஷித்தாயே.

மலையரையன் மகளான காமாக்ஷித்தாயே — வந்து
மகிழ்முகம் காட்டவேண்டும் காமாக்ஷித்தாயே — எம்
பரமனிட ஈஸ்வரியே காமாக்ஷித்தாயே — இந்தப்
பாலர்முகம் பார்க்கவேண்டும் காமாக்ஷித்தாயே.

மாயவனின் தங்கையே காமாக்ஷித்தாயே — எம்மை
மதித்தொருகால் ஆளவேண்டும் காமாக்ஷித்தாயே — அந்தக்
கஜமுகனை ஈன்றவளே காமாக்ஷித்தாயே — எம்மைக்
கண்திறந்து பார்க்கவேண்டும் காமாக்ஷித்தாயே.

சரவணனைப் பெற்றவளே காமாக்ஷித்தாயே — நித்தம்
சஞ்சலங்கள் போக்கவேண்டும் காமாக்ஷித்தாயே — எங்கும்
மாரிமழை பெய்யவேண்டும் காமாக்ஷித்தாயே — இந்த
மானிலங்கள் உய்யவேண்டும் காமாக்ஷித்தாயே.

பஞ்சங்கள் ஒழியவேண்டும் காமாக்ஷித்தாயே — செல்வப்
பாக்கியம் வழியவேண்டுப் காமாக்ஷித்தாயே — பாரினிலே
வஞ்சனைகள் வாடவேண்டும் காமாக்ஷித்தாயே — பகை
வன்மமெல்லாம் ஓடவேண்டும் காமாக்ஷித்தாயே.

அன்புகள் சுரக்கவேண்டுங் காமாக்ஷித்தாயே — உன்மேல்
ஆசையும் பிறக்கவேண்டிம் காமாக்ஷித்தாயே — எமது
ஆவிநீங்கும் போதினிலும் காமாக்ஷித்தாயே — ஏம்முன்
அன்புடனே நிற்கவேண்டும் காமாக்ஷித்தாயே.

(யா. வ. ஸ்ரீ. கா. அ. கூ. பி. சபைக் காரியதரிசி)

உயர்நீதிமன்ற நியாயதுரந்தரர்,

## நமசிவாயம் சிவக்கொழுந்து அவர்களால்

யாழ்ப்பாணம் வண்ணை குளங்கரை மருதடி

## ஸ்ரீ காமாட்சியம்மை பேரிற் பாடப்பெற்ற பதிகம்.

கங்கையார் சடையானைக் காசினியிற் பூசனைசெய்
மங்கையார் காமாட்சிமாதேவி மருவுமிடஞ்
செங்கையால் நாச்சிமார் சிறுவிறகை யொடித்தாளின்
கொங்கையாய்ந் தொளிர் வண்ணைக் குளங்கரைசார் மருதடியே. 1.

இன்புடனே என்புதலை யேற்றவர் தமிட்பாகத்
தன்புடனேயமர் திலங்குமம் மையாருறையுமிடம்
மின்போலு மிடையுடைய மெல்லியலார் மிகப்போற்றுங்
கொன்பூர் வண்ணைநகர் குளங்கரைசார் மருதடியே. 2.

ஆதியந்த மில்லாத வன்னை காமாட்சியம்மை
சாதியெல்லா மொன்ருகத் தாரணியிற் சாருமிடம்
மாதுவிற கொடித்தாளின் மார்பொடித்த மங்கைமார்
கோதிலரின் வண்ணைநகர் குளங்கரைசார் மருதடியே. 3.

அண்டமெலாம் படைத்து கந்தவழகிய காமாட்சியம்மை
தொண்டரெலா நின்று தொழத்துயர் நீப்பான் ருேன்றுமிட
மெண்டிசையுங் கீர்த்தி பெற்ற ஏந்திழையார் திருத்தொண்டு
கொண்டபெரும் வண்ணைநகர் குளங்கரைசார் மருதடியே. 4.

அத்திமுகனுறு முகனுதியபல் தேவர்களைச்
சித்தமகிழ்ந்தளித்த பெருந்தேவியுமை சேருமிடஞ்
சுத்தமிலா தொடித்த வொரு தோகைமுலை நீக்கினரின்
கொத்தமரும் வண்ணைநகர் குளங்கரைசார் மருதடியே. 5.

மெய்யடியார் சிந்தையுள்ளே மேவியமு தூற்றரும்பிக்
கையினெல்லிக் கனிபோலக் காட்சி தருமம்மையிடற்
றையல் விறகொடித்தாளை நாச்சிமார் தடுத்து மூலை
கொய்யுமொரு வண்ணைநகர் குளங்கரைசார் மருதடியே. 6.

முப்புரத்தையன் றெரித்த முக்கண்ணுன்றனை நோக்கிச்
செப்பரிய பெரிய தவஞ் செய்தவம்மை சேருமிடம்
ஒப்பரிய பூசனையை யொண்டொடியார்முன் செய்து
கொப்புறுநல் வண்ணைநகர் குளங்கரைசார் மருதடியே. 7.

அடியவர்கட்கொரு நாளுமல்லல் வராதே காக்கும்
வடிவுடைய காமாட்சி மகிழ்வுடனே யுறையுமிடந்
துடியிடைசேர் புண்ணியராந் தோகையர் முன்றவஞ் செய்து
குடியமரும் வண்ணைநகர் குளங்கரைசார் மருதடியே. 8.

சம்பந்தர் தாமருந்தத் தன்கையாற் பால்கொடுத்தாள்
எம்பந்தந் தீர்த்தருளு மீஸ்வரிதானுறையு மிடங்
கம்பந்த மொடித்தாளின் கனத்த தனந்தனை திருகிக்
கொம்பந்தஞ் சென்முரின் குளங்கரைசார் மருதடியே. 9.

புழுவார்ந்தவுடல் தீர்ப்பாள் பொய்வினைக்கோர் மருந்தாவாள்
மழுவார்ந்த மலர்க்கரத்தாட்கடிமை செய்தார் குளங்கரையைத்
தொழிலார்ந்த வண்ணைநகர்த் தொண்டன் சிவக்கொழுந்தன்சொல்
வழுவாது சொல்ல வல்லார்க்கில்லையாம் வல்வினையே. 10.

●

## பண்டிதர் சி. ந. சதாசிவம் அவர்களால்
## காமாக்ஷியம்மைபேரிற் பாடப்பெற்ற
# "திருவூஞ்சற் பதிகம்"

### தேவி மகத்துவம்

தேவியொடு மீசன் செறிந்திரானேயாயி
ஞவியொன்றை யுற்றறியா தாம்.

## காப்பு

சீர்கொண்ட பலமணியுண் டாகிமின்னுஞ்
 செம்மைதிக ழீழவளநாட்டி ஞேர்பால்
நீர்கொண்ட செந்நெல்வயல் வண்ணைவாழும்
 நிலைவிளங்கு காமாட்சி யூஞ்சல்பாட
ஏர்கொண்ட பொன்னுலகை யாழு மிந்த்ர
 னிமையவரோ டெல்லோரும் வணங்கி வாழ்த்துங்
கார்கொண்ட திருக்கரங்க ளைந்து பெற்ற
 கணபதிதா ளெந்நாளுங் காப்ப தாமே.

## நூல்

நலந்திகழு நாதவிந்து கால்களாக
 நயந்திகழும் பரம்பொருணேர் விட்டமாக
வலந்திகழுங் காலமெலாம் வடங்களாக
 வரந்திகழு வேதமெலாம் பலகையாக
புலந்திகழும் பிரணவம் பொன்விதானமாக
 பொருடிகளு முபநிடதம் பீடமாக
கலந்திகழும் சலசைநெறி வண்ணைவாழுங்
 காமாட்சி யம்மையே யாடீரூஞ்சல். 1.

உருவோங்கு சாஸ்திரங்கள்தண்ட தாக
 உளமோங்கு மாகமங்கள் தகழியாக
திருவோங்கு கலைக்ஞானம் நூல்க ளாக
 திறமோங்கு புராணமெலாந்திரிக ளாக
அருளோங்கு நின்பெருமை நெய்யதாக
 அருவோங்கு பரஞ்சுடரே விளக்கதாக
கருவோங்கு ஜனனமொழி வண்ணைவாழுங்
 காமாட்சி யம்மையே யாடீரூஞ்சல். 2.

சிலைவிளங்கு நுதற்பிறையி லமுத மூற
 சீர்விளங்கு மலரடியின் முத்திதேற
நிலைவிளங்கு சந்நிதியி னீதி வீற
 நிறைவிளங்கு வேதமெலா மறையோர்கூற
மலைவிளங்கு மாதவர்க டவத்திலேற
 மனுவிளங்கு ஞானமொளிர் வண்ணை வாழுங்
கலைவிளங்கு ஞானமொளிர் வண்ணை வாழுங்
 காமாட்சி யம்மையே யாடீரூஞ்சல். 3.

அருத்தமிகு நவரத்ன கிரீட மின்ன
அணிவளருங் காதணிக ளசைந்து துன்ன
திருத்தமிகு மங்குசபா சங்கண் மன்ன
சிறப்புமிகுநீலமும் விற்கரும்பும் பின்ன
பொருத்தமிகு பொற்சிலம்பு வேதம் பன்ன
புகழ்வழரு மடியவர்கள் பாதமுன்ன
கருத்துமிகு மறைபெருகு வண்ணை வாழுங்
காமாட்சியம்மையே யாடீருஞ்சல். 4.

அந்தமலர் சடைநாகஞ் சுட்டி யாட
அகன்றகுழை யாடிட மூக்குத்தி யாட
சந்தமலர் கங்கணங்கள் பதக்க மாட
தங்கமிகு சரிவளேமே கலேகளாட
பந்தமல முத்துசரம் பசும்பட் டாட
பதமுறு பாடகஞ்சதங்கை குலுங்கி யாட
கந்தமலர் வாவிதிகழ் வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாடீருஞ்சல். 5.

மனமாருந் திரிமலமா மழுக்கை நீக்கி
மாலாரு மைம்புலனுங் கதவைத் தாக்கி
வனமாரும் விடையமெலாம் விழலே யாக்கி
மாண்பாருஞ் சைதன்ய சொரூபந் தூக்கி
இனமாரும் பரையெழுத்தின் பயனை நோக்கி
எழிலாரு மத்துவித முத்தி தேக்கி
கனமாரும் பொன்மதில்சூழ் வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாடீருஞ்சல். 6.

விண்வளரு மிந்திரனி கவிதை வாங்க
வீணைவளர் தும்புருநா ரதர்கள் பாட
பண்வளரு மரம்பையர்கள் னடன மாட
பவம் வளரும் வாயுசாமரைகள் வீச
எண்வளரு நிதிக்கிழவ னடப்பை தாங்க
எழில்வளரு முனிவரெலா மாசி கூற
கண்வளரு மாடமிகு வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாடீருஞ்சல். 7.

புவிபடைத்த பிரமன் கைத்தளம் போட
பொலம்படைத்த வம்பலவ னடன மாட
சவிபடைத்த விநாயகர்சப் பாணி நீட
தயை படைத்த வறுமுகவேற் சக்தி கூட

பவிபடைத்த விந்திரன் வந்தேவனுட
பலம் படைத்த வச்சுதனுங் கருணைதேட
கவிபடைத்த புலவர்புகழ் வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாடீரூஞ்சல். 8.

விதிவிளங்கு மாகமங்கள் வேள்வி நாட்ட
விண்விளங்குஞ் சோதியெலாம் விளக்கந்தீட்ட
பதிவிளங்கு நூல்களெலாம் பத்தி காட்ட
பலம் விளங்கும் யாகமெலாம் பவத்தை யோட்ட
நிதிவிளங்கு பதுமசங்கம் நினைவைக் கூட்ட
நிறம் விளங்கு மலர்மாதர் வடந்தொட்டாட்ட
கதிவிளங்கு சுரர்பரவு வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாடீரூஞ்சல். 9.

இழைபூண்ட பராபரையே யாடீரூஞ்சல்
ஈசனிடத் தாரியையே யாடீரூஞ்சல்
மழைபூண்ட மலைமகளே யாடீரூஞ்சல்
மகதநன்னாட் டீஸ்வரியே யாடீரூஞ்சல்
கழல்பூண்ட சிவகாமி யாடீரூஞ்சல்
காமக் கோட்டத்துமையே யாடீரூஞ்சல்
கழைபூண்ட சோலைதிகழ் வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாடீரூஞ்சல் 10.

சிறையகலு மலைமகளே யாடீரூஞ்சல்
திரையகலு மலைமகளே யாடீரூஞ்சல்
மறையகலு மாதேவி யாடீரூஞ்சல்
மருளகலு மாதேவி யாடீரூஞ்சல்
பிறையகலு வாணுதலீ யாடீரூஞ்சல்
பிழையகலு வானுதலி யாடீரூஞ்சல்
கறையகலும் பண்ணைசெறி வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாடீரூஞ்சல். 11.

தேமருவு வேதசிவாகமங்கள் வாழி
திருமருவு கற்புடைய மாதர் வாழி
பூமருவு நால் வருணத்தவர்கள் வாழி
பொழின் மருவு மானிரையும் முகிலும் வாழி
பாமருவு புலவரொடு பைங்கூழ் வாழி
பயன்மருவு விபூதியுமஞ் செழுத்தும் வாழி
காமருவு பண்ணை செறிவண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே வாழி வாழி. 12.

காஞ்சிபுரம் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தான வெளியீடாகிய

# ஸ்ரீ காமாக்ஷி தேவி

(காஞ்சித்தலப் பெருமையும், ஸ்ரீகாமாக்ஷீ தேவி திருக்கோயிற் சிறப்பும்.)
என்னும் நூலில் உள்ளது:

## ஆசிரிய விருத்தம் 1.

*பொய்ப்பிள்ளை சிறுபிள்ளை நெறியில்நில் லாப்பிள்ளை*
*பொல்லாத பிள்ளைநின்னைப்*
*போற்றியறி யாப்பிள்ளை மாற்றம்உரை யாப்பிள்ளை*
*புன்பிள்ளை வன்பிள்ளை நோய்*
*மெய்ப்பிள்ளை பேய்ப்பிள்ளை மெத்த ஏழைப்பிள்ளை*
*வீண்பிள்ளை யென்றென்னை நீ*
*விட்டுவிடல் ஒண்ணுது பிள்ளைகளில் அன்னைக்கு*
*வேண்டாத பிள்ளையுண்டோ?*
*தைப்பிள்ளை மதிதவழ் சடைப்பிள்ளை வேய்ப்பிள்ளை*
*சதுர்மறைப் பிள்ளைசங்கு*
*சக்ராயு தப்பிள்ளை காணுத ஏகம்பர்*
*தம்பங்கில் விளையாடும் ஓர்*
*மைப்பிள்ளை பச்சைக்கி ளிப்பிள்ளை கச்சியில்*
*வளர்ந்தபெண் பிள்ளையெனவே*
*மாட்சிபெறு காட்சிதரு சூட்சியரு ளாட்சிவா*
*மாட்சிகா மாட்சி யுமையே.*

(பழைய திருப்பதிகம்)

## விருத்தம் 2.

*"பண்டுசிவ னிடத்துதித்திவ் வண்டமுழு தையுமுதவும் பரிவி ஞலே*
*சண்டதுண்டக் கணற்பால விழிக்கால வுருத்திரனைத் தரணி யாவு*
*முண்டகொண்ட னிறத்தானை முண்டகனை விழிகளிஞ லுதவும் பான்மை*
*கண்டதஞல் அபிதானங் காமாட்சி யெனுமுமையைக் கருதி வாழ்வாம்."*
(பழைய காஞ்சிப்புராணம்.)

## திருவதிகை வீரட்டானம்
## அடையாளத் திருத்தாண்டகம் (10)

*எழுந்ததிரை நதித்துவலை நனைந்த திங்கள்*
*இளநிலாத் திகழ்கின்ற வளர்சடையனே*
*கொழும்பவளச் செங்கனிவாய்க் காமக்கோட்டி*
*கொங்கையினை யமர்பொருது கோலங்கொண்ட*

தழும்புளவே வரைமார்பில் வெண்ணூலுண்டே
சாந்தமொடு சந்தனத்தின் அளறு தங்கி
அழுந்தியசெந் திருவுருவில் வெண்ணீற் றனே
அவன்ஆகில் அதிகைவீ ரட்டனுமே.

(அப்பர்)

## பண்டிதர் சி. ந. சதாசிவம் அவர்களால் 1887-ம் ஆண்டு யாழ் வண்ணை ஸ்ரீ காமாக்ஷியம்மை பேரிற் பாடிய

# வண்ணையந்தாதி

காப்பு

விநாயக வணக்கம்

ஆரணம் போற்று மருள்வண்ணைக் காமாட்சி
காரணம் பாடக் கரந்திகழும் — வாரணமே
சிந்தனைக்க ணுத்திருத்திச் சிற்பரத்தினுத் தமத்தை
வந்தனைக்க ணத்திருத்தி வா.

சிவ வணக்கம்

என்புந் தலையோடு மின்பா யணிந் தெவர்க்கு
மன்புதனைக் காட்டு மருட்சிவனே — யன்பரையு
முன்மயமாய் மேவியுறுவதா லிக்கவியிற்
சின்மயமாய் நிற்பாய் சிறந்து.

பரை வணக்கம்

மூவர்க்கு முதற்பொருளாய் மூத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கு மனத்திற்கு நாடரிய் பேரறிவாய்த்
தேவர்க்கு முனிவர்க்குஞ் சித்தர்க்கு நாகர்க்கும்
யாவர்க்குந் தாயாகு மெழிற்பரையை வணங்குவாம்.

சுப்பிரமணிய வணக்கம்

அறுவித சமயத்தோர்க்கும் மறுமுகசாமியாகிச்
செறிபரப் பிரமம்யானே யென்றுசின்மயிலிலேறிக்
குறுமுனிக் கருளிச்சீவக்குகை தொறும்வீற்றிருந்த
மறுவிலாக் குகனைப்போற்றி மாய்த்தனென்பிறவியெல்லாம்.

ஆசிரிய வணக்கம்

முத்தமிழை மொண்டு முறைப்படியே தம்மடியார்
தத்துவத் துக்கேற்கத் தந்தருளு — வித்தகனு
மத்தன மரவரி யண்ணலடிப் போதை நிதஞ்
சித்தமுடன் வேப்பேன் சிரம்.

## நூல்

சீராருஞ் செல்விதிகழ் வண்ணைக் காமாட்சி
காராரும் பூஞ்சோலைக் கற்பகமே -- நேராருங்
காமாட்சி யீஸ்வரியே காஞ்சிபுர மெய்ப்பொருளே
காமாட்சி தந்தருள்வாய் காண். 1.

காண்டற் கரியவண்ணைக் காமாட்சி யீஸ்வரியே
வேண்டி யுனைப்பணிய விண்ணவர்க -- ளீண்டியிங்ஙன்
வந்துநிதம் போவரெனின் மாநிலத்தோர் செய்கையினை
யெந்தவிதஞ் சொல்வேனி னைத்து. 2.

இணங்கார் புரமெரித்த வீசன ருளே
வணங்கார் மனவிருளை மாற்று -- மணங்கார்
வணைநகரக் காமாட்சி மாதேவி யுன்ற
னிணையடியா மெஞ்ஞான வென்று. 3.

என்றுமுனைப் பணிந்தாலின் பவண்ணைக் காமாட்சி
யுன்றன் றிருவடி யென்னுள்ளமதி -- னின்றிடவே
வைத்தருள்வாய் மாதரசே மாநிலத்து வல்வினையின்
வித்ததனைத் தீய்த்திடுவாய் மெய். 4.

மெய்யாதி யைம்பொறியின் வீருங் கதவினையா
னையாவகை பூட்டு நாயகியே — கையாற்
கருப்புவிலே வளைக்குங் கார்வணைக் காமாட்சி
யிருப்பவர்க்கு நற்கதியை யீ. 5.

ஈயாத மாக்களுக் கென்றும் பயனிலையென்
றோயாம லெண்ணுன் குயரறத்தைத் — தாயாகும்
வண்ணைநகர்க் காமாட்சி வையகத்திற் செய்தருள
வெண்ணிவந்தா ளென்றே யறி. 6.

அறிவுக் கறிவாகி யாருயிருக் குள்ளே
செறியுஞ் சிவகாமித் தேவி -- நெறியுடனே
மாலயனைப் பெற்றருள்வாள் வண்ணைநகர்க் காமாட்சி
யாலய மென்னக மேயாம். 7.

ஆகிநின் றேகிமறைந் தேயருள் புரியும்
பாகமெலாங் காட்டும் பகவதியே — யாகமங்கள்
போற்று மயிராணி பொன்வண்ணைக் காமாட்சி
மாற்றியருள் வன்பிணியை மாய்த்து. 8.

மாயப் பவமனைத்தும் வன்பகைவ ரெல்லோருந்
தேயப் பணியணிவான் செய்கலையே — யாய
வணைநகரக் காமாட்சி வந்தனை செய்வார்க்குன்
மணிநகரந் தந்தருள்வாய் மன். 9.

மன்னருஞ் செல்வரு மற்றைப் புவியோரும்
பன்னரும் சீரார்நின் பாமலரை — யுன்னியே
வண்ணை நகர்க் காமாட்சி மாதேவியுன்பெருமை
யெண்ணிநெஞ்சில் வந்தணை வாரிங்கு. 10.

இங்குலிக மேனிதரு மேகாம்பர் தாமகிழ
வங்குலிக பாசமுடனங் குசமுங் — கொங்குலவு
நீலம்பு மிக்குவில்லு நீள்வண்ணைக் காமாட்சி
காலமெலாங் கொண்டருள்வாள் கை. 11.

கைப்பொருளோ டெப்போதுங் கார்வண்ணைக் காமாட்சி
முப்போது முன்னைமுறைப் படியே — கைப்போது
கொண்டர்ச் சனைசெய்து கும்பிட்டிறைஞ் சுபவ
ரெண்டிக்கும் வாழ்வ ரினிது. 12.

இனம்புரக்கு மோர்வண்ணைக் காமாட்சி யீசன்
வனம் புரக்குஞான வளமே — சினம்புரக்குஞ்
சிந்தைக் கறையழித்துச் செய்யசிவத் தோடணைய
முந்தை யருள்புரிவா ய்முன். 13.

முன்னுளிற் செய்த முழுவினைக்கிந் நாட்பயனு
மின்னுளி னம்மை யியற்றிடுதன் — மின்னு
ரிடை வண்ணைக்காமாட்சி யீஸ்வரியே ஞான
விடையுடையாய் மாதவத்தோர் வீறு. 14.

வீறுன மெய்ப்பொருளே வேதத்தி னுட்பொருளே
மாறுன பொய்ச்சமய மாளவே — கூறுன
தெய்வச் சிவக்கொழுந்தே சீர்வண்ணைக் காமாட்சித்
தையலரு ள்வடிவே தான். 15.

தானுகி வந்து தனிக்காமக் கோட்டமதி
லூனேறி வந்தவுயிர்க் கெல்லா — மானேறித்
தக்க சிவபூசைதந்த வண்ணைக் காமாட்சி
மிக்கபுகழ் படைத்த மின். 16.

மின்னுருஞ் செஞ்சடையான் வேதியன்மா லுன்பெருமை
பன்னுளுஞ் சொல்லிப் பரவுகின்ற — ரென்னலே
சொல்ல லெளிதாமோ சுத்தவண்ணைக் காமாட்சி
யில்லமுண்டு ஞானி மனத்தில். 17.

இல்லறமு நல்ல துறவறமு மிப்புவியி
னல்லறமே யென்றுநவின் றிடுவார் — பல்லறமுஞ்
செய்தருளும் வண்ணைநகர்க் காமாட்சி சேவடியை
யெய்தி வணங்கடியா ரெண். 18.

எண்ணுன் கறமுமியல் வண்ணைக் காமாட்சி
கண்ணுன் மதனயனைக் கண்ணனையும் — விண்ணுதி
பொய்யாது தந்தருள்வாள் பூமாதர் தங்களையு
மெய்யாக வையகத்தின் மேல். 19.

மேலாரு நாக விறற்பதுமன் றன்பிலத்திற்
சேலாரு கண்ணி சிவபூசை — யாலால
கண்டற் கினியவண்ணைக் காமாட்சி யீஸ்வரியே
வண்டற் பதமருளு வாள். 20.

வாட்கொண்ட கண்ணி மலர்மா வரிசபிப்பாற்
சேட்கொண்டன் மேனி செறிந்தனன்கா — ளுட்கொண்ட
வண்ணைநகர்க் காமாட்சி வாலாம்பிகை பதத்தை
யெண்ணி வணஞ்சேந்தா ளீடு. 21.

ஈட்டும்பொருளை யியல் வழியி லீயாது
பூட்டுமுலை மாதர் பொய்ம்முயக்கி — ளுட்டியே
கட்டழியா வண்ணைநகர்க் காமாட்சி யீஸ்வரியே
சிட்டர்களைப் போற்றிடுவாய் தேர்ந்து. 22

தேர்ந்தறியக் கூடாத் திருவண்ணைக் காமாட்சி
வார்ந் தொழுகுவாரி லளைபுவியி — னேர்ந்தொருவ
ரோரருத்த மீயிலொரு கோடியாய்ப் பெருக்கிப்
பாரருத்தம் வைப்பாய் பதி. 23.

பதிபசு பாசம் பகர்ந்திடி னுன்னிற்
பதியரு லாலன்றிப் பாரா — ரதிபதியா
வண்ணை நகர்க்காமாட்சி மாதேவி யீஸ்வரியே
விண்ணை யெமக்கருள்வாய் விண்டு. 24.

விண்டை யயனை விறலா ருருத்திரனை
பண்டே படைத்த பராபரையே — யண்டமெலா

மோர்நொடியிற் பெற்றவுயர் வண்ணைக் காமாட்சி
நேர்பெருக வென்மனத்தே நில். 25.

நிற்குந் திருவருளே நீங்காத வன்பிணிநோ
யற்பப் பொழுதி லகலுமே — சிற்பரையா
வண்ணைநகர்க் காமாட்சி மாதேவி பொற்பதத்தைக்
கண்ணதனுற் கண்டிடுகிற் காண். 26.

காணும் பொழுதுனைக் கண்ணீர் சொரிந்திடவே
யாணம் பெருக வழுவோர்க்குத் — தாணுவினைக்
காணமிக வண்ணைக் காமாட்சி தந்தருள்வாய்
பாணர்புக ழோரெழுத்தின் பால். 27.

பாலான நீறு பசுமைதரு மக்குமணி
மேலான மேனி விளங்கவே — சேலான
கண்ணி வண்ணைநகரக் காமாட்சி யீஸ்வரியே
பண்ணி வைப்பா யென்றும் பணிந்து. 28.

பரிவுடனே பஞ்சாட்சரப் பொருளைப் பண்பாய்
விரிவுடனே யானறிய விள்ளா — யரியயனுங்
காணுத வண்ணைநகரக் காமாட்சி யுன்னடியை
நாணுதென் கன்மனத்தே நாட்டு. 29.

நாட்டும் பரையெழுத்தி னுயகியே பிஞ்செழுத்தை
யோட்டி யெனைத்தீட்டி யோய்ந்திருக்க — வீட்டினையே
காட்டி மறைந்தாள் வண்ணைக்காமாட்சி யென்பிணியை
வாட்டி மனமகிழ வந்து. 30.

வந்தே யுனைப்போற்று மானிடவர் மேலவராய்ப்
பந்து சனத்தோடு பயன்பெறுவார் — சந்ததமு
நீதி தலையிரக்க நிற்குவண்ணைக் காமாட்சி
பாதமதை நெஞ்சதனுற் பார்த்து. 31.

பார்த்துப் பொறுமைப் படுகின்ற பாதகர்கள்
வேர்த்து விறைத்து விழுநரகி — லார்த்தெவரு
முய்ய வழியில்லை யோர்வண்ணைக் காமாட்சி
பெய்யுமரு ளெங்களரும் பேறு. 32.

பேறிலாப் பொய்யுரைக்கும் பேதையர்கள் போநரகின்
கூறெலாம் யான்விளக்கல் கூடாது — வீறுபெறு
வண்ணைநகர்க் காமாட்சி மாறங்கை யாரியையே
தண்ணருளை மற்றவர்மேற் சாத்து. 33.

சாத்திரங்க ளாயாதுன் சந்நிதியில் வந்தெவருங்
கோத்திரங்கள் பேசிக் கோளுரைக்கி — னேத்திரமுங்
காத்திரமும் போகுங் கலைவண்ணைக் காமாட்சி
தோத்திரத்தா லேகுந் துயர். 34.

துயரகற்றுந் தேவியரே தூய்வண்ணைக் காமாட்சி
மயல கற்றியாளு மணியே — செயலகற்றுன்
பூசையினைக் குறைத்துப் புற்கைகரந் துண்பார்க
ளாசையுறும் பேய்க்கணங்க ளாய். 35.

ஆயுங்கலை யுணர்ந்த வாரியரைத் தூஷிப்போர்
தேயும் பொருளோடு தேர்ந்தறிமின் — பாயும்
விடையேறி வைத்தருள்வாய் மேல்வண்ணைக் காமாட்சி
கடையேற வென்சிரத்திற் கால். 36.

காலன் வருமுன்னர் கைகால்கள் சோருமுன்னர்
கோலமுட னுன்பாதக் கோலமதான் — மேலகத்துக்
கேக விரைவாக வின்று வண்ணைக் காமாட்சி
யோகமதைக் காட்டிடுவா யுள். 37.

உள்ளத் தழுக்கிருக்க வூத்தையினை மேற்போக்கி
வெள்ளைத் துணியணியும் வீணர்களைத் — தள்ளுதற்கு
முண்ணரக முன்படைத்தாய் மொய்வண்ணைக் காமாட்சி
தண்ணளியை யன்பரிடை தந்து. 38.

தந்தி முகத்தோற்குஞ் சண்முகற்குந் தாயாகி
வந்த வண்ணைக்காமாட்சி மாதேவி — சிந்தையினை
யுள்ளவழுக் கத்தனையு மோட்டி மிகத்துலக்கு
வள்ளன்மிகு நற்கருணை மாற்று. 39.

மாற்று பிறவிமயல் வண்ணைநகர்க் காமாட்சி
யாற்றன்மிகு கோயி லதிகாரி — தேற்றமுட
ஞகமங்கள் பூசை யறிந்தவற்றைச் செய்பவனே
மோகமெலா முன்னே முனிந்து. 40.

முனிவருந் தேவரு மொய்த்து வருசத்தி
யனைவரு முன்றாள் பணிவாரன்றெ — வினமிகுந்த
தெங்கம் பழஞ்சொரியுந் தென்னிலங்கை வண்ணைநகர்
தங்குபுகழ் காமாட்சித் தாய். 41.

தாயுநீ தந்தையுநீ தற்பரசிற் சத்தியுநீ
யாயுங் கலைஞான வாதியுநீ — மாயனுநீ

வேதனுநீ தானுவுநீ மேல்வண்ணைக் காமாட்சி
பூதமுநீ யைம்பொறியு நீ. 42.

நீந்தற் கரிய நெடும்பிறவிச் சாகரத்தி
லேந்தியெனை யாட்கொள்ளு மீஸ்வரியே — பாந்தனணி
வானுக் கினியாளே வண்ணைநகர்க் காமாட்சி
யேனிக் குவந்தா யியம்பு. 43.

அம்புமலர் பிடிக்கு மாதிவண்ணைக் காமாட்சி
யும்பர் தொழவாழு முத்தமியே — வம்புசெறி
வஞ்சகர்கள் கன்னெஞ்சில் வைக்குதியோ வுன்பதத்தைத்
தஞ்சமென வந்தவரைத் தாங்கு. 44.

தாங்கற் கரிதான சதங்கையிலா வண்பிணிக
ளோங்கலென வென்னை யுறுத்துவதாற் — பாங்குமிகு
வண்ணை நகர்க்காமாட்சி மாதுமையே யுன்கரத்தா
லெண்ணியெடுத் தாட்கொள்வா யின்று. 45.

இன்றைக்கோ நாளைக்கோ யின்னுஞ் சிலபொழுதோ
வென்றுசொலும் வார்த்தைக் கிலக்காக — நின்றிலங்குங்
காத்திரத்தை வண்ணைநகர்க் காமாட்சி யுன்பதமாம்
பாத்திரத்தில் வைத்தேன் பணிந்து. 46.

பணிந்தாற் பதமருள்வாய் பார்வதியே நீற்றை
யணிந்தாற் பவப்பிணியை யாற்றுய் — துணிந்தாற்
கணம்பிரியா வண்ணைநகர்க் காமாட்சி யம்மை
யணம்பிரியா வாருயிருக் கன்பு. 47.

அன்புக் கிருப்பிடமே யானந்த மாமயிலே
யென்புருகவே பணிவா ரெல்லோரு — மின்புறவே
வந்தணைவாய் சின்மயமாய் வண்ணைநகர்க் காமாட்சி
தந்தணைவாய் கஞ்சமலர்த் தாள். 48.

தாடலையின் மெய்ப்பொருளைத் தக்கபடி காட்டியருட்
கூடலையுங் காட்டுங் குடிலையென் — பாடலையே
மாலையென வுன்மார்பில் வண்ணைநகர்க் காமாட்சி
சாலவணிந் தருள்வாய் சார்பு. 49.

சாரங்க மொய்க்கு மலர்த்தார்வண்ணைக் காமாட்சி
பேரங்க முத்தின் பெருஞ்சரத்தி — னேரங்க
மிந்திரவி கோடி யெழிலாய்த் திரண்டிடினுஞ்
சிந்தையினு மொப்பரிது சீர். 50.

### வாழி

வேதஞ் சிவநூல் விளங்குசைவ வைதிகமும்
மாதந் தருமேக மங்கைகற்புஞ் — சூதநிழற்
கம்பனருள் வண்ணைக் காமாட்சி பொற்பதமு
மம்புவியும் வாழ்கவே யாம்.

முற்றிற்று
திருச்சிற்றம்பலம்.

## காஞ்சிப்புராணச் செய்யுள்

முறுவலித் தருளுந்தோறு மொய்த்தெழு நிலவுபொங்கி
யுறைபடத் துளித்தவில்லே யொழுங்குறக் கிடந்தாலென்னப்
பிறைவடஞ் சுமந்தகொங்கைப் பேரமைத் தோளிமம்மர்க்
கறைதபு காமக்கண்ணி கழலிணை கருத்துள்வைப்பாம்.

### எச்சரிக்கை

திருவாருரு பதமேதரு தேவீ யெச்சரிக்கை
சிலைவாணுத லொளியாய் வளர்த்தேனே யெச்சரிக்கை
மானே வருகையானிட மாதே யெச்சரிக்கை
மறைபோற்றிடு பதமேவிய மங்கா யெச்சரிக்கை
பஞ்சாட்சரத் தொன்ருய் வளர்பரையே யெச்சரிக்கை
பகையாதரு ணீலோற்பல பாணீ யெச்சரிக்கை
பதுமன்பணி பதந்தந்தருள் பரமே யெச்சரிக்கை
எழிலாய்வளை கழையேந்திய விறைவீ யெச்சரிக்கை
ஏகாம்பரர் குழையத்தழுவின்பே யெச்சரிக்கை
உருவாகிய பாசங்குச வுமையே யெச்சரிக்கை
தருமம்மெனு மிடபம்மிவர் தாயே யெச்சரிக்கை
சிவனிரு விழிபொத்திய திறமே யெச்சரிக்கை
சிவபூசை செய்திறங் காட்டிய தெளிவே யெச்சரிக்கை
சீராகிய கருணைநிதி திருவே யெச்சரிக்கை
பேராகிய சிவனரருட் பேறே யெச்சரிக்கை
துணையாகிய விளமாமுலைத் தோகா யெச்சரிக்கை
வணைமாநகர்க் காமாட்சியம் மணியே யெச்சரிக்கை.

### பராக்கு

தேனெழுகும் பூங்கொன்றைச் செல்வீ பராக்கு
மானிமிருங் கையேந்தி மானே பராக்கு
சந்த்ரமுகத் தேவியரே தாயே பராக்கு
சதுர்ப்புஜநல் லுத்தமியே சத்தீ பராக்கு
சிவனருமைத் திருமேனி குழைத்தாய் பராக்கு
அரனருமைக் கண்புதைத்த ஆயே பராக்கு

அடியவர்கள் பிணியகற்று மன்பே பராக்கு
மிடிமையினை நீக்கியருள் மேலோய் பராக்கு
மகப்பேறு தந்தருளு மாதா பராக்கு
அகத்தேறு மயலகற்று மருளே பராக்கு
ஆனைமுகத் துத்தமனை யளித்தாய் பராக்கு
ஆறுமுகத் தெம்பரனி னன்னுய் பராக்கு
உருள்வண்ணைப் பூவாளுமுமையே பராக்கு
அருள் வண்ணைக் காமாட்சி யம்மே பராக்கு.

## தேவாரம்

முதிரமங்கை தவஞ் செய்தகாலமே
முன்பு மங்கை தவஞ்செய்தகாலமே
வெதிர்களோடகில் சந்த முருட்டியே
வேழ மோடகில் சந்தமுருட்டியே
யதிரவாறு வரத் தெழுவத்தொடே
யானெயாடுவரத் தெழுவத் தொடே
கதிர்கொள் பூண்முலைக் கம்பமிருப்பதே
காஞ்சிமாநகர்க் கம்ப மிருப்பதே.

## திருவிளக்கு அகவல்

விளக்கே — திருவிளக்கே வேந்தன் உடன்பிறப்பே
ஜோதி மணிவிளக்கே — ஸ்ரீ தேவி பொன்மணியே
அந்தி விளக்கே அலங்கார நாயகியே
காந்தி விளக்கே காமாக்ஷித் தாயாரே
பசும்பொன் விளக்குவைத்து பஞ்சுத்திரி போட்டு
குளம்போலே எண்ணெய்விட்டு கோலமுடன் ஏற்றிவைத்தேன்
ஏற்றினேன் நெய்விளக்கு என்தன் குடிவிளங்க
மாளிகையில் ஜோதியுள்ளமாதாவைக் கண்டு மகிழ்ந்தேன்யான்
மாங்கல்யப் பிச்சை மடிப்பிச்சை தாருமம்மா
பெட்டி நிறையப் பூஷணங்கள் தாருமம்மா
பட்டி நிறையப் பாற்பசுவைத் தாருமம்மா
கொட்டகை நிறைய குதிரைகளைத் தாருமம்மா
புகளுடம்பைத் தாருமம்மா பக்கத்தில் நில்லுமம்மா
அல்லும் பகலுமென் அண்டையில் நில்லுமம்மா.

## தெரிசனம் காணல்

சேவித்தெழுந்திருந்தேன் தேவிவடிவங் கண்டேன்
வச்சிரக்கிரீடங்கண்டேன் வைடூரிய மேனி கண்டேன்

மூத்துக்கொண்டைகண்டேன் முழுப்பச்சை மாலைகண்டேன்
சவுரிமுடிகண்டேன் தாழைமடல் சூடக்கண்டேன்
பின்னழகுகண்டேன் பிறைபோல் நெற்றிகண்டேன்
சாந்துடன்நெற்றிகண்டேன் தாயார் வடிவங்கண்டேன்
கமலத்திருமுகத்தில் கஸ்தூரிப் பொட்டுக்கண்டேன்
மார்பில்பதக்கம் மின்ன மாலையசையக்கண்டேன்
தங்கஒட்டியாணம் தகதகவென ஜொலிக்கக்கண்டேன்
காலிற்சிலம்புகண்டேன் காலாழி பீலிகண்டேன்
மங்களநாயகியைமனங்குளிரக்கண்டு மகிழ்ந்தேன் அடியான்நான்
அன்னையேஅருந்துணையே அருகிலிருந்து காருமம்மா
வந்தவினையகற்றி மகாபாக்கியம் தாருமம்மா
தாயாரும்உன்றன் தாளடியில் சரணம்என்றேன்
மாதாவேயுன்றன் மலரடியில்நான்பணிந்தேன் காமாக்ஷித்தாயே.

## திருப்பள்ளியெழுச்சி

கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்
கனைஇருள் அகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந்து ஒழுகின மாமலர் எல்லாம்
மலர்கொண்டு ஏற்றிநின் திருமுகத்தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுவோம்
நீர் கொண்ட செந்நெல்வயல் சூழ்
வண்ணை வாழ் குளங்கரை மருதடி
ஸ்ரீகாமாக்ஷி யம்மையே பள்ளி எழுந்தருளாயே. 1.

கூவின பூங்குயில் கூவின சேவல்
பாடின புள் ளினங்கள் இசைத்தன
மணி ஓசை இயம்பின சங்கநாதம்
சோதியாய் நின்றதாயே உன்னைக்கண்டு தரிசித்தவர்கள்
துன்பத்தை நீக் கிடுவாய் தயாபரியே
சிந்தைதனி லுன்பாதம் தன்னையே தொழுவோம்
திருவண்ணை நகர் வாழ் குளங்கரை
மருதடி ஸ்ரீகாமாக்ஷி யம்மையேபள்ளி எழுந்தருளாயே. 2.

பண்ணிசை ஓதுவார் பலர்மத்தளம் ஒருபால்
வீணையொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
வேதங்கள் ஓதுவார் முழங்கினர் ஒருபால்
ஜெகமெலாம் உன்புகழ் பாடித் தொழுவோம்
மாயா சொரூபி அகிலாண்ட ஈஸ்வரிநீயே
திருவண்ணை நகர் வாழ் குளங்கரை
மருதடி ஸ்ரீகாமாக்ஷி யம்மையேபள்ளி எழுந்தருளாயே. 3.

## பண்டிதர் வ. விஞசித்தம்பி அவர்களால்

வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பிகைமேற்
பாடிய பாடல்களில் ஒன்று:

"நீராழியாங் கனக நேராடை சூழுலக
நிகரிலா மகிழ் வெய்தவே
நிறைகருணை யெனுமின்ப மழைபொழிய நயனமலர்
நிமலையே நிலவ மணியே
ஏராருமுது விஸ்வப்பிரம்ம குலமது மிளிர
எண்ணியே வண்ணைநகரில் எழுந்தருளுமாட்சியே
ஆட்சியே எமது காமாட்சி யம்மையே
தீராவிடு க்கண்கள் தீர்க்கும்
ஆற்ற லிஞெங்க திருத்தில கமணிந்த
நுதலாய் சிறியனேன் குறை
யெலாம் முறியவே வரமருள் தேவியே
எனதாவியே அன்புமலர் பிறக்கும்
ஆதி வண்ணை ஸ்ரீகாமாக்ஷி யம்மையே
சூழ்ச்சியே உலகில் உன்
அன்பர்தொழ வாழும் உத்தமியே நின்பதத்தைத்
தஞ்சமென வந்தோரைத் தாங்கு."

அளவெட்டி

## அருட்கவி சி. விஞசித்தம்பி அவர்களால்

ஸ்ரீ காமாக்ஷியம்பிகை மேற் பாடப்பெற்ற

## வாழ்த்துப்பா

பேர்பொங்கு மறைதந்த பிரணவ சொரூபியே, பேசு மாகமத் தலைவியே,
பித்தனுட னடமாடும் சிவகாமியே ஞானப், பிரகாச மீனாட்சியே,
பார் பொங்கு கலைபூத்த பார்வதி பராசக்தி, பரம கல்யாணி யுமையே,
பார்க்கு மிடமெங்கனும் நீக்கமற நிறைகின்ற, பசிய மரகத வல்லியே,
நீர்பொங்கு பாலுகதி சேர்பள்ளி யாற்கிளைய், நீலாம்பிகைச் செல்வியே,
நிறைமகுட கொடிநிகழ மதுரைய ரசாண்டசிவ, நிமலியே முச் சக்தியே,
சீர்பொங்கு வண்ணை குளங்கரையில் மருதடி மேவும், சீமாட்டி வந்த [ருளுவாய்,
சிற்பரானந்தமணிச் சித்திரத் தேரில் வரும், செல்வி காமாட்சித் தாயே.

## கீர்த்தனங்கள்

ராகம்: தோடி. தாளம்: ஆதி.

### பல்லவி

ரா வே ஹிமகிரிகு மா ரி க ஞ்சி காமாக்ஷி வர
தா ம ன வி வி னவம்ம சு ப மிம் ம மா யம் ம (ராவே)

### சரணங்கள்

ந த ஜன பரிபா லினிவனுசு நம் மி தி னி ஸ தா ப்ரோவ
மதம த்த மஹிஷ தா ன வ மர் த்தினிவெத தீ ர்ச்சவேதுரமுகனு
காமபா லினிநீ வேகதியனிகோரி தி கொனி யாடிதி வே டி தி
காமிதார்த்த பலதா யகியனே டி பிரு தீ மஹிலோநீ கே த கு
கமலமுகி தரகள கனலீலகச ப ரா ம்ருகவிலோசனமணிரதன
கஜகமனு மதிலோ நினுஸதா த லசுகொனிநீ த்யா னமே தல் லி
சியாமக்ருஷ்ணனுதவினுநா சிந்த னு வே வே க தீர் ச்சபய மிய் யவே
கல் யா ணி கஞ் சி கா மா க்ஷி நீ பா த மே தி க்கு (ராவே)

ராகம்: பைரவி. தாளம்: சாபு.

### பல்லவி

கா மா க்ஷீ அம் பா கஞ் சி
கா மா க்ஷீ அ னு தினமு ம ர வ க
நே நீ பாதமுலதிக் க னு சு நம் மிதினிஸ்ரீ கஞ் சி (காமாக்ஷி)

### சரணங்கள்

குந்தர தனு குவல ய நயனு த ல்லி ர க்ஷிம் சு
கம்புகள நீ ரதசிகுரா விதுவ த னு மா யம் ம
கும்பகுச மத மத்த கஜகம பத் ம பவஹரி சம்புனுத பத
சங் க ரீ நீ வு நா சிந் தல வே வே க தீர் ச்சமாயிபுடு
பக் தஜனகல் பலதி காகரு ணு ல யாஸத யா கிரி தன ய
காவவே சர ணுக துடுகத தா ம ஸ மு ஸே ய் க வரமொ ஸகு
பா த கமுலனு தீர் ச்சி நீ ப த பக்திஸந் தத மீ ய வே
பா வளி க தா மொ ர வி ன தா ப ரா கே லனம் மா வினம் ம
க லு ஷ ஹாரிணி ஸதாந த ப ல தா ய கி ய னி பி ரு து பு வி
லோ க லி கினதொர யனுசு வே த மு மொரலிடகவினி
நீ ப வ ன நில யாஸாரஸமுத யா க ர வி த்ரு த ஸாவலயா ம த
த னுஜவாரண ம்ருகேந்த்ரார்ச்சித க லுஷ தஹனக னு அ ப
ரி மி த வை ப வ மு க ல நீஸ்மர ணமதிலோ த ல சினஜனு துல
கு பஹுஸம்பத ல னி ச்சே விபு டுமா க ப யமிய் யவே
சியாமக்ருஷ்ணஸ ஹோ த ரீ சிவ சங்க ரீ ப ர மே ச்வ ரீ
ஹ ரி ஹ ரா துல கு நீ ம ஹி ம லு க ணிம் ப த ர மா
ஸா து டம் மா ய பி ம்ா ன மு லே தா நா
பை தேவீ ப ரா கே ல னே ப்ரோ வ வே யி பு டு ஸ்ரீ பை ர வி
(காமாக்ஷி)

ராகம்: யதுகுலகாம்போஜி. தாளம்: சாபு

## பல்லவி

கா மா க்ஷி நீ பத யுக மேஸ்தி ர மனீ
நே நம் மி யுன் ஞனுநாசிந் த லெல் ல னு தீர் ச்ச ம்ம (காமாக்ஷி)

## சரணங்கள்

அம் ப நனுப்ரோ வ ஸ மய மு வி னு மா பதி த பா வ னி க
அனுதினமு ச ர ண ம னி நினுவே டுகொனியுன்னஸு து டம் மஸ த ய
ஸ ரஸி ஜா ஸ ன ஹ ரீ ச வி னு த பா தா நா தோ வா தா
கம்லதளஸம ந ய ன க ச ஜி த க ஞ ச ச தரனி ப வ த ன
மா ன வ தி நி னு ஸ தா த ல சி ன மா ன வு ல கெல் ல ப லமொ ஸ கே
பி ரு து க ல தே வ த ய னி நே வி ன ப டி நீ வே க தி ய னு சு
பா வனி பு ர ஹ ரு னி ர ம ணீ பார் வ தி ஸ க ல ஜ ன
னீ பா த க மு ல னு வ டி கா தீர் ச்சி வ ரமொ ஸ கு மு
க ன க கி ரீ ஸ த னநினுகொலிசின ஜ ன மு ல கு தி ன தி ன மு சுபமொஸ
கே வனிச்ருது லுமொரலிட கா மொர லு வி னி வி னி வி னி
பா ல கி ஸ ல ய ச ர ண நி மி ஷ மு தா ள னி க வி னு ம த க ஜ க ம ன
தா ம ஸ மூ ஸே ய கனே ந ன் னி பு டு ப்ரோ வு மு ப ரா த் ப ரி
குந் த மு கு ள ர தா ஸு ர ப்ருந் த வி னு த ஸ தா
புவிலோவ ர தா ய கி க த நா மொர லு செ வுலகு வின த கிரி ஸுத
நீ வலெனெகல தா நெ ர தா த வு ர
ஜ க தி லோ நீ து ப த ஸா ர ஸ மு லு ர பவஜலதிகி த ரி ய னு சு மி கு ல
சு ம ல ஸ ம் ப வ ஸு ர மு னீந் த்ருல சே தனு நினு பொ க டு ட கு
தர மம் ம சு ப மிம் ம நி லு நம் மி தினி சி யா ம க்ருஷ்ணஸோ த ரி
[து! ர மு க னு கரு ண ஸ லு பு மி க னு.
(காமாக்ஷி)

65

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்.